# தமிழ் மொழியும் இலக்கியமும்

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி



**தரம் - 6**

தமிழ் மொழித்துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# தமிழ் மொழியும் இலக்கியமும்
# தரம் - 6

# ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

தமிழ்மொழித்துறை
மொழிகள்,மானுடவியல்,சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
2007

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

தமிழ் மொழியும் இலக்கியமும்
தரம் - 6
ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

© தேசிய கல்வி நிறுவகம்

முதலாம் பதிப்பு : 2007
மீள் பதிப்பு : 2009

எல்லா உரிமையும் இலங்கை அரசினருக்கே

இந்நூல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக, சென்வின் தனியார் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடபட்டது.

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

தற்போதைய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது ஆசிரியர்கள் தமது பாடங்களைக் கற்பிப்பதற்குப் பின்பற்ற வேண்டிய அவசியமான கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகளை மேற்கொள்வதற்கு சிறந்த ஒரு வழியாட்டியாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது நீங்கள், உங்கள் வகுப்பறைச் செயற்பாடுகளை மாணவர் - மையக் கற்றலுக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைப்பதற்கான வழிகாட்டலை வழங்குகின்றது. இன்றைய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மாணவர் மையமாக ஒழுங்கமைப்பதென்பது எமது இலங்கை ஆசிரியருக்கும் வகுப்பறைக்கும் ஒரு புதிய அனுபவமன்று. எவ்வாறாயினும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மூலம் மாணவர் மையக் கற்றல் - கற்பித்தல் முறைமையியலுக்கு ஒரு புதிய பண்புக் கூறு கிடைக்கிறது.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது மாணவர்களின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்தும் வகையில் பாடத்தைத் திட்டமிடுவதற்கு அவசியமான பாதையை வழங்குவதோடு மட்டுமல்லாது அதற்கு அவசியமான சூழலை மதிநுட்பத்துடன் கட்டியெழுப்பவும் உதவுகிறது.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த அடிப்படையானது ஆசிரியர் என்பவர் வெறுமனே அறிவை ஊடுகடத்துபவராக அல்லாது அறிவில் மாற்றத்தை ஏற்படுத்துபவராகவும் இருக்க வேண்டும் என்னும் தத்துவத்தைக் கொண்டுள்ளது. இச்செயற்பாடானது மாணவரை கற்பவர் என்னும் நிலையிலிருந்து அறிவைத் தேடுபவர் என்னும் நிலையை அடைவதற்கும், இதன் மூலம் புதிய அறிவை உருவாக்கவும் உதவுகின்றது. ஆகவே, ஆசிரியர் என்பவர் மாணவருக்கு புதிய அறிவை ஆய்ந்தறிந்து கண்டுபிடிப்பதற்கான வழிகாட்டியாகவும் தூண்டியாகவும் செயற்பட வேண்டும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த தத்துவமும் செயற்பாட்டு வடிவமைப்பும் பழமையான கற்பித்தல் முறைமையியலையும் சிந்தனைகளால் உண்டாகும் தடைகளையும் தகர்த்தெறிய ஆசிரியர்களைத் தூண்டும் என நம்பப்படுகின்றது. எனவே, ஆசிரியர்கள் புதிய கற்பித்தல் அணுகுமுறைகளையும் கற்பித்தல் முறைகளையும் அவசியம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். புதிய ஆயிரமாம் ஆண்டானது மிகப் பரந்த எல்லையற்ற புதிய அறிவின் தோற்றத்தையும் உருவாக்கத்தையும் கண்டுள்ளது. ஆகவே, ஒவ்வொருவரும் தமது புதிய செயற்பாடுகளை ஒரு முகப்படுத்தித் திட்டமிடுவதற்குப் பழைய முறைகளை மாற்றியமைக்க வேண்டிய தேவையுள்ளது.

ஆசிரியர் தனது கற்பித்தல் பணியில் பயன்படுத்தக்கூடிய அடிப்படையான அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் உயர் அணுகுமுறைகளை நோக்கி அவரை வழிநடத்துவதும் இவ்வகையான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஆசிரியர், இவ் அறிவுரைப்பு வழிகாட்டியை உரிய முறையில் கற்று அதனுடைய நோக்கங்களைக் கொண்டு வகுப்பறையில் உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம், வகுப்பறையை வினைத்திறன் மிக்கதும் தரமானதுமாக்குவதுடன் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை உயர்வடையச் செய்வதற்கும் ஆசிரியர் பெரும் முயற்சி மேற்கொள்ளுவார் என்பது எனது நம்பிக்கையாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் திறம்படத் தயாரித்து வெளியிடுவதற்கு தமது நேரத்தையும் சிறப்புத் திறமைகளையும் பங்களிப்பு செய்த தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த பாட நிபுணத்துவர்களுக்கும் வெளி வளவாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

பேராசிரியர் ல்லால் பெரேரா
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

# முன்னுரை

தேசிய கல்வி நிறுவகத்தினால் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மூன்று பகுதிகளைக் கொண்டது. அவையாவன:

* விரிவாக்கப்பட்ட பாடத்திட்டம்
* செயற்பாட்டுத் தொடரகம்
* கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டை மேலும் விரிவுபடுத்தலுக்கான கருவிகள்

இப்பாடத்திட்டமானது, விடயத் தலைப்புகள், உபதலைப்புகள் என்பவற்றுக்கு மேலதிகமாக ஆசிரியர் பங்களிப்புக்குள் எடுக்கக்கூடிய பல்வேறு தீர்மானங்களை ஆசிரியர் களுக்கு விளக்கும் பயனுடைய ஒரு ஆவணமாகும்.

பாடச் சீர்திருத்தங்களுக்குரிய காரணிகளையும் பாட நோக்கங்களையும் அறிமுகஞ் செய்து ஆரம்பிக்கும் இவ்வேட்டில் பாடம் தொடர்பான தேர்ச்சிகளும், தேர்ச்சி அலகுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. மாணவர்களினால் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சி அலகுகள் தொடர்பான பாட உள்ளடக்கம் இங்கு குறிப்பிடப்பட்டிருத்தல் இவ்வேட்டின் சிறப்பியல்பாகும். இப்பாட உள்ளடக்கத்தை மாணவர்களுக்கு வழங்குவதற்காக பயன் படுத்தப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் நுட்பங்களைக் கருத்திற் கொண்டு அதற்கு எடுக்கும் நேரத்தைத் தீர்மானித்திருப்பது இப்பகுதியின் இன்னுமொரு சிறப்பியல்பாகும்.

இவ்விரிவான பாடத்திட்டம், கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் தரத்தை பாதுகாக்கும் நோக்கிலே முன்வைக்கப்பட வேண்டிய தரஉள்ளீடுகள் தொடர்பாக தெளிவான விளக்க மொன்றை ஆசிரியர்களுக்குப் பெற்றுப் கொடுப்பதற்கு முனைந்துள்ளது. கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டுக்கு உதவும் பொருட்களை ஏற்கனவே கேட்டு உரிய நேரத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு இதன் மூலம் வாய்ப்பு கிடைக்கின்றது. பாடத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவுகளை உறுதி செய்து கொள்வதற்குரிய பெறுமதிமிக்க பல ஆலோசனைகள் கணிப்பீடும் மதிப்பீடும் என்ற பகுதியிலே உள்ளடக்கப்பட்டுள்ளன.
***"பாடசாலைக் கொள்கைகளும் வேலைத்திட்டமும்"*** என்ற பகுதியை பாடசாலைக் கல்வியோடு சார்ந்த அனைவரும் முறையாக வாசித்து விளங்க வேண்டியது அவசியமாகும். ஆசிரியர்களுக்கு கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளை ஒப்படைக்கும்போது, பாடவிதானச் செயற்பாடுகளைச் செயற்படுத்தும்போது, ஆசிரியர் பணிகளை மேற்பார்வை செய்யும் போது, உரியவாறு நேரத்தை ஒதுக்கிக் கொள்வதற்கு பாடசாலை முகாமைத்துவத்தில் ஈடுபடுபவர்களுக்கு இது தேவையான விளக்கங்களையளிக்கின்றது.

ஆசிரியர் பங்களிப்பிலே தெளிவான மாற்றம் ஒன்றை ஏற்படுத்தும் விதமாக சீர்திருத்தப்பட்ட பாடத்திட்டத்தைச் செவ்வனே நிறைவேற்றிக் கொள்வதற்கு தேசிய கல்வி நிறுவகம் ஆசிரியருக்கு தேவையான உதவிகளை கூடியளவில் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பதை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் இரண்டாம் பகுதியில் பாடத்திட்டத்தை அமுலாக்குவதற்கு உரிய செயற்பாட்டுத் தொடரகத்தை அறிமுகஞ் செய்திருப்பது இதன் இன்னுமொரு சிறப்பம்சமாகும். இச்செயற்பாடுகளை அவ்வாறே ஆசிரியர்கள் செயற்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படவில்லை. தனது ஆக்கபூர்வமான, ஆற்றல்களுக்கும் ஆய்வுச் சிந்தனையாற்றல்களுக்கும் ஏற்ப செயற்பாடுகளை ஏற்றவிதமாக ஒழுங்குபடுத்திக் கொள்வது ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. உதாரணமாக மூன்று குழுக்களை அமைக்க வேண்டும் என கூறியிருப்பினும் வகுப்பறையிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அதை மாற்றஞ் செய்து கொள்வதற்கு ஆசிரியருக்கு முடியும். சிறிய வகுப்புகளில் குழுச் செயற்பாடுகளுக்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் விதமாக உரிய தீர்மானங்களை எடுக்கும்போது ஆசிரியர்கள் சாதுரியமாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

உரிய தேர்ச்சி மட்டம் நிறைவு பெறும் விதமாக செயற்பாடுகளுக்கு உரிய நேரம் வேறாக்கப்பட்டுள்ளது. 40 நிமிட பாடவேளைக்கு அப்பால் செல்வதற்கு ஆசியருக்கு நேரிடலாம். ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்தையும் நிறைவேற்றிக் கொள்வதற்குப் போதியளவு நேரம் அந்தந்தச் செயற்பாடுகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதோடு நேரசூசியில் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தனிப்பாடவேளை, இரு பாடவேளைகளுக்கு ஏற்றவாறு இச் செயற்பாடுகளை பகுதிகளாகச் செய்து நிறைவு செய்து கொள்ளவேண்டியது ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. முன்னைய நாள் ஆரம்பித்த செயற்பாடொன்றை மேலும் தொடர்ந்து அடுத்த நாளும் செய்யும்போது முதல் நாள் நிறைவு செய்தவற்றை மேலும் அறிமுகஞ் செய்து தொடர வேண்டும் என்பது உங்களிடம் எதிர்பார்க்கப்படுகின்றது. வகுப்பறையில் நிலவும் நிச்சயமற்ற சந்தர்ப்பங்களின்போது 40 நிமிட, 80 நிமிட நேரத்திற்கு உங்களால் கவனமாக திட்டமிடப்பட்ட திட்டங்களும் கூட நிறைவேற்றிக் கொள்வது அரிதானது என்பது இரகசியமல்ல.

யாதேனுமொரு தேர்ச்சி மட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு வெவ்வேறான செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதன்படி உத்தேச செயற்பாடானது அவ்வாறே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என உங்களிடம் ஒருபோதும் எதிர்பார்க்கப்படமாட்டாது. மிகவும் சிறந்த பிரவேசத்துடன் கூடிய, ஆய்வுகளைக் கொண்ட கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை விரிவுபடுத்தக்கூடிய வெவ்வேறு உபகரணங்களைப் பயன்படுத்தி சிறந்த கற்பித்தல் ஒன்றையே நாம் உங்களிடம் எதிர்பார்க்கின்றோம்.

புதுவிடயங்களை அறிமுகப்படுத்தும்போது நீங்கள் செயலிழப்பதை தவிர்ப்பதற்காக உங்களுக்கு வேண்டிய கையேட்டை வழங்குவதை மட்டும் தேசிய கல்வி நிறுவகம் செய்துள்ளது. ஆசிரியர் பங்களிப்பிலே சிறந்ததொரு மாற்றத்தை நாடுபூராவும் ஆசிரியர் களிடம் ஏற்படுத்துவதற்கு இவ்வேடு பெருந்துணை புரியும் என்பது எமது நம்பிக்கையாகும். அவ்வாறே இச்செயற்பாடுகளுக்கு அப்பால் சென்று புத்தாக்கங்களில் ஈடுபடும் ஆசிரியர் களை ஊக்குவிக்கும் பரிசளிப்பு முறை ஒன்றையும் அறிமுகஞ் செய்வதற்கும் நாம் எதிர் பார்க்கின்றோம். அப்பரிசைப் பெறுவதற்கு நீங்கள் செய்ய வேண்டியது உங்களால் திட்ட மிடப்படும் செயற்பாடுகளை உதவிப் பணிப்பாளர் நாயகம் (பாடத்திட்ட அபிவிருத்தி) தேசிய கல்வி நிறுவகம், மகரகம எனும் முகவரிக்கு அனுப்பி வைப்பதாகும். அவ்வப் பாடக் குழுக்களினூடாக அச் செயற்பாடுகள் பரிசீலனை செயற்பட்டு பரிசுக்குரியவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் மூன்றாம் பகுதியில் கற்றல்-கற்பித்தல் செயற் பாடுகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு உதவும் உபகரணத் தொகுதிகள் அடங்குகின்றன. செயற்பாட்டுத் தொகுதி ஒன்றை மையமாகக் கொண்டு வழங்கப்படும் இவ்வுப கரணங்கள் வகுப்பறைக்கு வெளியேயும் தொடர்ச்சியாக மாணவர்கள் கற்பதற்கு துணை புரியும். அவ்வுபகரணங்களைப் பயன்படுத்தி மாணவர்களின் கற்றலை பரிசீலனை செய்து உரிய மீளவலியுறுத்தல்களைச் செய்வது உங்கள் பணியாகும். இம்மீளவலியுறுத்தல்கள் விருப்பமுள்ள கற்றல் அனுபவங்களை பெற்றுக் கொள்வதற்கு மாணவர்களுக்கு துணை புரியும். கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றிக்கு மதிப்பீட்டு முறைகளில் பாரிய மாற்றங்கள் தேவைப்படுகின்றன. பொதுப் பரீட்சைகளில் கல்வி மட்டங்களுக்கு ஏற்ப முன்மாதிரி வினாக்களின் தன்மையை அறிமுகஞ் செய்வதற்கு தேசிய கல்வி நிறுவகம் முயற்சிப்பது அதனாலாகும். இதன் பரீட்சை வினாக்களின் தன்மை தொடர்பாக எதிர் பார்க்கும் மாற்றத்தை விளங்கிக் கொள்ளும் நீங்கள் வழமையான முறையிலிருந்து விடுபட்டு மாணவர்களின் சிந்திக்கும் ஆற்றல், சமூகத்திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்யும் வகையில் பயனுள்ள கற்பித்தலில் ஈடுபடுவீர்கள் என்பது எமது நம்பிக்கை யாகும்.

***கலாநிதி I. L. கினிகே***
உதவிப் பணிப்பாளர் நாயகம்,
விஞ்ஞான தொழினுட்பப் பீடம்

# கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

யாவருக்கும் கல்வி என்னும் நோக்கத்தை மையமாகக் கொண்டு எமது அரசு நாட்டிலுள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் இலவசமாகப் பாடநூல்களை வழங்கி வருகின்றது. அத்துடன் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை ஆக்கி வழங்குவதானது கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வகுப்பறைக்குள்ளும் அதற்கு வெளியேயும் மாணவர்களின் அறிவுவிருத்திச் செயற்பாட்டுக்கு வழிகாட்டுவோர் ஆசிரியர்களே. மேலும், பாடத்திட்டத்தால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை நோக்கி மாணவர்களை வழிநடாத்தும் முக்கிய நபரும் ஆசிரியரேயாவார். இந் நோக்கத்தை அடைவதற்கு இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்குக் கைகொடுக்கும். இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களைக் கற்றுப் பின்பற்றுவதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை அதிக பயனுறுதியுடையதாக மாணவர்களுக்கு வழங்கும் பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களைச் சார்ந்ததாகும். இப் பொறுப்பை உணர்ந்து செயற்படும் நீங்கள் பெறுமதிமிக்க ஒரு வளம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், தேர்ச்சிகள் என்பவற்றையும் வலிமையான சமூக மற்றும் உள்ளார்ந்த திறன்களையும் கொண்ட முழுமையான பிரசைகளை சமூகத்திற்கு வழங்கும் பொறுப்பு உங்களுடையதே. தற்கால உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய எதிர்கால சந்ததியை நீங்கள் உருவாக்குவீர்கள் என்பதே என் எதிர்பார்ப்பாகும். உங்கள் ஆற்றலை உறுதியாக்குவதன் மூலம் அவ் எதிர்பார்ப்பை வெற்றிகரமாக்குவதற்கு இவ் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்கு உதவும் என உறுதியாக நம்புகின்றேன்.

டபிள்யு.எம்.என்.ஜே புஸ்பகுமார

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்

'இசுருபாய'

பத்தரமுல்ல

## வழிகாட்டல்

பேராசிரியர் ஜே. டபிள்யூ. விக்கிரமசிங்க
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

திரு. விமல் சியம்பலாகொட
உதவிப் பணிப்பாளர் நாயகம்
தமிழ்மொழித் துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## ஆலோசனை

பேராசிரியர் எஸ்.தில்லைநாதன் - தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர்
பேராசிரியர் ஏ.சண்முகதாஸ் - தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர்
திரு. ரி. இராஜேந்திரம் - திறந்த பல்கலைக்கழகம்
கலாநிதி எஸ். யோகராஜா -கிழக்குப் பல்கலைக்கழகம்
கலாநிதி வி. மகேஸ்வரன் - பேராதனைப் பல்கலைக்கழகம்
திரு.கே. இரகுபரன் - தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
திரு.எம்.ஏ.எம். ரமீஸ் - தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

## திட்டமிடலும் இணைப்பும்

திரு. உ. நவரத்தினம் - பணிப்பாளர், தமிழ்மொழித் துறை
செல்வி. பு.நாகலிங்கம் - பிரதம செயற்றிட்ட அதிகாரி
திருமதி. ஞா.சித்ரரஞ்சன் - செயற்றிட்ட அதிகாரி
திருமதி.வா.காண்டீபன் - செயற்றிட்ட அதிகாரி
ஜனாப்.எம்.எல்.எம் இர்ஷாட் - செயற்றிட்ட அதிகாரி
செல்வி.சு.சகிர்தமலர் - உதவி செயற்றிட்ட அதிகாரி

## எழுத்தாளர் குழு

திருமதி.எஸ்.சகாதேவன் - ஆசிரியர் - இந்துக் கல்லூரி, இரத்மலானை
திருமதி.எம்.உதயசெல்வம் - ஆசிரியர், விவேகானந்தாக் கல்லூரி, கொழும்பு
செல்வி.ஆர்.கலாரமணி -உதவி கல்விப் பணிப்பாளர், நிவித்திகலை
திருமதி.கே.சிவகுமாரவேலு - உதவி கல்விப் பணிப்பாளர், மன்னார்
திருமதி.ஏ.எப்.சீ.உதயசந்திரன் - ஆசிரியர், தோடாவெளி அ.த.க.பாடசாலை, மன்னார்
திருமதி.பி. பிரபாகரன் - ஆசிரியர், இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு

## கணணிப் பதிப்பு

திருமதி.நாதியா மஸிஸ் - தேசிய கல்வி நிறுவகம்

# உள்ளடக்கம்

பக்கம்


| | | |
|---|---|---|
| 01. | விரிவான பாடத்திட்டம் | 1-14 |
| 02. | கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள் | 15-236 |
| 03. | கணிப்பீடும் மதிப்பீடும் | 237-255 |

# பகுதி - I

# விரிவான பாடத்திட்டம்

# தரம் - 6

# தமிழ்மொழியும் இலக்கியமும்
# தரம் - 06

## 01. பாட அறிமுகம்

எவ்விடயத்தைப் பொறுத்தவரையிலும் காலத்துக்கேற்ற மாற்றங்கள் தவிர்க்க முடியாதனவே.

அவ்வகையில் மொழியும் மொழிமூலமான ஆக்கங்களும் மொழி கற்றல் - கற்பித்தல் முறைகளும் மாற்றம் பெறுவது தவிர்க்க இயலாதது.

இவ்வுண்மையை மனங்கொண்டே கலைத்திட்டங்கள் காலத்துக்குக் காலம் மறுசீரமைக்கப் படுகின்றன. அவ்வகையில் தற்காலத்துக்கேற்றதாக மாணவரிடத்தில் அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி என்பவற்றை விருத்தி செய்யும் நோக்கில் கற்றல் தேர்ச்சிகளை மையமாகக் கொண்டு தேசிய பொதுக் குறிக்கோள்களுக்கும் பொதுத் தகைமைகளுக்கும் அமைவாக இக்கலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

6ஆம் தரத்துக்குரிய தமிழ்மொழிப் பாடத்துக்கான இப்புதிய கலைத்திட்டமானது 2007ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வருகின்றது. இப்பாடத்திட்டத்தில் கேட்டலும் பேச்சும், வாசிப்பு, எழுத்து ஆகிய மொழித் திறன்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களின் வயதுக்குரிய கற்றல் தேர்ச்சிகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

பயன்பாட்டு இலக்கணமும் மொழிவளமும் தனித்தனித் தேர்ச்சிகளாக வழங்கப்பட்டி இருப்பினும், அடிப்படை மொழித் திறன்களை மையமாகக் கொண்டு கற்கும் போதே இவற்றையும் தொடர்புபடுத்திக் கற்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. அதாவது இலக்கணத்தைத் தனித்துக் கற்பிக்காது பாடத்தின் (Text) ஊடாகக் கற்பிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தேர்ச்சிகள், மாணவர்கள் மொழியைச் செம்மையாக, ஆக்கபூர்வமாக கையாள்வதற்கும் தமது உள்ளார்ந்த ஆற்றல்களை அறிந்து, அவற்றை மேம்படுத்தி சமூகத்தில் நற்பிரஜைகளாக வாழ்வதற்கான தகுதியைப் பெறுவதற்குமான அடிப்படையை வழங்க வல்லனவாகும்.

தேர்ச்சிகளை மையப்படுத்தி வடிவமைக்கப்பட்ட இக்கலைத்திட்டத்துக்கான செயற்பாடுகள் யாவற்றையும் பிரதிபலிப்பதாகப் பாடப்புத்தகம் அமையும் என எதிர்பார்க்கமுடியாது. எனவே ஆசிரியர்கள் பாடப்புத்தகத்தில் மாத்திரம் கவனம் செலுத்தாது கலைத்திட்டத்தில் கொடுக்கப்பட்ட விடயங்களில் கூடிய கவனம் செலுத்தி அதன் மூலம் பெற்ற தெளிவோடு, ஏற்ற கற்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

## 02. பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

- தமிழ்மொழியைத் தொடர்பாடற்கருவியாகக் காலத்திற்குப் பொருத்தமான முறையில் வினைத்திறனுடன் கையாளுதல்.

- இலக்கியங்களினூடாக சமூக, கலாசார, விழுமியங்களை அறிந்து அவற்றைப் பேணுதல்.

- கலைகள், அறிவியல், தொழில்நுட்பத்துறைகள் என்பவற்றின் வளர்ச்சிக்கேற்ப மொழியைச் செம்மையாகப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெறுதல்.

- மொழியூடாக மாணவர் தம் ஆளுமையை வளர்த்துக் கொள்ளுதல்.

- தேசிய ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்க மொழியைச் சாதகமாகக் கொள்ளல்.

## 03. பாடசாலைக்கொள்கையும் நிகழ்ச்சித்திட்டமும்

தமிழ்மொழிக் கற்றலானது பாடத்திட்டத்துடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றன்று. பாடசாலை முகாமைக் குழுவினர் பாடத்திட்டத்தின் நோக்கங்கள் எய்தப்படவேண்டிய தேர்ச்சிகளை நன்கு விளங்கிக்கொள்வதுடன், அவற்றினடிப்படையில் பாடசாலைக் கொள்கையை உருவாக்கவும் நடைமுறைப்படுத்தவும் முனைதல் வேண்டும்.

பாடசாலையின் பாடத்திட்டத்தை அமுலாக்கும் போது மாணவர்களின் தனியாள் வேறுபாட்டை மனதிற் கொண்டு மாணவர்களின் தேவையை ஈடுசெய்யவும், அவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை வளர்க்கவும் பொருத்தமான முறையில் கொள்கை உருவாக்கமும் நிகழ்ச்சித் திட்டமும் அமைய வேண்டும்.

அவற்றிற்கான சில ஆலோசனைகள் இங்கு தரப்படுகின்றன.

1. பாடசாலையிலுள்ள தமிழ்மொழி மூலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் யாவரும் மொழியாசிரியர் என்ற நோக்கில் செயற்பட வழி செய்தல்.
2. பாடசாலையைச் சூழவுள்ள பிரதேசத்திலுள்ள தமிழ்மொழிசார் வளங்களை மாணவர்களின் மொழிவிருத்திக்காக உச்ச அளவில் பயன்படுத்துதல்.
3. இலக்கிய மன்றங்கள் போன்ற மாணவர் மன்றங்களை வகுப்பு ரீதியாக அமைத்து மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வளர்க்க உதவுதல்.
4. பாடசாலை மட்டத்தில் விவாதம், கவியரங்கு, பட்டிமன்றம், இலக்கியப் போட்டி, பொது அறிவுப்போட்டி போன்ற நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
5. பெரியார்களை அழைத்து இலக்கியச் சொற்பொழிவுகளை நடாத்துதல்.
6. நூல் நிலையங்களில் மொழி இலக்கியம் சார்ந்த நூல்களை களஞ்சியப்படுத்தல். வாசித்த இலக்கிய நூல்களில் இருந்து பெற்ற விடயங்களை கலந்துரையாடுவதற்கு ஏற்பாடு செய்தல்.
7. ஆக்கத்திறனை விருத்தி செய்யும் வகையிலே சிறுகதை, நாடகம், கவிதை போன்றவற்றை எழுதுவதற்குப் போட்டிகளை நடாத்துதல். சுவரொட்டிகள், விளம்பரங்கள் என்பன எழுதுவதற்கான போட்டிகளை நடாத்துதல்.
8. பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்திற்குரிய கூத்துகள், நாடகங்கள் போன்ற சிறப்பான கலையம்சங்களையறிந்து அவற்றைப் பாடசாலை மன்றங்களினூடாக மேடையேற்றுவதன் மூலம் பிரதேசக் கலைப்பாரம்பரியங்களை வளர்க்க வழிசெய்தல்.
9. கலைவிழாக்களை ஒழுங்குசெய்தல். பங்குபற்றுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் அளித்தல்.
10. சஞ்சிகை வெளியிடல். ஆக்கங்களைக் காட்சிப்படுத்தல் என்பவற்றிற்கு ஊக்கமளித்தல்.

# பகுதி - I

# விரிவான பாடத்திட்டம்
# தரம் - 6

# தமிழ் மொழியும் இலக்கியமும்
## பாடத்திட்டம் : தரம் - 06
### தேர்ச்சி, தேர்ச்சி அலகுகள், உள்ளடக்கம்

| கேட்டலும் பேச்சும் : | | பாட வேளை |
|---|---|---|
| 1.0 | பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்குமேற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார். | |
| 1.1 | கேட்டுக் கிரகித்தவற்றைச் செம்மையாகக் கூறுவார்.<br>- கதை, அறிவித்தல், அறிவுறுத்தல். | 05 |
| 1.2 | கிரகித்துப் பொருள் அறிந்து ஓதுவார்.<br>- முதிர்ச்சிக்கும் விருத்தி உளவியலுக்கும் அமைவான பாடல்கள் | 03 |
| 1.3 | சொற்களைச் செம்மையாக அவற்றின் ஒலியமைப்புக்கேற்ப உச்சரிப்பார். | |
| 1.4 | பாடத்தைக் கேட்டுக் கிரகித்துக் கருத்துக்களைக் கூறுவார்.<br>- செய்யுள் அல்லது உரைநடையின் மையக்கருத்து<br>- ஒத்தகருத்து, எதிர்க் கருத்துச் சொற்கள்<br>- புதிய சொற்கள்<br>- உவமைகள், பழமொழிகள், மரபுச்சொற்கள், இரட்டைக்கிளவி<br>- பாடம் தொடர்பான தமது சொந்த அபிப்பிராயம் | 10 |
| 1.5 | செயற்றிறனும், விளைதிறனும் உள்ள கேட்போராகச் செயற்படுவார்.<br>- கேட்டலில் விருப்பத்துடன் ஈடுபடுதல்.<br>- கேட்டவற்றின் உண்மைத் தன்மையை அறிந்து கூறுதல்.<br>- பேச்சாளர் பேசிக்கொண்டிருக்கையில் அவர் தொடர்ந்து பேசப்போவனவற்றை ஊகித்துக் கூறல்.<br>- கேட்டுக் கிரகித்துக் குறிப்பெடுத்தல்.<br>- விடயத்தைக் கேட்டு விளங்கி ஒரு முடிவுக்கு வருதல்.<br>- கேட்டல் மூலம் பல்வேறு தேவைகளுக்கான தரவுகளைச் சேகரித்தல்.<br>- கேட்டவற்றில் தகவல்கள் எவை, அபிப்பிராயங்கள் எவை என வேறுபடுத்துதல். | 05 |

| | பாட வேளை |
|---|---|
| 2.0 சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்கும் கேட்போருக்கும் ஏற்ற வகையில்உரையாடுவார். | |
| 2.1 தமது உணர்வுகளும் கருத்துக்களும் அபிப்பிராயங்களும் தெளிவாகப் புலப்படும் வகையில் உரையாடுவார்.<br>- விடயத் தெளிவு.<br>- கருத்துக்களை அறிந்துகொள்ளல்.<br>- முறையிடல்.<br>- தகவல் தெரிவித்தல்.<br>- விபரங்களை விவரித்தல்.<br>- பிறர் ஏற்றுக்கொள்ளும் வகையில் தமது கருத்தை வலியுறுத்திக் கூறுதல்.<br>- தனியாள் நிலையிலும், குழு நிலையிலும் கருத்துப் பரிமாற்றம் செய்தல்.<br>- கலந்துரையாடலின் போது பேச்சை அவதானித்து, சுயமாகத் தமது கருத்துக்களை முன்வைத்தல்.<br>- எடுத்துக்கொண்ட விடயங்களைத் தமது சொந்த அநுபவத்தின் அடிப்படையில் விபரித்தல்.<br>- தமது விருப்பு வெறுப்புக்களைப் பண்பாக வெளிப்படுத்துதல். | 05 |
| 2.2 நாடக பாத்திரங்களுக்கேற்ப, நடித்துப் பேசுவார்.<br>- பாத்திரத்தின் உணர்வுகளை வெளிக்கொணரும் வகையில் உச்சரித்துத் தெளிவுடனும் பொருத்தமான தொனி முகபாவம், மெய்ப்பாடு, அங்க அசைவுகளுடனும் உரையாடுதல். | 06 |
| 3.0 எண்ணக் கருக்களையும், அபிப்பிராயங்களையும் புலப்படுத்திப் பேசுவார். | |
| 3.1 தலைப்புக்கு ஏற்றவகையில் பேசுவார்.<br>- பொருத்தமான தலைப்பினைத் தெரிதல்.<br>- கருத்துப் பரிமாறலுக்கு அல்லது கருத்தை முன்வைத்தலுக்குப் பொருத்தமான சட்டகத்தை அமைத்தல்.<br>- இலக்கினை அமைத்துப் பேசுதல்.<br>- நோக்கத்துக்கும் சபைக்கும் ஏற்றவாறு பேசுதல்.<br>- கேட்போர் புரியும் வகையில் பேசுதல்.<br>- பொருத்தமான சொற்களைப் பயன்படுத்துதல்.<br>- தொனி வேறுபாடுகளுடன் பேசுதல். | 06 |

| | பாட வேளை |
|---|---|
| **வாசிப்பு** | |
| 4.0 உயிர்த்துடிப்புள்ள, கட்டுருவாக்கச் செயல்திறனுடைய வாசகராகச் செயற்படுவார். | |
| 4.1 விளக்கத்தோடும் பொருளுக்கேற்ப உணர்ச்சியோடும் வாசிப்பார்.<br>- சிறிய பந்தியொன்றை பொருள் உணர்ந்து, உணர்ச்சி வெளிப்பட வாசித்தல்.<br>- ஒலி பேதங்களையும் (ஒலிப்பில் மயக்கம் தரும் எழுத்துக்கள், கிரந்த எழுத்துக்கள்), நிறுத்தக் குறிகளையும் அனுசரித்து தொனி பேதங்களுடன் பொருள் விளங்க வாசித்தல். | 05 |
| 4.2 வாசிப்பதன் மூலம் இலக்கியத்துக்கும் சமூகத்துக்கு-மிடையிலான தொடர்பை அறிந்து கூறுவார்.<br>- தன்னையும், தனது குடும்பத்தையும், தான் சார்ந்த சமூகத்தையும் இலக்கிய வாசிப்பினூடாக விளங்கிக்கொள்ளுதல். | 03 |
| 5.0 கிரகித்துப் பொருள் உணர்ந்தமை புலப்பட வாசிப்பார். | |
| 5.1 மையக்கருத்தை உள்வாங்க வாசிப்பார்.<br>- கருத்தைக் கண்டுகொள்வதற்கான உபாயங்களைப் பயன்படுத்தி வாசித்தல்.<br>- தேவைக்கேற்ப மேலோட்டமாகவும் கருத்தூன்றியும் வாசித்தல்<br>- முன்னைய அறிவு, அனுபவம், விளக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் வாசித்தல்.<br>- மையக்கருத்தையும் துணைக் கருத்துக்களையும் கண்டுபிடித்தல்.<br>- முழுக் கவனத்தையும் செலுத்தி வாசித்தல். | 04 |

| | பாட வேளை |
|---|---|
| 5.2 குறித்த நோக்கத்திற்காக வாசிப்பார்.<br>- பிரதான கருத்து, துணைக் கருத்துக்களின் தொகுப்பினைக் கூறுதல்.<br>- வாசித்த பகுதியைச் சுருக்கிச் சொந்த மொழிநடையில் கூறுதல்.<br>- வாசித்தவற்றிலுள்ள விடயங்கள் குறித்த உடன்பாட்டையும் உடன்பாடின்மையையும் அவற்றுக்கான காரணங்களையும் முன்வைத்தல்.<br>- பாத்திரங்களின் குணவியல்பை வாணித்தல்.<br>- பாத்திரங்களின் வாயிலாக வெளியிடப்படும் படைப்பாளியின் எண்ணங்களைக் கிரகித்துக் கூறுதல்.<br>- படைப்புக்கு உந்துசக்தியாக விளங்கிய காரணிகளைக் கூறுதல்.<br>(படைப்பாளியின் அனுபவம், சமூக, கலாசாரப் பின்னணி) | 04 |
| 6.0 நடைமுறைத் தேவைகளுக்காக வாசிப்பார். | |
| 6.1 பல்வேறு நோக்கங்களுக்காக வாசிப்பார்.<br>(மகிழ்ச்சி, மனப்பாங்கு விருத்தி, சிந்தனை விரிவு, தெளிவு, தகவல் சேகரித்தல்/ அறிதல், மதிப்பீடு)<br>- சுவரொட்டிகள்<br>- துண்டுப் பிரசுரங்கள்<br>- சிறுவர் சஞ்சிகைகள், நூல்கள்<br>- பத்திரிகை<br>- கலைக்களஞ்சியம்<br>- அகராதி | 05 |
| 7.0 ஆக்கத்திறனை மேம்படுத்துவதற்காக வாசிப்பார். | |
| 7.1 பல்வேறு ஆக்கங்களை வாசிப்பார்.<br>- சிறுவர் சஞ்சிகைகள், பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவரும் சிறுவர் பகுதிகள்<br>- சிறுவர் கதைகள்<br>- சிறுவர் பாடல்கள்<br>- கட்டுரைகள்<br>- நாடகங்கள் | 05 |

பாட வேளை

7.2 மொழித் திறன்களை விருத்தி செய்வதற்காக வாசிப்பார். 05
- சொற்கள், தொடர்கள், வாக்கியங்கள்
- பிரதேச வழக்குகள், மரபுச் சொற்கள், இரட்டைக்கிளவி
- பழமொழிகள், உவமைகள்

7.3 தரப்பட்ட பாடப்பரப்புகளில் வருகின்ற பயன்பாட்டு இலக்கணத்தை இனங்கண்டு வெளிப்படுத்துவார். 06
- லுழஎளு ணருனளு ர, ற வேறுபாடுகள்
- இணைப்பிடைச் சொற்கள்
- வாக்கிய அமைப்பு (எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்ளு தன்மை, முன்னிலை, படர்க்கை)
- பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு

8.0 விருப்பத்திற்கேற்ப வாசிப்பார்.

8.1 இரசனைக்காக பல்வேறு ஆக்கங்களை வாசிப்பார். 03
- சித்திரக் கதைகள்
- துணுக்குகள்
- விடுகதைகள்
- கதைகள்
- நாட்டார் பாடல்கள்
- நாட்டார் கதைகள்
- நாடகங்கள்

## எழுத்து

9.0 அவதானமாகக் கிரகித்து, எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து,எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, எழுத்துக்கள், சொற்கள், வாக்கியங்களை வழுவின்றி உரிய நிறுத்தக் குறிகளுடன் தெளிவாக எழுதுவார்.
9.1 கேட்டுக் கிரகித்து எழுதுவார். 11
- சொல்வதெழுதுதல்
- இரசித்த பகுதிகள்
- படிப்பினைகள், விழுமியங்கள்
- குறிப்புகள்
- சாராம்சம்

பாட வேளை

9.2 பாடப்பரப்புகளில் இனங்கண்டு விளங்கிக் கொண்ட பயன்பாட்டு இலக்கணத்தைப் பொருத்தமாகப் பிரயோகிப்பார். 08
- லுழளுஎ ணுநளுர, ந வேறுபாடுகள்
- இணைப்பிடைச் சொற்கள்
- வாக்கிய அமைப்பு (எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்ளு தன்மை, முன்னிலை, படர்க்கை)
- பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு

9.3 வாசித்துக் கிரகித்தவற்றை எழுதுவார். 10
- மையக்கருத்து, துணைக்கருத்துகள்
- வினாக்களுக்கு விடையெழுதுதல்.
- பாடலில் நயந்தவற்றை எழுதுதல்.
- கதாபாத்திரங்களின் குணஇயல்புகளை எழுதுதல்.
- படிப்பினைகள், விழுமியங்களை விளக்கி எழுதுதல். (கதை, பாடல்)
- உவமைகளை இனங்கண்டு விளக்கி எழுதுதல்.

9.4 எழுத்தாக்கத்தில் பொருத்தமான நுட்பங்களைப் பயன்படுத்துவார். 08
- கருத்துக்களை ஒழுங்கமைத்தல்
- அனுபவங்கள், அவதானிப்புகள், எண்ணங்கள், அபிப்பிராயங்கள் ஆகியவற்றை மூலங்களாகப் பயன்படுத்துதல்.
- தலைப்புக்குப் பொருத்தமான எழுத்தாக்கச் சட்டகத்தைப் பயன்படுத்துதல்.
- கருத்துப்புலப்பட எழுதுதல், மீளநோக்குதல்ளு மேலும் தேவையானவற்றைச் சேர்த்தல், தேவையற்றவற்றை நீக்கல், நிறைவாகத் திருத்தமாக எழுதுதல்.

10.0 பல்வேறு சந்தர்ப்பங்களுக்கும் நோக்கங்களுக்கும் ஏற்றவாறு எழுதுவார்.

10.1 நாளாந்தத் தேவைகளுக்காக எழுதுவார். 08
- கடிதம் (உறவு முறை, நட்புமுறை)
- அழைப்பிதழ் (பிறந்த நாள்)
- தினக்குறிப்பு
- குறிப்பெடுத்தல்

| | பாட வேளை |
|---|---|
| **எழுத்து** | |
| 10.2 பல்வேறு நோக்கங்களுக்காக எழுதுவார்.<br>- எண்ணங்களை வெளிப்படுத்தல்.<br>- அபிப்பிராயங்களையும் கருத்துக்களையும் முன்வைத்தல்.<br>- தகவல் தெரிவித்தல்<br>- விவரித்தல்<br>- வர்ணித்தல்<br>- முறையிடல்<br>- மேடைப்பேச்சு (நற்சிந்தனை, வரவேற்புரை, நன்றியுரை) | 10 |
| 11.0 படைப்புகளை வாசித்த அனுபவங்களினூடாக சுய ஆக்கங்களை எழுதுவார். | |
| 11.1 பந்தி எழுதுவார்.<br>- தலைப்பு<br>- தலைமை வாக்கியங்கள்<br>- துணைவாக்கியங்கள்<br>- முடிவு | 05 |
| 11.2 சுய அனுபவங்கள், அவதானிப்புக்கள், அபிப்பிராயங்கள், கருத்துகளை வெளிப்படுத்தி எழுதுவார்.<br>- கட்டுரை (சுயசரிதை, வருணனை)<br>- கதை<br>- பாடல்<br>- நாடகம் | 10 |

# பகுதி - II

# கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

# அறிமுகம்

இப்பாடத் திட்டத்திற்கு ஏற்ப கற்றல் - கற்பித்தல் முறைமைகளைத் தீர்மானிக்கும்போது ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டதாக மாணவர்களிடத்தில் தேர்ச்சிகளை உரு வாக்குவதற்கு ஏற்ற வகையில் கற்றல் - கற்பித்தற் செய்கைகளைத் திட்டமிடுவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தேர்ச்சி மட்டக் கல்விக்கு ஆயத்தம் ஆகும்போது ஆசிரியர் பங்கில் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.

எமது வகுப்பறைகளில் கடந்த காலங்களில் பரவலாகச் செயற்படுத்தப்பட்டு வந்த ஷஊடு கடத்தும் பங்களிப்பு' (Transmission Role), பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட ஷகொடுக்கல் வாங்கல் பங்களிப்பு' (Transaction Role) என்பன வகுப்பறையில் இப்போதும் காணப்படு கின்றன. பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் பிள்ளைகளிடத்தில் காணப்படும் சிந்தனைத் திறன்கள், தனியாள் திறன்கள், சமூகத் திறன்கள் போன்றவற்றிலுள்ள குறைபாடுகளை கருத்திற் கொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தல் முறைமைகளில் செய்ய வேண்டிய அபிவிருத்தி மாற்றங்களையும், அவை எவ்வாறு செய்யப்படல் வேண்டுமென்பதையும் இனங் காண்பது கடினமன்று.

ஊடுகடத்தும் பங்களிப்பில், கற்பிக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவற்றையும் ஆசிரியர் தான் தெரிந்துள்ளதாக எடுத்துக் கொண்டு, மாணவர்கள் இவ்விடயங்கள் தொடர்பாக ஒன்றுமே அறிந்திராதவர் எனக் கருதிக் கொண்டு விடய அறிவை மாணவர்களுக்குச் செலுத்தும் ஒருவராகவே ஆசிரியர் மாறியுள்ளார். இம்முறையில் ஆசிரியர் விரிவுரையாளர் போலத் தொழிற்படுவதோடு, மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கோ, மாணவர் களின் தனியாள் திறன்களை, சமூகத் திறன்களை விருத்தி செய்வதற்கோ செய்யும் பங்களிப்பு போதுமானதல்ல.

ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களுடன் கலந்துரையாடுவது, கொடுக்கல் வாங்கல் பங்களிப்பின் ஆரம்பக் கட்டமாக அமைகிறது. இதன்போது ஆசிரியரிடமிருந்து மாணவர் களுக்கும், மாணவர்களிடமிருந்து ஆசிரியருக்கும் கருத்துக்கள் பரிமாறப்படுவதோடு, அதைத் தொடர்ந்து மாணவர்- மாணவர் இடைத்தொடர்பும் ஏற்படுத்தப்பட்டு அவர்களுக் கிடையிலும் கருத்துப் பரிமாறல் நடைபெறுவதோடு, அது தர்க்கரீதியான கலந்துரையாடலாக மாறும். தெரிந்ததிலிருந்து தெரியாததற்கும், எளிமையிலிருந்து சிக்கலானதற்கும், தூல விடயத்திலிருந்து கேவல (கருத்துநிலை) விடயத்திற்கும் மாணவர்களைக் கொண்டு செல்லும் வகையில் ஆசிரியர் தொடர்ந்து வினாக்களைத் தொடுப்பதில் ஈடுபடல் வேண்டும்.

தேர்ச்சி மட்டக் கல்வியில் மாணவர் செயற்பாடுகள் வலுவான இடத்தைப் பெறுவதோடு, வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் அந்தந்தத் தேர்ச்சி மட்டங்கள் தொடர்பாகக் குறைந்தது அண்மிய தேர்ச்சிமட்டங்களையாவது பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் ஒரு வளவாளராக (Resource Person) மாறுகிறார்.

கற்றலுக்குத் தேவையான உபகரணங்களும் மற்றும் வசதிகளும் கொண்ட கற்றற் சூழலொன்றைத் திட்டமிடுதல், மாணவர்கள் கற்கும் விதத்தை அருகிலிருந்து அவதானித்தல், மாணவர்களின் இயலும், இயலாமை என்பவற்றை இனங்காணுதல், தேவையான முன்னூட்டல், பின்னூட்டல் என்பவற்றை வழங்கல் மூலம் கற்றலை விருத்தி செய்வதோடு வகுப்பறைக்கு வெளியிலும் மாணவர்கள் கற்பதற்கும், கற்பதைத் தூண்டுவதற்கும் உரியவாறு கற்றல் உபகரணங்களைத் திட்டமிடுவதும் ஆசிரியரின் அடிப்படைக் கடமைகளாகும். இவ்வாறான ஆசிரியர் பங்களிப்பு ஷஉருமாற்றுப் பங்களிப்பு' (Transformation Role) எனப்படும்.

ஆசிரியர் வழிகாட்டியின் முதற்பகுதியாக இங்கு அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள பாடத் திட்டமும், அதனை அமுல்படுத்தும்போது பயன்படுத்தக்கூடிய செயற்பாடுகளின் தொடரகம் இரண்டாம் பகுதியாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இச் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் குறைந்தது மூன்று படிகளைக் கொண்டதாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. செயற்பாட்டின் முதற்படியில் மாணவர்களைக் கற்றலுக்குத் தயார் செய்வதில் ஈடுபடுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு மாணவர்களைத் தயார் செய்து கொள்ளும்படி ஷஈடுபடுத் தும்படி' (Engagement Step) எனப்படும். இப்படியில் ஆரம்பத்தில் ஆசிரியர் கொடுக்கல் வாங்கல் பங்களிப்பின் மூலம் மாணவர்களுடன் கலந்துரையாடலை ஆரம்பிப்பார். பின்னர் மாணவர்கள் விடயங்களை நன்கு ஆராய்ந்து செயற்படுவதற்குத் தேவையான முன்னறிவை மீட்கும் வகையிலும், செயற்பாட்டுக்குத் தேவையான சாடைகளைக் கொடுக்கும் வகையிலும் கலந்துரையாடலை விரிவுபடுத்திக் கொள்ளுங்கள். இக்கலந்துரையாடலில் கருத்துப் பரிமாறலுக்குப் பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள் ஆசிரியரிடம் இருத்தல் வேண்டும். வினாக்களை முன்வைத்தல் / படங்கள், பத்திரிகை விளம்பரங்கள், அறிவித்தல்கள், காட்சி அட்டைகள் (Flash Cards) போன்ற ஆர்வம் ஊட்டுவனவற்றைப் பயன்படுத்தல் / பிரசினங்கள், புதிர்கள், விடய ஆய்வுகள் / கலந்துரையாடல், நடித்தல், கவிதைகள், பாடல்கள், செய்துகாட்டல்கள் (Demonstrations) கட்புல, செவிப்புல சாதனங்கள் போன்றன பயன்படுத்துவதும் இதில் அடங்கும். முதலாம் படி பின்வரும் மூன்று நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- வகுப்பு மாணவர்களின் கவனத்தை ஈர்த்துக் கொள்ளல்.
- தேவையான முன்னறிவை மீட்டிக் கொள்வதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் ஆய்வு முறையான கண்டுபிடிப்புகளுக்குத் தேவையான ஆரம்ப விடயங்களை வழங்குதல்.

செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களுக்கு ஆய்வு ரீதியான பேறுகளைக் கண்டு பிடிப்பதற்குச் (Exploration) சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. மாணவர்கள் பேறுகளைக் கண்டு பிடிப்பது, அதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் படிவத்தினை அடிப் படையாகக் கொண்டாகும். பிரசினத்தோடு தொடர்பான பல்வேறு விடயங்களையும் கூட்டாகச் செயற்பட்டு ஆராய்ந்து குழுவாகக் கற்பதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் செயற்பாட்டைத் திட்டமிடல் வேண்டும். வழங்கப்பட்டுள்ள உபகரணங்களையும், மற்றும் வளங்களையும் பயன்படுத்தித் தெளிவான விளக்கத்துடன், தர்க்க ரீதியான கலந்துரையாட ஓடன் ஆராய்ந்து பேறுகளைக் கண்டுபிடிப்பது போன்றன இப்படிமுறையில் எதிர்பார்க்கப் படும் முக்கிய பண்புகள் சிலவாகும். இவ்வாறான செயற்பாடுகளில் மாணவர்கள் தொடர்ந்து ஈடுபடுவதால் சுயகட்டுப்பாடு, ஒழுக்கம், ஏனையோரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்தல், ஏனையோருடன் கூட்டாகச் செயற்படல், ஏனையோருக்கு உதவுதல், நேர முகாமைத்துவம், உயிர் தரத்துடனான முடிவுப் பொருளைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கிய பண்புகளை விருத்தி செய்து கொள்ளல் போன்றன மாணவர்களிடத்தில் விருத்தியாகும்.

மாணவர்கள் கண்டுபிடிப்புக்களில் ஈடுபடும்போது குழுத்தலைவர்களைத் தெரிவு செய்வதை ஆசிரியர் தவிர்த்துக் கொள்வதோடு தலைவர் குழுவிலிருந்து உருவாவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கக்கூடிய பின்னணியை மட்டும் ஆசிரியர் ஏற்படுத்த வேண்டும். மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டுபிடிப்புக்களையும் பேறுகளையும் ஏனைய மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் வகுப்பில் சமர்ப்பிப்பதற்கு ஒவ்வொரு குழுவிற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பிக்கும் போது அக்குழுவின் ஒவ்வொரு அங்கத்தவரும் அதில் பங்கெடுத்துக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு வேலைப் பகிர்வு இருப்பது பயனுடையதாகும். கண்டுபிடிப்புக் களுக்கான விளக்கமளித்தல் (Explanation) இப்படியின் முக்கிய எதிர்பார்ப்பு ஆகும். வகுப்பறையில் வழக்கமாக ஒலிக்கும் ஆசிரியர் குரலுக்கு மேலதிகமாக மாணவர்களின் குரல்களும் கருத்துள்ளவாறு ஒலிக்கத் தொடங்குகிறது. இது இப்படியில் உள்ள முக்கிய அம்சமாகும்.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டுபிடிப்புக்களையும் பேறுகளையும் மேலும் விருத்தி செய்து ஆழமாக விளங்கிக் கொள்வதற்கு (Elaboration) மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பித்த பின் அவற்றை மேலும் அபிவிருத்தி செய்யும் வகையிலான கருத்துக்களை வழங்குவதற்கு முதலில் அக்குறிப்பிட்ட குழுவின் அங்கத்தவர்களுக்கும், பின்னர் ஏனைய குழுக்களின் அங்கத்தவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல் மூலம், இது நிறைவேற்றப்படுகிறது. எவ்வாறாயினும், இறுதியில் பேறுகளைத் தொகுப்பது ஆசிரியரின் பொறுப்பாகும். இதன்போது மாணவர்கள் ஆராய்ந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்ட முக்கிய விடயங்கள், எண்ணக்கருக்கள், கோட்பாடுகள், விதிகள் போன்றவற்றை மாணவர்களிடையே உறுதிப் படுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது.

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செய்கை எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் வெற்றிகரமாக நடைபெறுகிறதாவெனத் தொடர்ந்து தேடிப் பார்ப்பது இம்முறையின் கீழ் ஆசிரியரது பிரதான கடமையாகும். இதற்காகக் கணிப்பீட்டு முறையைப் பயன்படுத்த வேண்டியதோடு, இது கற்றல் - கற்பித்தற் செய்கையினுள் இடம்பெறுவதற்கு, திட்டமிட்ட செயற்பாடுகளைத் தயாரிப்பதற்குரிய சந்தர்ப்பத்தை ஆசிரியருக்கு வழங்குகிறது. செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்கள் விடயங்களை ஆராயும்போது கணிப்பீட்டையும் (Assessment), செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் அவர்களது பேறுகளை விளக்கும்போது கணிப்பீட்டோடு சார்ந்த மதிப்பீட்டையும் (Evaluation) நிகழ்த்துவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான விளக்கம் வேறாகத் தரப்பட்டுள்ளது.

இதுவரை விவரிக்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் முறைமை உருமாற்றப் பங்களிப்பைச் செய்வதற்கு ஆசிரியரை உட்படுத்துகின்றது. இங்கு குழு ஆய்வுக்கு முதலிடம் அளிக்கப்படுவதோடு கொடுக்கல் வாங்கல், தர்க்க ரீதியான கலந்துரையாடல் என்பவற்றோடு சிறிதளவாக ஆசிரியரின் விரிவுரைக்கும் இடமுண்டு. பாடப் பிரதேசத்தின்போது கொடுக்கல் வாங்கல், கலந்துரையாடல் முறை என்பன நடைபெறுவதோடு, இறுதிப் படியில், தொகுப்பின் கீழ் சிறிய விரிவுரைக்கும், அத்தோடு எண்ணக்கரு உருவாக்குவதற்கும் இடம் ஏற்படுகிறது.

புதிய ஆயிரமாம் ஆண்டின் முதலாவது பாடத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் தயாரிக்கப்பட்ட இப்பாடத்திட்டத்தோடு தொடர்பான கற்றல் - கற்பித்தல் முறைமைகளை அபிவிருத்தி செய்யும் போது உருமாற்றப் பங்களிப்புக்கு மேலதிகமாக ஊடுகடத்தும் பங்களிப்பிலும், கொடுக்கல் வாங்கல் பங்களிப்பிலும் காணப்படக்கூடிய முக்கிய இயல்புகளும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளமை இம்முறையின் விசேட தன்மையாகும்.

## 5.2 தர உள்ளீடுகள்

- பாடல்கள், கவிதைகள், செய்யுட்கள்
- கதைகள்
- நாடகங்கள்
- உரையாடல்கள்
- உரைச்சித்திரங்கள்
- அகராதி
- கலைக் களஞ்சியம்
- இணையம்
- சஞ்சிகைகள்
- பத்திரிகைகள்
- கட்டுரைகள்
- சொல்லட்டைகள்
- கதைப்படங்கள்
- படங்கள்
- துண்டுப்பிரசுரங்கள்
- அறிவித்தல்
- விளம்பரங்கள்
- சுவரொட்டிகள்
- சித்திரங்கள்
- பதாகை
- துணுக்குகள்
- வானொலி
- ஒலிப்பதிவுக்கருவி
- ஒலிப்பதிவு நாடா
- தொலைக்காட்சி
- மேற்றலை எறியி (OHP)
- கணனி
- இறுவட்டு
- பேனை, பென்சில், போன்ற செயற்பாடுகளுக்குப் பொருத்தமான பொருட்கள்

# கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

# முதலாம் தவணை

**தேர்ச்சி 1.0** : பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப வினைத் திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார்.

**தேர்ச்சி அலகு 1.2 :** கிரகித்துப் பொருள் அறிந்து ஓதுவார்.

**செயற்பாடு** : "விறகு வெட்டி" என்ற பாடலைக் கேட்டுக் கிரகித்துத் துலங்குவோம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- விறகு வெட்டி என்ற கதைப்பாடல் - பின்னிணைப்பு 1
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 2
- வெள்ளைத்தாள்
- காகிதமட்டை
- வர்ணப்பேனை

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

### படி 1.2.1

சொல்லு மழலையிலே - கண்ணம்மா
துன்பங்கள் தீர்த்திடுவாய்
முல்லைச் சிரிப்பாலே எனது
மூர்க்கந் தவிர்த்திடுவாய்

- இப்பாடலைக் காட்சிப்படுத்துங்கள்.
- பின்வரும் வினாக்களை வினவிக் கலந்துரையாடுங்கள்.
  (1) யாரைப் பற்றி இப்பாடலில் பாடப்பட்டுள்ளது?
  (2) இப்பாடலின் தொடக்க வரி எது?
  (3) கண்ணம்மாவின் எந்தச் செய்கை கவிஞனின் மூர்க்கத்தைத் தவிர்க்கின்றது
- பாடலொன்றைக் கேட்கும் போது அவதானிக்க வேண்டிய பின்வரும் விடயங்கள் குறித்துக் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| ◆ பாடலைக் கேட்பதிலுள்ள விருப்பம் |
| ◆ இசை கூட்டிப் பாடுவதிலுள்ள விருப்பம் |
| ◆ பாடலின் மையக்கருத்து |
| ◆ பாடலில் இரசித்த விடயங்கள் |
| ◆ முறையான தெளிவான உச்சரிப்பு |

(10 நிமிடங்கள்)

## படி 1.2.2

- மாணவர்களை நான்கு அல்லது ஐந்து குழுக்களாகப் பிரியுங்கள்
- செயற்பாட்டுப்பத்திரங்களை ஒவ்வொரு குழுவிற்கும் வழங்குங்கள்.
- பின்னிணைப்பு 2இல் தரப்பட்டுள்ள முதலாவது செயற்பாட்டைச் செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- பாடலை இசையுடன் பாடுவதற்கு உதவுங்கள்.
- பின்னிணைப்பு 2இல் உள்ள இரண்டாவது செயற்பாட்டைத் தனித்தனியாக எழுதுவதற்கு வழிகாட்டுங்கள்.

(70 நிமிடங்கள்)

## படி 1.2.3

- மாணவர் தாம் குழு நிலைச் செயற்பாட்டிற் பயன்படுத்திய பாடல், ஆடல், ஆக்கிய கதை போன்றவற்றை மாணவர் மத்தியில் சமர்ப்பிக்க வழிசெய்யுங்கள்.
- மற்றைய மாணவர்களுடனும் கலந்துரையாட உதவுங்கள்.
- இரண்டாவது செயற்பாட்டிற்கான விடைகளை மாணவர்கள் முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குகங்கள்.
- ஆசிரியரும் மாணவருடன் சேர்ந்து கலந்துரையாடி, பின்வரும் விடயங்களை தெளிவுபடுத்துங்கள்.

◆ பாடலைப் பாடியதாலும் கேட்டதாலும் மாணவர் பெற்ற அனுபவம்
◆ பாடலைச் சந்தத்துடன் வாசித்ததால் பொருளை விளங்கிக் கொண்டமை.
◆ குழுவாகப் பாடியபோது குழு ஒருமைப்பாடு பேணப்பட்ட விதம்.
◆ ஒவ்வொரு குழுவும் பாடி இரசித்த விதம்.
◆ பாடலுக்கேற்பச் சில மாணவர் அபிநயித்துக் காட்டியமை
◆ பாத்திர உணர்வு வெளிப்படப் பாடல்.
◆ பாடலின் மையப் பொருள் : நேர்மை
◆ இரசித்த பகுதி - (உ-ம்) பொன், வெள்ளிக் கோடரிகளை வேண்டாது தன்னுடைய கோடரியையே விரும்பிப் பெற்றுக் கொண்டமை.
◆ ஏனைய கருத்துக்கள் - பிறர் பொருளுக்கு ஆசைப்படாமை, பொய்யுரையாமை
◆ மனதில் தோன்றும் எண்ணம் - (உ-ம்) எத்தகைய இடர் வந்தாலும் உண்மை பேச வேண்டும்.
◆ கதையை அவரவர் மொழிநடையில் எழுதுதல்.

(40 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- செய்யுட் பகுதியை அவதானமாகக் கேட்டு மையக்கருத்தைக் கூறுவார்.
- பாடலை இசையோடு குழுவாகவும், தனியாகவும் பாடுவார்.
- இப்பாடற்பகுதி உணர்த்தும் படிப்பினையைக் கூறுவார்.
- பாடலின் இரசித்த பகுதியைப் பாடிக்காட்டுவார்.
- பாடலைக் கதையாக எழுதுவார்.

**பின்னிணைப்பு - 1**

# விறகு வெட்டி (கதைப்பாடல்)

நேய மனமும் இறுகிய தேகமும்
நேர்மையும் உள்ளவன் பொய்யுரையான்
மேய அடவியில் எப்பொழுதும் சென்று
விறகுவெட்டி விற்று வாழ்ந்திடுவான்

நாட்டுப் புறத்தினி லிருப்பவனாம் பெயர்
நன்னியன் என்பவன் அங்கொருநாள்
தீட்டிய கோடரி தோளினிலே கொண்டு
சென்றனன் காட்டில் விறகுவெட்ட

பட்டமரம் ஒன்றை வாவிக் கரையிலே
பார்த்தனன் கோடரியைத் தூக்கி
வெட்டும் போது வருத்தம் தெரியாமல்
மெல்லமெல்லப் பாட்டுப் பாடிடுவான்.

வெட்டுக வெட்டுக கோடரியே பயம்
மேவாமல் பாடுக என்மனமே
இட்ட முடன் இந்தக் கோடரி கொணர்ந்டனது
இனிய சிறுவருக்கு உணவளிப்பேன்

என்று மகிழ்வுடனே அவன் பாடி
எறிந்து மரத்தைத் தறிக்கையிலே
ஒன்றிய கோடரி காம்பினில் நீங்கியே
உடனே குளத்துக்குள் வீழ்ந்ததுவே.

என்ன செய்வேன் ஐயோ என்ன செய்வேன் ஐயோ
ஏழை வறியவன் என்ன செய்வேன்
என்ன செய்வேன் வேறு கோடரி வாங்கவும்
இல்லையே கைப்பொருள் என்ன செய்வேன்

உண்ண உணவில்லை ஆக்க விறகில்லை
ஓகோ! என் பிள்ளைகள் வாடுவரே
என் செய்வேன் ஐயோ தெய்வமே தெய்வமே
ஏழைக்கு இரங்குவாய் என்றழுதான்

ஐயோ ஐயோ என்று அழும் போதினில்
அழகிய வெண்பட்டு உடை அணிந்து
தையல் ஒருத்தி மலர் முடி சூடியத்
தாமரை வாவியில் தோன்றினளே

மாங்குயில் போலும் மதுர மொழியினால்
மற்றந்தப் பெண் அவனைக் கூவி
ஏங்கி அழ வேண்டாம் உன்னுடைக் கோடரி
இந்தா என்றே ஒன்றை நீட்டினளே

நன்னியன் கண்டிது பொன்னினால் செய்தது
நம்முடையதன்று என்றே நவிலக்
கன்னி முழுகி எழுந்திதோ பாரென்று
காட்டினாள் ஓர் வெள்ளிக் கோடரியை

இல்லை இது வெள்ளி என்னுடைக் கோடரி
இரும்பினால் செய்தது என்றே இசைத்தான்
நல்லது என்றந்த மங்கை திரும்பவும்
நாடிக் குளத்துள் முழுகினளே

இரும்பினால் செய்திட்ட கோடரி தான் இங்கே
இருக்கின்றதிந்தா எனக் கொடுத்தாள்
விரும்பி இரண்டு கரங்களையும் நீட்டி
விறகு வெட்டி அதை வாங்கினனே

வாய்மை உரைத்தனை மற்ற இவ்விரண்டையும்
வைத்துக்கொள் என் றந்த மாது தரத்
தூய்மை யுடையவன் பெற்று மகிழ்ந்தனன்
சொல்லுக மெய்ம்மை எந்நாளினுமே.

**பின்னிணைப்பு - 2**

## செயற்பாட்டுப் பத்திரம் - I
### (குழுச் செயற்பாடு)

1. குழு நிலையில் இயங்கி, குழுத் தலைவர் பாடலை சந்தி பிரித்து வாசித்துக் காட்டுக.

2. குழுவாகப் பாடலை இசையோடு அபிநயத்துப் பாடுக.

3. பாடலைக் குழுவிலுள்ள ஒவ்வொருவரும் தனித்தனியே பாடிக் காட்டுக.

## செயற்பாட்டுப் பத்திரம் - II

தனித்தனியாக இயங்கி, பின்வரும் செயற்பாட்டுப் பத்திரத்தைப் பூர்த்தி செய்யுங்கள்.

1 இப்பாடற் பகுதியின் மையக் கருத்து யாது?

2 இப்பாடற் பகுதியில் நீங்கள் விரும்பி இரசித்த பகுதி யாது?

3 இப்பாடற் பகுதியிற் கூறப்பட்டுள்ள ஏனைய கருத்துக்களைக் கூறுக.

4 இப்பாடலைப் படித்து முடித்தபின் உங்கள் மனதில் தோன்றிய எண்ணம் யாது?

5 இப்பாடலிற் கூறப்பட்டுள்ள விடயத்தைக் கதையாக எழுதுக.

**தேர்ச்சி 2.0** : சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்கும் கேட்போருக்கும் ஏற்ற வகையில் உரையாடுவார்.

**தேர்ச்சி அலகு 2.1** : தமது உணர்வுகளும், கருத்துக்களும், அபிப்பிராயங்களும் தெளிவாகப் புலப்படும் வகையில் உரையாடுவார்.

**செயற்பாடு** : சூழ்நிலைக்கும் கேட்போருக்கும் ஏற்றவகையில் மகிழ்ச்சியாக உரையாடுவோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்.

**தர உள்ளீடு** :
- காகிதாதிகள்,
- எழுதுகருவிகள்
- காகித அட்டை
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 1

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்.

### படி 2.1.1

- இரண்டு மாணவர்களை அழைத்து ஒருவர் பஸ்நடத்துனராகவும் மற்றவர் பிரயாணியாகவும் பாத்திரமேற்று உரையாடலை மேற்கொள்ள வழிவகுக்கவும்.
- அவர்கள் இருவருக்குமிடையே நடைபெறும் உரையாடலை முழு வகுப்பினரும் கேட்கும்படி வழிப்படுத்தவும். அவ்வுரையாடல் தொடர்பாக மாணவர்களிடம் கலந்துரையாடுங்கள்.

பின்வரும் விடயங்களை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.

- உரையாடும்போது பண்பாகப் பேச வேண்டும்.
- உரையாடும்போது உரையாடலிற் பங்கேற்பவருக்கு ஏற்ப உரையாட வேண்டும்.
- உரையாடலின் அவசியம்:
  - தமது கருத்தினை வெளியிடுதல்
  - பிறரின் கருத்தினை அறிந்து கொள்ளல்
  - மன மகிழ்வுடன் இருத்தல்
  - விடயங்களை அறிந்து கொள்ளல்

**(10 நிமிடங்கள்)**

## படி 2.1.2

- மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப 5 பேர் கொண்ட குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்ட செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்
- தலைப்புப் பற்றிய முழுமையான கலந்துரையாடலில் குழுக்களை ஈடுபடுத்துங்கள்.
- தமக்குக் கொடுக்கப்பட்ட செயற்பாட்டைக் குழு ரீதியாகக் கலந்துரையாடச் செய்யுங்கள்.

(30 நிமிடங்கள்)

## படி 2.1.3

- ஒவ்வொரு குழுவும் தத்தமது செயற்பாட்டைச் சமர்ப்பிக்க வகை செய்யுங்கள்.
- உரையாடல் பற்றி ஏனைய குழுக்களின் கருத்துக்களுக்கு இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**குழு 1.**

- எம் அனைவருடைய வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறோம்.
- பரீட்சை முடிவை அறிந்தபோது யாது செய்தீர்?
- உங்களது வெற்றிக்கு யார் காரணம்?
- யார் யாரிடம் கல்வி கற்றீர்கள்?
- உங்களது பெற்றோர் எவ்வாறு மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்?

**குழு 2**

- உண்மையில் ஈடுசெய்ய முடியாத இழப்புத்தான்.
- அதை எண்ணிக் கவலைப்படாதே.
- அம்மா சகோதரர்களுக்கு ஆறுதல் கூற வேண்டும்.
- நாங்கள் உனக்குத் துணையாக இருப்போம்.
- கவலையை மறக்கத்தான் முனைகின்றேன். எப்படி? முடியவில்லையே.

**குழு 3**

- "வணக்கம் மிஸ்"
- "நாங்கள் தரம் 6 மாணவர்கள்"
- "வகுப்பாசிரியர் நூல் நிலையத்தில் புத்தகம் எடுத்துப் படிக்கச் சொன்னார்"
- "புத்தகம் எடுப்பதற்கு யாது செய்ய வேண்டும்?."
- "அங்கத்துவத்தை நாங்கள் எவ்வாறு பெற்றுக்கொள்வது?"

**குழு 4**

- "வணக்கம் சேர்"
- சேமிப்புப் பழக்கம் நல்லதெனக் கற்றோம்.
- உங்கள் வங்கியில் கணக்கொன்றை ஆரம்பிக்க எங்களுக்கு முடியுமா?
- எவ்வாறான கணக்கு எங்களுக்குப் பொருத்தமானது?
- நாங்கள் முதலில் யாது செய்ய வேண்டும்?

**குழு 5**

- சம்பவத்தை நேரில் பார்த்தது யார்?
- சூழ்ந்து நிற்க வேண்டாம்.
- இவர்தான் பிடித்துத் தள்ளியவர் (சம்பவத்தைப் பொறுத்து)
  - பாத்திரங்களுக்கேற்ப உரையாடும் தன்மை
  - விடயத்தைத் தெளிவுபடுத்திக் கூறும் தன்மை
  - வினாத்தொடுக்கும் பாங்கு
  - விபரங்களை அறிந்து உரையாடும் தன்மை
  - சமயோசிதமான உரையாடல்

  இவற்றைக் கவனத்திற் கொள்ளவும்.

(40 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- உரையாடலுக்குப் பொருத்தமான மொழிநடையைத் தெரிந்து பயன்படுத்துவார்.
- உரையாடலின் மூலம் விருப்பு வெறுப்புக்களைப் பண்பாக வெளிப்படுத்தலாமென்பதை உணர்ந்து கருத்தாடுவார்.
- உரையாடல் திறனைப் பயன்படுத்தி மற்றவர்களை மகிழ்விக்கலாமென்பதை உணர்வார்.
- பல்வேறு ஊடகங்களில் நிகழும் உரையாடல்களை மதிப்பிடுவார்.

**பின்னிணைப்பு 1**

# செயற்பாட்டுப் பத்திரம்

## குழு 1

- புலமைப்பரிசில் பரீட்சையில் உயர்புள்ளி பெற்ற மாணவருடன் உரையாடுதல்.
  - உயர் புள்ளி பெற்ற மாணவன் ( ஒருவர்)
  - உரையாடுபவர் (4 பேர்)

## குழு 2

- தந்தையை இழந்த நண்பருக்கு ஆறுதல் கூறி உரையாடுதல்.
  - தந்தையை இழந்த மாணவன் (ஒருவர்.)
  - உரையாடுபவர் (4 பேர்)

## குழு 3

- நூல் நிலையத்தில் அங்கத்துவம் பெறுவதற்கு பொறுப்பதிகாரியுடன் உரையாடுதல்
  - பொறுப்பதிகாரி (ஒருவர்)
  - வினாத் தொடுப்பவர் (4 பேர்)

## குழு 4

- வங்கியில் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கு வங்கி முகாமையாளருடன் உரையாடுதல்.
  - முகாமையாளர் (ஒருவர்)
  - கணக்குத் திறக்க இருப்பவர் (4 பேர்)

## குழு 5

- வகுப்பில் மாணவருக்கு இடம்பெற்ற விபத்து ஒன்றை ஆசிரியருக்கு முறையிடும் உரையாடல்.
  - ஆசிரியர் (ஒருவர்)
  - சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர் (ஒருவர்)
  - சம்பவத்தைப் பார்த்து முறையிடுபவர் (3 பேர்)

**தேர்ச்சி 4.0** : உயிர்த்துடிப்புள்ள,கட்டுருவாக்க செயல்திறனுடைய வாசகராகச் செயற்படுவார்.

**தேர்ச்சி அலகு4.1** : விளக்கத்தோடும், பொருளுக்கேற்ற உணர்ச்சியோடும் வாசிப்பார்.

**செயற்பாடு** : விளக்கத்தோடு வாசிப்போம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- பின்னிணைப்பு 1இல் கொடுக்கப்பட்ட உயிர்களிடத்தில் அன்பு என்னும் தலைமைப்பிலான கட்டுரை
- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடு**
**படி 4.1.1**

- மாணவர்கள் இருவரை எழுமாறாக அழைத்து, கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசிக்கச் செய்யுங்கள்.

- இதோ நான் பரிசு வாங்கப் போகிறேன். இன்றைக்கே கொழும்பு செல்ல வேண்டும் என்று கூறியபடி சங்கர் துள்ளி எழும்பினான்.எனக்குத் தான் முதற்பரிசு என்று அவனது வாய் முணுமுணுத்தது. சுற்றும் முற்றும் பார்த்தான். பாவம் பக்கத்தில் எவருமே இல்லை. வீதியில் வாகனங்கள் வேகமாகச் சென்று கொண்டிருந்தன. கோயிலில் மணி ஒலித்துக் கொண்டிருந்தது. அப்போதுதான் அவன் தன்னிலையை உணர்ந்தான். இதுவரை நேரமும் தான்கண்டது கனவு என்பதையும் உணர்ந்துகொண்டான்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- யாருடைய வாசிப்புத் தெளிவாக இருந்தது.
- இருவரதும் தொனி எப்படி இருந்தது.
- வாசிக்கும் போது எல்லோருக்கும் செவிமடுக்கக் கூடியதாக இருந்ததா?
- வாசித்த பந்தியில் என்னென்ன விடயங்களை அவதானித்தீர்கள்.
- வாசித்தவர்களது முகபாவத்தை அவதானித்தீர்களா?

வாசிப்போன் என்ற வகையில் பின்வரும் அம்சங்கள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். என்பதைத் தெளிவு படுத்துங்கள்.

- தெளிவாக வாசித்தல்
- நிறுத்தற் குறிகளை அனுசரித்து வாசித்தல்.
- தொனி வேறுபாட்டுடன் வாசித்தல்
- ஒலியமைப்புக்கேற்ப வாசித்தல்.
- பொருளுணர்ந்து வாசித்தல்.
- கேட்போனுக்கு விளங்கத்தக்க வகையில் வாசித்தல்.

(10 நிமிடங்கள்)

## படி 4.1.2

- பின்னிணைப்பு 1இல் கொடுக்கப்பட்ட பந்திகளை மாணவர் ஒவ்வொருவருக்கும் வழங்குங்கள்.
- படி 1இல் கலந்துரையாடிய விடயங்களை நினைவுபடுத்தி, மாணவர்களை தனித்தனியே மௌனமாக வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- மாணவர் வாசித்து கிரகிப்பதற்குப் பத்து நிமிடங்கள் மட்டும் வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

## படி 4.1.3

- ஒவ்வொரு மாணவரையும் எழுமாறாக உரத்து வாசிக்கச் செய்யுங்கள்.
- எனையோரைச் செவிமடுக்க வழிப்படுத்துங்கள்.

வாசிக்கும் போது பின்வரும் விடயங்கள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்திக் கலந்துரையாடுங்கள்.

- மாணவரின் தொனி
- உச்சரிப்பு
- ஒலி பேதங்களை அனுசரித்தல்.
- நிறுத்தற் குறிகளை அனுசரித்தல்.

(40 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- பொருளுணர்ந்து வாசிக்க வேண்டும் என்பதை தெரிந்து கொள்வார்.
- நிறுத்தக் குறிகளை அனுசரித்து வாசிக்கப் பழகுவார்.
- ஒலியமைப்புக் கேற்ப வாசிப்பார்.
- கேட்போர் விளங்கத்தக்க வகையில் வாசிப்பார்.
- கிடைக்கும் சந்தர்ப்பங்களில் விடயங்களை வாசித்துக் குறிப்பெடுப்பார்.

**பின்னிணைப்பு 1**

## 4. உயிர்களிடத்து அன்பு

இந்த உலகில் எத்தனையோ வகையான உயிரினங்கள் உள்ளன. மனிதர், பறவைகள், மிருகங்கள் என்று அவை எண்ணிலடங்காதவை. அவை யாவற்றுள்ளும் சிறந்தது !மனித இனமே. பெறுதற்கரிய பிறவியைப் பெற்ற மனிதன் என்றைக்கும் மனிதனாக வாழ வேண்டும். மனிதனை மனிதனாக வாழ வைப்பவை நல்ல குணங்களும் நல்ல செயல்களுமே. அன்பு எனும் உயர் குணம் எல்லா நற்குணங்களுக்கும் நற் செயல்களுக்கும் அடிப்படையாக விளங்குகின்றது.

"அன்பு நிறைய உடையவர்கள் மேலோர்"
என்று சுப்ரமணிய பாரதியார் பாடியுள்ளார்.
"நல் அன்பால் வளர்த்திடுக இன்ப நல் வாழ்வை"
என்று பாரதிதாசனும் பாடியுள்ளார்.

அன்பு என்பது கொடுக்கக் கொடுக்கக் குறையாத அருஞ் செல்வமாகும். பெற்றோர், பிள்ளைகள், கணவன், மனைவி, சகோதரர், நண்பர், உறவினர், அயலவர் என்று தம்முடன் உறவு கொண்டவர்கள் மீது மனிதன் அன்பு வைக்கின்றான். இவ்வாறு குடும்பத்தவர் மீதும், உற்றார் மீதும் வைக்கின்ற அன்பு காலப் போக்கில் உயிர்கள் எல்லாவற்றையும் நேசிக்கச் செய்கின்றது.

மனிதர்கள் உயிர்களிடத்தே காட்டுகின்ற கருணையே சீவகாருணியம் எனப்படும். அன்பின் அடித்தளத்திலேயே அக்கருணை உருவாகிறது. இறைவனை நேசிப்பது போல அவனது படைப்புக்களான ஏனைய உயிர்களையும் நேசிப்பது சிறந்த பண்பாகும். அவ்வுயிர்களிடத்து நாம் அன்பும், கரிசனையும் காட்ட வேண்டும். தமது உயிரைப் பாதுகாப்பது போல் பிற உயிர்களையும் பாதுகாக்கும் மனிதர், மனிதர்களுள் மாணிக்கங்கள் எனப் போற்றப்படுகின்றனர்.

**தேர்ச்சி 9.0** : அவதானமாகக் கிரகித்து எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, எழுத்துக்கள், சொற்கள், வாக்கியங்கள் என்பவற்றை வழுவின்றி உரிய நிறுத்தற் குறிகளுடன் தெளிவாக எழுதுவார்..

**தேர்ச்சி அலகு 9.1** : கேட்டு கிரகித்து எழுதுவார்.

**செயற்பாடு** : சொல்வதை எழுதுவோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்.

**தர உள்ளீடு** : - பந்தி பின்னிணைப்பு - 1
- செவ்வை பார்த்தல் - பின்னிணைப்பு - 2

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்**
**படி 9.1.1**

- பின்வரும் வாக்கியங்களைக் கரும்பலகையில் காட்சிப்படுத்துங்கள்.

"மழையில் உள்ள அருவி மலை பெய்ததால் பெறுக்கெடுத்துப் பாய்ந்தது"
"முயற்ச்சி உடையார் இழ்ச்சி அடையார்"

- இவ்வாக்கியங்களை வாசித்துக் காட்டி அதிலுள்ள சரி, பிழைகளைக் காணும்படி மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- எழுத்துப் பிழைகளைத் தவிர்ப்பதற்கு
  - சரியான உச்சரிப்பு
  - அவதானமாகக் கேட்டல் முக்கியம்
- எழுத்துக்களைச் சரியாகப் பயன்படுத்தாதபோது கருத்து வேறுபடும்.
  மலை - மழை
  அருவி - அறுவி
- சொற்களை இடம்மாற்றிப் பயன்படுத்துவதால் பொருள் வேறுபடும்.
- இலக்கண விதிகளுக்கு அமைய எழுதுதல்.
  ய், ர், ழ், ஆகிய எழுத்துக்களை அடுத்தே இன்னோர் இனமல்லாத மெய் எழுத்து வரும் என்பதை விளக்குதல்.

**(20 நிமிடங்கள்)**

## படி 9.1.2

- மாணவர்களை வகுப்பு நிலையில் இருக்க வழிப்படுத்துங்கள்.
- பின்னிணைப்பு 1இல் உள்ள பந்தியை உரியவாறு வாசியுங்கள்.
- வாசிக்கும் போது சொல்வதைக் கிரகித்து எழுதுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களைக் குழுக்களாக்குங்கள்.
- சொல்வது எழுதுதல் பந்தியைக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- குழு நிலையில் தாம் எழுதியவற்றில் உள்ள சரி, பிழைகளைக் கலந்துரையாட வழிகாட்டுங்கள்.
- அறிக்கை தயாரிக்கும் போது பின்னிணைப்பு 2ஐப் பயன்படுத்தவும்.

(20 நிமிடங்கள்)

## படி 9.1.3

- ஒவ்வொரு குழுவும் தத்தமது அறிக்கையை முழு வகுப்புக்கும் சமர்ப்பிக்க ஆவன செய்யுங்கள்.
- ஏனைய மாணவர்கள் கருத்துக்களைக் கூறச் சந்தர்ப்பம் அளியுங்கள்.

பின்வரும் விடயங்கள் உள்ளடங்கிய வகையில் கலந்துரையாடுங்கள்.

- எழுத்துக்களின் பௌதீக வடிவம்.
  - எழுத்துக்களின் ஆரம்பம், முடிவு
  - எழுத்துக்களின் அளவு
  - எழுத்து, சொற்களுக்கு இடையிலான இடைவெளி
- கருத்து
  - எழுத்து மாறுவதால் கருத்து மாறுபடுதல்.
  - உரிய எழுத்தை உரிய சொல்லுக்குப் பயன்படுத்துதல்.
- இலக்கணம்
  - எழுவாய்க்குப் பொருத்தமான பயனிலை
  - வசனத்திற்குப் பொருத்தமான பயனிலை
- தொடர்பாடல்
  - சொல்ல நினைத்தவை எழுத்தில் பிரதிபலிக்கப்படுமாயின் அதுவே சிறந்த ஆக்கமாகும்.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்.**

- மாணவர்கள் எழுத்துக்கள், சொற்கள் ஆகியவற்றை அடையாளம் காட்டுவார்.
- முறையான தொடர்பாடலுக்கு எழுத்துக்கள், சொற்கள் அவசியம் என்பதை உணர்ந்து செயற்படுவார்.
- முறையான கேட்டல் எழுத்துப் பயிற்சியின் ஊடாக எழுத்துத் திறன்களை வளர்க்கலாம் என்பதை அறிவார்.
- வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களில் முறையாகக் கேட்பதன் மூலம் சரியான எழுத்துக்களைப் பயன்படுத்துவார்.

**பின்னிணைப்பு - 1**

## சொல்வது எழுதுதல் பகுதி

கண்ணனுக்கு அண்ணன் மாறன். மாறன் கொழும்பில் மாமனோடு தங்கி, அங்குள்ள கல்லூரி ஒன்றிற் கல்வி பயின்றான். விடுமுறைக் காலத்தில் ஒருநாள் மாமனும், மாறனும் மூதூருக்குச் சென்றார்கள். மாறன் வீட்டுக்குச் செல்லும் போது சாரணச்சீருடை அணிந்து சென்றான். மூதூருக்குப் பக்கத்தில் அப்பொழுது சாரணர் பாசறை வாழ்க்கை நடந்துகொண்டிருந்தது. அன்று நிகழ்ந்த 'பாசறைத் தீக்கு' மாறன்.கண்ணனையும் அழைத்துச் சென்றான். அங்கு நடந்த பாசறை வாழ்க்கை, ஆடல், பாடல் என்பன கண்ணனுக்குப் பிடித்துக்கொண்டன. வனக்கதைகளைக் கேட்டுச் சுவைத்தான். பாடல்களைத் தானும் சேர்ந்து பாடினான். மாறன் போல தானும் உடுக்கவேண்டுமென்று ஆசைப்பட்டான். தானும் கொழும்புக்குச் செல்ல வேண்டுமெனத் தன் பெற்றோரிடம் கூறினான். புதிய சூழல் கண்ணனைத் திருத்துமென்று கருதிப் பெற்றோர் அவனை மாமனுடன் அனுப்பி வைத்தனர். கண்ணனும் கொழும்பிலேயே ஐந்தாம் வகுப்பிற் படிக்க ஆரம்பித்தான். பாடசாலையிற் சேர்ந்த சில தினங்களிற் சாரணனாக விரும்பினான். ஆனால் அவன் பதினொரு வயதிற் குறைந்தவனாகையால் ஆறாம் வகுப்பிற்கு வந்ததும் படிப்படியாக முயன்று சிறந்த சாரணனாக வரவேண்டுமென்று உறுதி பூண்டான்.

**பின்னிணைப்பு - 2**

சொல்வது எழுதுதலைப் பின்வரும் அடிப்படையில் செவ்வை பார்க்கவும்.

1. எழுத்துக்களின் வடிவம்
2. சொற்களின் சரியான வடிவம்
3. எழுத்துக்களுக்கு இடையிலான இடைவெளி
4. சொற்களுக்கு இடையிலான இடைவெளி

**தேர்ச்சி 1.0** : பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்குமேற்ப வினைத் திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார்.

**தேர்ச்சி அலகு1.4** : பாடத்தைக் கேட்டுக் கிரகித்துக் கருத்துக்களைக் கூறுவார்.

**செயற்பாடு** : உரைநடையிலமைந்த பந்தியைக் கேட்டுக் கிரகித்துத் துலங்குவோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- தயாரிக்கப்பட்ட பந்தி - பின்னிணைப்பு - 1
- செயற்பாட்டுப் பத்திரம் பின்னிணைப்பு -2
- எழுதுதாள்

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்.

### படி 1.4.1

- தாம் கூற எடுத்துக்கொண்ட கருத்தைக் கேட்போர் இரசனையுடன் கருத்தூன்றிக் கேட்பதற்கு என்னென்ன விடயங்களைக் கவனத்திற்கொள்ள வேண்டும்? என மாணவரிடம் வினவி ஆரம்பியுங்கள்.
- கலந்துரையாடலின்போது பின்வரும் அம்சங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - பொருத்தமான இடங்களில் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தல்.
> - பொருத்தமான உவமைகளைப் பயன்படுத்தல்.
> - பொருத்தமான மரபுச் சொற்களைப் பயன்படுத்தல்.
> - பொருத்தமான இரட்டைக் கிளவிச் சொற்களைப் பயன்படுத்தல்.

(10 நிமிடங்கள்)

### படி 1.4.2

- மாணவர்களை ஐந்து குழுக்களாகப் பிரிந்து இயங்கச் செய்யுங்கள்.
- தயாரித்து வைத்திருக்கும் பந்தியைத் தெளிவாகவும் உரத்தும் வாசியுங்கள்.
- பின்னிணைப்பு 2இல் கொடுக்கப்பட்ட ஒப்படையைக் குழுக்களுக்கு வழங்கி, வினாக்களை ஒருமுறை வாசிக்க வழிகாட்டுங்கள்.
- பந்தியை மீண்டுமொரு முறை ஆறுதலாகவும் தெளிவாகவும் வாசியுங்கள்.
- இரண்டாவது தடவை வாசிக்கும்பொழுது, வினாக்களுக்கு விடையளிக்கும்படி மாணவருக்கு அறிவுறுத்தல் வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

## படி 1.4.3

- ஒவ்வொரு குழுவும் தத்தமது விடைகளை முன்வைக்க வழிப்படுத்துங்கள்.
- ஏனைய குழுக்கள் தமது அபிப்பிராயங்களைத் தெரிவிக்க வகை செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

◆ இராமன், கைகேயியின் கட்டளைப்படி பதினான்கு வருடங்கள் வனவாசம் செய்யப்புறப்பட்டுச் சென்றான்.

◆ 1. கயல்விழி - உவமானம் : கயல்மீன், உபமேயம்: சீதையின் கண்
2. செந்தாமரை மலர்போல உவமானம் : செந்தாமரை
உவமேயம் : குகனது முகம்

◆ இரட்டைக்கிளவிகள் 1. பொலபொல } இவை பிரிந்து நின்று
2. கலகல பொருள் தரா.

◆ 1. நெல்லின் இளையது : நாற்று
2. மானின் இளையது : குட்டி
3. குயிலின் தொனி : கூவுதல்

◆ வனம் - காடு; கயல் - மீன், மாந்தர் - மக்கள்; அடவி - காடு, இன்பம் - மகிழ்ச்சி

◆ துன்பம் - இன்பம்; மலர்தல் - கூம்புதல்; நகைத்தல் - அழுதல்; அண்மை - சேய்மை; அன்பு - வன்பு

◆ சுவையாகச் சித்திரிக்கப்பட்டுள்ளதா எனக் கவனிக்கவும்.

(40 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- உரைநடையின் மையக்கருத்தை எழுதுவார்.
- ஒத்த கருத்துச் சொற்களை, எதிர்கருத்துச் சொற்களை எழுதுவார்.
- உவமைகள், மரபுச் சொற்கள், இரட்டைக்கிளவிகள் என்பவற்றைப் பயன்படுத்தித் தமது கருத்துக்களைச் சுவைபட வெளிப்படுத்துவார்.

**பின்னிணைப்பு - 1**

# உரைநடைப்பகுதி (பந்தி)

கைகேயியின் சூழ்ச்சியினால் இராமன் பதினான்கு வருடங்கள் வனவாசம் செய்யவேண்டி ஏற்பட்டது. முதலில் சீதையை உடன் அழைத்துச் செல்லும் நோக்கம் இராமனுக்கு இருக்கவில்லை. அதனையறிந்த சீதையின் கயல்விழி போன்ற கண்களில் இருந்து நீர் பொல பொல என வழிந்தோடியது. இறுதியில் சீதையும் உடன் சென்றாள். தம்பியாகிய இலக்குவனும் அண்ணனுக்குக் காவலாகச் சென்றான்.

மூவரும் அயோத்தி நகரைக் கடந்து மருத நிலத்தை அடைந்தனர். மருத நிலக் காட்சிகளைக் கண்ட சீதை துன்பத்தீயின் மத்தியிலும் இன்பம் அடைந்தாள். வயல்களிலே உழத்தியர் வரிசையாக நெல் நாற்றை நட்டனர். உழவர்கள் உல்லாசமாக பாடல்களைப் பாடிக்கொண்டு வேலை செய்தனர். அப்பாடல்களைக் கேட்ட உழத்தியர் கல கல என நகைத்தனர். மான்குட்டிகள் துள்ளி ஓடின. குயில்கள் 'கூ கூ' எனக் கூவின. மயில்கள் அகவின.

மருத நிலத்தைக் கடந்த மூவரும் கங்கை நதியை அண்மித்தனர். கங்கை நதியில் படகு செலுத்தும் குகன் இராமன் மீது பேரன்பு பூண்டவன். இராமனைச் சந்தித்த குகனது முகம் அன்றலர்ந்த செந்தாமரைபோல மலர்ந்தது.

மூவரும் குகனது உதவியுடன் கங்கை நதியைக் கடந்து அக்கரையை அடைந்தனர். அங்கிருந்து அடவியை நோக்கி அவர்களது பயணம் தொடர்ந்தது.

**பின்னிணைப்பு - 2**

# செயற்பாட்டுப் பத்திரம்

(ஆசிரியர் உரைநடைப் பகுதியை இருமுறைகள் வாசிக்கும் பொழுது அவதானமாகக் கேட்டுக் கிரகித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.)

1. இப்பந்தியில் இடம்பெறும் முக்கிய கருத்தை ஒரு வாக்கியத்தில் எழுதுக.

2. இப்பகுதியில் இடம்பெற்ற இரு உவமையணிகளைக் குறிப்பிட்டு உவமான உவமேயங்களை எழுதுக.

3. இப்பகுதியில் இடம்பெற்ற இரு இரட்டைக்கிளவிகளை எழுதுக.

4. இப்பகுதியில் இடம்பெற்ற மரபுச் சொற்கள் மூன்றினைத் தருக.

5. பின்வரும் சொற்களின் ஒத்தகருத்தைத் தருக.
   i.வனம் ii. கயல் iii மாந்தர் iv. அடவி v. இன்பம்

6. பின்வரும் சொற்களின் எதிர்க்கருத்தினை எழுதுக.
   i. துன்பம் ii.மலர்தல் iii நகைத்தல் iv. அண்மை v. அன்பு

7. குறைந்தது இவ்விரண்டு உவமைகள், மரபுச்சொற்கள், இரட்டைக்கிளவிகள் இடம்பெறத்தக்கதாக சுவைபொருந்திய ஒரு நிகழ்ச்சியைச் சித்திரித்துப் பந்திகள் எழுதுக. (பந்திகள் இருபத்தைந்து வரிகளடங்கியதாக இருத்தல் வேண்டும்.)

**தேர்ச்சி 11.0** : படைப்புக்களை வாசித்த அனுபவத்தினூடாக சுய ஆக்கங்களை எழுதுவார்.

**தேர்ச்சி அலகு11.1** : பந்தி எழுதுவார்.

**செயற்பாடு** : விடயத்திற்கேற்பப் பந்தி எழுதுவோம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- செயற்பாட்டுப்பத்திரம் பின்னிணைப்பு -1
- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்**

**படி 11.1.1**

வாக்கியங்கள் சிலவற்றைக் கருத்தொழுங்கின்றிக் கரும்பலகையில் எழுதி அல்லது காட்சிப்படுத்தி அவற்றைக் கருத்தொழுங்கான பந்தியாக அமையும் வகையில் எழுத வையுங்கள்.

**வாக்கியங்கள்.**

- இலங்கைத் தேயிலைக்கு உலகெங்கும் பெரும் புகழ் உண்டு.
- இவ்வாறு எமது தாயகத்திற்குச் செல்வத்தையும், புகழையுந் தேடித்தரும் தேயிலை எங்கள் மலையகத்தில் விளைகின்றது.
- இத்தேயிலை உலகெங்குமுள்ள பற்பல நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றது.
- மலையகம் எமது நாட்டிற்குப் பெருந்தொகைச் செல்வத்தை வாரி வழங்குகின்றது.
- மலையகத்தில் விளையும் தேயிலையால் இச்செல்வம் கிடைக்கின்றது.

பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்

- பொருள் ஒழுங்குடன் கூடிய பல வாக்கியங்களால் அமைவது பந்தி
- பந்தியில் குறிப்பிடப்பட்ட ஒரு மையக்கருத்து இருக்கும்.
- அதுவே பந்தியின் தலைமை வாக்கியமாகும்.
- மையக் கருத்தை வலுப்படுத்தி அதனுடன் தொடர்புடைய வேறு வாக்கியங்கள் அமையும்போது அவற்றைத் துணை வாக்கியங்கள் என்போம்.
- கருத்துத் தொடர்புடையனவாய், ஒழுங்கு முறையில் வாக்கியங்கள் அமையும் போதே பந்தி சிறப்பாக அமையும்.

(20 நிமிடங்கள்)

## படி 11.1.2

- மாணவரை நான்கு பேர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- பின்னிணைப்பு 1.இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை ஒவ்வொரு குழுவிற்கும் வழங்குங்கள்.
- மாணவர்கள் கலந்துரையாடச் சந்தர்ப்பம் வழங்குவதோடு, தேவையான வழிகாட்டல்களையும் வழங்குங்கள்.
- மாணவர் தனித்தனியே செயற்படவும் பின்னர் குழுவாக இணைந்து அறிக்கை தயாரிப்பதற்கும் வகை செய்யுங்கள்.

(60 நிமிடங்கள்)

## படி 11.1.3

- குழுக்கள் தமது அறிக்கைகளைக் காட்சிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தத்தமது அறிக்கையைக் காட்சிப்படுத்தும் போது ஏனைய மாணவர்கள் வழங்கப்படும் சட்டகத்தைப் பூர்த்தி செய்யச் சந்தர்ப்பம் வழங்குங்கள். (தலைப்பு, தலைமை வாக்கியம், துணை வாக்கியம், முடிவு)

பின்வரும் விடயங்களை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்திக் கலந்துரையாடுங்கள்.

| | | |
|---|---|---|
| **தலைப்பு** | : | **பத்திரிகையின் பயன்கள்** |
| **தலைமை வாக்கியம்** | : | **வெகுசனத் தொடர்பு சாதனம்** |
| **துணை வாக்கியங்கள்** | : | **எமது நாட்டுப் பத்திரிகைகள்** |
| | | **தினப் பத்திரிகை** |
| | | **வாரப் பத்திரிகை** |
| | | **அவற்றின் உள்ளடக்கம்** |
| | | **செலவு குறைவு** |
| **முடிவு** | : | **பயனுள்ள செய்திகளைப் பெற்று நாமும் பயனடைவோம்.** |

***பந்தி***

வெகுசனத் தொடர்பு சாதனங்களுள் ஒன்று பத்திரிகை ஆகும். பெரியவர் முதல் சிறியவர் வரை அனைவருக்கும் பயனுள்ள பல விடயங்களைப் பத்திரிகை தருகின்றது. எமது நாட்டில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பத்திரிகைகள் வெளிவருகின்றன. இவை தினப் பத்திரிகைகளாகவும், வாரப் பத்திரிகைகளாகவும் வெளிவருகின்றன. தினப் பத்திரிகைகள்மூலம் உள்நாட்டுச் செய்திகள், வெளிநாட்டுச் செய்திகள், சிறுவிளம்பரங்கள் போன்றவற்றை அறிந்து கொள்ள முடிகின்றது. வாரப் பத்திரிகை வர்த்தக விளம்பரங்கள், இலக்கியம், மருத்துவம்,மாதர் பகுதி, சிறுவர் பகுதி போன்ற பல்வேறு பயனுள்ள விடயங்களைத் தாங்கி வருகின்றது. மிகக் குறைந்த செலவில் இலகுவாக எல்லோராலும் வாங்கக் கூடிய சாதனம் பத்திரிகை மாத்திரமே. பயனுள்ள செய்திகளைத் தாங்கிவரும் பத்திரிகைகளை வாசித்து நாமும் பயனடைவோம்.

இந்த வகையில் ஏனைய விடயங்களையும் மாணவர்கள் எழுதிக் கொள்ள விளக்கம் அளியுங்கள்.

(40 நிமிடங்கள்

**கணிப்பீடும மதிப்பீடும்.**

- பந்தி எழுதும் முறையை விளங்கி எழுதுவார்.
- தலைமை வாக்கியம், துணை வாக்கியங்களை இனங்கண்டு எழுதுவார்.
- விடயங்களை விளக்கி எழுதுவார்.
- பந்தி அமைப்பைத் தமதாக்கங்களில் பயன்படுத்துவார்.

**பின்னிணைப்பு - 1**

# செயற்பாட்டுப் பத்திரம்

- குழுவிலுள்ள ஒவ்வொருவரும் பின்வரும் விடயங்களுள் ஒவ்வொன்றைத் தெரிவு செய்து எழுதுங்கள்.

  - பத்திரிகை
  - வீட்டுத் தோட்டம்
  - சூரியன்
  - நூலகம்

- உங்கள் குழுவினருடன் நீங்கள் எடுத்துக் கொண்ட விடயம் பற்றிக் கலந்துரையாடி கீழ்வரும் சட்டகத்துக்கேற்ப விடயங்களைக் குறித்துக் கொள்ளுங்கள்.

  - தலைப்பு
  - தலைமை வாக்கியம்
  - துணை வாக்கியம்
  - முடிவு

- நீங்கள் தெரிவு செய்த தலைப்பின் கீழ் ஆறு அல்லது ஏழு வாக்கியங்கள் கொண்ட கருத்தமைந்த பந்தியொன்றை எழுதுங்கள்.

- குழுவாக இணைந்து 4 பந்திகளையும் டிமைத் தாளில் அழகுற எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 7.0** : ஆக்கத் திறனை மேம்படுத்துவதற்காக வாசிப்பார்.

**தேர்ச்சி அலகு 7.3** : தரப்பட்ட பாடப் பரப்புக்களில் வருகின்ற பயன்பாட்டு இலக்கணத்தை இனங்கண்டு வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு** : பயன்பாட்டு இலக்கணத்தை விளங்கிப் பயன்படுத்துவோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- பாடல்கள் - பின்னிணைப்பு 1
- பந்தி - பின்னிணைப்பு 2
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 3
- எழுதுதாள்கள்

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்.**

**படி 7.3.1**

- பின்னிணைப்பு 1இல் கொடுக்கப்பட்டுள்ள பாடல்களைக் கரும்பலகையில் காட்சிப்படுத்துவதனூடாக ள, ல,ழ,ற,ல, ர,ன,ண எனும் எழுத்து வேறுபாடுகள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- பின்னிணைப்பு 2இல் கொடுக்கப்பட்ட பந்தியைக் காட்சிப்படுத்துவதனூடாகப் பயன்பாட்டு இலக்கணம் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- காட்சிப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக நீங்கள் பெற்றுக் கொண்ட பயன்கள் எவை? என்ற வினாவை எழுப்பி அவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

பின்வரும் விடயங்கள் பற்றி தெளிவுபடுத்துங்கள்.

- ல,ள.ழ, ண.ந,ன,ர.ற வேறுபாடுகள்.
- இணைப்பிடைச் சொற்களை அறிதல்.
- பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு சொற்கள்.
- வாக்கிய அமைப்பை விளங்கிக் கொள்ளல்.
  (எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், தன்மை, முன்னிலை, படர்க்கை)
- ல, ழ, ள, ண, ந, ன, ர, ற எழுத்துக்களைக் கண்ணால் பார்த்து, காதால் கேட்டு, வாயால் உச்சரிக்கும் போது ஒலியமைப்பு சரியாக அமைதல். அவற்றின்வேறுபாடுகளை உணர்தல்.

(10 நிமிடங்கள்)

## படி 7.3.2

- மாணவர்கள் தனித்தனியாக செயற்பாட்டுப்பத்திரத்தைப் பூர்த்தி செய்வதற்கு வகுப்பறையை ஒழுங்குபடுத்துங்கள்.
- ல,ழ,ள,ண,ந,ன, ர, ற ஆகிய ஒலி வேறுபாடுகளைக் கொண்ட பயிற்சிகளைக் கரும்பலகையின் துணைகொண்டு செயற்படுத்துங்கள்.
- இணைப்பிடைச் சொற்களைக் கரும்பலகையில் காட்சிப்படுத்தி மாணவர்கள் வாக்கியங்களை அமைக்க வகைசெய்யுங்கள்.
- மாணவர்கள் எல்லோரும் பயிற்சியில் ஈடுபடுகிறார்களா? என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.
- மாணவர்கள் படி 1இல் பெற்ற விளக்கத்தைக் கொண்டு பயிற்சியைச் செய்ய வழிப்படுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)

## படி 7.3.3

- பயிற்சிகளை முடித்துக் கொண்ட மாணவர்களுடைய கொப்பிகளைப் பார்வையிடுவதற்கு முன்பு கலந்துரையாடுங்கள்.
- ஒவ்வொருவரதும் பயிற்சிகளைத் திருத்துவதன் மூலம் நிறைகுறைகளைக் கலந்துரையாடி, செம்மைப்படுத்துங்கள்.
- ல,ழ,ள.... வேறுபாடு கொண்ட சொற்களை எழுமாற்றாக மாணவர்கள் எல்லோரையும் உச்சரிக்கச் செய்யுங்கள்.
- மாணவர் தம் கருத்தைக் கூற வழிப்படுத்துங்கள்.

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- ல,ழ,ள,ண,ந,ன, ர, ற வேறுபாடுகளை இனங்கண்டு சரியாக உச்சரித்தல்.
- கருத்துக்களைத் தெளிவுபடுத்தும் விதத்தில் பொருத்தமான இணைப்பிடைச் சொற்களைப் பயன்படுத்துதல்.
- இணைப்பிடைச் சொற்களின் முக்கியத்துவம்.
- வாக்கிய உறுப்புக்கள்.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- கொடுக்கப்பட்ட சொற்களை ஒலி வேறுபாட்டுக்கேற்ப உச்சரிப்பார்.
- வாக்கிய அமைப்பை விளக்குவார்.
  (எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், தன்மை, முன்னிலை,படர்க்கை, )
- வாக்கிய இணைப்புக்களை அறிவார்.
  (எனினும், ஆகையால், அதனால்)
- ஆக்கத்திறனைப் பெறுவார்.
- வாக்கிய அமைப்பை தமதாக்கங்களில் முறையாகப் பயன்படுத்திக் கருத்துக்களை வெளியிடுவார்.

## பின்னிணைப்பு 1

### பாடல் (1)

ஞாலம் வெளுக்குது பார்
சாவரம் திறக்குது பார்
விண்ணில் கோலம் பார்
தன்னந்தனியே பார்

அழகு இன்பத்தை
அள்ளிப் பருகப்பார்
வண்ண அழகில்
வானம் தெரியுது பார்

நம் நாட்டைப்பார்
நந்தவனமே தான்
நறுவம் சிந்தும்
நற்கோலம் பார்.

### பாடல் (2)

காற்றடிக்குது நூலடிக்குது
கதவை மூடு தம்பி
நூற்ற நூலைச் சிட்டம் செய்ய
நேரமாச்சுத் தம்பி

## பின்னிணைப்பு 2

அம்மா வெங்காயம் வெங்காயமா உரிக்கிறா ஆனால் அவ்வுக்கு கண்ணீரே வரயில்லை. நான் ஒன்றுகூட உரிச்சு முடியல்லை இருந்தாலும் அழுகை அழுகையா வருகுது. அப்பா “இஞ்ச வாடா” எண்டு கூப்பிட்டார். நான் கிட்டப் போனன். அப்போது என்னை அடிப்பதறகுக் கையை ஓங்கினார். அதுக்கிடையில அம்மா ஓடி வந்து அப்பாவை மறிச்சா. அப்போது அப்பா “நீதான் பிள்ளைய கொடுக்கிறாய்” எண்டு பேசினார். ஆனாலும் அம்மா “அவனுக்கென்ன தெரியும்? குழந்தைதானே” எண்டு சென்னவ.

**பின்னிணைப்பு 3**

# செயற்பாட்டுப் பத்திரம் - I

I. பின்வரும் சொற்களை வைத்து பொருள் விளங்க வாக்கியம் அமைக்க.

| | |
|---|---|
| பலம் | அரம் |
| பழம் | அறம் |
| | |
| அலகு | எரி |
| அழகு | எறி |
| அளகு | |
| | |
| மணம் | தலை |
| மனம் | தளை |
| | |
| கலை | |
| களை | |

II. பின்வரும் இணைப்பிடைச் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்க.

| | |
|---|---|
| ஆகையால் | எனினும் |
| ஆகவே | ஆனால் |
| எனவே | |

III. பின்வரும் வாக்கியங்களின் எழுவாய், பயனிலை, செயப்படுபொருளை எழுதுக.

1. மாணவர்கள் பகல் உணவை உண்டார்கள்.
2. வேணி நடனம் ஆடினாள்
3. பாலா புத்தகம் எடுத்தான்
4. பெரியோர் சொற்படி நடக்க வேண்டும்.
5. நாம் நல்லவர்களாக வாழ்வோம்.

**தோர்ச்சி 9.0** : அவதானமாகக் கிரகித்து எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, எழுத்துக்கள், சொற்கள் வாக்கியங்களை வழுவின்றி உரிய நிறுத்தக் குறிகளுடன் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி அலகு9.2** : பயன்பாட்டு இலக்கணத்தைப் பொருத்தமாகப் பயன்படுத்துவார்.

**செயற்பாடு** : கிரகித்து விடையெழுதுவோம்.

**நேரம்** : 160 நிமிடங்கள்.

**தர உள்ளீடு** : - வெண்ணிலா ( பாடல் ) பின்னிணைப்பு - 2
- உரைநடைப் பகுதி பின்னிணைப்பு - 3
- செயற்பாட்டுப்பத்திரங்கள் - பின்னிணைப்பு - 1

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

### படி 9.1.1

பின்வரும். பகுதியினை மாணவர் நன்றாகச் செவிமடுக்கும் வகையில் சரியாக உச்சரித்து, பொருத்தமான ஏற்ற இறக்கத்தோடு வாசியுங்கள். பின் அதனைக் கரும்பலகையில் எழுதுங்கள்.

“அப்பாடா இன்றைக்கு ஒரே மழை. மலை நாட்டில் மழைக்குக் குறைவுண்டோ? குளிர் வேறு. காலை வேளையில் எழும்புவதே பெரிய வேலைதான். பழகிப் போனதால்; எழும்பி, பல்துலக்கி, குளித்து, பால் பருகிவிட்டு என் பணிக்காக நகரம் நோக்கி விரைந்தேன். ஒரே வாகன இரைச்சல். ஆலய மணிகளின் ஒலிகள். நகரை அணுக அணுக ஒரே ஆரவாரம். சுறுசுறுப்பு எனக்குள் துள்ளி எழுந்தது. ”

இப்பந்தியை வாசித்து எழுதிய பின்னர் ஒலி வேறுபாட்டுச் சொற்கள் பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள். பின்வருவன பற்றி மாணவர்களுக்குத் தெளிவு படுத்துங்கள்.

- லகர, ளகர, ழகர , ணகர, னகர வேறுபாடுகளை சரியாக உச்சரித்தல்.
- எழுத்துக்கள் உச்சரிக்கும் போது அவ்வெழுத்துக்களின் ஒலிகள் பிறக்கும் வகையினை விளக்குதல்.
- ஒலி வேறுபாட்டுச் சொற்களை இனங்காணல்.
- திரும்பத் திரும்ப அச்சொற்களைக் கூறி ஒலி பேதங்களை அறிதல்.
- அச்சொற்களின் பொருள் உணர்தல்.
- ஒன்றுக்கு மேற்பட்ட புலன்களை ஒரு நிகழ்விற்குப் பயன்படுத்துவதால் அந்நிகழ்வு வினைத்திறனுள்ளதாக இருத்தல்.

(20 நிமிடங்கள்)

## படி 9.2.2

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து (பின்னிணைப்பு 2,3) ஒலிபேதச் சொற்கள் அமைந்த பாடற் பகுதியையும், உரைநடைப் பகுதிகளையும் வழங்குங்கள்.
- அவ்விரு பகுதிகளையும் செப்பமாக உரத்து வாசியுங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தை (பின்னிணைப்பு 1 ஐ) வழங்கி அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளபடி மாணவர் இயங்குவதற்கு வழிகாட்டுங்கள்.
- குழுக்களிடம் மாறி மாறி உரைநடைப் பகுதிகளையும், பாடற் பகுதிகளையும் வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

## படி 9.2.3

- குழுக்கள் ஆக்கங்களைச் சமர்ப்பிக்க வழிப்படுத்துங்கள்.
- ஏனைய மாணவர்களின் கருத்துக்களைக் கூற சந்தர்ப்பம் வழங்குங்கள்.

பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்துங்கள்.

- பாடல் - ஒலி வேறுபாட்டுச் சொற்கள்
  இரு விளக்கு , இராக் காலம், ஒளி, வெண்ணிலா, சூரியன், தயிர், பெண், பிறை, எண், இரண்டு, கலை , வறுமை, செல்வம்.

- ஒத்து ஒலிக்கும் தன்மையுள்ள சொற்கள்.

| | | | |
|---|---|---|---|
| இரு | எண் | காலம் | விளக்கு |
| இரா | வெண்ணிலா | கலை | ஒளி |
| சூரியன் | பெண் | செல்வம் | நாள் |
| இரண்டு | உண்டோ | | |

- ஒலி வேறுபாட்டுடன் ஒலிக்கும் பெயர்ச் சொற்கள்
  எறும்பு, உணவு, மணம், அரிசி, புற்று, நிலம், மழை, வெண்ணெய், சருக்கரை, தேன், உண்ணும், புழுக்கள்,

- ஒத்து ஒலிக்கும் பெயர்ச் சொற்கள்.

| | | | |
|---|---|---|---|
| உணவு | மழை | எறும்பு | வண்ணம் |
| மணம் | புழு | புற்று | எண்ணெய் |

- ஒத்து ஒலிக்கும் பெயர் சொற்களுக்குரிய ஒத்த கருத்துள்ள சொற்கள்.
  உணவு - சாப்பாடு
  மணம் - வாசனை　　மழை - மாரி, பெயலை
  வண்ணம் - நிறம்　　புற்று - வளை

(30 நிமிடங்கள்)

## படி 9.2.4

- குழுவாகவுள்ள மாணவர்களை வகுப்பு நிலைக்கு கொண்டு வாருங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரம் 2ஐ வழங்கித் தனித்தனியாகச் செயற்பட வழிகாட்டுங்கள்.

(20 நிமிடங்கள்)

## படி 9.2.5

- எழுமாறாக ஐந்து மாணவர்களை முன்வரச் செய்து சரியான விடைகளை வாசிக்கச் செய்யுங்கள்.
- மாணவர்கள் வாசிக்கும் போது விடைகளைக் கவனித்துத் தவறுகள் இருப்பின் திருத்துங்கள்.

பின்வரும் விடயங்களைத் தெளிவு படுத்துங்கள்.

| | | |
|---|---|---|
| கடலோரம் | - | கடற்கரை |
| சோலை | - | பொழில் |
| அழகிய | - | எழில், வனப்பு |
| அன்னம் | - | சோறு |
| கறை | - | மறு |
| சுளகு | - | முறம் |
| புள் | - | பறவை |
| வலை | - | கண்ணி |
| செட்டை | - | சிறகு |
| பணம் | - | தனம் |

(20 நிமிடங்கள்)

## படி 9.2.6

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாட்டுப் பத்திரம் 3இனை வழங்குங்கள்.
- குழுவாக இயங்குவதற்கு வழிகாட்டுங்கள்.

(20 நிமிடங்கள்)

## படி 9.2.7

- ஒவ்வொரு குழுவினருக்கும் தத்தமது விடைகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- தேவையான இடங்களில் விளக்கம் அளியுங்கள்.

பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்துங்கள்.

| | | | |
|---|---|---|---|
| (1) | அன்னை | (11) | நாற்காலி |
| (2) | பெற்றோர் | (12) | சிறுவன் |
| (3) | நீர் | (13) | சிறுமி |
| (4) | வாளி | (14) | நூல் |
| (5) | துகில் | (15) | அலுமாரி |
| (6) | நிலம் | (16) | முறம் |
| (7) | கழுவுதல் | (17) | அரிசி |
| (8) | தூரிகை | (18) | ஒற்றுமை |
| (9) | வண்ணம் | (19) | வேலை |
| (10) | சுவர் | (20) | பெருக்குதல் |

(20 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- ஒலி வேறுபாட்டுச் சொற்களை இனங்கண்டு பிரயோகிப்பார்.
- ஒத்தகருத்துள்ள சொற்களை இனங்கண்டு எழுதுவார்.
- எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து தமது ஆக்கங்களைப் படைப்பார்.

**பின்னிணைப்பு 1**

## செயற்பாட்டுப் பத்திரம் I
## (பாடல் பகுதி )

"வெண்ணிலா" பாடலை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

- ❖ லகர, ளகர, னகர, ணகர, ரகர, றகர, ஒலி வேறுபாட்டுச் சொற்களின்கீழ்க் கோடிடுங்கள்.
- ❖ ஒத்து ஒலிக்கும் தன்மையுள்ள பெயர்ச் சொற்களை வகைப்படுத்துங்கள்.
- ❖ அச்சொற்களுக்கு ஒத்தகருத்துள்ள சொற்கள் தருக.

(பின்னிணைப்பு 3இல் உள்ள உரைநடைப் பகுதியை வாசித்து விடையளியுங்கள்)

- ❖ ஒலி வேறுபாட்டுடன் ஒலிக்கும் பெயர்ச் சொற்களின்கீழ்க் கோடிடுக.
- ❖ ஒத்து ஒலிக்கும் தன்மையுள்ள பெயர்ச் சொற்களை வகைப்படுத்துக.
- ❖ அச்சொற்களுக்கு ஒத்தகருத்துள்ள சொற்கள் தருக.

## செயற்பாட்டுப் பத்திரம் II

பின்வரும் வாக்கியங்களில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான ஒத்த கருத்துள்ள லகர, ளகர, ழகர, னகர, ணகர, ரகர, றகர ஒலிகளையுடைய சொற்களை எழுதுக.

(1) கடலோரத்தில் சிப்பிகள் காணப்படும்.
(2) பூஞ்சோலையில் குயில்கள் கூவின.
(3) அழகிய மலர்கள் அங்கே உண்டு.
(4) அன்னை அன்னம் இட்டார்.
(5) ஆடையிலுள்ள கறையை அகற்றுவோம்.
(6) சுளகினால் அரிசியைப் புடைப்போம்.
(7) புள் இனம் புல்லில் வந்தமர்ந்தன.
(8) புறாக்கள் வலையில் சிக்கின.
(9) பறவை தன் செட்டைகளை அடித்துப் பறந்தது.
(10) பணம் பாதாளம் வரையும் பாயும்.

## செயற்பாட்டுப் பத்திரம் III

- வழங்கப்பட்டுள்ள படத்தை நன்றாகக் கவனியுங்கள்.
- இக்காட்சியில் இடம்பெறும் லகர, ளகர, னகர, ணகர, ரகர, றகர ஒலிகள் இடம்பெறும் பெயர்ச் சொற்களை இனங்கண்டு எழுதுங்கள்.

பின்னிணைப்பு - 2

# வெண்ணிலா

*இருவிளக்கில் ஒரு விளக்காம் வெண்ணிலாவே*
*இராக்காலத் தொளிகொடுப்பாய் வெண்ணிலாவே*

*சூரியன்போய் மறைந்தபின்பு வெண்ணிலாவே*
*தூயவொளி பரப்பிடுவாய் வெண்ணிலாவே*

*தயிர்க்கடலில் வெண்ணெய்போல வெண்ணிலாவே*
*தனி விசும்பிற் றவழ்ந்திடுவாய் வெண்ணிலாவே*

*பெண்கள்முகம் போல்வருவாய் வெண்ணிலாவே*
*பிறையாகி வளர்ந்திடுவாய் வெண்ணிலாவே*

*எண்ணிரண்டு கலையுடனே வெண்ணிலாவே*
*எழுந்துநிலாப் பொழிந்திடுவாய் வெண்ணிலாவே*

*வளர்ந்துபின்பு தேய்ந்திடுவாய் வெண்ணிலாவே*
*வறுமைசெல்வ முனக்குமுண்டோ வெண்ணிலாவே*

*ஒருநாளில் மறைந்திடுவாய் வெண்ணிலாவே*
*ஒளியின்றி வாடுவமே வெண்ணிலாவே*

*அமுதவொளி பரப்பிவரும் வெண்ணிலாவே*
*அன்புடனே வாழியென்றும் வெண்ணிலாவே.*

*- நவாலியூர் சோமசுந்தரப்புலவர்*

**பின்னிணைப்பு 3**

## (உரைநடைப் பகுதி)

எறும்பு இனிய சுவையுள்ள உணவு எங்கிருந்த போதிலும் அதனை மணந்தறிந்து கொள்ளும். பின்னர் தன் இனத்துடன் சேர்ந்து அதனை எடுத்து வரும். அது அரிசி முதலிய உணவுகளைத் தன் வாயினாற் கௌவிக் கொண்டு செல்லும். அது வாழும் புற்று வீடு, நிலத்தில் மழை நீர் உட்புகா வண்ணம் அழகாகக் கட்டப்பட்டிருக்கும். மழைக் காலத்தில் அது தன் முட்டையை மேட்டு நிலத்தில் கொண்டு சென்று வைக்கும்.

எறும்புக்கு மோக்குஞ் சக்தி அதிகம். அது வெண்ணெய், தயிர், மோர், சருக்கரை, தேன், எண்ணெய் ஆகிய உணவுகள் எங்கே இருந்தாலும் அவற்றை மணந்தறிந்து கூட்டங் கூட்டமாகச் சென்று உண்ணும். சில சமயங்களிற் புழுக்கள், பூச்சிகளையும் அது தன்னுடைய புற்றுக்குள் இழுத்துச் செல்லும்.

**பின்னிணைப்பு - 4**



**தேர்ச்சி 6.0** : நடைமுறைத் தேவைகளுக்காக வாசிப்பார்.

**தேர்ச்சி அலகு6.1** : பல்வேறு நோக்கங்களுக்காக வாசிப்பார்.

**செயற்பாடு** : நடைமுறைத் தேவைகளுக்காக வாசிப்போம்.

**நேரம்** : 160 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- மாதிரித் துண்டுப் பிரசுரம் - பின்னிணைப்பு - 1
- மாதிரிச் சுவரொட்டி
- செயற்பாட்டுப் பத்திரங்கள். - பின்னிணைப்பு - 2
- அகராதி
- கலைக்களஞ்சியம்
- பிரிஸ்டல் அட்டை
- நிறப்பேனைகள்

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்.**

**படி 6.1.1**

- வகுப்பறைக்கு வெளியே என்னென்ன விடயங்களை வாசித்திருக்கிறீர்கள் என்று வினவி கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள். பிறகு மாதிரிச் சுவரொட்டி, துண்டுப் பிரசுரங்கள் (பின்னிணைப்பு 1) என்பவற்றைக் காட்சிப்படுத்தி வாசிக்கச் செய்யுங்கள்.
- இவற்றில் என்னென்ன விடயங்கள் சொல்லப்படுகின்றன?.
- இவ்வாறானவற்றை வாசித்திருக்கின்றீர்களா?
- இவைகள் எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன?.

போன்ற வினாக்களை வினவி, பின்வரும் விடயங்களை உள்ளடக்கிக் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

> - தகவல்களை அறிதல்
> - சிந்தனை விரிவு
> - அறிதல்
> - தெளிவு
> - மனப்பாங்கு விருத்தி
> - மகிழ்ச்சி

(20 நிமிடங்கள்)

## படி 6.1.2

- மாணவர்களை ஐந்து பேர் கொண்ட குழுக்களாக்குங்கள். பின்னிணைப்பு (1)இனை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரம் (1)இனை வழங்கி மாணவர் குழுவாக செயற்பட வழிப்படுத்துங்கள்.
- தேவையான உபகரணங்களை வழங்கி வேண்டிய சந்தர்ப்பங்களில் ஆலோசனை வழங்குங்கள்.

(20 நிமிடங்கள்)

## படி 6.1.3

- மாணவரை மீண்டும் வகுப்பு நிலைக்குக் கொண்டு வாருங்கள்.
- துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்தச் சொல்லுங்கள்..
- அவற்றைப் பார்வையிடவும், வாசித்து விளங்கவும் நேர அவகாசம் வழங்குங்கள்.
- காட்சிப்படுத்திய துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் தொடர்பாகக் கருத்துக்களை முன்வைக்கச் சொல்லுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுங்கள்.

| |
|---|
| ◆ வாசித்துப் பொருளறிதல். |
| ◆ குறியீடுகளை அனுசரித்து வாசித்தல். |
| ◆ தகவல்களை வாசித்து, சரியாக விளங்கிக் கொள்ளல். |
| ◆ மேலதிக விடயங்களைத் தேடல். |
| ◆ சிந்தனை விருத்தி |
| ◆ மனப்பாங்கு விருத்தி |

(40 நிமிடங்கள்)

## படி 6.1.4

- மாணவர்களை மீண்டும் குழு நிலையில் அமரச் செய்யுங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரம் II இனை வழங்குங்கள்.
- மாணவர்கள் குழுவாகக் கலந்துரையாட வழிப்படுத்துங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தை நிறைவுசெய்யத் தேவையான ஆலோசனைகளை வழங்குங்கள்.

(40 நிமிடங்கள்)

## படி 6.1.5

- மாணவர்களை வகுப்பு நிலைக்குக் கொண்டு வாருங்கள்.
- ஒவ்வொரு குழுவிலும் இருந்து ஒருவர் செயற்பாட்டுப்பத்திரத்தை முன்வைக்கச் செய்யுங்கள்.
- ஏனைய மாணவர்கள் கருத்துக்களை வழங்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடங்களைத் தெளிவுபடுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

> - கருத்தூன்றி வாசித்தல்.
> - தொகுத்து எழுதுதல்
> - அஞ்சுகம் - கிளி
>   மாகந்தம் - மாமரம்
>   மாருதம் - காற்று
>   மேதிரன் - புத்திசாலி
>   வெல்வி - வெற்றி
> - முக்கியமான விடயங்களைக் குறித்துக் கொள்ளல்.
> - விடயத் தெளிவு

(40 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- தமது தேவைகளையொட்டிப் பல்வேறு விடயங்களை வாசிப்பார்.
- கலைக் களஞ்சியத்தைப் பயன்படுத்தி விடயங்களைத் தொகுப்பார்.
- அகராதியைப் பயன்படுத்திச் சொற்களுக்குப் பொருள் எழுதுவார்.
- தேவையான போது தகவல்களை தேடிப் பெற்று கருத்துக்களை வெளியிடுவார்.

**பின்னிணைப்பு - 1**

## மாதிரித் துண்டுப் பிரசுரம்

பொது மக்களே!

சுற்றுப்புறச் சூழல் மாசடைந்து வருகிறது. டெங்கு, மலேரியா போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்புகளுண்டு. சுற்றுப்புறச் சூழலைச் சுத்தமாக வைத்திருக்க நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

- மரங்களை வெட்டி அழிக்காதீர்கள்.
- உரிய இடங்களில் குப்பைகளைப் போடுங்கள்.
- சூழலிலுள்ள தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்துங்கள்.
- அசுத்த நீர் தேங்கி நிற்பதற்கு இடமளிக்காதீர்கள்.

சுற்றுப்புறச் சூழலை தூய்மையாக வைத்திருந்து நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாப்போம்.

சுகாதாரப் பிரிவு
மாநகர சபை
கண்டி

## மாதிரிச் சுவரொட்டி

தமது உரிமைகளைப் பெற்று மகிழ்வுடன் வாழ
அனைத்துச் சிறுவர்களுக்கும் உரிமை உண்டு.

சிறுவர் பாதுகாப்பு நிலையம்

**பின்னிணைப்பு - 2**

# செயற்பாட்டுப் பத்திரம் I

பின்வரும் விடயங்களைப் பற்றி துண்டுப் பிரசுரங்கள் எழுதுங்கள்.

**குழு (1)**
மரம் நடுவோம்

**குழு (2)**
சமாதானமாக வாழ்வோம்

**குழு (3)**
டெங்கு நோயைத் தடுப்போம்

**குழு (4)**
வீதி ஒழுங்குகளைப் பின்பற்றுவோம்.

---

பின்வரும் விடயங்கள் தொடர்பாக சுவரொட்டிகள் தயாரியுங்கள்.

**குழு (1)**
சிறுவர் பாதுகாப்பு

**குழு (2)**
பாடசாலைச் சூழலைப் பேணுவோம்

**குழு (3)**
சமாதானம்

**குழு (4)**
முதியோர் நலம் பேணுவோம்.

# செயற்பாட்டுப் பத்திரம் II

(1) கலைக் களஞ்சியத்தைப் பயன்படுத்தி பின்வரும் விடயங்களுக்குரிய விளக்கங்களைச் சுருக்கமாக தருக.

| குழுI | குழுII | குழுIII | குழுIV |
|---|---|---|---|
| - நோபல் பரிசு<br>- தேசிய கீதம் | - தொல்காப்பியம்<br>- சுப்பிரமணிய - பாரதியார் | - உலகஅதிசயங்கள்<br>- எவரெஸ்ட் | - ஒலிம்பிக் விளையாட்டு<br>- கணினி/கணிப்பொறி |

(2) பின்வரும் சொற்களுக்கு அகராதியைப் பயன்படுத்திப் பொருள் எழுதுங்கள்.

1. அஞ்சுகம்
2. மாகந்தம்
3. மாருதம்
4. மேதிரன்
5. வெல்வி

**தேர்ச்சி 9.0** : அவதானமாகக் கிரகித்து எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி எழுத்துக்கள், சொற்கள் வாக்கியங்களை வழுவின்றி உரிய நிறுத்தக் குறிகளுடன் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி அலகு 9.2:** பாடப் புத்தகங்களில் இனங்கண்டு விளங்கிக் கொண்ட பயன்பாட்டு இலக்கணத்தைப் பொருத்தமாகப் பிரயோகிப்பார்.

**செயற்பாடு** : வழுவின்றி எழுதுவோம்

நேரம் : 160 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- செயற்பாட்டுப் பத்திரங்கள் பின்னிணைப்பு - 1
- எழுதுகருவிகள்
- எழுதுதாள்கள்

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்**
**படி 9.2.1**

பின்வரும் உரைநடைப் பகுதியினைக் கரும்பலகையிற் காட்சிப்படுத்தி பயன்பாட்டு இலக்கணம் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.

"*நீர்* எழுதிய அன்பான கடிதம் கிடைத்தது. படித்து மகிழ்ச்சி அடைந்தேன். நானோ கடலை நேரிலே காணாதவன். உமது கடிதத்தின் வாயிலாக அலை தவழும் கடலின் அழகைக் கண்டேன். கடலை அடுத்துள்ள தென்னந்தோப்புக்களில் உலாவினேன். கடலை நம்பி வாழும் மீனவர் வாழ்க்கையை அறிந்தேன். *ஆனால் நீர்* எழுதியிருந்தீர் இதுவரை மலையை நேரிலே *காணேல்லை* என்று அவ்வாறே நான் அறிந்தவற்றை எழுதுகிறேன்.

இலங்கையின் மத்திய பகுதியிலேயே மலையகம் அமைந்துள்ளது. இதனை நீர் ஏற்கனவே அறிந்திருப்பீர். மலையகம் உயரமானது. மழை வளம் மிக்கது, எக்காலத்திலும் மலையகம் குளிர்மையாக இருக்கும். உங்கள் இடத்தில் வெயில் அதிகமாக இருக்குமென நினைக்கிறேன். *நீங்கள்* வெயில் *காலத்திலை* வெப்பம் தாங்காமல் புழுங்குவீர்கள். ஆனால் *நாங்கள்* குளிர் தாங்காமல் நடுங்குவோம்.

இலங்கைக்கு பெருந்தொகைச் செல்வத்தை தேயிலை *வழங்குது.* இயற்கை எழில் நிறைந்த கோலத்தை சுற்றுலாப் பயணிகள் சாரி சாரியாக வந்து பார்த்து ரசிப்பதையும் அன்றாடம் காணக் கூடியதாய் *இருக்குது* நண்பா!

தோட்டத் தொழிலாளர்கள் தோட்டத்திற்குச் சொந்தமான "லயங்" களில் வாழ்கிறார்கள். லயம் என்பது அடுத்தடுத்து கட்டப்பட்ட சிறிய வீடுகளைக் கொண்டது. சரி நண்பா! அதிகம் சொல்லி விட்டேன். எதற்கும் நீயும் உனது அப்பா, அம்மா, சகோதரர்களும் நேரில் வந்து மலையகத்தைப் பார்ப்பது போல வருமா? *ஆகவே* விரைவாக வா. எதிரபார்த்துக் காத்திருக்கிறேன்.

"யாம் பெற்ற இன்பம் பெறுக
இவ்வையகம் "

மாணவர்களுக்கு பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்தும் வகையில் தரப்பட்டுள்ள பந்தியை அடிப்படையாகக் கொண்டு வினாக்கள் சிலவற்றை வினவி, கலந்துரையாடலை நடத்திச் செல்லுங்கள்.

| |
|---|
| ◆ எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய வாக்கிய உறுப்புக்களை இனங்காணல். |
| ◆ தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்கள். |
| ◆ இணைப்பிடைச்சொற்கள் |
| ◆ பேச்சு வழக்குச் சொற்களையும், எழுத்து வடிவச் சொற்களையும் வேறுபடுத்தி அறிதல். |

(20 நிமிடங்கள்).

## படி 9.2.2

- மாணவர்களைக் குழுக்களாக வகுத்து அமரச் செய்யுங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரங்கள் 1இனையும், 2இனையும் வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரங்களின் அறிவுறுத்தல்களின்படி மாணவர்கள் இயங்குவதற்கு வழிகாட்டுங்கள்.
- மாணவர்கள் அனைவரும் செயற்படுகிறார்களா? என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

(20 நிமிடங்கள்)

## படி 9.2.3

- ஒவ்வொரு குழுவும் தத்தமது விடைகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முன்வைத்த விடைகளைச் சரி பார்ப்பதோடு, கலந்துரையாடலூடாக கருத்துக்களை முன்வையுங்கள்.
- பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்தும் வகையில் கலந்துரையாடுங்கள்.

| குழு I | குழு II | குழுIII |
|---|---|---|
| **தன்மை** | **முன்னிலை** | **படர்க்கை** |
| நான் | நீ | அவன் (ஆண்பால்பெயர்) |
| நான் | நீ | அவள் (பெண்பால் பெயர்) |
| நாம் | நீர் | அவர்கள் |
| நாங்கள் | நீங்கள் | அது |
| நாங்கள் | நீங்கள் | அவை |

- ◆ நான் கவிதையைப் பாடினேன்.
- ◆ நீ நூலைப் படித்தாய்.
- ◆ அவன் நூலைப் படித்தான்.
- ◆ அது விரைவாக ஓடுகிறது.
- ◆ அவை விரைவாக ஓடுகின்றன.
- ◆ இவ்வாறு ஏனையவற்றுக்கும் வாக்கியங்கள்அமையுங்கள்.

(1) அப்பா செடிகளை நாட்டினார்.
(2) மாணவன் கட்டுரை எழுதுகின்றான்.
(3) அம்மா ஆடைகளைக் கழுவினார்.
(4) ஓவியன் படங்களை வரைந்தான்.
(5) சிற்பி அழகிய சிற்பங்களைச் செதுக்கினான்.

| எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|
| 1. அப்பா | செடிகளை | நாட்டினார். |
| 2. மாணவன் | கட்டுரையை | எழுதுகின்றான். |
| 3. அம்மா | ஆடைகளை | கழுவினார். |
| 4. ஓவியன் | படங்களை | வரைந்தான். |
| 5. சிற்பி | சிற்பங்களை | செதுக்கினான். |

(40 நிமிடங்கள்)

**படி 9.2.4**

- குழுக்களாக வகுத்த மாணவர்களுக்கு செயற்பாட்டுப் பத்திரங்கள் IIIஇனையும் IV இனையும் வழங்குங்கள்.
- எல்லா மாணவர்களும் செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்களா? என்பதை அவதானியுங்கள்.

(40 நிமிடங்கள்)

**படி 9.2.5**

- மாணவர்கள் விடைகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- சரியான விடைகளைக் காட்சிப்படுத்தி கலந்துரையாடுவதுடன், பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்துங்கள்.

1. அடைமழை பெய்தது. ஆதலால் வெள்ள அபாயம் ஏற்பட்டது.
2. அவன் உணவு அருந்தவில்லை எனவே, சோர்ந்து காணப்பட்டான்.
3. நாட்டில் வரட்சி ஏற்பட்டது. ஆகவே, நீர், மின்வெட்டு அமுலாகியது.
4. அவன் பல தடவை தோல்வியுற்றான். ஆயினும், முயற்சியைக் கைவிடவில்லை.
5. நண்பன் அன்புள்ளவனாக இருந்தான் ஆதலால் அவனை எல்லோரும் நேசித்தனர்.

| அ<br>**பேச்சுவழக்குச் சொல்** | ஆ<br>**எழுத்து வழக்குச்சொல்** |
|---|---|
| காணேல்லை | காணவில்லை |
| காலத்திலை | காலத்தில் |
| வழங்குது | வழங்குகிறது |
| விரைவா | விரைவில் (விரைவாக) |

( 40 நிமிடங்கள்)

## கணிப்பீடும், மதிப்பீடும்

- வாக்கிய உறுப்புக்களை இனங்கண்டு கூறுவார்.
- மூவிடப் பெயர்களை இனங்கண்டு கூறுவார்.
- பொருத்தமான இணைப்பிடைச் சொற்களை வைத்து வாக்கியங்களை இணைத்தெழுதுவார்.
- பேச்சு வழக்குச் சொற்களை இனங்கண்டு அவற்றுக்குரிய எழுத்து வழக்குச் சொற்களை எழுதுவார்.
- வாக்கியங்களை வழுவின்றி எழுதுவார்.

**பின்னிணைப்பு - 1**

## செயற்பாட்டுப் பத்திரம் 1

பின்வரும் வினைமுற்றுச் சொற்களை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

| **குழுI** | **குழுII** | **குழுIII** |
| --- | --- | --- |
| படித்தேன்<br>எழுதுகின்றேன்<br>வரைகின்றோம்<br>ஓடினோம்<br>குடிப்போம் | படித்தாய்<br>எழுதுகின்றாய்<br>வரைகின்றீர்<br>ஓடினீர்கள்<br>குடிப்பீர்கள் | படித்தான்<br>எழுதுகின்றாள்<br>வரைகின்றார்கள்.<br>ஓடியது<br>குடிக்கின்றன. |

- வழங்கப்பட்டுள்ள பயனிலைகளுக்குப் பொருத்தமான எழுவாய்ச் சொற்களைக் கண்டு எழுதவும்.
- அச்சொற்களை மூவிடப் பெயர்களென வகைப்படுத்தவும்.
- பயனிலைச் சொற்களைக் கொண்டு செயப்படுபொருள்களை இனங்கண்டு வாக்கியங்கள் ஆக்குக.

## செயற்பாட்டுப் பத்திரம் II

பின்வரும் வாக்கியங்களுள் செயப்படுபொருள் இடம் பெற்றுள்ள வாக்கியங்களை இனங்கண்டு எழுதுங்கள்.

(1) சிறுவன் விரைவாக ஓடினான்.
(2) அப்பா செடிகளை நாட்டினார்.
(3) மாணவன் கட்டுரையை எழுதுகின்றான்.
(4) சிறுமி அழகாக ஆடினாள்.
(5) அம்மா ஆடைகளை கழுவினார்.
(6) ஓவியன் படங்களை வரைந்தான்.
(7) மரம் விழுந்து முறிந்தது.
(8) வண்டி மெதுவாக ஓடியது.
(9) தாத்தா மெல்ல நடந்தார்.
(10) சிற்பி அழகிய சிற்பங்களைச் செதுக்கினான்

மேலே தரப்பட்டுள்ள வாக்கியங்களை வாசித்து பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

## செயற்பாட்டுப் பத்திரம் III

"அ" பகுதியில் இருந்து பெற்றுள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான வாக்கியங்களை "ஆ" பகுதியில் இருந்து இனங்கண்டு சரியான இணைப்பிடைச் சொற்களை வைத்து வாக்கியங்களை இணைத்து எழுதுங்கள்.

| அ | ஆ |
|---|---|
| (1) அடை மழை பெய்தது. | (1) நீர், மின்சார வெட்டு அமுலாக்கப்பட்டது. |
| (2) அவன் உணவு அருந்தவில்லை | (2) முயற்சிகளைக் கைவிடவில்லை. |
| (3) நாட்டில் வரட்சி நிலவியது. | (3) வெள்ள அபாயம் ஏற்பட்டது. |
| (4) அவன் பல தடவைகள் தோல்வியுற்றான். | (4) எல்லோரும் நேசித்தனர். |
| (5) நண்பன் அன்புள்ளவனாக இருந்தான் | (5) சோர்ந்து காணப்பட்டான். |

## செயற்பாட்டுப் பத்திரம் IV

- **காட்சிப்படுத்திய மாதிரி உரைப் பகுதியினை நன்றாக வாசித்து அதில் இடம்பெறும் பேச்சுவழக்குச் சொற்களை இனங்காண்க. அவற்றின்கீழ்க் கோடிடுக.**

- **அவற்றுக்குப் பொருத்தமான எழுத்து வழக்குச் சொற்களைத் திருத்தமாக எழுதுக.**

**தேர்ச்சி 10.0** : பல்வேறு சந்தர்ப்பங்களுக்கும், நோக்கங்களுக்கும் ஏற்றவாறு எழுதுவார்.

**தேர்ச்சி அலகு10.1** : நாளாந்த தேவைகளுக்காக எழுதுவார் .

**செயற்பாடு** : கடிதம் எழுதுவோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- செயற்பாட்டுப் பத்திரம் பின்னிணைப்பு - 1.
- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்.
- டிமை கடதாசி

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

படி **10.1.1**

• மாதிரிக் கடிதமொன்றைக் காட்சிப்படுத்துங்கள்.

"ஒளி இல்லம்"
நெட்டிலிப்பாய்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
2006.05.30

அன்புள்ள மாமா!

நாம் நலம். நாடுவதும் அதுவே. உங்கள் அன்புக் கடிதம் கிடைத்தது. வாசித்து மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். நீங்களும், மாமியும் அடுத்த மாதம் இலங்கை வரவிருப்பதாகவும், எனக்கு என்ன பரிசு வேண்டுமென்றும் கேட்டு எழுதியிருந்தீர்கள். நான் பொது அறிவுப் போட்டிகளில் பங்குபற்றுவதில் ஆர்வமுள்ளவன். போட்டிகளில் பங்குபற்றி நிறையப் பரிசுகளும் வாங்கியுள்ளேன். உங்கு சிறுவர் கலைக் களஞ்சியம் (Encyclopedia) தொகுப்புக்களாக உள்ளன என்று அறிந்தேன். நீங்கள் வரும் போது அவற்றை எனக்காக வாங்கிவர முடியுமா? உங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறேன்.

இப்படிக்கு,
உங்கள் அன்பு மருமகன்,
ம. இளவழகன்

பின்வரும் வினாக்களை வினவி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

1. கடித வகைகள் பற்றிக் கூறுங்கள்.
2. உறவுமுறைக் கடிதம் அல்லது நட்புமுறைக் கடிதம் எழுதும் போது கவனிக்க வேண்டிய அம்சங்கள் எவை?

பின்வரும் விடயங்களை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.

| | |
|---|---|
| ♦ கடித வகைகள் : | உறவுமுறைக் கடிதம்<br>நட்புமுறைக் கடிதம்<br>முறையீட்டுக் கடிதம்<br>வேண்டுகோள் கடிதம்<br>தொழில்முறைக் கடிதம் போன்றன. |

♦ கடிதத்தில் கவனிக்க வேண்டிய விடயங்கள்.
முகவரி, திகதி, விளிப்பு, உள்ளடக்கம், முடிப்பு

(20 நிமிடங்கள்)

**படி 10.1.2**

- பின்னிணைப்பு 1இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர் ஒவ்வொருவருக்கும் வழங்குங்கள்.
- தனித்தனியே செயற்படுவதற்கு வகை செய்யுங்கள்.
- தேவையேற்படின் வேண்டிய அறிவுறுத்தல்களை வழங்குங்கள்.
- அனைவரும் தனியாக எழுதி முடித்த பின்னர் மாணவர்களை நான்கு அல்லது ஐந்து பேர் கொண்ட குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொருவரையும் தாம் எழுதிய கடிதத்தைக் குழுவிலுள்ள ஒவ்வொருவரும் விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் வாசிக்கச் செய்யுங்கள்.
- குழுக்களுக்குள் கலந்துரையாடி அவர்களே சிறந்த கடிதமென்று தெரிவு செய்யும் ஒரு கடிதத்தை டிமை கடதாசியில் பெரிதாக எழுதச் செய்யுங்கள்.

(20 நிமிடங்கள்)

**படி 10.1.3**

- ஒவ்வொரு குழுவும் தாம் தெரிவு செய்த கடிதத்தை அழகுற எழுதிக் காட்சிப்படுத்தச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- ஏனையோர் கருத்துக்கள் தெரிவிப்பதற்கும் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.

♦ கடிதத்தில் கவனிக்க வேண்டிய விடயங்கள்
- முகவரி , திகதி
- விளிப்பு
- உடல், உள்ளடக்கம்
- முடிப்பு

♦ உறுப்பமைய எழுதுதல்.
♦ நிறுத்தக்குறி பிரயோகம்.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்.**

- கடிதம் எழுதும் போது கவனிக்க வேண்டியவை பற்றி எடுத்துரைப்பார்.
- உறவுமுறை, நட்பு முறைக் கடிதங்களை எழுதுவார்.
- கடிதங்கள் மூலம் உணர்வுகளைப் பரிமாறிக் கொள்ளலாம் என்பதை கூறுவார்.
- பொருத்தமான சந்தர்ப்பங்களில் பொருத்தமான முறையில் கடிதம் மூலம் கருத்துக்களை வெளிப்படுத்துவார்.

**பின்னிணைப்பு - 1.**

# செயற்பாட்டுப் பத்திரம்

**நட்புமுறைக் கடிதம் எழுதுவோம். (50 - 60 சொற்கள்)**

1. உங்கள் பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழா பற்றியும், உங்களுக்குக் கிடைத்த பரிசுகள் பற்றியும் விளக்கி நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுங்கள்.

அல்லது

2. அண்மையில் நீங்கள் வாசித்து ரசித்த கதைப் புத்தகம் ஒன்றைப் பற்றியும், அதனை நீங்கள் இரசித்தமைக்கான காரணங்கள் பற்றியும் விளக்கி நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுங்கள்.

**தேர்ச்சி 3.0** : எண்ணக்கருக்களையும் அபிப்பிராயங்களையும் புலப்படுத்திப் பேசுவார்.

**தேர்ச்சி அலகு3.1** : தலைப்புக்கு ஏற்ற வகையில் பேசுவார்.

**செயற்பாடு** : தலைப்புக்கேற்றவகையில் பேசுவோம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- பின்னிணைப்பு -1
- மாதிரிப் பேச்சு
- ஒலிப்பதிவு நாடா
- எழுதுகருவி
- செயற்பாட்டுப்பத்திரம் - பின்னிணைப்பு - 2

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்.

### படி 3.1.1

- ஆசிரியர் அல்லது ஒரு மாணவனைக்கொண்டு பின்வரும் தலைப்பிலான பேச்சொன்றை முன்வைத்து ஆரம்பிக்கவும்.

மன்றத் தலைவர் அவர்களே! என் சக மாணவ சகோதரர்களே! உங்கள் அனைவருக்கும் எனது அன்பார்ந்த வணக்கங்கள். இன்றைய மாணவ மன்றக் கூட்டத்தில் "முதியோரைப் பேணுவோம்" எனும் தலைப்பில் பேச முன்வந்துள்ளேன்.

முதியோர் எங்கள் சொத்து. அவர்களது நலனைப் பேணிக்காப்பது நமது கடமை. எங்களின் எதிர்காலம் முதியோரின் வழிகாட்டலிலேயே தங்கியிருக்கிறது. நாங்கள் முதியோர் மீது அன்பு காட்டவேண்டும். அவர்களது தேவையறிந்து சேவை செய்ய வேண்டியது எங்களது முக்கிய பணியாகும்.

இவ்வாறான மேடைப் பேச்சை கேட்க வைத்தபின் ஒரு பேச்சாளன் கருத்திக்கொள்ள வேண்டியவை யாவை? எனக்கேட்டு அது தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

கலந்துரையாடலின்போது பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவருக்குத் தெளிவுபடுத்துங்கள்.

- பேச்சுக்குரிய தலைப்பின் பொருத்தப்பாடு
- தலைப்பிற்கேற்பப் பேசும் திறன்.
- பொருத்தமான மொழிநடை
- சொற்பிரயோகம்
- கேட்போரைக் கவரும் விதம்

(20 நிமிடங்கள்)

## படி 3.1.2

- மாணவரை ஐந்து பேர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- சோமசுந்தரப் புலவர் பற்றிய கட்டுரையை ஒவ்வொரு குழுவிற்கும் வழங்குங்கள்.
- கொடுக்கப்பட்ட பிரதியைத் துணையாகக் கொண்டு சோமசுந்தரப் புலவர் என்ற தலைப்பில் ஒரு பேச்சைத் தயாரிக்க வழிப்படுத்துங்கள்.
- அப்பேச்சை குழு நிலையில் மாணவர் பேசிப் பழகுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் சென்று தொனிவேறுபாடு, மொழிநடை, தலைப்பைக் கருத்திற் கொள்ளல் போன்ற விடயங்களை மாணவர் மனதிற் கொள்வதற்கு ஆலோசனை கூறுங்கள்.
- குழுவில் உள்ளவர்கள் எழுமாற்றாகப் பேச வேண்டும் என்பதை அறிவுறுத்துங்கள்.

(60 நிமிடங்கள்)

## படி 3.1.3

- குழு நிலையில் எழுமாற்றாகப் பேசிய விடயங்களைத் தொகுத்து குழுநிலையில் முன்வைப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- ஏனையோரின் கருத்துக்களையும் கூற வழிப்படுத்துங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- தலைப்பிற்கேற்ப முன்வைக்கப்பட்ட கருத்துக்கள்.
- தலைப்பின் தன்மைக்கேற்ப முன்வைக்கப்பட்ட பிரதான கருத்துக்கள்
- பேச்சாளனது பேச்சுத்திறன்
- தொனி வேறுபாடு
- சபையோரைக் கவரும் விதம்
- நேரக்கட்டுப்பாடு
- மொழிச்செம்மையும் சொற்பிரயோகமும்

**(40 நிமிடங்கள்)**

## கணிப்பீடும் மதிப்பீடும்

- குறிப்பிட்ட தலைப்புக்கேற்ப ஆயத்தம் செய்து பேசுவார்.
- பொருத்தமான மொழிநடை, சொற்றொடர்களைக் கையாண்டு பேசுவார்.
- கேட்போரைக் கவரும் வகையில் பேசுவார்.
- எனையோரது பேச்சை மதிப்பிட்டுக் கருத்துக்களை முன்வைப்பார்.

**பின்னிணைப்பு - 1**

## நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர்

இலங்கையின் மணிமுடிபோல் யாழ்ப்பாணம் விளங்குகிறது. அம்மணிமுடியிற் பதித்த மாணிக்கம் போல்வது மானிப்பாய். அதற்கு மேற்குப் பக்கத்தில் விளங்குவது நவாலியூர். அவ்வூரில் வன்னியசேகர முதலியார் மரபிற் கதிர்காமர் பிறந்தார். அவர் மனைவியார் பெயர் இலக்குமிப்பிள்ளை. அவர்களுக்கு நீண்ட காலமாக மக்கட்பேறில்லை. எனவே, அவர்களிருவரும் முருகப் பெருமானை நோக்கித் தவங்கிடந்தனர். அதன் பயனாகச் சோமசுந்தரப் புலவர் கி.பி. 1880 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆம் நாளிற் பிறந்தார்.

சோமசுந்தரப் புலவருக்கு ஏடு தொடக்கி ஆரம்பக் கல்வியைக் கற்பித்தவர் மானிப்பாயிலிருந்த அருணாசல உபாத்தியாயர் ஆவார். பின்னர் சிறந்த தமிழ் அறிஞராய் விளங்கிய தந்தையாரிடமும் நவாலியூரிலுள்ள தமது உறவினரான இராமலிங்க உபாத்தியாயரிடமும் சோமசுந்தரனார் ஆங்கிலமும் தமிழுங் கற்றுப் புலமை எய்தினார். பின்னர் வடமொழி நூல்களிலும் பயிற்சி பெற்றார்.

புலவர் தமது பதினைந்தாவது வயதிலேயே பாடல்களை ஆக்கத் தொடங்கிவிட்டார். பதினைந்தாம் வயதிலே அட்டகிரி முருகவேள் மீது பதிகம் பாடியபோது, பலர் வியந்து அவரைப் பாராட்டினர். யாப்பிலக்கணங் கற்றுக் கொள்வதற்கு முன்னரே தனிப்பாடல்கள் பலவற்றைத் திறம்படப் பாடும் வன்மை புலவருக்கு இயல்பாகவே அமைந்து கொண்டது. அதனால், அவரை எல்லோரும் ‘வரகவி’ என்று வழங்குவாராயினர்.

வட்டுக்கோட்டையிலுள்ள ஆசிரியர் சின்னத்துரை என்பவரும் புலவரும் அவ்வூரில் ஓர் ஆங்கிலப் பாடசாலையைத் தொடங்கினர். அங்கே புலவர் நாற்பது ஆண்டுகள் ஆசிரியராக இருந்தார். அவர் மாணவர்களுக்கு ஆங்கிலம், தமிழ், இதிகாசம் என்னும் பாடங்களைக் கற்பித்தார். அவரிடம் இரண்டாயிரத்துக்கு அதிகமான மாணவர் கல்வி கற்று வெளியேறினர். புலவரது நற்பணியாலே தமிழ்க்கல்வியும் சைவசமயமும் வளர்ந்து சிறப்படைந்தன.

புலவர் இளமை முதலாகத் தங்குலதெய்வமாகிய முருகக்கடவுளையும் நாமகளையும் வழிபட்டு வந்தார். நிலையில்லாத உலகத்திலே நிலையான பொருளை அறிய வேண்டும் என்னும் ஆசை அவருக்கு உண்டானது. அதனால் தமக்கு ஒரு சற்குருவைக் காட்டுதல் வேண்டுமென்று முருகப் பெருமானை வழிபட்டு வந்தார். அவருக்கு இருபத்தொரு வயதிலே அப்பேறு கிடைத்தது. பெங்களூரிலிருந்து சுப்பிரமணிய சுவாமியார் என்பவர் நலாலியூருக்கு வந்தார். அவர் ஒரு ஞானி. அவர் புலவருக்கு ‘இஃது எல்லாம் தரும்’ என்று ஓர் அருட்குறியைக் கொடுத்தார். புலவர் தமது குருநாதனின் கட்டளைப்படி சின்னம்மை என்னும் தமது தாய் மாமன் மகளைத் திருமணஞ் செய்து இல்லற வாழ்வை இனிது நடாத்தி வந்தார். சின்னம்மையார் கல்வியறிவும் நல்லொழுக்கமும் நிறைந்தவர்; கணவனைத் தெய்வமாக வணங்கும் இயல்புடையவர். விருந்தோம்பலே அவரின் உயர்ந்த குறிக்கோளாகும்.

புலவருக்குப் பக்திப் பாடல்கள் செய்ய வேண்டும் என்னும் எண்ணம் உண்டாயிற்று. வறுமையும், பிணியும் அவரை வருத்தத் தொடங்கின. வறுமையையும் பிணிகளையும் கடவுள் வழிபாட்டினாலே வெல்ல முடியும் என்று துணிந்தார். எனவே, முருகக்கடவுள் மேலும் நாமகள் மேலும் பல்லாயிரம் பாடல்கள் பாடினார். அவ்வப்போது பாடிய பாடல்களைத் தென்னிந்தியாவிலிருந்த பெரும் புலவர்களான அருணாசலக் கவிராயர், கந்தசாமிக் கவிராயர், மறைமலையடிகள், பாண்டித்துரைத்தேவர், அரசஞ் சண்முகனார் முதலியோர்க்கு அனுப்பி வைத்தார். அவர்கள் அவற்றை மிக மிகப் பாராட்டி வந்தார்கள். புலவருடைய புகழ் தென்னிந்தியாவிலும் பரவியது.

1925 ஆம் ஆண்டு, 'உயிரிளங்குமரன்' என்னும் நாடகத்தைப் புலவர் எழுதி நடிப்பித்தார். அந்த நாடகத்தின் அருமை பெருமைகளை அறிந்த இலங்கைத் தமிழ்ப் புலவர்கள் 'புலவர்' என்னும் பட்டத்தை அவருக்கு அளித்தனர்; பொன்னாடை போர்த்திப் பொற்கிழியும் வழங்கினர். பள்ளிச் சிறுவர்களுக்கு ஏற்ற பாடல்களைப் பாடித் தரும்படி இலங்கைக் கல்விப் பகுதியினர் வேண்டினர். 'ஆடிப்பிறப்பு', 'கத்தரி வெருளி', முதலிய பாடல்களைப்பாடிப் பரிசும் முதன்மையும் பெற்றார். 'தங்கத்தாத்தா' என்ற சிறப்புப் பெயரும் அவருக்கு உண்டாவதாயிற்று. புலவருடைய தந்தையார் இறந்தபோது, அவர் நினைப்புக்குத் 'தந்தையார் பதிற்றுப் பத்து' என்னும் விழுமிய நூலை எழுதினார். அது திருக்குறள், நாலடியார் முதலிய நூல்களின் கருத்துக்களைப் பெரிதும் தழுவியது; தமிழர்களுடைய பழக்க வழக்கங்களையும் பண்பாடுகளையும் எடுத்துக் கூறுகின்றது.

புலவர் ஆசிரியத் தொழிலினின்றும் இளைப்பாறிய பின்னரும், தமது இல்லத்திற் சித்தாந்த வகுப்பும், காவிய வகுப்பும் நடாத்தி வந்தார். புலவர் செய்த பாடல்கள் ஏறத்தாழப் பத்தாயிரமாகும். புலவர் செய்த நூல்களுள் உயிரிளங்குமரன் நாடகம், இலங்கைவளம், தாலவிலாசம், தந்தையார் பதிற்றுப்பத்து, நாமகள் புகழ்மாலை, சிறுவர் செந்தமிழ், விநாயகர் பாமாலை, மரதனோட்டம், முருகன் பாமாலை, கதிரைச் சிலேடை வெண்பா, அட்டகிரிக்கலம்பகம், சுகாதாரக்கும்மி, நல்லைத் திருப்புகழ், நல்லையந்தாதி, நான் மணிமாலை என்பன சிறந்தவை.

இவ்வாறு சிவவாழ்விலே வைகித் தமிழ்த்தாய்க்குப் பெருந்தொண்டு செய்த பெரும்புலவர் கி.பி. 1953 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆம் நாள் சிவபதமெய்தினார்.

**பின்னிணைப்பு - 2**

# செயற்பாட்டுப் பத்திரம்

சோமசுந்தரப் புலவர் என்ற தலைப்பில் மூன்று நிமிடங்களுக்கான பேச்சொன்றைத் தயாரித்துப் பேசுங்கள்.

பேசும்போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படும்.

1. விளிப்பு
2. தலைப்பிற்கேற்ற பொருள்
3. தொனி வேறுபாடு
4. மொழிநடை
5. பேச்சாற்றல்
6. நிலை
7. நேரம்

# இரண்டாம் தவணை

**தேர்ச்சி 1.0** : பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்குமேற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார்.

**தேர்ச்சி அலகு1.2** : கிரகித்துப் பொருள் அறிந்து ஓதுவார்.

**செயற்பாடு** : 'முரசு' என்ற பாடலைக் கேட்டுக் கிரகித்துத் துலங்குவோம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- சுப்பிரமணிய பாரதியாரின் 'முரசு' என்ற பாடல். (பின்னிணைப்பு1)
- செயற்பாட்டுப்பத்திரம் (பின்னிணைப்பு 2)
- ஒலிநாடா
- எழுதுதாள்

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

### படி 1.2.1

- முன்கூட்டியே ஒலிப்பதிவு செய்து வைத்திருக்கும் ஈழத்து நாட்டார் பாடல் ஒன்றினை ஒலிக்கச் செய்து ஆரம்பிக்கவும்.
- முடியாதவிடத்து, நாட்டார் பாடலை ஆசிரியரோ மாணவரோ இசையோடு பாடி ஆரம்பிக்கவும்.
- பாடலைக் கேட்டுக் கிரகிக்கும்போது, என்னனென்ன விடயங்களைக் கவனத்திற்கொள்ள வேண்டும்? என்ற வினாவை மாணவரிடம் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

கலந்துரையாடலின்போது பின்வரும் விடயங்களைக் கவனத்திற்கொள்க.

- பாடலைக் கேட்கும்போது விருப்புடன் ஈடுபடுதல்
- அவதானத்துடன் செவிமடுத்தல்
- மையக்கருத்தை இனங்காணல்
- பாடலிலுள்ள புதிய சொற்களை இனங்காணல்
- பாடலிலே பொதிந்திருக்கும் உணர்ச்சியை உணர்தல்.
- பாடலைக் கேட்கும்போது தாமும் இரசனையோடு மெதுவாக சேர்ந்துப் பாடுதல்

(20 நிமிடங்கள்)

### படி 1.2.2

- வகுப்பில் உள்ள மாணவர்களை ஐந்து குழுக்களாக ஒழுங்குபடுத்துங்கள்.
- சுப்பிரமணிய பாரதியாரின் 'முரசு' என்ற பாடலைப் பாடுங்கள்.
- ஆசிரியர் பாடும்போது மாணவரும் மெதுவாக இணைந்து பாடும்படி அறிவுறுத்துங்கள்.
- பின்னிணைப்பு 2இல் கொடுக்கப்பட்ட செயற்பாட்டுப்பத்திரத்தை குழுக்களுக்கு வழங்கி, வினாக்களை வாசித்துக் கிரகிக்க அவர்களை வழி நடத்துங்கள்.
- 'முரசு' என்ற பாடலை ஆசிரியர் மீண்டுமொருமுறை ஓசையுடன் பாடும்பொழுது, வினாக்களுக்கான விடைகளை எழுதும்படி கூறுங்கள்.

(60 நிமிடங்கள்)

### படி 1.2.3

- ஒவ்வொரு குழுவையும் அறிக்கையை முன்னிலைப்படுத்த வழிப்படுத்துங்கள்.
- ஏனைய குழுக்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்க உற்சாகமூட்டுங்கள்.

பின்வரும் விடயங்ளை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- முரசை விளித்துப் பாடியுள்ளார்.
- எல்லா மக்களையும் உடன்பிறந்தவர்களைப் போல் நினைத்து ஒற்றுமையாக வாழவேண்டும்.
- வேற்றுமை பாராட்டக்கூடாது. அனைவரும் சமமே. எல்லோர் மீதும் அன்பு செலுத்தவேண்டும்.
- ஆம், ஓசையுடன் பாடமுடிகிறது. கேட்டுக் கொண்டிருக்கும் பொழுதே பொருள் விளங்குகிறது / ஒற்றுமையை வலியுறுத்துகிறது. எம்மாலும் இணைந்து பாடமுடிகிறது.
- பொருளையும் வாக்கிய இயைபையும் கவனித்துப் பார்க்கவும்

(40 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- பாடலின் மையக்கருத்தை எழுதுவ்ார்.
- புதிய சொற்களை இனங்கண்டு எழுதுவார்.
- பாடலை ஆர்வத்தோடும் இரசனையோடும் கேட்பார்.
- பாடலைக் கேட்டு முடிந்ததும் தமது உள்ளத்திலே தோன்றும் உணர்வினைக் கூறுவார்.
- பாடலைக் கேட்கும்போது தாமும் இணைந்து மெதுவாக பாடுவார்.
- தாமும் பாடலொன்றை ஆக்குவார்.

**பின்னிணைப்பு - 1**

## முரசு

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக்
கொட்டு முரசே!
வேதம் என்றும் வாழ்க என்று
கொட்டு முரசே!
நெற்றி யொற்றைக் கண்ண னோடே
நிர்த்தனம் செய்தாள்
நித்த சக்தி வாழ்க என்று
கொட்டு முரசே!

வெள்ளை நிறத்தொரு பூனை - எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்,
பிள்ளைகள் பெற்றதப் பூனை, - அவை
பேருக் கொருநிற மாகும்.

சாம்பல் நிறமொரு குட்டி, கருஞ்
சாந்து நிறமொரு குட்டி,
பாம்பு நிறமொரு குட்டி, வெள்ளைப்
பாலின் நிறமொரு குட்டி

எந்த நிறமிருந்தாலும் - அவை
யாவும் ஒரே தர மன்றோ?
இந்த நிறம்சிறி தென்றும் - இஃது
ஏற்ற மென்றும் சொல்ல லாமோ?

வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால் - அதில்
மானுடர் வேற்றுமை யில்லை.
எண்ணங்கள் செய்கைக ளெல்லாம் - இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்

அன்பென்று கொட்டு முரசே! - மக்கள்
அத்தனை பேரும் நிகராம்,
இன்பங்கள் யாவும் பெருகும் - இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்

உடன் பிறந் தவர்களைப் போலே - இவ்
வுலகினில் மனிதரெல் லாரும்
திடங்கொண்டவர்மெலிந் தோரை - இங்கு
தின்று பிழைத்திட லாமோ?

- சுப்பிரமணிய பாரதியார். -

**பின்னிணைப்பு 2**

# செயற்பாட்டுப் பத்திரம்

'முரசு' என்ற பாடலை ஆசிரியர் இருமுறை பாடுவார். அப்பாடலை அவதானமாகக் கேட்டுக் கிரகித்து கீழ் வரும் வினாக்களுக்குக் குழுவாகச் செயற்பட்டு விடை எழுதுங்கள்.

1. இப்பாடலைப் புலவர் எதனை விளித்துப் பாடியுள்ளார்?.

2. இப்பாடல்களிலே வெளிப்பட்டுள்ள மையக்கருத்தை ஒரு வாக்கியத்தில் எழுதுக.

3. இப்பாடல்களைக் கேட்டு முடித்ததும் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வு யாது?

4. 'முரசு' என்ற பாடலை நீங்கள் இரசனையுடன் கேட்டுக் கொண்டிருந்தீர்களா? காரணம் தருக.

5. பின்வரும் சொற்களை அவற்றின் பொருள் புலப்படுமாறு வாக்கியங்களில் அமைக்குக.
   i.வெற்றி ii. நிர்த்தனம் iii ஏற்றம் iv. மானுடர் v. அன்பு

6. 'ஒற்றுமை' என்ற தலைப்பில் நான்கு அடிகளைக் கொண்ட இரு பாடல்களை ஆக்குக.

**தேர்ச்சி 8.0** : விருப்பத்திற்கேற்ப வாசிப்பார்.

**தேர்ச்சி அலகு 8.1 :** இரசனைக்காகப் பல்வேறு ஆக்கங்களை வாசிப்பார்.

**செயற்பாடு** : (அ) கதை, சித்திரக்கதை, பாடல், விடுகதை, துணுக்கு போன்ற பல்வேறு ஆக்கங்களை வாசித்து இரசிப்போம்.
(ஆ) சித்திரத்தினைப் பார்த்து கதையொன்றினை ஆக்குவோம்..

**நேரம்** : 120 நிமிடங்கள்.

**தர உள்ளீடு** :
- பாடல், சித்திரக்கதை, விடுகதை, துணுக்கு, கதை பின்னிணைப்பு - 1
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 1
- செயற்பாட்டுப்பத்திரம் - பின்னிணைப்பு 2
- எழுதுதாள்

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்**

**படி 8.1.1**

- **இரசனைக்காக வாசிக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை? என மாணவரிடம் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.**
- **கலந்துரையாடலின் போது பின்வரும் விடயங்களை மாணவர்களுக்குத் தெளிவு படுத்துங்கள்.**

| |
|---|
| ◆ பல்வேறு விதமான ஆக்கங்களைத் தேர்ந்தெடுத்து வாசித்தல்.<br>◆ சொற்கள், சொற்றொடர்கள், வாக்கிய அமைப்பை இரசித்தல்.<br>◆ கூறப்பட்ட விடயத்தை இரசித்தல்.<br>◆ அணிகளை இரசித்தல்<br>◆ நகைச் சுவையை இரசித்தல்.<br>◆ இரசித்த விடயங்களை ஏனையோருடன் பகிர்ந்து கொள்ளல்.<br>◆ தான் இரசித்த விடயங்களை ஏனையோரும் இரசிக்கத்தக்க விதத்தில் புதிய ஆக்கங்களைப் புனைதல். |

(20 நிமிடங்கள்)

### படி 8.1.2

- மாணவரை ஐந்து குழுக்களாக அமையுங்கள்.
- பின்னிணைப்பில் கொடுக்கப்பட்ட கதை, சித்திரக்கதை, பாடல், விடுகதை, துணுக்கு என்பவற்றைக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- குழு நிலையில் அவற்றை இரசனையுடன் வாசித்து கலந்துரையாட வகை செய்யுங்கள்.
- குழுக்களிடையே சென்று தேவையான ஆலோசனைகளை வழங்குங்கள்.
- பின்னிணைப்பு 2, 3இல் கொடுக்கப்பட்ட செயற்பாட்டுப்பத்திரங்களை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- குழு நிலையில் ஆக்கங்களை ஆராய்ந்து செயற்பாட்டுப்பத்திரங்களுக்கு விடையளிக்கும்படி கூறுங்கள்.

(60 நிமிடங்கள்)

### படி 8.1.3

- ஒவ்வொரு குழுவும் தத்தமது அறிக்கையை முன்வைக்க வகை செய்யுங்கள்.
- ஏனைய குழுக்களைத் தமது அபிப்பிராயங்களைத் தெரிவிக்க ஊக்கப்படுத்துங்கள்..

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

(1) (அ) எங்கும் இருள் சூழ்ந்தது, பெருங்காற்று வேகமாக வீசியது, சமுத்திரம் பெரும் பூதம் போல "ஓ ஓ" என்று இரைச்சலிட்டது.

(ஆ) உ-ம் (i) அணைக்கட்டிலிருந்து நீர் வெளியேறாது பாதுகாத்த செயல்.
(ii) பசி வயிற்றைக் கிள்ளிய போதும், குளிர் நடுக்கம் செய்த போதும், இறந்து போனாலும் பரவாயில்லையென அணைக்கட்டைத் தன்னந்தனியாக அடைத்துக் கொண்டு மயங்கிக் கிடந்த செயல்.

(2) (அ) **உருவகங்கள்**

நட்சத்திரம் - மீன்
சந்திரன் - ஓடம்
வானம் - கடல்

(ஆ) வானமாகிய கடலிலே நட்சத்திரங்களாகிய மீனினங்களின் நடுவிலே சந்திரனாகிய வெள்ளி ஓடம் செல்லுதல்.

(இ) வானத்தில் நட்சத்திரங்கள் மின்னுவது முல்லை மலர்ப் பந்தல் இட்டது போலவும் முத்து விதானம் அமைத்தது போலவும் இருத்தல்.

(ஈ) அம்புயம் வாடுதல், ஆம்பல் மலர்தல்.

(3) சுவையுடன் கூறியுள்ளார்களா? எனக் கவனியுங்கள்.

(4) சுவையுடன் விபரித்துள்ளார்களா? எனக் கவனியுங்கள்.

சித்திரக்கதை (அ) தெளிவு, கதைத் தொடர்பு, மொழியாட்சி, கவர்ச்சி என்பன பேணப்படுவதை அவதானியுங்கள்.
(ஆ) தலைப்பு கவர்ச்சிகரமான இருக்கிறதா என்பதைக் கவனியுங்கள்.

(40 நிமிடங்கள்)

## கணிப்பீடும், மதிப்பீடும்

- தாம் வாசித்த இரசித்த விடயங்களைக் கூறுவார்.
- நகைச்சுவையாகப் பேசுவார்.
- சித்திரங்களைப் பார்த்து சிறந்த கதைகளை ஆக்குவார்.
- பல்வேறு ஆக்கங்களை வாசித்து மொழியாற்றலை விருத்தி செய்வார்.
- சிறந்த ஆக்கங்களைத் தேர்ந்தெடுத்து வாசிப்பார்.

**பின்னிணைப்பு - 1**

## பாடல்

**சந்திரன்**

(1) மீனினம் ஓடிப் பரக்குதம்மா, ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா
வானும் கடலாக மாறுதம்மா! - இந்த
மாட்சியி லுள்ளம் முழுகுதம்மா

(2) முல்லை மலர்ப்பந்தல் இட்டனரோ? - தேவர்
முத்து விதானம் அமைத்தனரோ?
வெல்லு மதியின் திருமணமோ? - அவன்
விண்ணில் விழாவரும் வேளையிதோ?

(3) அம்புயம் வாடித் தளர்ந்ததம்மா! - அயல்
ஆம்பலும் கண்டு களிக்குதம்மா!
இம்ப ருலகின் இயல்பிதம்மா! - மதிக்கு
இன்னார் இனியாரும் உண்டோ? அம்மா!

___ *** _____


-தேசிக விநாயகம்பிள்ளை-




01




02




03




04



05



06



07



08

## விடுகதைகள்

(1) கல்வீட்டுத் தாத்தா மெதுவாக நடப்பார். அவர் யார்?

**ஆமை**

(2) உயிரற்ற நீதிபதி ஒழுங்காகத் தீர்ப்பு வழங்குவார். அவர் யார்?

**தராசு**

(3) மூத்தவர் ஆற்றிலே, இளையவர் காட்டிலே, நற்குறி சொல்பவர் வீட்டிலே. அவர்கள் யாவர்?

**முதலை, உடும்பு, பல்லி**

(4) தாவிப் பாயும் குணமுண்டு, தலையில் இரு கிளையுண்டு. இரண்டெழுத்தில் பெயருண்டு. இலக்கியத்தில் இடமுண்டு. அது என்ன?

**மான்**

(5) உப்பை உண்டவன் உறங்காமல் அலைகிறான். அவன் யார்?

**கடல்**

## துணுக்குகள்



# நாடு காத்த சிறுவன்

ஐரோப்பாக் கண்டத்தின் மேற்குப் பகுதியிற் சமுத்திர தீரமாக, ஒல்லாந்து என்னுஞ் சிறிய தேசம் இருக்கின்றது. அது, குன்றுகளற்ற சமபூமி. அதன் சில பகுதிகள் கடல் மட்டத்திலும் பார்க்கத் தாழ்ந்திருக்கின்றன. இங்ஙனமிருந்தால், கடல் நீர் நாட்டுக்கு உள்ளே புகுந்து விடலாமல்லவா? அதனால், ஒல்லாந்தர் தாம் பிறந்த பொன்னாட்டைக் காப்பதற்காக, கடற்கரையிற் பலம்வாய்ந்த அணையைக் கட்டியிருக்கிறர்கள். சில சமயங்களிலே, பெருங்காற்றுச் சுழன்றடிக்கும். அப்போது கடல் குமுறிக் கொந்தளித்து அணையைத்தாக்கி உடைக்க, கடல்நீர் நாட்டுட் பாய்ந்து பெருஞ்சேதம் விளைக்கும். அதனால், ஒல்லாந்தர் கண்ணை இமை காப்பது போல அந்த அணையைக் காத்து வருகின்றனர்.

அந்தத் தேசத்தின் கடற்கரையோரமாக, கிராமம் இருந்தது. அங்கு, கான்சு என்னும் பெயருடைய பையன் ஒருவன் தன் பெற்றோருடன் வாழ்ந்துவந்தான். அவன் நற்குணமுடையவன். தன்னாட்டின் மீது அளவில்லாத அன்புடையவன். அவன் வாழ்ந்த அச்சிறு கிராமத்திலே அக்காலத்திலே பாடசாலை ஒன்றும் இல்லை. ஆயினும், அவன் கல்வி கற்க வேண்டுமென்ற பெரு விருப்பினால், அயற் கிராமத்திலே உள்ள பாடசாலை ஒன்றுக்குத் தினமும் இரண்டு மைல் தூரம் நடந்து சென்று படித்து வந்தான்.

ஒருநாள் மாலை நேரத்திலே கான்சு பாடசாலையிலிருந்து அணைக்கட்டின் அயலிலுள்ள வீதி வழியாக, வீட்டை நோக்கி நடந்து வந்தான். அது மாரிக்காலமானதால் எங்கும் இருள் சூழ்ந்துவிட்டது. மாரிக்காலத்தில், ஒல்லாந்து தேசத்திலே சூரியன் வழக்கத்திலும் பார்க்க முந்தி மறையும். அன்று பாடசாலையிலிருந்து கான்சு வீடு திரும்புஞ் சமயம் எங்கும் இருள் சூழ்ந்துவிட்டது. பெருங்காற்று வேகமாக வீசிக்கொண்டிருந்தது. சமுத்திரம் பெரும் பூதம்போல, "ஓ, ஓ" என்று இரைச்சலிட்டுப் பயமுறுத்தியது. "ஓகோ", இன்று பெரும் புயல் வீசுவதற்குரிய அறிகுறி தோன்றுகின்றது. கடலும் பயங்கரமாகக் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. என்றாலும், எங்கள் அணைக்கட்டுப் பலமுடையதாய் இருக்கிறதே. பயப்பட வேண்டியதில்லை" என்று, அவன் தனக்குள்ளே எண்ணிக்கொண்டே நடந்தான். இருள் நிறைந்த வீதி வழியே தன்னந்தனியனாய் வீட்டை நோக்கி நடந்து சென்ற அவனுக்குப் பசி வயிற்றைக்கிள்ளியது. மாரிக்காலக் குளிர் அவனை நடுங்கச் செய்தது. "எப்போது வீட்டை அடைவோம். எப்போது உணவு கொள்வோம். எப்போது குளிர் காய்வோம்" என்று அவன் மனம் அங்கலாய்த்தது.

நடந்து சென்றவன் திடீரென ஓரிடத்தில் நின்றான். அவ்விடத்தில் நீர் பாய்ந்து செல்வதைக் கண்டான். "நீர் எப்படி இங்கே வந்தது? ஒரு வேளை அணைக்கட்டிலிருந்து வருகிறதோ?" என்று சந்தேகித்து அவ்விடத்துக்குக் கிட்டப்போய் அதனைக் கூர்ந்து நோக்கினான் அணைக் கட்டிலிருந்து ஒரு சிறு துவாரத்தின் வழியாகக் கடல் நீர் "குபு குபு" என்று உள்ளே பாய்வதைக் கண்டான். அதை அப்படியே விட்டு விட்டால், அத்துவாரம் வரவரப் பெரிதாகி விரைவில் அணைக்கட்டு உடைந்துவிடும் என்பது அவனுக்குத் தெரியும். அத்துவாரத்தை அடைப்பதற்கேற்ற ஒரு பெரிய கல்லைத் தேடிப்பார்த்தான் அதுவுங்கிடைக்கவில்லை.

"ஐயோ, ஆபத்து, ஆபத்து, ஓடி வாருங்கள், என்று பெருங்குரலெடுத்துக் கத்தினான். அவனது சத்தம் எவர் காதிலும் விழவில்லை. கிராமத்துக்குச் சென்று ஆட்களைக் கூட்டி வருவதற்கிடையில், அணைக்கட்டு உடைந்து விடுமெனப் பயந்து, என்ன செய்வதென்று தெரியாமல், ஒரு கண நேரம் திகைத்து நின்றான். அடுத்த கணம், அணைக்கட்டின் துவாரத்தைத் தன் கையால் அடைத்தான். கடல் நீர் வருவது நின்றது. அப்படியே அந்த இடத்தில் இருந்து விட்டான். சிறிது நேரம் சென்றது. பசியால் அவன் கண்கள் பஞ்சடைந்தன. குளிரால் அவனுடல் விறைத்தது. "என்ன ஆனாலும், இறந்து போனாலும் இந்த இடத்தை விட்டு அகலேன்" என மனவுறுதி பூண்டு அங்கேயே இருந்துவிட்டான்.

இருட்டி வெகு நேரமாகியும், தம்மகன் வீட்டுக்கு வராமையாற் பெற்றோர் கவலை கொண்டனர். தம் அருமை மகனுக்கு என்ன நேர்ந்ததோ என எண்ணி வருந்தினர். அதிக நேரம் வாயிலில் நின்று பார்த்தனர். ஈற்றில் அவனது தந்தையார், கான்சுவின் நண்பன் வீட்டுக்குச் சென்று விசாரித்தார். அவனும், தான் கான்சுவைக் காணவில்லை எனக் கூறினான். என்ன செய்வார், பாவம் வீட்டுக்குச் சென்று விளக்கை எடுத்துக்கொண்டு, கான்சு வரும் வீதியில் நடந்து சென்றார். விளக்கின் மங்கிய ஒளியில் , அணைக்கட்டின் அருகில், ஒருவரும் கிடப்பதைக் கண்டார். சமீபத்திற் சென்று பார்த்தபோது, தன்மகன் அணைக்கட்டின் துவாரத்தை அடைத்துக் கொண்டு கிடப்பதைக் கண்டார். மகனின் நிலையைக் கண்டு மனம் வருந்தினார். ஆனால், அவனது செயலை எண்ணி மிகமிக மகிழ்ந்தார்.

உடனே, அப்பெரியவர் கிராமத்துக்குச் சென்று, உடைப்பை அடைப்பதற்குரிய பொருள்களோடு ஆட்களையும் அழைத்து வந்தார். அந்தத் துவாரம், கைக்கு அடங்காமற் பெரிதாகிவிட்டதையும், கான்சு தன் முதுகினால் அதனை அடைத்துக் கொண்டிருப்பதையும் அவர்கள் கண்டனர். உடனே, உடைப்பை அடைத்து, அணையைச் சீர்ப்படுத்தினர். தன் மகனின் வீரச் செயலைக் கேள்வியுற்ற அன்னை, அவனைக் கட்டியணைத்து உச்சிமோந்து உவந்தாள் ஈன்றபொழுதிலும் மிக மகிழ்ந்தாள்.

மறுநாட் காலையில் அவ்வூர் மக்கள், அவன் வீட்டு முன்றிலிற் கூடினர். நாடுகாத்த அவனது வீரச் செயலைப் புகழ்ந்து பாராட்டினர். தங்களது அன்புப் பரிசாக ஓர் அழகிய புத்தகத்தைக் கொடுத்தனர். அப்புத்தகத்தில், "தனது நாட்டை அபாயத்தினின்றுங் காத்த வீரச் சிறுவனான கான்சுவுக்கு அன்புப்பரிசு" என்று எழுதப்பட்டிருந்தது.

**பின்னிணைப்பு - 2**

## செயற்பாட்டுப்பத்திரம் - 1

(1) ("நாடு காத்த சிறுவன்."என்ற கதையை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.)

(அ) "கான்சு" என்னும் பெயருடைய சிறுவன் பாடசாலையில் இருந்து வீட்டை நோக்கிச் செல்லும் பொழுது இருந்த சூழல் எவ்விதம் வர்ணிக்கப்பட்டுள்ளது?

(ஆ) I. இக்கதையின் முக்கிய கதாபாத்திரமான கான்சுவின் எத்தகைய செயல் உங்களைக் கவர்ந்தது.

II. காரணம் தருக.

(2) (தேசிக விநாயகம்பிள்ளையால் பாடப்பட்ட "சந்திரன்"; பற்றிய பாடலை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.)

(அ) நட்சத்திரம், சந்திரன், வானம் என்பவற்றுக்கு புலவர் காட்டும் உருவகங்கள் யாவை?

(ஆ) ஆகாயத்திலே சந்திரனும், நட்சத்திரங்களும் தோன்றும் காட்சியை புலவர் எவ்வாறு வர்ணித்துள்ளார்?

(இ) "மதியின் திருமணமோ?" என புலவர் நினைப்பதற்குரிய காரணம் யாது?

(ஈ) சந்திரன் தோன்றும் பொழுது மலர்களின் நிலை பற்றிப் புலவர் யாது கூறுகிறார்?

(3) (தரப்பட்ட விடுகதைகளை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாவிற்கு விடை எழுதுங்கள்.)

- தரப்பட்ட விடுகதைகளுள் உங்களுக்கு மிகவும் பிடித்த விடுகதை எது? காரணம் தாருங்கள்.

(4) (தரப்பட்ட துணுக்குகளை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாவிற்கு விடை எழுதுங்கள்.)

- தரப்பட்ட துணுக்குகளுள் நீங்கள் மிகவும் இரசித்த துணுக்கு யாது? காரணம் தாருங்கள்.

# செயற்பாட்டுப்பத்திரம் -II

## சித்திரக்கதை

(1) இங்கு காணப்படும் சித்திரங்களைக் கூர்ந்து அவதானித்து சிறிய கதையொன்று ஆக்குங்கள்.

(அ) வாசிப்போர் மிகவும் இரசித்து வாசிக்கத்தக்க வகையில் வர்ணனைகளுடன் கதையை ஆக்குங்கள்.

(ஆ) அக்கதைக்கு ஒரு தலைப்பு இடுங்கள்.

**தேர்ச்சி 9.0** : அவதானமாகக் கிரகித்து எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி எழுத்துக்கள், சொற்கள், வாக்கியங்களை, வழுவின்றி உரிய நிறுத்தக் குறிகளுடன் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி அலகு9.1 :** கேட்டு கிரகித்து எழுதுவார்.

**செயற்பாடு** : "முயற்சியுடையார்" என்ற சிறுகதையைக் கேட்டு கிரகித்து கருத்துக்களை முன்வைப்போம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- கதைப் பிரதிகள் -பின்னிணைப்பு 1
- செயற்பாட்டுப்பதிரங்கள் - பின்னிணைப்பு 2
- தேவையான எழுதுதாள்கள், எழுதுகருவிகள்
- ஒலி நாடா

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடு**
**படி 9.1.1**

பின்வரும் கதைப் பகுதியை மாணவர் ஒருவரை அழைத்து உரத்து வாசிக்கச் செய்து மாணவரை அவதானமாகக் கேட்டுக் கிரகிக்க வழிப்படுத்துங்கள்.

**சிங்கமும் முயலும்**

"நன்றாக அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த முயல் ஒன்றை ஒரு சிங்கம் பார்த்தது. உடனே அதைப் பிடிக்கப் போயிற்று. அப்போது ஒரு அழகான கொழுத்த மான்குட்டி போவதை சிங்கம் பார்த்து விட்டது. அதனால் முயலைப் பிடிப்பதை விட்டுவிட்டு மான்குட்டியைப் பிடிக்கப் பின்தொடர்ந்தது. அப்போது ஏற்பட்ட சத்தத்தில் முயல் கண்விழித்தெழுந்து அங்கிருந்து விரைந்தோடி விட்டது. நெடுந்தூரம் மானை விரட்டிச் சென்ற சிங்கம் அதைப் பிடிக்க முடியாமல் முயலையாவது சாப்பிடலாம் என்று எண்ணித் திரும்பி வந்தது. அப்போது முயல் அங்கிருந்து ஓடிவிட்டதைக் கண்டறிந்து கொண்ட சிங்கம் "கைப்பிடியில் இருந்த உணவை விட்டுவிட்டு வேறொன்றிற்காக ஓடிச் சென்ற எனக்கு இது வேண்டியது தான்!" என்று கூறிக் கொண்டது.

கதைப்பகுதியை வாசித்த பின்பு, பின்வரும் வினாக்களை வினவுங்கள்.

- இக்கதையில் கூறப்பட்ட பிராணிகள் எவை?
- சிங்கத்தின் ஏமாற்றத்துக்கு காரணம் யாது?
- இக்கதை கூறும் படிப்பினைகள் யாவை?

பின்வரும் விடயங்கள் உள்ளடங்கக் கூடியதாகக் கலந்துரையாடுங்கள்.

- உன்னிப்பாகக் கேட்டுக் கிரகித்தல்
- விழுமியம்
- பொருத்தமான கருத்தாடல்
- நகைச்சுவை உணர்வு
- பிரதான கருத்து
- இரசிப்புத் தன்மை
- படிப்பினை

(10 நிமிடங்கள்)

## படி 9.1.2

- மாணவரைத் தனித்தனியாக அமரச் செய்யுங்கள்.
- செயற்பாட்டுப் பாத்திரம் 1இனை வழங்குங்கள்.
- ஒலிப்பதிவு செய்யப்பட்ட கதையை ஒலிக்கச் செய்யுங்கள்
- அவதானமாகக் கேட்டு கிரகிக்க மாணவரை வழிப்படுத்துங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்கி தனித்தனியாகச் செயற்பட வழி செய்யுங்கள்.

(30 நிமிடங்கள்)

## படி 9.1.3

- செயற்பாட்டுப் பத்திரங்களை மாணவர்களுக்கு மாற்றிக் கொடுங்கள்.
- ஆசிரியர் விடைகளை வாசிக்க மாணவர்கள் திருத்துவதற்கு வழிகாட்டுங்கள்.
- கூடிய புள்ளி பெற்ற மாணவரைப் பாராட்டுங்கள்.

மாணவர் கூடுதலாக தவறவிட்ட வினாக்களுக்கு கூடுதலான முக்கியத்துவத்தைக் கொடுத்து பின்வரும் விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

- உன்னிப்பாகக் கிரகித்தல்.
- கிரகித்தவற்றை ஞாபகத்தில் வைத்திருத்தல்
- கேட்டுக் கிரகித்தவற்றை எழுதுதல்.
- குறித்த நேரத்தினுள் எழுதுதல்.

(20 நிமிடங்கள்)

## படி 9.1.4

- மாணவர்களை நான்கு குழுக்களாக்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரம் 2இனையும், 3இனையும் வழங்குங்கள்
- குழு நிலையில் கலந்துரையாடி எழுத மாணவரை வழிப்படுத்துங்கள்.
- மாணவரை வகுப்பு நிலைக்குக் கொண்டு வந்து அறிக்கையை சமர்ப்பிக்கத் தயார் செய்யுங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 9.1.5

- குழுI குழுII இல் இருந்து இரு மாணவர்களை அழைத்து அவர்கள் எழுதிய கதைகளை முன்வைக்கச் சொல்லுங்கள்.
- எக்குழுவினருடைய கதை மூலக் கதையோடு கூடிய தொடர்புள்ளதாகவும், சிறப்பானதாகவும் உள்ளது எனக் கலந்துரையாடுங்கள்.
- ஏனைய மாணவர்கள் கருத்துக்களை வெளியிடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுIII குழுIV இற்குரிய செயற்பாட்டுப்பத்திரத்தை குழுவுக்கு ஒருவர் வந்து முன்வைக்கச் சொல்லுங்கள்.
- செயற்பாட்டுப் பத்திர விடைகள் தொடர்பாக ஏனைய மாணவர்கள் கருத்துக்கள் கூற இடமளியுங்கள்.

பின்வரும் விடயங்கள் உள்ளடங்கக் கூடியதாக கலந்துரையாடுங்கள்.

- இக்கதையில் கூறப்பட்டுள்ள பிரதான கருத்து
- மாணவனின் பருவ வாழ்க்கை
  தந்தை இன்மை - தாய் வளர்ப்பு - வறுமை - கணக்குப் பிள்ளை சந்திப்பு - தாசில்தார் அறிமுகம் - அவர் உதவுதல் - அவன் தொடர்ந்து கற்றல்.
- முயற்சி உயர்வு தரும்.
- முயற்சி இருந்தால் முன்னேறலாம்.
- வறுமை முயற்சிக்குத் தடைக்கல் ஆகாது

(20 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- அவதானமாகக் கேட்டு கிரகித்து எழுதுவார்.
- கேட்டு இரசித்த பகுதிகளை எழுதுவார்.
- கேட்டு கிரகித்த கதை தொடர்பான தமது எண்ணங்களை வெளிப்படுத்துவார்.
- முயற்சி இருந்தால் முன்னேறலாம் என்பதை விளங்கிக் கொள்வார்.
- படிப்பினைகள், விழுமியக் கருத்துக்களை எடுத்துக் கூறுவார்.

**பின்னிணைப்பு: - 1**

# முயற்சியுடையார்

தஞ்சை மாவட்டத்தில் திருவாரூருக்கு அருகாமையில் உச்சவடி என்று ஒரு சிற்றூர். அந்தச் சிற்றூரில் முத்துசாமி என்ற ஒரு சிறுவன் வசித்து வந்தான். தந்தையை இழந்தவன். தாய்மட்டுமே ஆதரவு. குடும்பத்தில் கடுமையான வறுமைச் சூழ்நிலை. முத்துசாமிக்கு தாயாகமட்டுமின்றி தந்தையாகவும் இருந்து ஒரு குறையும் வராமல் வளர்த்து வந்தாள்.

மகனின் வயிற்றுக்குச் சோறு போடுவதே கஷ்டமாக இருக்கும்போது கல்விப் பயிற்சிக்கு எவ்வாறு ஏற்பாடு செய்ய முடியும். இன்று போல அப்பொழுதெல்லாம் இலவசக் கல்வி முறை இல்லை. கல்விப் பயிற்சி என்றால் ஒரு குறைந்தபட்ச தொகையாவது செலவிடத் தயாராக இருக்க வேண்டும். தாய் மகனை தம்மால் முடிந்த அளவு சிரமப்பட்டு ஐந்தாம் வகுப்புவரை படிக்க வைத்தாள். அதற்கு மேல் மகனைத் தொடர்ந்து படிக்கவைக்க இயலவில்லை. வேறு வழியின்றி படிப்பை நிறுத்திவிட வேண்டிவந்தது.

அன்னையோ முதுமைப் பருவமடைந்து விட்டார். பையனைத் தொடர்ந்து பராமரிக்க அவரால் இயலவில்லை. ஒருவேளை தன் ஆயுட் காலம் முடிந்து விட்டாலும் பையன் தொடர்ந்து உலகத்தில் வாழ வேண்டுமே அதற்கு ஏதாவது வழி செய்தாக வேண்டுமே என்று அந்த தாயுள்ளம் மிகுந்த கவலைப்பட்டது. அந்த சிற்றூரின் கணக்குப்பிள்ளை அவர்கள் குடும்பத்துக்குச் சற்று அறிமுகமானவர். அந்த அம்மையார் ஒருநாள் கிராம கணக்குப்பிள்ளையைச் சென்று பார்த்தார்.

தன் குடும்ப கஷ்ட நிலையை அவரிடம் எடுத்துக் கூறி மகனுக்கு ஏதாவது ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்யுமாறு வேண்டிக்கொண்டார். "என்னிடம் உங்கள் மகனுக்கு என்ன வேலைகொடுக்க முடியும்? பையனை நாளை முதல் அனுப்புங்கள். ஏதோ இருக்கும் எடுபிடி வேலைகளைச் செய்யட்டும். என்னால் முடிந்த அளவு சிறு தொகையை ஊதியமாகத் தருகிறேன்" என்றார் கணக்குப்பிள்ளை.

"இப்போது அவன் பெரிதாக ஏதும் சம்பாதிக்கத் தேவையில்லை. ஏதாவது ஒரு வேலையில் பழகினால் போதும். எதிர்காலத்தில் தன் வயிற்றைத் தான் நிரப்பிக்கொள்ள வழி பிறந்தால் சரிதான்" என்று அம்மையார் கூறி மகனை மறுநாள் மகிழ்ச்சிப் பெருக்குடன் அனுப்பி வைத்தார். கிராம கணக்குப் பிள்ளையுடன் வேலை செய்வது என்றால் அது அநேகமாக அலைந்த பிழைப்பாகத்தான் இருக்கமுடியும். கிராமத்து வயல்களை அளந்து கணக்கிடுவது அலைந்து திரிந்து வரிவசூல் செய்வது போன்ற பணிகளில் முத்துசாமியும் உதவ வேண்டியிருந்தது.

வயதுக்கும் சக்திக்கும் மீறிய வேலையாக இருந்தாலும் முழுமனத் திருப்தியுடன் வேலை பார்த்தான் முத்துசாமி. கிடைக்கும் ஊதியம் மிகவும் குறைவாக இருந்தாலும் தன் அன்னைக்கு தன்னால் இயன்ற அளவு சம்பாதித்துக் கொடுக்க முடிந்ததே என்ற திருப்தி ஏற்பட்டது அவனுக்கு. பள்ளிப்படிப்பைத் தொடர முடியவில்லையே என்ற ஏக்கம் அவன் மனத்தில் குடி கொண்டிருந்தது. முறையாகக் கல்வி பயில வாய்ப்பு கிடைக்காதா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அதே சமயம் தன் கைக்குக் கிடைக்கும் சிறு சிறு நூல்களையெல்லாம் படித்துப் படித்துத் தன் அறிவை வளர்த்து வந்தான்.

கணக்குப்பிள்ளை தன் பதவியின் காரணமாக அடிக்கடி தாசில்தார் வீட்டுக்குப் போய்வர வேண்டியிருந்தது. கணக்குப்பிள்ளை தாசில்தார் வீட்டுக்குச் செல்லும் போதெல்லாம் முத்துச்சாமியும் உடன் செல்லுவான். தாசில்தார் வீட்டுக்குச் செல்லும் போதெல்லாம் யாரும் ஏவாமல் இருக்கும்போதே தாசில்தார் வீட்டு வேலைகளைத் தாமே தன் முனைப்பாகச் செய்வான்.

பையனுடைய சுறுசுறுப்பும், கருத்தறிந்து பணிபுரியும் மனப்பான்மையம், சாதுரியமான பேச்சும் தாசில்தாரின் மனத்தைக் கவர்ந்தது. முத்துசாமியைப்பற்றி விசாரித்து அவன் குடும்ப நிலவரத்தைத் தெரிந்துக்கொண்டார். வாய்ப்பு ஏற்படும்போது அவனுக்குத் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்யவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார். முத்துசாமியும் கணக்குப்பிள்ளை வீட்டில் வேலை ஏதும் இல்லாமலிருக்கும் போது தாசில்தார் வீட்டுக்குச் சென்று குடும்பத்திலும் அவருக்கு மிகவும் உதவிகரமாக செயற்பட்டான்.

ஒருநாள் தாசில்தார் வீட்டில் முத்துசாமி வேலை பார்த்துக் கொண்டிருந்த போது உள்ளூர் பிரமுகர் ஒருவர் தாசில்தார் விட்டுக்கு வந்தார். உள்ளூரில் செல்வமும் செல்வாக்கும் மிக்கவர் அவர். தாசில்தாருக்கும் அவர் நெருக்கமான நண்பர். அந்தப்பிரமுகர் தாசில்தாரை நோக்கி, "நண்பரே ஓர் அவசர வேலைக்காரணமாக அயலூர் செல்ல வேண்டியிருக்கிறது. நான் என் நிலவரியைச் செலுத்தியாக வேண்டும். திரும்பி வருவதற்குள் நிலவரி செலுத்துவதற்கான காலம் கடந்துவிடக்கூடும். அதனால் இப்பொழுதே தொகையைக் கட்டிவிட எண்ணுகிறேன்" என்றார்.

அந்தச் சமயம் கணக்குப்பிள்ளை ஊரில் இல்லை. அந்த கணக்கு விவரம் அவருக்குத்தான் தெரியும். "கணக்குப்பிள்ளை ஊரில் இல்லையே! நீங்கள் செலுத்த வேண்டிய தொகை என்னவென்று, தெரியவில்லையே!" என்று கவலையுடன் கூறினார் தாசில் தார். சிறுவன் முத்துச்சாமி அவர்கள் உரையாடலைக்கேட்டுக் கொண்டிருந்தான். அவன் மரியாதையுடன் தாசில்தாரை நோக்கி, "ஐயா இவர்கள் செலுத்த வேண்டிய தொகை எவ்வளவு என்று எனக்குத் தெரியும் என்று பணிவுடன் கூறினான். "உனக்கு எப்படித் தெரியும்?" என்று வியப்புடன் கேட்டார் பிரமுகர்.

"கணக்குப்பிள்ளை ஐயா அவர்களுடன் நான் எப்போதும் இருப்பதாலும் அவர் கணக்குகள் எழுதும் போதும், வரி வசூல் செய்யும் போதும் உடன் இருப்பதாலும் சில விஷயங்கள் என் நினைவில் இருக்கும். இவர்கள் செலுத்த வேண்டிய தொகை எனக்கு மிகவும் தெளிவாக நினைவில் இருக்கிறது" என்று கூறினான் சிறுவன். அவர் செலுத்தவேண்டிய தொகையைப் பற்றியும் சொன்னான்.

பிரமுகர் முத்துசாமி சொன்ன தொகையை தாசில்தாரிடம் அளித்து இதை ஏற்றுக் கொள்ளுங்கள். கணக்குப்பிள்ளை வந்ததும் கணக்கு விவரத்தைக் கேட்டுக் கொள்ளுங்கள். கூடக் குறைய இருந்தால் நான் திரும்பி வந்ததும் சரி செய்து கொள்ளலாம் என்று கூறி பணத்தைக் கொடுத்துவிட்டுப்போய்விட்டார்.

மறுநாள் கணக்குப்பிள்ளை வந்ததும் பிரமுகரின் கணக்கைப் பார்க்குமாறு தாசில்தார் கேட்டுக் கொண்டார். கணக்குப்பிள்ளை சொன்ன கணக்கைக் கேட்டதும் தாசில்தார் பிரமிப்படைந்து விட்டார். முத்துசாமி சொன்ன கணக்கு தம்படி (அப்போது வழக்கில் இருந்தகாசு) பிசகாமல் முற்றிலும் சரியாக இருந்தது.

முத்துசாமியின் அறிவுத்திறனையும் நினைவாற்றலையும் கண்ட தாசில்தார் அந்தப் பையனின் வாழ்க்கை உயர்வுக்கு தன்னால் இயன்ற உதவியைச் செய்யவேண்டும் என்று திடமான தீர்மானத்துக்கு வந்தார். உடனடியாக முத்துசாமி தொடர்ந்து கல்வி பயிலுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். முத்துசாமி அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. முழு உற்சாகத்துடனும் வேகத்துடனும் கல்விப் பயிற்சியை விட்ட இடத்திலிருந்து தொடங்கினான்.

தொடக்கப்பள்ளி வாழ்க்கையை முடித்துக் கொண்டு உயர்நிலைப் பள்ளியில் அடியெடுத்து வைத்தான். பின்னர் கல்லூரியில் சேர்ந்து பி.ஏ.பட்டம் பெற்றான்.

படிக்கும் காலத்தில் முத்துசாமி வீட்டில் எத்தனையோ தொல்லைகளுக்கும் இடையூறுகளுக்கும் ஈடு கொடுக்க வேண்டியிருந்தது. வீட்டில் வறுமைச் சூழ்நிலை அவனை வாட்டி வதைத்தது. நிம்மதியாக வீட்டில் உட்கார்ந்து பள்ளிப் பாடங்களைப் படிப்பதற்கான சூழ்நிலை இல்லை. இரவில் படிப்பதற்கு நல்ல விளக்கு கிடையாது. இருக்கும் விளக்கிற்கும் எண்ணெய் வாங்க வசதி இல்லை.

விளக்கு வசதி இல்லை என்பதற்காக முத்துசாமி வீட்டில் படிக்காமலே இருந்துவிடவில்லை. தெரு விளக்கின் வெளிச்சத்தில் அமர்ந்து நெடுநேரம் படித்துக் கொண்டிருப்பான். ஒரு சாமானிய மனிதன் போதிய கல்வியறிவு பெறாமல் போய்விடுவதற்கோ, வாழ்க்கையில் முன்னேறமுடியாமல் தாழ்வடைந்து விடுவதற்கோ சூழ்நிலை தான் காரணம் என்று சிலர் வாதிப்பதுண்டு.

வறுமைச் சூழலில் பட்டினி கிடக்கும் நிலையில் உள்ள ஒரு மாணவனால் எவ்வாறு நல்லமுறையில் கல்வி கற்று முன்னேற முடியும் என்று சிலர் கேட்பதுண்டு. ஒரு இளைஞனுக்கு வேறு என்னென்ன புற இடையூறுகள் இருந்தாலும் தன் வாழ்க்கை முன்னேற்றத்தில் நம்பிக்கையும் அக்கறையும் எல்லாவற்றுக்கும் மேலாக திடமான விடா முயற்சியும் இருந்தால் அவன் நிச்சயமாக வாழ்க்கையில் முன்னேறி விடமுடியும். இதற்கு முத்துசாமியின் வாழ்க்கை ஒருதாரணம்.

முத்துசாமி முதலில் வயிற்றுப் பிழைப்புக்காக சிறியதோர் அரசாங்க உத்தியோகத்தில்தான் அமர்ந்தான். ஏதோ வயிறார சாப்பிட முடிகிறது என்று அவன் திருப்தியடைந்து தன் முயற்சிகளை நிறுத்தி விடவில்லை. தொடர்ந்து முன்னேறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டான். தன் முயற்சிக்கு ஏற்ப தன்னுடைய தகுதிகளையும் உயர்த்திக் கொண்டே வந்தான்.

கடைசியில் சென்னை உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி பொறுப்பு அந்த இளைஞனைத்தேடி வந்தது. தமிழகம் முழுவதிலும் மட்டுமின்றி பாரதம் முழுவதிலும் புகழ்ந்து போற்றப்பட்ட முத்துசாமி ஐயர் என்ற உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி இந்த இளைஞன்தான். ஒரு சாமானிய மனிதன் தன்னுடைய அயர்விலாத விடாமுயற்சியால் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் எந்த அளவுக்கு உயர்ந்த வாழ்க்கையின் உச்சிக்குச் செல்ல முடியும் என்பதற்கு முத்துசாமி ஐயரின் வாழ்க்கை ஒரு சான்று ஆகும்.

வசந்தா இராமநாதன்<br>உயர்வுக்கு வழிகாட்டும் கதைகள்

**பின்னிணைப்பு - 2**

## செயற்பாட்டுப் பத்திரம் - I

1. இக்கதையின் பிரதான பாத்திரங்கள் எவை?
2. முத்துசாமி என்ற சிறுவனை வளர்த்தவர் யார்?
3. "என்னிடம் உங்கள் மகனுக்கு என்ன வேலை கொடுக்க முடியும்? பையனை நாளை முதல் அனுப்புங்கள்" இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
4. யாருக்குக் கூறப்பட்டது?
5. தாசில்தாரின் மனதைக் கவரந்த முத்துசாமியின் பண்புகள் எவை?
6. முத்துசாமி பெற்ற கல்விப் பட்டம் எது?
7. முத்துசாமி எத்தகைய இடையூறுகளுக்கிடையில் கல்வி கற்றான்?
8. முத்துசாமி பெற்றுக் கொண்ட உயர் பதவி எது?
9. இக்கதைக்குப் பொருத்தமான பழமொழி ஒன்று தருக.
10. இக்கதைக்குப் பொருத்தமான தலைப்பொன்று எழுதுக.

## செயற்பாட்டுப் பத்திரம் - II

### குழுI குழுII

நீங்கள் கேட்டுக் கிரகித்த "முயற்சியுடையார்" என்ற கதையை உங்கள் சொந்த நடையில் எழுதுக.

## செயற்பாட்டுப் பத்திரம் - III

### குழுIII குழுIV

1. இக்கதையில் கூறப்பட்டிருக்கும் பிரதான கருத்து யாது?
2. முத்துசாமி என்ற மாணவனின் வாழ்க்கை நிலை மாணவப் பருவத்தில் எவ்வாறு இருந்தது?
3. இக்கதையைப் படிக்கும் போது உங்கள் மனதில் தோன்றும் எண்ணம் யாது?
4. இக்கதை மூலம் மாணவர் ஒருவருக்குக் கிடைக்கப் பெறும் படிப்பினைகள் எவை?
5. இக்கதை கூறும் விழுமியக் கருத்து யாது?

**தேர்ச்சி 1.0** : பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்குமேற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார்.

**தேர்ச்சி அலகு1.1:** கேட்டுக் கிரகித்தவற்றைச் செம்மையாகக் கூறுவார்.

**செயற்பாடு** : அறிவித்தலொன்றைக் கேட்டுக் கிரகித்துத் துலங்குவோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்.

**தர உள்ளீடு** :
- அறிவித்தல் பத்திரம் - பின்னிணைப்பு 1
- மாணவர்கள் சேகரித்த அறிவித்தல்கள்.
- செயற்பாட்டுப்பத்திரம் - பின்னிணைப்பு- 2
- ஒலிப்பதிவு நாடா
- பிறிஸ்டல் போட் 5
- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

### படி 1.1.1

- காலைக் கூட்டமொன்றில் அதிபரால் கூறப்பட்ட அறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு அறிவித்தல்களின் முக்கியத்துவம் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

அறிவித்தல் வகை
- எழுத்துமூலம்
- வாய்மொழி மூலம்

அறிவித்தலின் இயல்புகள்
- சுருக்கமாக இருத்தல்
- தெளிவாக இருத்தல்
- எல்லாத் தகவல்களையும் கொண்டிருத்தல்.
- இடம், காலம், நிகழ்வு

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவருக்குத் தெளிவுபடுத்துங்கள்.

- எந்தவொரு விடயத்தைக் கேட்கும் போதும் விருப்பத்துடன் ஈடுபடல்.
- கேட்டவற்றின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்ளல்.
- கேட்டுக் கிரகித்துக் குறிப்பெடுத்தல்.
- கேட்டு விளங்கி முடிவுக்கு வருதல்.

**அறிவித்தலொன்றைச் செவிமடுக்கும் போது**
- உன்னிப்பாகக் கேட்டல்
- உச்சரிப்பைச் சரியாகக் கேட்டல்.
- கருத்துக்களைத் தொடர்புபடுத்திக் கேட்டல்

(20 நிமிடங்கள்)

### படி 1.1.2

- மாணவரைத் தனித்தனியாக அமரச் செய்யுங்கள்.
- பின்னிணைப்பு 2இல் உள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒலிப்பதிவு செய்யப்பட்ட பகுதியை ஒலிபரப்புதல் அல்லது ஆசிரியர் வாசித்தல்
- வாசிக்கும் போதே மாணவரைக் கிரகித்து விடை அளிக்கச் செய்யுங்கள்.
- மாணவர்கள் விடையளித்தவுடன் பத்திரத்தைத் திருத்துங்கள்.

(20 நிமிடங்கள்)

### படி 1.1.3

- மாணவர்களை எழுமாற்றாக எழுப்பி வினாக்களுக்கான விடைகளை முன்வைக்கச் செய்யுங்கள்.
- ஏனையோர் தமது விடைகளை ஒப்பிட்டுச் சரிபார்த்துக் கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்துங்கள்.

- கண்டி கலைமகள் தமிழ் வித்தியாலயம்
- 2006.04.20
- மு.ப.900
- பி.ப.5.00 மணி
- கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர்
- 6-13 வரை
- பங்குபற்றும் மாணவர்கள் அனைவருக்கும்.
- திரு.ச.பாண்டியன்

(4-0 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- முறையான கேட்டலின் வாயிலாகத் தகவல்களைப் பெறலாமென்பதை அறிவார்.
- பண்பான முறையில் செவிமடுப்பார்.
- செவிமடுத்தலோடு கூடிய திறன்களை வளர்த்துக் கொள்வார்.
- தாம் கற்ற செவிமடுத்தல் திறன்களை வாழ்க்கையின் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்துவார்.

**பின்னிணைப்பு 1**

## அறிவித்தல் - சிரமதானம்

கண்டி கலைமகள் வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினால் கல்லூரியில் சிரமதான நிகழ்ச்சித் திட்டமொன்று ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

காலம் - 2006.04.20

இடம் - கலைமகள் தமிழ் வித்தியாலயம்

நேரம் - மு.ப. 9.00 முதல் பி.ப 5.00 மணி வரை

**இந்நிகழ்ச்சித் திட்டத்தில்**
6. முதல் 13 வரையான வகுப்பு மாணவர்கள் கட்டாயம் பங்குபற்ற வேண்டும். ஆரம்பப் பிரிவினர் சமுகமளிக்க வேண்டியதில்லை. வருகை தரும் மாணவர்களுக்கு தேநீரும், சிற்றுண்டியும் வழங்கப்படும். பங்குபற்றும் அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

திரு..ச.பாண்டியன்
அதிபர்

**பின்னிணைப்பு 2**

## செயற்பாட்டுப் பத்திரம்

1. இங்கு குறிப்பிடப்பட்ட பாடசாலை ------------------------------------------------------------
2. சிரமதானம் நடைபெற்ற காலம் ------------------------------------------------------------
3. சிரமதானம் தொடங்கும் நேரம் ..............................................................................
4. சிரமதானம் முடிவடையும் நேரம் ..............................................................................
5. சிரமதானத்தை ஏற்பாடு செய்தோர். ..............................................................................
6. சிரமதானத்தில் கட்டாயம் பங்குபற்ற வேண்டிய வகுப்புகள் ..............................................
7. சான்றிதழ் யாருக்கு வழங்கப்படும். ..............................................................................
8. அதிபரின் பெயர். ..............................................................................

**தேர்ச்சி 5.0** : கிரகித்து பொருள் உணர்ந்தமை புலப்பட வாசிப்பார்.

**தேர்ச்சி அலகு5.1:** மையக் கருத்தை உள்வாங்க வாசிப்பார்.

**செயற்பாடு** : மையக் கருத்தை அறிய வாசித்துக் கிரகிப்போம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்.

**தர உள்ளீடு** : - உரைப்பகுதி - பின்னிணைப்பு - 1
- கீலங்களாக வெட்டப்பட்ட கடதாசித் துண்டுகள்.

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

### படி 5.1.1

- பின்னிணைப்பு - 1இல் கொடுக்கப்பட்ட பந்தியைக் காட்சிப் படுத்துங்கள்.
- மாணவர்களைத் தனித்தனியாக வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- கீலங்களாக வெட்டப்பட்ட கடதாசிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- வாசித்த பகுதிக்குப் பொருத்தமான தலையங்கத்தைக் கொடுக்கப்பட்ட கீலங்களில் எழுதுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- எழுதப்பட்ட தலையங்கங்களை முழு வகுப்பிற்கும் காட்சிப்படுத்துங்கள்.

இந்தப் பந்திக்குப் பொருத்தமான தலையங்கம் எதுவென வினவிக் கலந்துரையாடலை நடத்துங்கள். மாணவர்களுடன் பின்வரும் விடயம் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.

- தலையங்கத்தைக் கொண்டு பந்தியின் கருத்தை அறியலாம்.
- தலைப்பே பொதுவாக மையக் கருத்தாகவும் இருக்கும்.
- கருத்தூன்றி வாசிப்பதன் மூலம் மையக் கருத்தைப் பெறலாம்.
- தலைப்புச் சிறியதாகவும், கவர்ச்சியாகவும் இருக்க வேண்டும்.

(20 நிமிடங்கள்)

### படி 5.1.2

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- பின்னிணைப்பு 2ஐ வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- பின்னிணைப்பு 3 உள்ள செயற்பாட்டுப்பத்திரத்தை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப்பத்திரத்தைக் குழு நிலையில் பூரணப்படுத்த வழிப்படுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

**படி 5.1.3**

- குழுக்கள் ஒப்படைகளைச் சமர்ப்பிக்க வழிப்படுத்துங்கள்.
- ஏனைய குழுக்களின் அபிப்பிராயத்தைக் கூற வகை செய்யுங்கள்.

பின்வரும் விடயம் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

- மையக் கருத்து, துணைக் கருத்துக்கள்
- அவற்றின் முக்கியத்துவம்.
- வாசிப்புப் பகுதிக்குப் பொருத்தமான தலையங்கம்
- தனி வாக்கியம்
- வாக்கியங்களில் விடை எழுத வேண்டியவை
- சொற்கள், சொற்றொடர்களில் விடை எழுத வேண்டியவை.

(60 நிமிடங்கள்)

**கணிப்பீடும், மதிப்பீடும்**

- உரைநடைப் பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுவார்
- கருத்து வெளிப்பாட்டுக்கு மொழியைச் சுருக்கமாகவும், இறுக்கமாகவும் பயன்படுத்தும் மனப்பாங்கைப் பெறுவார்.
- வாசித்த பகுதியைச் சுருக்கமாக எழுதும் திறனைப் பெறுவார்.
- தமது ஆக்கங்களில் மையக் கருத்து, துணைக் கருத்துக்களைப் பயன்படுத்துவார்.

**பின்னிணைப்பு - 1**

மட்டக்களப்பிலே சிவாநந்த வித்தியாலயம் என்னும் பிரபல்யமான கல்லூரியை நிறுவியவர் சுவாமி விபுலாந்தர் அவர்களே. அங்கு அவர் அதிபராகவும் இருந்தார். இன்று அக்கல்லூரி இலங்கையில் சிறந்த கல்லூரிகளுள் ஒன்றாக விளங்குகிறதென்றால் சுவாமிகளிட்ட அடித்தளமே அதற்குக் காரணமாகும். அவர் மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் சம்பந்தரிசியார கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகவும், திருகோணமலை இந்துக் கல்லூரியின் அதிபராகவும் கடமை புரிந்துள்ளார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், இலங்கை பல்கலைக்கழகத்திலும் முதல் தமிழ்ப் பேராசிரியராகவும் கடமையாற்றினார். அவரே உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியராவார்.

## பின்னிணைப்பு - 2

உழைத்துக் களைத்த மக்களுக்கு ஓய்வு தேவை. ஓய்வை விரும்பும் மக்கள் அதற்கு ஏற்ற இடங்களை நாடிச் செல்கிறாரகள். கடற்கரை, வயல்வெளி, படமாளிகை, நாடகசாலை, நூலகம் என்பன அப்படிப்பட்ட இடங்கள். பூங்காவும் ஓய்வு பெறுவதற்கு ஏற்ற இடமாகும்.

பூங்காவை நந்தவனம் என்றும், பூந்தோட்டம் என்றும்,உத்தியானம் என்றும் பலவாறாகக் குறிப்பிடலாம். பட்டின சபைகளும், நகர சபைகளும், மாநகர சபைகளும் அந்தந்த இடத்து மக்களின் வசதிக்காகப் பூங்காக்களை நிறுவியுள்ளன. ஆரவாரம் நிறைந்த நகர் பகுதிகளில் வாழும் மக்கள் அமைதியாகப் பொழுது போக்குவதற்கும் நல்ல காற்றைச் சுவாசிப்பதற்கும் இப்பூங்காக்கள் உதவுகின்றன. அத்துடன், நகரங்களின் அழகையும் இவை மேம்படுத்துகின்றன.

பூங்காக்களிலே பல வகைப் பூஞ்செடிகள் வளர்க்கிறார்கள். அவற்றை ஒழுங்காக நாட்டிப் பாத்திகள் கட்டி நன்கு பேணுகிறார்கள். அவை வாடிப் போகாது நீர் ஊற்றியும் பசளையிட்டும் பாதுகாக்கிறார்கள். அவற்றைச் சீராக நறுக்கிச் செப்பஞ் செய்கிறார்கள். நிரை நிரையாக நிற்குஞ் செடிகளிடையே நடை பாதைகளை அமைக்கிறார்கள். சிற்சில இடங்களிலே பம்பிப்பாயும் நீர்விசிறிகளையும் நிறுவியுள்ளார்கள்.

பொழுதுபோக்குவதற்கென பூங்காவிற்குச் செல்லும் மக்கள் அமர்வதற்காக ஆசனங்களும் அங்கே காணப்படுகின்றன. அவை பெரும்பாலும் சீமெந்தினால் அமைக்கப்படுகின்றன.

சிறுவர்களுக்கென்று தனியான பூங்காக்களும் சிற்சில இடங்களில் உண்டு. கொழும்பிலுள்ள விகாரமகாதேவிப் பூங்காவில் சிறுவர்களுக்கென ஒரு பகுதியை தனியாக ஒதுக்கியுள்ளார்கள். பிற பூங்காக்களிலும் சிறுவருக்கென்று சிறப்பான விளையாட்டு வசதிகளைச் செய்துள்ளனர். ஆடி மகிழ்வதற்கென ஊஞ்சல்கள் அங்கு உண்டு. மேலும் கீழுமாக ஆடி மகிழ்வதற்கேற்ற இராட்டினமும், வட்டமாய் சுழன்றாடும் இராட்டினமும் உண்டு. ஓடியாடி விளையாடத்தக்க புல்வெளிகளும் உண்டு.

இலங்கையிலுள்ள பூங்காக்களில் பேராதனைப் பூங்காவும், ஹக்கலைப் பூங்காவும் தனிச் சிறப்பு வாய்ந்தவை. அவை தாவரவியற் பூங்காக்கள் எனக் கூறப்படுகின்றன.

அங்கு உலகின் பல பாகங்களிலுமுள்ள தாவரங்களைக் கொண்டுவந்து நாட்டி வளர்க்கிறார்கள். அரிய பல மரச் செடிகளை ஹக்கலையில் காணலாம். அங்கு ஒவ்வொரு செடிக்கும் ஏற்ற சுவாத்தியத்தைச் செயற்கையாக உண்டாக்கி, அச்செடிகளைத் தக்கவிதத்தில் பேணுகிறார்கள். அவ்வத்தாவரங்களின் பெயர்களை அறிவிக்கும் பெயர்ப் பலகைகளையும் வைத்துள்ளார்கள். தாவரங்களைப் பற்றிய அறிவை வளர்த்துக் கொள்வதற்கு அப்பூங்காக்கள் உதவுகின்றன. உல்லாசப் பயணிகளைக் கவரும் இடங்களாகவும் அவை விளங்குகின்றன. இவ்வாறு மனமகிழ்ச்சியையும், அறிவையும் வழங்கும் பூங்காக்களின் பயன் சாலப் பெரியது.

**பின்னிணைப்பு - 3**

# செயற்பாட்டுப் பத்திரம்

1. இவ்வுரைநடைப் பகுதியின் மையக் கருத்து யாது?
2. துணைக் கருத்துக்கள் இரண்டு தருக.
3. ஒவ்வொரு பந்தியையும் வாசித்து அவை ஒவ்வொன்றையும் ஒரு தனி வாக்கியத்தில் எழுதுக.
4. இந்த வாசிப்புப் பகுதிக்குப் பொருத்தமான தலையங்கமிடுங்கள்.
5. பூங்காவைக் குறிக்கும் வேறு இரு சொற்களைக் கூறுங்கள்.
6. பூங்காவிலுள்ள செடிகளை எவ்வாறு பேணுகிறார்கள்.
7. பூங்காவினுள் காணப்படும் விளையாட்டு வசதிகள் யாவை?
8. இலங்கையில் தாவரவியற் பூங்காக்கள் எங்கெங்கே உள்ளன?
9. பூங்காக்களால் உண்டாகும் நன்மைகள் இரண்டு கூறுங்கள்.

**தேர்ச்சி 10.0** : பல்வேறு சந்தர்ப்பங்களுக்கும், நோக்கங்களுக்கும் ஏற்றவாறு எழுதுவார்.

**தேர்ச்சி அலகு 10.1** : நாளாந்த தேவைகளுக்காக எழுதுவார் .

**செயற்பாடு** : குறிப்புக்களை எழுதுவோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** : - செயற்பாட்டுப்பத்திரம் பின்னிணைப்பு 1
- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்
- தினக்குறிப்பு
- கட்டுரைப் பகுதி பின்னிணைப்பு 2

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்**

**படி 10.1.1**

- மாணவர்கள் பயன்படுத்தக் கூடிய தினக்குறிப்பொன்றைக் காட்டி அவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- தினக்குறிப்பு எழுதுவதன் முக்கியத்துவம் என்ன? மாணவர்கள் ஏன் தினக்குறிப்பை பயன்படுத்த வேண்டும் என்பன போன்ற வினாக்களை வினவிக் கலந்துரையாடுங்கள்.

பின்வரும் விடயங்களை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.

- எமக்கு முக்கியமான விடயங்களை, நமது நாளாந்த நடவடிக்கைகளை ஆவணப்படுத்திக் கொள்வதற்கு உதவுகின்றது.
- நாம் செய்யவுள்ள கருமங்களை நினைவூட்டுகின்றது.
- சிறு வயது முதலே தினக்குறிப்பெழுதும் பழக்கம் பின்னர் ஒழுங்கான தொழில்சார் நடவடிக்கைகளுக்குப் பேருதவி புரியும்.

(10 நிமிடங்கள்)

**படி 10.1.2**

- பின்னிணைப்பு 1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரங்களை மாணவர்களுக்கு வழங்கித் தனித்தனியே செயற்படுவதற்கு வழிகாட்டுங்கள்.

- தேவையானவிடத்து விளக்கம் அளியுங்கள்.

(30 நிமிடங்கள்)

படி 10.1.3

- மாணவர்களை எழுமாறாக எழுப்பி தினக்குறிப்பை முன்வைக்கச் செய்யுங்கள்.
- ஏனையோர் கருத்துத் தெரிவிக்க விரும்பின் அவர்களுக்கு இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் மீது கருத்துச் செலுத்தி விளக்கம் அழியுங்கள்.

> - தினக்குறிப்பு எழுதும்போது கவனிக்க வேண்டியவை
>   - தேவையான விடயங்களை மட்டும் எழுதுதல்.
>   - பிழையின்றி எழுதுதல்.
>   - சுருக்கமாக எழுதுதல்
>
> - குறிப்பெடுத்தல்
>   - வாசித்துக் கிரகித்தல்.
>   - முக்கிய விடயங்களைச் சுருக்கமாகக் குறித்தல்.
>
> உ-ம் விபுலாநந்தர் மறைந்த தினம் } ஜூலை 19
> தமிழ் மொழித் தினம்
> விபுலாநந்தர் பிறந்த இடம் - காரைதீவு
> ஆண்டு - 1892
> தந்தையார் - சாமித்தம்பி
>
> இவ்வாறு குறிப்பெடுக்கும் பாணியை விளக்கிக் கூறுதல்.

(40 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- தினக்குறிப்பு எழுதும் முறையை அறிந்து எழுதுவார்.
- தினக்குறிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்வார்.
- நோக்கங்களுக்கேற்ப விடயங்களை வாசித்துக் குறிப்பெடுப்பார்.
- வாழ்க்கை அனுபவங்களைத் தினக் குறிப்பில் பதிந்து கொள்வார்.

**பின்னிணைப்பு -1**

## செயற்பாட்டுப் பத்திரம் - I

- தினக்குறிப்பு எழுதுவோம்

  - நேற்று நீங்கள் செய்த முக்கியமான வேலைகளை, நீங்கள் அறிந்த முக்கிய விடயங்களை தினக்குறிப்பில் எழுதுங்கள்.

## செயற்பாட்டுப் பத்திரம் - II

- குறிப்பெடுப்போம்.

  - கொடுக்கப்பட்டுள்ள பகுதியின் முக்கிய கருத்துக்களைக் குறிப்பெடுங்கள்.

**பின்னிணைப்பு - 2**



ஒவ்வொரு வருடமும் ஜுலை மாதம் பத்தொன்பதாம் திகதி அகில இலங்கைத் தமிழ்மொழித்தினம் கொண்டாடப்படுகின்றது. அத்தினம் "முத்தமிழ் வித்தகர்" என்று போற்றப்படும் சுவாமி விபுலாநந்தர் அவர்கள் மறைந்த தினமாகும். சுவாமி விபுலாநந்தர் அவர்களைக் கௌரவம் செய்யுமுகமாகவே இலங்கையரசு, அவர் மறைந்த அத்தினத்தை தமிழ்மொழித் தினமாகக் கொண்டாட வேண்டும் என்று முடிவு செய்துள்ளது. சுவாமிகள் இலங்கையில் மட்டுமன்றிப் பாரத நாட்டிலும் பெரிதும் மதிக்கப்பெற்ற தலை சிறந்த அறிஞர். தமிழ் மொழிக்கு அருந்தொண்டாற்றியவர்.

சுவாமி விபுலாநந்தர் மட்டக்களப்பு நகருக்குத் தெற்கே, கல்முனை என்னும் பட்டினத்துக்கு அணித்தேயுள்ள காரைதீவு என்னும் ஊரில் 1892ஆம் ஆண்டு பிறந்தார். சைவமும் தமிழும் தழைத்தோங்கும் அப்பழம்பெரும்பதி காரேறு மூதூர் என்று வர்ணிக்கப்படுகின்றது. சுவாமி விபுலாநந்தரின் தந்தையார் பெயர் சாமித்தம்பி தாயார் பெயர் கண்ணம்மையார். சுவாமிகளுக்கு அவருடைய பெற்றோர் இட்ட பெயர் மயில்வாகனம். 1922ஆம் வருடம் இந்தியாவில் இராமகிருஷ்ணமடத்துறவியாகியபோது அவருடைய பெயர் விபுலாநந்தர் என்றாயிற்று.

சுவாமி விபுலாநந்தர் ஆசிரியப் பயிற்சி பெற்றவர், மதுரைத் தமிழ்ச் சங்கப்பண்டிதர் , விஞ்ஞானப்பட்டதாரி, தமிழிலும் சமஸ்கிருதத்திலும் ஆங்கிலத்திலும் பெரும்புலமை ஈட்டியவர். ஏனைய பல மொழிகளிலும் அவர் புலமை பெற்றிருந்தார். கல்வியிலும் ஒழுக்கத்திலும் அவர் சிறந்து விளங்கினார். அவர் சிறந்த கலைஞர் ஆராய்ச்சியாளர் கல்லூரி அதிபர் பல்கலைக்கழகப் பேராசிரியர். ஆங்கில தமிழ்ச் சஞ்சிகைகளின் ஆசிரியராகவும் அரும்பணி புரிந்தவர். வட இலங்கையில் தோன்றிய ஆறுமுகநாவலர் போலவே கிழக்கில் தோன்றிய சுவாமி விபுலாநந்தர் தமிழ், சமயம், கல்வி ஆகிய துறைகளில் பெரும்பணிகளை ஆற்றினார்.

எறும்பு இனிய சுவையுள்ள உணவு எங்கிருந்த போதிலும் அதனை மணந்தறிந்து கொள்ளும். பின்னர் தன் இனத்துடன் கூட்டமாகச் சேர்ந்து அதனை எடுத்து வரும். அஃது அரிசி முதலிய உணவுகளைத் தன்வாயினாற் கௌவிக்கொண்டு செல்லும். அது வாழும் புற்று வீடு, நிலத்தில் மழைநீர் உட்புகாவண்ணம் அழகாகக் கட்டப்பட்டிருக்கும். மழைக்காலத்தில் அது தன் முட்டையை மேட்டு நிலத்திற்கொண்டு சென்று வைக்கும்.

**தேர்ச்சி 2.0** : சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்கும் கேட்போருக்கும் ஏற்றவகையில் உரையாடுவார்.

**தேர்ச்சி அலகு2.2:** நாடகப் பாத்திரங்களுக்கேற்ப நடித்துப் பேசுவார்.

**செயற்பாடு** : நாடகப் பாத்திரங்களுக்கேற்ப நடித்துப் பேசுவார்.

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு** : - பின்னிணைப்பு 1 இல் உள்ள நாடகப் பகுதிகள்

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

### படி 2.2.1

- மாணவர் இருவரைப் பின்வரும் கதாபாத்திரங்களில் நடிக்க வைக்கலாம்.
- வயோதிபர் ஒருவர் வீதியைக் கடப்பதற்கு நிற்பதாகவும், அதற்கு மாணவர் ஒருவர் உதவுவதாகவும் கருதிக் கொள்ளவும்.
- இருவருக்கும் இடையே நடைபெறும் உரையாடல், நடிப்பு ஆகியவற்றைச் செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- முழு வகுப்பையும் நடிப்பைப் பார்ப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- இந்தப் பாத்திரமேற்புப் பின்னணியில், நாடகத்தின் மூலம் நாம் என்ன பயனைப் பெறுகின்றோம்? என்ற வினாவை எழுப்பி மாணவருடன் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவருக்கு விளக்குங்கள்

- கருத்தைப் புலப்படுத்துவதற்குரிய ஊடகங்களிலொன்று நாடகம்.
- பேச்சுமொழி, இலக்கிய மொழிப் பிரயோகம் நாடகத்தின் தன்மைக்கேற்ப வேறுபடும்.
- மெய்ப்பாடுகளின் முக்கியத்துவம் (Body Language)

(10 நிமிடங்கள்)

### படி 2.2.2

- மாணவர்களை எட்டுப்பேர் கொண்ட குழுக்களாக வகுத்துக் கொள்ளுங்கள்.
- பின்னிணைப்பிலுள்ள நாடகத்தின் பிரதிகளை ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- நாடகத்திலுள்ள பாத்திரத்துக்குப் பொருத்தமானவாறு மாணவர்களை தெரிவு செய்யுங்கள்.
- பாத்திரத்துக்குரிய பகுதியைத் தனியாகவும் கூட்டாகவும் பயிற்சி செய்ய வழிப்படுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)

படி 2.2.3

- ஒவ்வொரு குழுவும் நாடகத்தை நடித்துக்காட்ட வழிசெய்யுங்கள்.
- ஏனைய குழுக்களின் அபிப்பிராயத்தை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

பின்வரும் விடயம் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுங்கள்

- ஏற்ற பாத்திரத்தின் ஊடாக வெளிப்படுத்திய மொழிநடை.
- பாத்திரங்கள் வெளிப்படுத்திய முகபாவம்.
- பாத்திரங்களினூடாக வெளிப்படுத்திய மெய்ப்பாடு.
- அங்க அசைவுகள்.
- உரையாடல் பாங்கு.

(80 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- நாடகத்துக்கான மொழிநடையை அறிந்து கொள்வார்.
- நாடக பாத்திரங்கள் வெளிப்படுத்தும் மனப்பாங்கை உணர்ந்து கொள்வர்.
- பாத்திரங்கள் வெளிப்படுத்தவேண்டிய உணர்வுகளை அங்க அசைவுகள் மூலம் காட்டுவார்.
- பல்வேறு சந்தர்ப்பங்களில் நாடகங்களைப் பார்ப்பதற்கும், நடிப்பதற்கும், மதிப்பிடுவதற்கும் முன்வருவார்.

பின்னிணைப்பு - 1



# கண்ணகி வழக்குரைத்தல்

(நாடகம்)

காட்சி - 01

நடிகர் : பாண்டிமாதேவி, தோழியர்

இடம் : பாண்டிமாதேவியின் அந்தப்புரம்

காலம் : முற்பகல்

(பாண்டிமாதேவி ஒரு பீடத்தில் அமர்ந்திருக்கின்றாள். தோழியர் அருகில் அமர்ந்துள்ளனர்.)

ஒரு தோழி: தேவியரே! மன்னிக்கவேண்டும். உங்கள் அழகிய முகம் என்றும் போல இல்லை. இன்று சிறிது வாட்டமுற்றிருக்கின்றது பொலிவிழந்து காணப்படுகின்றது.காரணம் யாதோ? உடல் நலம் இன்மையால் அங்ஙனம் உளதோ? தெரிவித்தால், உடனே ஆவன செய்யலாமே!

பாண்டிமாதேவி: பாங்கி! நீ கூறுவது உண்மையே. ஆனால், உடலில் நோய் ஒன்றுமில்லை மனந்தான் நலிவடைந்துளது.

தோழி: கோப்பெருந்தேவியீர்! வளம் கொழிக்கும் வையை நாட்டுக்கிறைவியரே! மீனாட்சி சுந்தரர் அருளால் எல்லாச் செல்வங்களையும் பெற்று விளங்கும் உங்கள் மனம் நலிவடையக் காரணம் யாதோ? விருப்பிருப்பின் அடியாள்மீது அன்பு கூர்ந்து அதனை வெளியிடுங்கள். இன்றே - இல்லை - இப்போதே அதனை அகற்றற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

பா - தேவி: உங்களுக்குத் தெரியாமல் மறைக்க வேண்டிய இரகசியம் ஒன்றுமில்லை. இன்று விடியற்காலையில் சில தீக்கனவுகள் கண்டேன். கடைசிச் சாமத்திற் காணும் கனவு, உடனே பலிக்கும் என்று கனாநூல் வல்லார் கூறக்கேட்டுள்ளேன். அதனாற்றான் என் மனம் கவல்கின்றது.

தோழி: பாண்டிமாதேவியீர் "நீங்கள் கூறுவது உண்மையே. ஆயினும், ஆண்டவன் அருள் பெற்றவர்களிடத்தில்! நாளென் செயும்?" வினைதான் என் செயும்? நாடி வந்த கோள் என் செயும்? என்ற ஆன்றோர் வாக்குக்கிணங்க, இத்தீக்கனவு யாது செய்யவல்லது? அக்கனவு இன்னதென விவரிக்கலாமன்றோ?

பா - தேசி: பாங்கி, விவரிக்கலாம். அதை நினைக்குந்தோறும் மனம் வேதனையுறுகின்றது! விவரிக்கவும் வாய் நடுக்குறுகின்றது! ஆயினும், கூறுவேன், கேள்: நான் கண்ட கனவுகள் பல. ஒன்றில் செங்கோலும் வெண்குடையும் நிலத்து வீழ்ந்தன். ஆசார வாயில் ஆராய்ச்சி மணியின் குரல் நடுங்கியது. ஒரு கனவில் எட்டுத் திக்குகளும் அதிர்ந்தன. சூரியனை விழுங்கக்கூடிய இருள் உண்டாயிற்று. மற்றொரு கனவில், இரவில் இந்திரவில் இட்டிருந்தது் பகலில் விண்மீன்கள் விழுந்தன. ஆதலால் வருவதோர் உற்பாதம் உண்டு. இவற்றை மன்னர்க்கு உரைப்போம் வருக.

தோழி: அங்ஙனமே செய்வோம். ஆரடியங்கே! நம் கோப்பெருந்தேவியார் அரசர் அவைக்குச் செல்கின்றார். அதிவிரைவில் அட்டமங்கலங்கள் ஏந்தி வாருங்கள்.

ஏவல்மகளிர்: இதோ வந்துவிட்டோம் அம்மணி.

(திரை விழுதல்)

## காட்சி - 02

நடிகர்: பாண்டியன் நெடுஞ்செழியன், கோப்பெருந்தேவி, கண்ணகி, மந்திரிகள், பிரதானிகள், வாயிற்காவலன், ஏவல் மகளிர் முதலியவர்.

இடம்: பாண்டியன் அவைக்களம்
காலம்: முற்பகல்

(பாண்டியன் நெடுஞ்செழியன் அரியணையில் அமர்ந்திருக்கின்றான். மந்திரிமார், பிரதானிகள் அவையில் அமர்ந்திருக்கின்றனர். பாண்டிமாதேவி சபையை நோக்கி வருகின்றாள். அவளை ஏவல்மகளிர் அட்டமங்கலங்களை ஏந்திக்கொண்டு சூழ்ந்து வருகின்றனர்.)

ஏவல் மகளிர்: பாண்டியரின் பெருந்தேவி வாழ்க! கோப்பெருந்தேவியர் வாழ்க! (பாண்டிமாதேவி அரசன் அருகில் வந்து வணங்குகின்றாள்.)

நெடுஞ்செழியன்: தேவி! மீனாட்சிசுந்தரர் அருளால் மங்களம் உண்டாகட்டும்! (தன் அரியணையின் ஒரு புறத்தைச் சுட்டி) இங்கு அமர்க. திடீரென்று நம் அவையின்கண் வரக் காரணம் யாதோ? ஏன் உன் முகம் வாடியிருக்கின்றது? உடல் நலமின்றோ? பிற காரணம் யாதேனுமுண்டோ?

கோப்பெருந்தேவி: நாதரே! அடியாள் இன்று விடியற்காலையில் சில தீக்கனவுகள் கண்டேன். அது முதல் என் உள்ளம் நடுங்காநின்றது. நம் செங்கோலும், வெண்கொற்றக் குடையும் நிலத்தில் வீழ்ந்தன! ஆசார வாயிலில் ஆராய்ச்சி மணியின் குரல் நடுங்கியது!

நெடுஞ்செழியன்: ஆ! என்ன! செங்கோலும் குடையும் நிலத்தில் வீழ்ந்தனவா! அமைச்சர் பெருமக்களே, கேட்டீர்களா கோப்பெருந்தேவி கூறியதை!
(அத்தருணத்தில் அவைக்கு வெளியே நின்ற வாயிற்காவலனைக் கண்ணகி அணுகி,)

கண்ணகி: வாயிலோயே! வாயிலோயே! அறநெறி மறந்த அரசனின் வாயிலோயே! "கணவனை இழந்தாள் ஒருத்தி, கையிற் சிலம்பொன்று ஏந்தி வந்து வாயிலில் காத்திருக்கின்றாள்," என்று நீதி கெட்ட நெடுஞ்செழியனுக்கு அறிவிப்பாயாக!

காவலன்: (அரசனை அணுகி) அரசர் பெருமானே! வாயிலில் வந்திருக்கின்றாள் ஒருத்தி. அவள் எருமைக்கடாவை வாகனமாகக் கொண்ட கொற்றவையும் அல்லள் பிடாரியும் அல்லள் பத்திரகாளியும் அல்லள். அவள் கண்கள் கோபக்கனலைக் கக்குகின்றன. கணவனை இழந்தவளாம் கையிற் சிலம்பொன்று ஏந்தியுள்ளாள்.

நெடுஞ்செழியன்: அவள் வருக அவளை விரைவில் உள் விடுக.
(கண்ணகி சபையில் வந்து மன்னன் முன் நிற்கின்றாள்.)

நெடுஞ்செழியன்: பெண்ணே, ஏன் கண்ணீர் சொரிகின்றனை? நீ யார்?

கண்ணகி: நான் புகார் நகரில் வாழ்வேன். அவ்வூர்ப் பெருங்குடி வணிகர் மாசாத்துவான் என்பவரின் புதல்வர் கோவலருக்கு மனைவியான். அவர் ஊழ்வினையால் உமது நகரில் வந்து, என் காற்சிலம்பொன்றை விலைப்படுத்த விரும்பி, உம்மாற் கொலையுண்டார். என் பெயர் கண்ணகி.

நெடுஞ்செலியன்: நன்று! கள்வனைக் கொல்லுதல் நீதிதானே?

கண்ணகி: தீரக் கேட்டறியாமல் கொலைக்கட்டளையிட்டுக் கோவலரைக் கொன்றமையால், உமது நீதி முறைமை கெடுவதாயிற்று அதனைக் காட்டுவேன். என் சிலம்பின் அரிமாணிக்கம்.

நெடுஞ்செழியன்: என் தேவியுடைய சிலம்பின் பரல் முத்தே.

(உடனே இரண்டு சிலம்புகளும் கொண்டு வந்து வைக்கப்படுகின்றன. கண்ணகி தன் காற்சிலம்பை எடுத்துத் தரையின் மீது வீசி எறிகிறாள். அது உடைகிறது. அதனுள் இருந்தவை அரிமாணிக்கம் என்பதை அரசன் காண்கின்றான்.)

ஆ! என்னே என் மதி! என்னே என் முறை! அந்தோ! பொற்கொல்லன் பொய்யுரை கேட்ட யானோ அரசன்! யானே கள்வன்! என் அரு மரபு என்னால் பழியற்றதே! என் ஆயுள்கெடுவதாக!

(அரசன் அரியணையிற் சாய்ந்து மரணமடைகின்றான்.)

(திரை விழுதல்)

**தேர்ச்சி 10.0** : பல்வேறு சந்தர்ப்பங்களுக்கும், நோக்கங்களுக்கும் ஏற்றவாறு எழுதுவார்.

**தேர்ச்சி அலகு 10.1:** நாளாந்த தேவைகளுக்காக எழுதுவார் .

**செயற்பாடு** : அழைப்பிதழ் தயாரிப்போம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- மாதிரி அழைப்பிதழ்கள்
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 1.
- காகித அட்டைகள்
- வர்ணக் கடதாசிகள்
- வர்ணப் பேனாக்கள்

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

### படி 10.1.1

- மாணவர்களை வீட்டில் இருக்கின்ற அழைப்பிதழ்களை சேகரித்து வரச் சொல்லுங்கள். வகை மாதிரியாக ஒவ்வொரு அழைப்பிதழையும் (பிறந்த நாள், பரிசளிப்பு விழா, கலை விழா, நூல்வெளியீடு, திருமண அழைப்பிதழ் போன்றன) காட்சிப்படுத்துங்கள்.

- அழைப்பிதழ்களை நாம் ஏன் பயன்படுத்துகின்றோம்? எதற்காக பயன்படுத்துகின்றோம்? என்பன போன்ற வினாக்களை வினவி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்துங்கள்.

| | | |
|---|---|---|
| • அழைப்பிதழ் எழுதப்படும் நிகழ்வுகள் | : | திருமணம்<br>பிறந்த நாள்<br>நூல் வெளியீடு<br>பரிசளிப்பு<br>கலை விழா போன்றன. |
| • ஏன் பயன்படுத்த வேண்டும் | : | எமது உறவினர் நண்பர் வேண்டியவர்களை விழாவுக்கு மரியாதையுடன் அழைத்தல். |
| • எவ்வாறு அமைய வேண்டும்<br>(அமைப்பு, எழுதும்முறை நிகழ்வுகளுக்கேற்ப மாறுபடும். பார்ப்பவர்களை ஈர்க்கும் வகையில் அமைப்பும் எழுத்தும் இருக்க வேண்டும். | | |

(15 நிமிடங்கள்)

### படி 10.1.2

- மாணவர்களை 5 அல்லது 6 பேர் கொண்ட குழுக்களாகப் பிரியுங்கள் .
- ஒவ்வொரு குழுவுக்கும் பின்னிணைப்பு 1இல் உள்ள செயற்பாட்டுப்பத்திரத்தை வழங்குங்கள்.
- குழுக்களாகச் செயற்படும் போது ஒவ்வொரு மாணவனும் பங்களிப்புச் செய்வதற்கு வழியேற்படுத்திக் கொடுங்கள்.
- அழைப்பிதழ்களை வித்தியாசமாகத் தயாரிப்பதற்கு உதவுங்கள் (உ-ம்: படங்கள் வரைதல், வர்ண எழுத்துக்கள், மேற்கோள் போன்றன. )

(25 நிமிடங்கள்)

### படி 10.1.3

- ஒவ்வொரு குழுவும் அழைப்பிதழை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் அளியுங்கள்.
- ஏனைய குழுக்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் அளியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் மீது மாணவர்கள் கவனம் செலுத்தும் வகையில் விளக்கமளியுங்கள்.

| | |
|---|---|
| ♦ அழைப்பிதழ் அமைப்பு | |
| - விடயம் : | கொண்டாடப்படுபவரது பெயர்<br>நேரம்<br>இடம்<br>அழைப்போர் |
| - கவர்ச்சி : | நிறமூட்டுல்<br>படங்கள் |
| - எழுத்து : | சிறிய வசனங்கள்<br>வாசிப்போரைக் கவரும் வாக்கியங்கள்.<br>புதிய சிந்தனைகள், கூற்றுக்கள் |

(40 நிமிடங்கள்)

## கணிப்பீடும், மதிப்பீடும்

- நாளாந்த தேவைகளுக்காக எழுதுவார்.
- அழைப்பிதழ் அனுப்பப்படும் சந்தர்ப்பங்களைக் கூறுவார்.
- பிறந்த நாள் அழைப்பிதழ் தயாரிப்பார்.
- தேவைகளுக்குப் பொருத்தமானவாறு அழைப்பிதழ்களை ஆக்குவார்.

**பின்னிணைப்பு - 1**

# செயற்பாட்டுப்பத்திரம்

**பிறந்த நாள் அழைப்பிதழ் தயாரிப்போம்.**

குழு A : எனது 11ஆவது பிறந்தநாள்

குழு B : நண்பரின் பிறந்தநாள்

குழு C : விரும்பிய உறவினர் ஒருவரின் பிறந்தநாள்

**தேர்ச்சி 7.0** : ஆக்கத் திறனை மேம்படுத்துவதற்காக வாசிப்பார்.

**தேர்ச்சி அலகு7.1** : பல்வேறு ஆக்கங்களை வாசிப்பார்.

**செயற்பாடு** : நாடகங்களை வாசித்து ஆக்கததிறனை மேம்படுத்துவோம்.

**நேரம்** : 160 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 1
- எழுதுதாள்கள்
- கதைப்பகுதி - பின்னிணைப்பு 2
- நாடகப் பிரதி - பின்னிணைப்பு - 3

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்.**

படி 7.1.1

- ஏற்கனவே மாணவர்கள் வாசித்த நாடகமொன்றினைப் பற்றிக் கேட்டு அந்நாடகம் தொடர்பாக சில வினாக்களை வினவுங்கள்.
- நாடகம் எவ்வாறு ஆரம்பமாகிறது?
- நாடகப் பாத்திரங்களைக் கூற முடியுமா?
- மொழிநடை எவ்வாறு அமைந்துள்ளது?,

போன்ற வினாக்களை வினவி பின்வரும் விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுங்கள்.

- நாடகத்தின் ஆரம்பம் தெளிவாக அமைதல்
  - தலைப்பு
  - இடம்
  - காலம்
  - நாடகப் பின்னணி
  - பாத்திர அறிமுகம்
- கதைத் தொடர்பு
- உரையாடலுக்குக் கையாண்டுள்ள மொழிநடை
- சுவாரஸ்யமாக அமைதல்
- நேரம்

(20 நிமிடங்கள்)

## படி 7.1.2

- மாணவர்களை ஐந்து குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் பின்னிணைப்பிலுள்ள நாடகப் பிரதியை வழங்கி, பாத்திரமேற்று வாசித்துப் பழகச் செய்யுங்கள்.
- ஒவ்வொரு குழுக்களுக்கிடையேயும் சென்று, வாசிப்பினை அவதானித்து தேவையான வழிகாட்டல்களைச் செய்யுங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் பாத்திரமேற்று தொனி வேறுபாடு தோன்ற உரத்து வாசிக்க வகை செய்யுங்கள்.
- ஒவ்வொரு குழுவினதும் அபிப்பிராயங்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.
- தேவை ஏற்படுமிடத்து, பாத்திரமேற்று தொனி வேறுபாடு தோன்ற வாசித்துக் காட்டுங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்கி,விடையளிக்குமாறு அறிவுறுத்துங்கள்.

( 80 நிமிடங்கள்)

## படி 7.1.3

- ஒவ்வொரு குழுவும் தமது விடைகளை முன்னிலைப்படுத்த வகை செய்யுங்கள்.
- ஏனைய குழுக்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்க ஊக்கமூட்டுங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

| | |
|---|---|
| (1) | இடம், காலம், பாத்திரங்களின் பெயர்கள். |
| (2) | நாடகத்திற்கு முன்னுள்ள கதைப் பின்னணியின் சுருக்கம் |
| (3) | நெடுஞ்சேரலாதன்,நற்சோணை, செங்குட்டுவன், இளங்கோ, அமைச்சர், சபையோர், வாயிற்காவலன் |
| (4) | இலக்கிய நடையில் (நியமத் தமிழில்) உள்ளது. |
| (5) | பெரும்பாலும் விளித்தே ஆரம்பிக்கின்றார். |
| (6) | பாத்திரங்களுக்கேற்ப உரையாடல் அமைந்திருக்கின்றது. |

(60 நிமிடங்கள்)

## படி 7.1.4

- பின்னிணைப்பு 2இல் கொடுக்கப்பட்ட இராமனுடைய கதையைக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- அக்கதையை அடிப்படையாகக் கொண்டு நாடகப் பிரதியொன்றை ஆக்க அறிவுறுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தமது பிரதியை முன்னிலைப்படுத்த வழி செய்யுங்கள்.
- ஏனைய குழுக்கள் தமது கருத்துக்களை முன்வைக்க ஊக்கப்படுத்துங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுக்குத் தெளிவு படுத்துங்கள்.

- நாடகத்தின் தலையங்கம்
- ஆரம்பம்
- பாத்திரங்களின் பெயர்கள்
- பின்னணி
- பாத்திரங்களின் உரையாடல்
- மொழி நடை (நியமத் தமிழில் அமைதல்)

(80 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- நாடகப் பிரதி எவ்வகையில் அமைய வேண்டுமென விளக்குவார்.
- நாடகப் பிரதியொன்றினை ஆக்குவார்.
- தாம் வாசித்து ரசித்த நாடக ஆக்கங்களைப் பற்றி ஏனையோரும் ரசிக்கத்தக்க வகையில் கூறுவார்.
- தேடிப் பெற்று நாடகங்களை வாசிப்பார்.
- மொழியறிவை விருத்தி செய்வார்.

**பின்னிணைப்பு - 1**

# செயற்பாட்டுப்பத்திரம்

("இளங்கோவடிகள்" என்ற தலைப்பிலான நாடகத்தினை வாசித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.)

(1) நாடகப் பிரதியின் ஆரம்பத்தில் என்னென்ன விடயங்கள் இடம்பெற வேண்டும்?

(2) பாத்திரங்கள் உரையாடத் தொடங்கு முன் என்ன இடம்பெற வேண்டும்?

(3) இந்நாடகத்தில் இடம்பெற்ற பாத்திரங்கள் யாவை?

(4) இரு பாத்திரங்களுக்கு இடையில் உரையாடல் எவ்வாறு ஆரம்பிக்கிறது?

(5) பாத்திரங்களுக்கேற்ப உரையாடல் அமைந்திருக்கிறதா?

## பின்னிணைப்பு - 2

(பின்வரும் கதைப் பகுதியை வாசித்து நாடகப் பிரதியொன்றினை ஆக்குக)

தனக்கு முதுமை ஏற்படுவதை உணர்ந்த தசரதர் இராமனுக்கு மகுடம் சூட்டுவித்துத் தான் வனம் செல்ல எண்ணினார். தனது எண்ணத்தை வசிட்ட முனிவரிடமும் மந்திரி பிரதானிகளிடமும் கூறி, அவர்களது சம்மதத்தையும் பெற்றார். அவர் இராமனை அழைத்துத் தன் எண்ணத்தைத் தெரிவித்தார். அடுத்த நாளே நல்ல நாள். ஆகையால், அன்றே முடிசூட்டுவிழா நடத்த அவர்கள் தீர்மானித்தனர். நகர மாந்தர் மகிழ்ந்தனர்.

இராமன் முடிசூடும் செய்தியைக் கேட்ட கூனி, கைகேயியின் மனதை மாற்றினாள். கூனியின் ஆலோசனைப்படி பரதன் நாடாள வேண்டுமென்றும், இராமன் பதினான்கு வருடங்கள் வனவாசஞ் செய்ய வேண்டுமென்றும் இரு வரங்களைக் கைகேயி தசரதனிடமிருந்து பெற்றுக் கொண்டாள்.

வரங்களைப் பெற்ற கைகேயி, இராமனை அழைத்து வரச் செய்தாள். அவனை நோக்கி "உன் தந்தை, பரதனை நாடாளும்படியும் உன்னைப் பதினான்கு வருடங்கள் வனவாசம் செய்யும்படியும் பணித்தார்" என்றாள். கைகேயின் அக்கட்டளையை இராமன் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டான். அவன் கைகேயியை நோக்கி "அன்னையே! மன்னன் அன்றி தாங்களே இக்கட்டளையைச் செய்யினும் நான் நிறைவேற்ற மாட்டேனோ? எனது தம்பி பரதன் அரசாள்வது, நான் அரசு செய்வதற்கு சமனன்றோ? இன்றைக்கே காட்டுக்குப் போகிறேன். விடை கொடுங்கள்" என்று வேண்டினான். கைகேயி விடை கொடுத்தாள். நகரமாந்தர் புலம்பிக் கொண்டிருக்க, இராமன் சீதையோடும், இலக்குவனோடும் அயோத்தியை விட்டு புறப்பட்டுச் சென்றான்.

**பின்னிணைப்பு - 3**

# இளங் கோவடிகள்

(ஓரங்க நாடகம்)

இடம்: சேரலாதன் கொலுமண்டபம்

காலம்: காலை

பாத்திரங்கள்: நெடுஞ்சேரலாதன்: சேரநாட்டு மன்னன்

நற்சோணை: அவன் மனைவி

செங்குட்டுவன்: நெடுஞ்சேரலாதனின் மூத்தமகன்

இளங்கோ: செங்குட்டுவன் தம்பி

அமைச்சர்:

சபையோர்:

வாயில் காவலன்:

(நெடுஞ்சேரலாதன் அரியணையில் வீற்றிருக்கிறான். நற்சோணை அவன் பக்கலில் இருக்கிறாள். ஒருபாற் செங்குட்டுவனும் இளங்கோவும் இருக்கின்றனர். அப்போது வாயில்காவலன் வருகிறான்.)

வாயில் காவலன்: அரசர்க்கரசன் நெடுஞ் சேரலாதன் வாழ்க! அவன் செங்கோல் வாழ்க! வெண்குடை வாழ்க! சேரநாடு வாழ்க!

(வணங்கி எழுந்து கைகட்டி ஒருபக்கத்தில் நிற்கிறான்)

நெடுஞ்சேரலாதன்: வாயில்காவல, என்ன செய்தி?

வாயில் காவலன்: மன்னவ, சபாமண்டப வாயிலிலே அந்தணப் பெரியார் ஒருவர் நிற்கிறார். அவர் வணங்கத்தக்க தோற்றம் உடையவர். அவர் முகத்தில் அறிவொளி வீசுகின்றது. சிறந்த சோதிடர் எனத் தம்மைக் கூறிக் கொள்ளுகிறார். தங்களைத் தரிசிக்க விரும்புகிறார்.

நெடுஞ்சேரலாதன்: அடிப்படியா நன்று நன்று விரைவிற் சென்று தக்க மரியாதையோடு அவரை அழைத்துவா.

(வாயில்காவலன் சென்ற சிறிது நேரத்தின் பின், சோதிடர் வருகிறார்)

நெடுஞ்சேரலாதன்: அந்தணப் பெரியீர், தங்கள் வரவு நல்வரவாகுக. இவ்வாசனத்தில் அமர்ந்தருளுக.

சோதிடர்: மன்னா, நீ எல்லாச் செல்வங்களும் பெற்று விளங்குகிறாய். உன் மக்கள் இருவரும் சூரிய சந்திரர்போல விளங்குகின்றனர். அவர்களைப் பார்க்கும் போது இன்பம் பொங்குகிறது. அதனோடு...

நெடுஞ்சேரலாதன்: சோதிடரே, ஏன் நிறுத்திவிட்டீர்கள் சொல்லுங்கள்.

சோதிடர்: மன்னவ, சொல்வதற்கு என் நாக்கூசுகின்றது.

நெடுஞ்சேரலாதன்: அந்தணரே, யாதாயினும் அச்சமின்றிக் கூறுங்கள்.

| | |
|---|---|
| சோதிடர்: | வேந்தர் வேந்தனே, என் எண்ணப்படி யான் எதுவும் கூறவில்லை. கிரகங்கள் நிற்கும் நிலையைக் கொண்டே கூறுகிறேன். |
| நெடுஞ்சேரலாதன்: | சோதிடரே, மேலும் தாமதிக்க வேண்டாம் கூறுங்கள். |
| சோதிடர்: | (இளங்கோவின் முகத்தைச் சிறிது நேரம் நோக்குகிறார்) வேந்தனே, இங்கு வீற்றிருக்கும் உன் மக்கள் இருவரில் இளையோனே, அரசர்க்குரிய இலட்சணங்கள் உடையவனாயிருக்கிறான். அவனே, உனக்குப் பின்னர் இந்தச் சேர நாட்டை ஆள்வான். |
| நெடுஞ்சேரலாதன்: | என்ன, இளங்கோவா? |
| சேரன்செங்குட்டுவன்: | என்ன, இளங்கோ அரசனாவானா? |
| நற்சோணை: | என் இளையமகனா? |
| சோதிடர்: | மன்னா, நீங்கள் வியப்படைவீர்கள் ஆத்திரமடைவீர்கள் என்று தான் உண்மையைக் கூறத் தயங்கினேன். விதியைவெல்ல யாரால் முடியும். நான் வருகிறேன்.<br>(சோதிடர் செல்கிறார்) |
| சேரன் செங்குட்டுவன்: | எந்தையே, கேட்டீர்களா சோதிடர் கூறியதை? மூத்தவன் நானிருக்க, இளையவன் இளங்கோ அரசனாவானாம். எப்படியிருக்கிறது கதை? இஃது அரச நீதியாகுமா? |
| அமைச்சர்: | எப்படி அரச நீதியாகும்? மூத்தோனிருக்க இளையோன் அரசாள்வது அரச நீதியன்று. |
| நெடுஞ்சேரலாதன்: | செங்குட்டுவா, கோபங்கொள்ளாதே அரச நீதியிலே தவறி, இந்தச் சேரர் குலம் என்றுமே நடந்ததில்லை. மூத்தவனுக்கே அரசுரிமை என்ற நீதியை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால், சோதிடர் கூறிய வார்த்தைகள் என் மனத்தைக் குழப்புகின்றனவே. ஒருவேளை அப்படி நிகழ்ந்துவிட்டால் என்ன செய்வது? |
| செங்குட்டுவன்: | (கோபத்தோடு) அப்படி நிகழக்கூடாது விடமாட்டேன். தம்பியாக இருந்தாலும், வேறுயாராக இருந்தாலும் என் உரிமையிலே தலையிடுபவர்களை அழித்தே தீருவேன். இதை யாருந் தடுக்க முடியாது. |
| இளங்கோ : | அண்ணா................. |
| செங்குட்டுவன்: | பேசாதே இன்று முதல் நீதான் என் முதல் எதிரி. |
| இளங்கோ: | அண்ணா, நான் சொல்வதைக் கேளுங்கள். |
| செங்குட்டுவன்: | நீ எதுவுஞ் சொல்ல வேண்டாம் (ஏளனத்தோடு) நீ எதிர்கால மன்னனல்லவா? நான் சாதாரண குடிமகன் தானே (எழுந்து உலாவுகிறான்). |
| நற்சோணை: | மகனே, செங்குட்டுவா ஏன் ஆத்திரங்கொள்ளுகிறாய்? தெய்வசித்தம் அப்படியானால், நாம் யாது செய்ய முடியும்? |

| | |
|---|---|
| செங்குட்டுவன் | தெய்வசித்தம்............... விதி................. இவையெல்லாவற்றையும் நான் மதிக்கப் போவதில்லை. |
| நற்சோணை: | செங்குட்டுவ, இளங்கோ உன் தம்பிதானே. அவன் அரசாண்டாலென்ன? நீ அரசாண்டாலென்ன? |
| நெடுஞ்சேரலாதன்: | ஆம் மகனே இராமன் தனக்குரிய அரசைப் பரதனுக்குக் கொடுக்க வில்லையா? அதுபோல...... |
| செங்குட்டுவன் | இராமன் தந்தை சொற்படி நடந்தான். அப்படியானால். நீங்களும் என்னை வனத்துக்குச் செல்லச் சொல்கிறீர்களா? |
| நெடுஞ்சேரலாதன்: | இல்லை மகனே. இல்லை. தெய்வசித்தத்தை யாரறிவர் என்பதற்காகச் சொன்னேன்.<br>(இளங்கோ எழுகிறான்) |
| இளங்கோ: | நான் என் கருத்தைச் சொல்ல எழுந்தபோது அண்ணா தடுத்து விட்டார். சோதிடர் கூறியதைக் கேட்டு யாரும் துன்பமடையவேண்டாம். விதியை மதியால் வெல்ல முடியும். |
| எல்லோரும்: | எப்படி? |
| இளங்கோ: | எப்படி என்பதைக் கூறுகிறேன். அண்ணாவின் உரிமையை நான் பறிக்க மாட்டேன். எனக்கு அரசாட்சி வேண்டாம். விதிப்படி கிடைத்தாலும் யான் வேண்டேன். |
| நெடுஞ்சேரலாதன்<br>நற்சோணை: | அப்படியென்றால்! |
| இளங்கோ: | நான் இக்கணமே அரச வாழ்வைத் துறக்கிறேன். இந்த அரண்மனையில் இனி நான் வாழப்போவதில்லை. நான் வாழப்போகுமிடம் வேறு. அன்றியும், அண்ணனிருக்கத் தம்பி அரசாண்டான் என்ற பழிச் சொல்லையும் யான் சுமக்கமாட்டேன். |
| நற்சோணை: | யாது செய்யப்போகிறய், மகனே! |
| இளங்கோ: | அம்மா, நான் துறவியாகப் போகிறேன். இந்த அரச வாழ்வையே துறக்கப்போகிறேன். |
| நெடுஞ்சேரலாதன்: | இளங்கோ, இ∴தென்ன முடிவு? |
| நற்சோணை: | ஐயையோ, உன்முடிவை மாற்றிக் கொள், மகனே சேரன் |
| செங்குட்டுவன்: | தம்பி, வேண்டாம், (இளங்கோவை அணைத்து) நீயே இந்நாட்டை ஆளல் வேண்டும். |
| இளங்கோ: | அண்ணா, நீங்கள் கோபித்துக் கொண்டீர்கள் என்பதாலோ, அரசு கிடைக்கவில்லை என்பதாலோ நான் துறவியாகவில்லை. என் மனம் இந்த உலக ஆட்சியை விரும்பவில்லை நான் அந்த உலக ஆட்சியையே விரும்புகிறேன்.<br>(இளங்கோ அரசனுக்குரிய உடைகளைக் களைந்துவிட்டு, காவியாடை தரித்து வெளியே செல்கிறான்.) |
| சபையோர்: | இளங்கோவடிகள் வாழ்க! இளங்கோவடிகள் வாழ்க! |

தமிழ்மலர்
ஆறாம்வகுப்பு: 1970

**தேர்ச்சி 11.0** : படைப்புக்களை வாசித்த அனுபவங்களினூடாக சுய ஆக்கங்களை எழுதுவார்.

**தேர்ச்சி அலகு 11.2** : சுய அனுபவங்கள், அவதானிப்புக்கள், அபிப்பிராயங்கள், கருத்துக்களை வெளிப்படுத்தி எழுதுவார்.

**செயற்பாடு** : சுயசரிதை எழுதுவோம்.

**நேரம்** : 160 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- சுயசரிதை - பின்னிணைப்பு - 1
- செயற்பாட்டுப் பத்திரம் - 1 பின்னிணைப்பு - 2
- கட்டுரைத் தலைப்புக்கள் - பின்னிணைப்பு - 3
- எழுதுகருவிகள்

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்**

படி **11.1.2**

- சுயசரிதை என்பதன் விளக்கம் பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- எழுமாற்றாக மூன்று மாணவர்களை அழைத்து வண்டியிழுக்கும் மாடு, உடைந்த வீடு, வயது போன நாயாகப் பாவனை செய்து சுயசரிதை கூறும்படி செய்யுங்கள். கலந்துரையாடலின் போது பின்வரும் விடயங்கள் பற்றித் தெளிவுபடுத்துங்கள்.

| |
|---|
| ◆ தன்மயப்படுத்தப்பட்டதாய் சுயசரிதை அமைதல்.<br>(தன்னை அதுவாகப் பாவனை செய்தல்)<br>◆ தற்போதைய நிலையில் இருந்தே ஆரம்பித்தல்.<br>◆ முன்னைய நிலை, மாற்றங்கள், தற்போதைய நிலை எனக் காலஒழுங்கில் கூறல்<br>◆ ஒவ்வொரு கட்டங்களின் போதும் ஏற்பட்ட மனஉணர்வை வெளிப்படுத்தல்.<br>◆ முடிவு துன்பமாகவோ அல்லது மகிழ்ச்சியாகவோ அமைதல். |

(20 நிமிடங்கள்)

படி **11.2.2**

- மாணவரை ஆறு பேர் கொண்ட குழுக்களாகப் பிரியுங்கள்.
- சுயசரிதையை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- மாணவர் குழுக்களாக வாசிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரம் 1இணை பூர்த்தி செய்ய வழிப்படுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

## படி 11.2.3

- குழு நிலையில் பூர்த்தி செய்த செயற்பாட்டுப்பத்திரத்தை முன் வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனையோர் விடயத்தைக் கேட்டுக் கருத்தைக் கூற ஏனையோரை வழிப்படுத்துங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

◆ இன்றைய நிலை
- மிகவும் வேதனைக்குரியது. பக்கங்கள் கழன்று விழும் நிலை.
- எலிகள் கொறித்துத் தின்னும் நிலை

◆ இந்த நிலைக்கான காரணங்கள்
- மேலுறை போட்டுப் பாதுகாக்காமை, உரிய இடத்தில் வைத்திருக்காமை

◆ குதூகல உணர்வு உணர்த்தப்படும் விதம்
- தன்னைப் பற்றி வருணிக்கும் விதம், கடையில் கண்ணாடி அலுமாரியில் குதூகலமாக இருந்ததைக் கூறல், தனது எஜமானருடன் சௌக்கியமாகவும் புகழுடனும் வாழ்ந்ததைக் குறிப்பிடல்.

◆ நம்பிக்கைக்கான காரணம்
- தனது பயனறிந்து, சுவடிகள் திணைக்களத்தில் வைத்துப் பாதுகாக்கப்படல்

(30 நிமிடங்கள்)

## படி 11.2.4

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- பின்னிணைப்பு 3இல் வழங்கப்பட்ட நான்கு தலைப்புக்களில் ஒவ்வொரு குழுவும் ஒவ்வொன்றைத் தெரிவு செய்து கட்டுரைக்கான சட்டகம் அமைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- சட்டகத்தை அடிப்படையாகக் கொண்டு, கட்டுரையாக்கம் செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- குழு அங்கத்தவர் ஒவ்வொருவரும் செயற்படுவதற்கு ஊக்கம் அளியுங்கள்.

(40 நிமிடங்கள்)

**படி 11.2.5**

- குழு நிலையில் எழுதப்பட்ட கட்டுரைகளை குழுவில் ஒருவர் முன்வைக்க வகை செய்யுங்கள்.
- ஏனையவர்கள் அவற்றை ஆர்வத்துடன் செவிமடுத்து, தமது கருத்துக்களைக் கூற வழிப்படுத்துங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- ஒவ்வொரு சூழலிலும் தமது இன்றைய நிலை தொடர்பான வெளிப்பாடு
- இன்றைய நிலை ஏற்படுவதற்கான காரணமும், உணர்வு வெளிப்பாடும்.
- ஆரம்ப கால இன்பகரமான சூழல்
- படிப்படியாக இந்நிலை மாறிய விதமும் இனி எத்தகைய நிலை ஏற்படுமோ என்ற அங்கலாய்ப்பு உணர்வும்.

(40 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்.

- சுயசரிதை என்பது தான் அதுவாகப் பாவனை செய்து எழுதப்படும் கட்டுரை வகை என்பதனை விளங்கிக் கொள்வார்.
- தற்போதைய நிலையில் இருந்தே ஆரம்பித்து எழுதப்படல் வேண்டும் என்பதை அறிந்து கூறுவார்.
- முடிவு இன்பமாகவோ, துன்பமாகவோ அமையலாம் என்பதை விளங்கி எழுதுவார்.
- சுயசரிதைக் கட்டுரையைக் கற்பனை செய்து எழுதுவார்.

பின்னிணைப்பு - 1

# பழைய புத்தகம்

நான் இப்போது ஒரு பழைய புத்தகம். எனது இன்றைய நிலை மிகவும் வேதனைக்குரியது. என்னைத் தேடுவார் எவருமே இல்லை. இந்நிலையில் யாருக்குச் சொல்லி எனது துன்பத்தை தீர்த்துக்கொள்வது என்பது எனக்குப் புலப்படவில்லை. மாணவர்களே! நான் உங்கள் இன்ப துன்பத்தில் பங்கு கொண்டவன். ஆகையால் உங்களுக்கே என் கதையைக் கூறுகின்றேன்.

தற்போதைய எனது வசிப்பிடம் உடைந்த ஒரு பெட்டி. அங்கு எனக்கு உறக்கம் இல்லை. ஆறுதல் இல்லை. அமைதி இல்லை. தினமும் எலிகள் தம் கூரிய பற்களால் அங்கம் அங்கமாக என்னைக் கொறிக்கின்றன. செல்கள் என்னுடன் ஒட்டி இருந்தே எனது இரத்தத்தை உறிஞ்சுகின்றன. என்னுடன் வேறு பல நண்பர்களும் இருக்கின்றார்கள். அவர்களுக்கும் இதே நிலைதான்.



என் எஜமானி மிகவும் இரக்கமுள்ளவள். இடையிடையே எங்கள் இருப்பிடத்தைச் சுத்தம் செய்வாள். அவ்வேளை எனது அங்கங்களில் உள்ள தசைகளும் கழன்று விழும். அவற்றை ஒதுக்கிச் சுத்தம் செய்த பின்னர் அந்தப் புண்ணியவதி என்னை மெல்லத்தூக்கிப் பக்குவமாக இருந்த இடத்தில் வைத்து விடுவாள். அது அவளது மாதாந்தக் கடமைகளில் ஒன்றாகிவிட்டது.

எனது எஜமானர் "பழைய புத்தகங்களை எல்லாம் எரித்து விடுங்கள்" என்று கூறி தம் மனைவியை நச்சரிப்பதும் "புத்தகங்களை எரிக்கக்கூடாது" என அவர் மனைவி தடுப்பதும் இப்பொழுது வழக்கமாகியுள்ளது.

எனது எஜமானிக்குத் தெரியாமல் எஜமானர் ஏதும் தீங்கு செய்துவிடுவாரோ என்ற ஏக்கம் ஒரு புறமும் வெளியுலகிற்கு வந்து உங்கள் கைகளில் மீண்டும் தவழ மாட்டேனோ என்ற ஆவல் மறு புறமுமாக நான் தவிக்கின்றேன்.

வெளியுலகில் நான் கண்ட காட்சிகளில் ஒன்று எனது சகாக்களிற் சிலர் எரிக்கப்படுவதாகும். அந்தப்பயம் என்னை வாட்டி வருகின்றது. உங்களைப் போன்ற மாணவர்கள் என்னைப்பற்றி அள்ளிச் சொரிந்த புகழுரைகள் இப்போதும் எனக்கு நினைவுக்கு வருகின்றன. அவர்கள் கைகளில் இருக்கும் போது என்னைப்பற்றி அவர்கள் கூறியவற்றை நான் இப்பொழுது நினைக்கும் போது எனக்குத் தெம்பு ஏற்படுகின்றது. “புத்தகம் என்பது ஓர் அறிவுப் பெட்டகம். புதிய புதிய கருத்துக்களை நிறையத்தரும் வற்றாத சுரங்கம்.” என்று கூறி மகிழ்வது உங்கள் வழக்கமல்லவா?

மக்களுக்கு உயர்ந்த சேவையை வழங்கும் யாவருக்கும் இப்படியான நிலைதான் வருமா? இதுதான் உலகத்து நியதியா? அன்பர்களே நான் எனது முன்னைய உன்னத நிலையை நினைத்து ஆறுதல் அடையவே முயற்சிக்கின்றேன்.

இன்று எனக்கு முப்பத்தைந்து வயதாகிறது. நான் இந்தியாவில் தமிழ் நாட்டில் சென்னை மாநகரத்தில் யோகியார் அச்சகத்தில் தோன்றினேன். தனது வாழ்க்கை அனுபவங்களை, கவர்ச்சிமிக்க பாடல்களாகப் புனைந்த இலங்கை எழுத்தாளர் ஒருவர் குறைந்த செலவில் புத்தகமாகப் பெற்றெடுக்கத் தமிழ்நாடு சென்றிருந்தார். வேலையாட்கள் பலர் எழுத்தாளரின் கைப்பிரதியில் உள்ள எழுத்துக்களை அச்சிலே கோர்த்தனர். பின்னர் வெண்மையான தாளில் பதித்துப் பிரதிகளில் ஏற்பட்டிருந்த பிழைகளை நீக்கிச் செம்மைப்படுத்தினர். பின்னர் ஆயிரக்கணக்கான பிரதிகள் எடுத்தனர். அவற்றைப் பிரித்துப் பிரித்து இணைத்துப் புத்தகங்களாகக் கட்டி எடுத்தனர். அதற்குப் பின் நாற்புற ஓரங்களையும் வெட்டிச் செப்பனிட்டார்கள். இறுதியாக அழகான மேலுறையையும் இட்டு எங்களை அலங்கரித்தார்கள். கவிதைப்பூங்கா என்னும் பெயரை மேலுறையிலும் பொறித்தார்கள். அதுதான் எனக்கு எழுத்தாளர் சூட்டியபெயர். என்னுடன் பலநூறு சகோதரர்கள் பிறந்து இருந்தனர். வண்ண மலர்கள் நிறைந்த உறையாகிய உடையை அணிந்த நாங்கள் அழகாகக் காட்சியளித்தோம்.

எங்களைக் கண்ட எழுத்தாளர் பெரும் மகிழ்ச்சியடைந்தார். நான் பிறந்த சில நாட்களில் சகோதரர் பலருடன் சேர்ந்து விமானம் மூலம் இலங்கைக்கு வந்தேன்.

நான் விற்பனைக்காகவே உருவாக்கப்பட்டவன். ஆகையால், என்னைச் சகாக்களுடன் சேர்த்துக் கடைக்குக் கொடுத்தார். கடையில் கண்ணாடி அலுமாரியில் நான் குதூகலமாக இருந்தேன். அதிஷ்டவசமாக அதிக நாட்கள் காட்சிப் பொருளாக நான் இருக்கவில்லை.

ஆசிரியப் பெருமகன் ஒருவர் என்னை விலை கொடுத்து வாங்கினார். முப்பது வருடங்கள் அவருடன் சௌக்கியமாக வாழ்ந்தேன். அவர் எனக்கு மேலுறைபோட்டு பாதுகாப்பாக வைத்திருந்தார். அவர் என்னைப் பாராட்டிச் சீராட்டிப் பாதுகாத்தார். என்னை வாசிக்குமாறு பல நண்பர்களுக்குக் கொடுப்பார். என்னைப் புரட்டிப் பார்க்காத அவரது மாணவர்கள் இல்லை என்றே கூறவேண்டும். இனிய பல கவிதைகளைச் சுமந்திருந்த நான் கிடைத்தற்கரிய பொருளாக மதிக்கப்பட்டேன். என்னை வாசிக்க விரும்புவோர். என் எஜமானரைத் தேடியே வருவார்கள்.

இப்படியாக நான் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் அவரது நண்பர்களில் ஒருவருக்கு என்னை இரவலாகக் கொடுத்தார். பெற்றவர் பொருளைத் திருப்பி ஒப்படைக்கவில்லை. இரவலாகப் பெற்ற பொருளைத் திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்ற எண்ணமும் அவருக்கு இருக்கவில்லை. இரவல் பெற்றவர் திருப்பிக் கொடுக்கமாட்டார் என்று நினைத்திருந்தால் அந்த ஆசிரியர் என்னை இரவல் கொடுத்திருக்கவே மாட்டார். அவர் என்னைப் பிரிந்ததால் எவ்வளவு வேதனைப்பட்டிருப்பார் என்பது எனக்குத்தான் தெரியும். சில நாட்களில் அந்த ஆசிரியப் பெருந்தகை காலமாகி விட்டார். எனவே அந்தப் புதிய மனிதர் எனது பாதுகாவலரானார்.

ஒரு நாள் அவர் என்னைப் படித்துவிட்டுக் கவனயீனமாக இருந்த இடத்திலேயே வைத்துவிட்டுச் சென்றுவிட்டார். அப்போது அவரது சின்ன மகள் லில்லி தனது சின்னக்கைகளால் என்னைக் கிள்ளி விளையாடினாள். மூத்த மகன் ராஜா கத்தரிக்கோலால் வெட்டி விளையாடினான். அதைக் கண்ட எஜமானி ஓடிவந்து என்னை அள்ளி அணைத்தாள். கிழிந்த புத்தகங்கள் இருந்த பெட்டியில் வைத்து மூடினாள். நாளடைவில் பழைய புத்தகம் என்ற பெயரைப் பெற்று விட்டேன். என்னை இப்பொழுது ஒருவரும் வாசிப்பதில்லை.

"என்னைப் புனரமைத்துச் சிறிய அலுமாரியில் வைத்துப் பாதுகாத்தாள். அவளது பிள்ளைகளுக்கு உதவுவேன்" என்று அப்பெண்மணி யோசிக்கவில்லை.

நேற்றுக் காலை எனது அறையில் இருந்து தாயும் மூத்த மகன் ராஜாவும் பேசிக்கொண்டது என்காதில் விழுந்தது. என்னைப்பற்றி கேள்விப்பட்ட சுவடிகள் திணைக்களத்து அதிகாரி ஒருவர் வந்திருக்கிறார். திணைக்களத்தில் வைத்துப் பாதுகாப்பதற்கு என்னைக் கேட்டாராம். அவர்களின் பேச்சிலிருந்து நான் எரிந்தழிந்து விடாமல் தப்பிவிட்டதாக எண்ணிக்கொண்டேன். எனது சேவையைத் தொடர்ந்து வழங்கும் வாய்ப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கை தெரிகின்றது.

**பின்னிணைப்பு - 2**

## செயற்பாட்டுப் பத்திரம் - 1

- பழைய புத்தகத்தின் இன்றைய நிலையைக் கூறுங்கள்
- இந்நிலையை அடைவதற்கானக் காரணங்களை வகைப்படுத்துங்கள்.
- ஆரம்பத்தில் தான் பெற்ற இன்ப உணர்வு உணர்த்தப்படும் விதம் பற்றி விளக்குங்கள்.
- இறுதிக் கட்டத்தில் ஏற்பட்ட நம்பிக்கைக்கான காரணம் பற்றி விபரியுங்கள்.

**பின்னிணைப்பு - 3**

## கட்டுரைக்கான தலைப்புக்கள்

1ஆம் குழு - பாழடைந்த வீட்டின் சுயசரிதை

2ஆம் குழு - உடைந்த குடையொன்றின் சுயசரிதை

3ஆம் குழு- - தேடுவாரற்ற நிலையில் வாழும் கிழப் பசுவின் சுயசரிதை

4ஆம் குழு - காய்ந்து உலர்ந்து போன ஆலமரம் ஒன்றின் சுயசரிதை.

**தேர்ச்சி 1.0** : பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்குமேற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார்.

**தேர்ச்சி அலகு** 1.5: செயற்றிறனும், வினைத்திறனுமுள்ள கேட்போராகச் செயற்படுவார்.

**செயற்பாடு** : பேச்சொன்றை செவிமடுத்துத் துலங்குவோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்.

**தர உள்ளீடு** :
- பேச்சு
- ஒலிப்பதிவு கருவி
- எழுதுதாள்
- செயற்பாட்டுப்பத்திரம் - பின்னிணைப்பு - 1

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

### படி 1.5.1.

- மாதிரி சொற்பொழிவை மாணவருக்கு முன்வைத்து ஆரம்பிக்கவும்.

அவைத் தலைவர் அவர்களே! இங்கு கூடியிருக்கும் பெருமக்களே! அனைவருக்கும் எனது காலை வணக்கம். இன்றைய கூட்டத்திலே, உழவுத்தொழிலின் முக்கியத்துவம் பற்றிப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இன்று, விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக உழவுத்தொழிலில் மக்களின் நாட்டம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

உலகில் உள்ள தொழில்கள் அனைத்திற்கும் உழவுத்தொழிலே அடிப்படை ஆகும். உலக மக்களுக்கு உணவு அளிக்கும் தொழில் இது. நெற்றி வியர்வை நிலத்திற்சிந்தப் பாடுபட்டுழைக்கும் உழவனை நாம் மறந்துவிட முடியாது. இதனைத்தான் "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்." என்று பாரதியார் பாடினார்...

எனவே இனிவரும் காலத்திலாவது இத்தொழிலுக்குக் கூடிய முக்கியத்துவம் அளித்து நாமும்ஏனையோரும் பயனோடு வாழ்வதற்கும் நாடு சுபீட்சமடைவதற்கும் வாய்ப்பளிப்போமாக.

- பேச்சின்போது பேச்சாளரும், கேட்போரும் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை? என மாணவரிடம் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

• பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவருக்குத் தெளிவுபடுத்துங்கள்.

**பேச்சாளன் என்ற வகையில்...**

- பொருத்தமான மொழியைப் பயன்படுத்தல்
- கேட்போரைக் கவரும் வகையில் பேசுதல்
- பொருத்தமான உச்சரிப்பைப் பயன்படுத்தல்

**கேட்போன் என்ற வகையில்...**

- கேட்டலில் விருப்புடன் ஈடுபடுதல்.
- நேர்த்தியாகச் செவிமடுத்தல்
- தகவல்களைத் திரட்டிக்கொள்ளல்.

(20 நிமிடங்கள்)

## படி 1.5.2

- பாடசாலையில் நடைபெறும் சொற்பொழிவு ஒன்றைக் கேட்கச் செய்யுங்கள்.

அல்லது

- ஒலிப்பதிவு நாடா மூலம் கேட்கச் செய்யுங்கள்.

அல்லது

- பேசக்கூடிய ஆற்றலுடைய ஆசிரியரையோ / மாணவரையோ பேச விடுங்கள். (தங்கள் வசதிக்கேற்பத் தெரிவு இடம்பெறலாம்.)
- மாணவரை அரைவட்டமாக அமர்ந்திருக்கச் செய்யுங்கள்.
- மாணவர் குறிப்பெடுக்க பின்னிணைப்பிலுள்ள செயற்பாட்டுப் பத்திரம் 1. உதவும்.
- மாணவர் பேச்சினைக் கேட்டுக் கிரகித்து செயற்பாட்டுப் பத்திரத்தைத் தனித்தனியே பூர்த்தி செய்ய விடுங்கள்.
- மீண்டும் மாணவர்களை நான்கு பேர் கொண்ட குழுக்களாக அமர்த்துங்கள்.
- பின்னிணைப்பு 1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை 2 ஐப் பூர்த்தி செய்வதற்கு கலந்துரையாடி தனித்தனியே குறிப்பெடுத்தவற்றை அடிப்படையாகக் கொண்டு அறிக்கை தயாரிக்க வழிப்படுத்துங்கள்.

(20 நிமிடங்கள் )

## படி 1.5.3

- குழு நிலையில் தொகுத்த விடயத்தை முன்வைக்கச் செய்யுங்கள்.
- விடயத்தைக் கேட்டுக் கருத்தைக் கூற ஏனையோரை வழிப்படுத்துங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| ◆ பேச்சின் பிரதான கருத்துக்கள். |
| ◆ பேச்சில் கையாண்ட மொழிநடை |
| - பேச்சு வழக்கு |
| - எழுத்துவழக்கு |
| ◆ உச்சரிப்புத் தெளிவு |
| (ர, ற, ன, ந, ண, ல, ழ, ள பயன்பாடுகள்.) |
| ◆ பேச்சின் பாணி |
| ◆ பேச்சை மேம்படுத்தச் செய்ய வேண்டியவை. |

(20 நிமிடங்கள்)

# கணிப்பீடும் மதிப்பீடும்

- பேச்சாளர் கையாண்ட மொழிநடை பற்றி விளக்குவார்.
- சொற்கள், பழமொழிகள், உவமைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி கேட்போரைக் கவரலாமென்பதை விளக்குவார்.
- பயிற்சியினால் ஒரு நல்ல பேச்சாளருக்கான திறனைப் பெறலாமென்பதை வெளிப்படுத்துவார்.
- கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி, பேச்சுத்திறனை வளர்த்துக்கொள்வார்.

**பின்னிணைப்பு 1**

# செயற்பாட்டுப் பத்திரம் - I

1. சொற்பொழிவின் / பேச்சின் தலைப்பு
2. பிரதான கருத்துக்கள்
3. உவமைகள், பழமொழிகள்
4. விளிப்பு
5. பேசிய முறை - விமர்சனம், அபிப்பிராயம்.

# செயற்பாட்டுப் பத்திரம் - II

குழுநிலையில் பின்வரும் தலைப்புக்களில் அறிக்கைப்படுத்தவும்.

1. பேச்சில் குறிப்பிடப்பட்ட பிரதான கருத்துக்கள்
2. பேச்சாளரின் மொழிநடை
3. பேச்சாளரின் உச்சரிப்பு
4. பேச்சாளர் கையாண்ட உவமைகள், பழமொழிகள்
5. பேச்சை மேலும் சிறப்பிக்க நீங்கள் கூறும் விதப்புரைகள்.

**தேர்ச்சி 11.0** : படைப்புக்களை வாசித்து அனுபவங்களினூடாக சுய ஆக்கங்களை எழுதுவார்.

**தேர்ச்சி அலகு 11.2** : சுய அனுபவங்கள், அவதானிப்புகள், அபிப்பிராயங்கள் கருத்துக்கள் போன்றவற்றை வெளிப்படுத்தி எழுதுவார்.

**செயற்பாடு** : "வெண்ணிலா" என்ற பாடலைப் படித்துத் துலங்குவோம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- வெண்ணிலா பாடல் - பின்னிணைப்பு - 1
- ஒலி நாடா
- எழுதுதாள்கள்.
- செயற்பாட்டுப்பத்தரம் - பின்னிணைப்பு 2

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 11.2.1**

- ஒலிப்பதிவு செய்த ஒரு பாடலை ஒலிக்கச் செய்து மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- முடியாதவிடத்து பாடலைக் காட்சிப்படுத்திப் பாடிக் கலந்துரையாடுங்கள்.

பாடலை வாசிக்கும் பொழுது எவ்விதம் வாசிக்க வேண்டும்? என்னென்ன விடயங்களை அவதானிக்க வேண்டும்? என்ற வினாக்களை மாணவரிடம் வினவி கலந்துரையாடுங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவருக்குத் தெளிவுபடுத்துங்கள்.

- பாடலை வாசிக்கும் பொழுது
  - பாடலை ஒருமுறை வாசித்தல்.
  - பொருளுக்கேற்ப சந்தி பிரித்து வாசித்தல்.
  - இசையோடு திரும்பத் திரும்ப வாசித்தல்.
- விடயங்களை அவதானித்தல்
  - பாடலாசிரியர் யார் என அறிதல்
  - பாடலின் பொருளை அறிதல்.
  - பாடலின் மையக் கருத்தை அறிதல்.
- பாடலை இரசித்தல்.
  - அணிகளை அறிதல்.
  - எதுகை, மோனை முதலியவற்றை அறிதல்
  - சிறந்த சொற்களை அறிதல்.
  - உணர்வினை உணர்தல்
  - பாடல் சித்தரிக்கும் காட்சியை மனக்கண்ணால் காணல்.
- பாடலைப் படித்த பின்பு
  - மேலும் பாடல்களைத் தேடிப் படித்தல்
  - பாடல்களை ஆக்குதல்.

(20 நிமிடங்கள்)

## படி 11.2.2

- மாணவரை ஐந்து அல்லது ஆறு பேர் கொண்ட குழுக்களாகப் பிரியுங்கள்..
- நவாலியூர் க.சோமசுந்தரப் புலவர் பாடிய "வெண்ணிலா" என்ற பாடலை வழங்குங்கள்
- ஒவ்வொரு குழுவும் பாடலை பாடிப் பயிற்சி பெற வழிப்படுத்துங்கள்.
- குழுக்களுக்கிடையே சென்று தேவையேற்படின் பாடிக் காட்டுங்கள்.
- பின்னிணைப்பு 2 இல் கொடுக்கப்பட்ட செயற்பாட்டுப்பத்திரத்தை வழங்குங்கள்.
- குழு நிலையில் அறிக்கைப்படுத்தும்படி அறிவுறுத்துங்கள்.

(20 நிமிடங்கள்)

## படி 11.2.3

- குழுநிலையில் அறிக்கையை முன்வைக்க வகை செய்யுங்கள்.
- ஏனைய குழுக்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்க வழிநடத்துங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

1. இரவில் தோன்றும் வெண்ணிலா அமுத ஒளியைப் பரப்புகிறது. (முக்கியமான கருத்தைப் பொருத்தமுற ஒரு வாக்கியத்தில் எழுதப்பட்டிருக்கிறதா? எனக் கவனியுங்கள். )

2. சூரியன் , சந்திரன்

3. வெண்ணிலாவை விளித்துப் பாடியுள்ளார்.

4. (அ) இரவில் அமுத ஒளி கொடுத்தல்.
   (ஆ) ஆகாயத்தில் தவழ்ந்து வருதல்.
   (இ) பிறையாகி வளர்தல், பின்பு தேய்தல்.
   (ஈ) ஒரு நாளில் மறைதல்.

5. உவமையணிகள்
   (அ) "தயிர்க் கடலில் வெண்ணெய் போல்"
   உவமானம் : தயிர்கடலில் வெண்ணெய்
   உவமேயம் : வெண்ணிற ஆகாயத்தில் நிலா.
   (ஆ) "பெண்கள் முகம் போல்"
   உவமானம் : பெண்ணின் முகம்
   உவமேயம் : வெண்ணிலா

6. "அன்புடன்" வாழி என்று வாழ்த்துகின்றார்.

7. குதூகலம்

(40 நிமிடங்கள்)

## படி 11.2.4

- "சூரியன்"; என்ற தலைப்பைக் குழுக்களுக்கு வழங்கி பாடல் ஆக்கும்படி கூறுங்கள்.
- குழுக்களுக்கிடையே சென்று தேவையான ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்குங்கள்.

(20 நிமிடங்கள்)

## படி 11.2.5

- குழுக்கள் ஆக்கங்களை முன்னிலைப்படுத்த வகை செய்யுங்கள்.
- ஏனைய குழுக்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க ஊக்கப்படுத்துங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- தலைப்புக்கேற்ற விடயங்கள்.
- நயத்துடன் எழுதல் (உவமையணி, ஓசைநயம், சொல்லாட்சி)
- மொழிச் செம்மை
- இசையுடன் பாடல்.

(20 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- பாடலின் மையக் கருத்தைக் கூறுவார்.
- பாடலிலே காணப்படும் சிறப்புக்களை விளக்குவார்..
- பாடலை ஓசை நயத்துடன் பாடுவார்.
- பாடலை ஆக்குவார்.
- ஓய்வுநேரத்தில் பாடல்களைக் கற்று மகிழ்வார்

**பின்னிணைப்பு - 1**

## வெண்ணிலா

*இருவிளக்கில் ஒரு விளக்காம் வெண்ணிலாவே*
*இராக்காலத் தொளிகொடுப்பாய் வெண்ணிலாவே*

*சூரியன்போய் மறைந்தபின்பு வெண்ணிலாவே*
*தூயவொளி பரப்பிடுவாய் வெண்ணிலாவே*

*தயிர்க்கடலில் வெண்ணெய்போல வெண்ணிலாவே*
*தனி விசும்பிற் றவழ்ந்திடுவாய் வெண்ணிலாவே*

*பெண்கள்முகம் போல்வருவாய் வெண்ணிலாவே*
*பிறையாகி வளர்ந்திடுவாய் வெண்ணிலாவே*

*எண்ணிரண்டு கலையுடனே வெண்ணிலாவே*
*எழுந்துநிலாப் பொழிந்திடுவாய் வெண்ணிலாவே*

*வளர்ந்துபின்பு தேய்ந்திடுவாய் வெண்ணிலாவே*
*வறுமைசெல்வ முனக்குமுண்டோ வெண்ணிலாவே*

*ஒருநாளில் மறைந்திடுவாய் வெண்ணிலாவே*
*ஒளியின்றி வாடுவமே வெண்ணிலாவே*

*அமுதவொளி பரப்பிவரும் வெண்ணிலாவே*
*அன்புடனே வாழியென்றும் வெண்ணிலாவே.*

*- நவாலியூர் சோமசுந்தரப்புலவர்*

| | | |
|---|---|---|
| இருவிளக்கு | - | சூரியனும் சந்திரனும் |
| விசும்பு | - | ஆகாயம் |
| தூயவொளி | - | வெண்மையான வெளிச்சம் |
| எண்ணிரண்டு | - | பதினாறு |
| கலை | - | சந்திரனின் பாகம் |
| அமுதவொளி | - | குளிர்ந்த இனிய வெளிச்சம் |

**பின்னிணைப்பு - 2**

## செயற்பாட்டுப்பத்திரம்

(நவாலியூர் க.சோமசுந்தரப் புலவரின் வெண்ணிலா என்ற பாடலைப் படித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை அளியுங்கள்.)

1. பாடலின் மையக்கருத்தை ஒரு வாக்கியத்தில் எழுதுக.

2 "இருவிளக்கு" எனப் புலவர் இங்கு குறிப்பிட்டது எவற்றை?

3. புலவர் யாரை விளித்துப் பாடியுள்ளார்?

4. நிலாவின் என்னென்ன சிறப்புக்கள் இங்கு கூறப்பட்டுள்ளன.

5. இப்பாடலில் இடம்பெற்ற இரண்டு உவமையணிகளைத் தருக. அவற்றில் இடம்பெற்ற உவமானம், உவமேயம் எவையெனக் கூறுக.

6. இறுதியில் புலவர் நிலாவை எவ்விதம் வாழ்த்துகின்றார்?

7. இப்பாடலை படித்து முடித்ததும் உங்கள் உள்ளத்தில் ஏற்படும் உணர்வு யாது?

**தேர்ச்சி 4.0** : உயிர்த்துடிப்புள்ள கட்டுருவாக்கச் செயற்றிறனுடைய வாசகராகச் செயற்படுவார்.

**தேர்ச்சி அலகு4.2** : வாசிப்பதன் மூலம் இலக்கியத்திற்கும், சமுகத்திற்கும் இடையிலான தொடர்பை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு** : "முதல் அனுபவம்" என்ற கதையை வாசித்து கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்.

**தர உள்ளீடு** : - "முதல் அனுபவம்" என்ற கதை - பின்னிணைப்பு - 1
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 2

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

### படி 4.2.1

- பல்வேறு வகையான ஆக்கங்களை வாசித்து இருக்கிறீர்களா?
- பல்வேறு ஆக்கங்களை வாசிக்கும் போது எவ்வெவ் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும் எனக் கேட்டு மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

கலந்துரையாடலின் போது பின்வரும் விடயங்கள் பற்றி மாணவர்களுக்குத் தெளிவு படுத்துங்கள்.

- ◆ வாசிக்க வேண்டிய ஆக்கங்கள்.
- ◆ ஆக்கங்களிற் காணப்படும் மையக் கருத்து
- ◆ ஏனைய கருத்துக்கள்
- ◆ ஆக்கங்களை வாசிப்பதால் பெறும் படிப்பினைகள், விழுமியங்கள்.
- ◆ கலாசார பண்பாட்டு அம்சங்கள்.
- ◆ பாத்திரப் பண்புகள்
- ◆ சமூகஞ்சார் கருத்துக்கள்.

(15 நிமிடங்கள்)

### படி 4.2.2

- மாணவர்களை நான்கு பேர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- சிறுகதையின் பிரதியை ஒவ்வொரு மாணவர்க்கும் வழங்குங்கள்.
- அனைத்து மாணவர்களையும் மௌன வாசிப்பில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவரிடம் செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்திற்கு விடையளிக்குமாறு கூறுங்கள்.

(25 நிமிடங்கள்)

## படி 4.2.3

- ஒவ்வொரு குழுவையும் சிறுகதை தொடர்பாகத் தொகுத்த விடயங்களை முன்வைக்கச் சொல்லுங்கள்.
- ஏனையோருக்கும் இச்சிறுகதை பற்றிய கருத்துக்களைக் கூற வழிப்படுத்துங்கள்.

பின்வரும் விடயம் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்

- **சிறுகதையின் மையக் கருத்து :**
  **மனஉறுதி, முயற்சி, வெற்றி**

- **பாத்திரப் பண்புகள் :**
  **பெரும்படை :- வெகுளி, பயந்த சுபாவம், சிந்தித்து முடிவெடுக்கும் தன்மை, இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காக எதனையும் தாங்கிக் கொள்ளும் பண்பு, உதவும் உள்ளம் கொண்டவர்.**

  மாமா :- மருமகன் மேல் பாசம் கொண்டவர். மருமகன் நன்றாகப் படிக்க வேண்டும் என்று விரும்புகின்றவர்.

  மாணவர் :- பணக்காரர்களுடைய பிள்ளைகள், ஏழ்மையை இகழ்ந்து பேசுபவர்கள், உதவும் குணம் இல்லாதவர்கள்.

- பிடித்த பகுதி
  எதுவாகவும் இருக்கலாம் - காரணத்தோடு விளக்க வேண்டும்.

- படிப்பினைகள்
  - முயன்றால் வெற்றி கிட்டும்.
  - நன்றாகச் சிந்தித்து உறுதியான தீர்வு மேற்கொள்ளல்.
  - தன்னிலை உணர்ந்து ஏனையோருக்கு உதவுதல்.

- கதை பற்றிய கருத்து
  - விறுவிறுப்பாகக் கதையை நகர்த்திச் செல்வது.
  - விடயத்தை விளக்கக் கையாண்டுள்ள உத்திகள் சிறப்பாகவுள்ளது.
    உ-ம் :- கையில் கர்சீப் குளித்துக் கொண்டிருந்தது.எல்லோரும் பொலபொலவென்று பொரி மூட்டை அவிழ்ந்தது போல உதிர்ந்து மறைந்தார்கள்.
  - ஆங்கில வார்த்தைப் பயன்பாடு அதிகமாக இருந்தாலும், கதையோட்டம் இயல்பாக உள்ளது.

(25நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- "முதல் அனுபவம்" என்ற கதையின் பிரதான கருத்துக்களைக் கூறுவார்.
- சிறுகதை கூறும் படிப்பினைகளைக் கூறுவார்.
- பாத்திரப் பண்புகளைக் கூறுவார்.
- கிராம, நகர்ப்புற நடைமுறைகளைக் கூறுவார்.
- சமூகத்தினது பழக்கவழக்கங்களைக் கூறுவார்.
- ஒரு கதையை/ ஆக்கத்தை வாசிக்கும் போது எவ்வெவ் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்றுணர்ந்து வாசிப்பார்.

பின்னிணைப்பு: - 1

# முதல் அனுபவம்

“ஹைய்யா... கலர் சினிமாப் பொட்டி!” என்று வீட்டுக்குள் வந்ததும் வராததுமாகக் கண்களை அகல விரித்து, மனதுக்குள் சந்தோஷத்தை நிரப்பினான் பெரும்படை. கிராமத்தில் பிறந்து, வளர்ந்து. தற்போது பாங்க் மானேஜராக இருக்கும் மாமாவுடன் முதன்முதலாக நகரத்துக்கு வந்திருப்பவனாயிற்றே! ஆறாவது வகுப்பில் சேர்த்து, தொடர்ந்து அவனைப் படிக்க வைக்க கிராமத்துக்குச் சென்று தங்கை மகனைக் கூட்டி வந்துவிட்டார் மாமா. பெரும்படை தனது பிய்ந்துபோன ரப்பர் செருப்பை ஓரமாக விட்டுவிட்டுத்தரையில் கால்வைத்தான். ஏதோ வித்தியாசமாக உணர்ந்தபோது மொஸைக் பளபளத்தது. காலின் கட்டைவிரலால் ஒரு தடவை தடவிப் பார்த்து நினைத்துக் கொண்டான் “அத்தை ஒரு நாளைக்கு நாலுதரம் சாணி போட்டு மெழுகுவாளோ?

இருவரையும் வரவேற்றுவிட்டு, சின்ன வயசுல பார்த்தது... அதுக்குள்ள சிக்ஸ்த் ஸ்டாண்டர்ட் வந்துட்டியாமே...? என்று அவனைப் பார்த்துக் கேட்டபடி, கையிலிருந்த துணிப்பை மூட்டையை வாங்கி பீரோவில் வைத்தாள் அத்தை. அவள் கேட்ட கேள்விக்கும் மட்டும் போட்டுவிட்டு, அந்த இருபத்துநான்கு வயது அத்தையையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். அவளுடைய டி - ஷர்ட்டும், ஸ்டோன்வாஷ் ஜீன்ஸும் அவனுக்குப் புதுமையோ புதுமை!

“பெண்கள் மொழுமொழுவென்று சிவக்கச் சிவக்க இப்படிக்கூட அழகாகயிருக்க முடியுமா? - யோசித்தான்.

சிறிது நேர பேச்சுக்குப் பின் அத்தை சமையலறைக்கும், மாமா குளியலறைக்கும் போய்விட... இவன் அடுத்த அறைக்குள் புகுந்தான். படுக்கையறை. அருகிலிருந்த மெத்தையில் தலை வைத்துப் பார்த்தான். மெத்... மெத்... மெத்...! பீரோவைத் திறந்தபோது கம்மென்ற நறுமணம். ஒருபுறம் பட்டுச் சேலைகளின் அணிவகுப்பு; கை கால்கள் இல்லாத சில வித்தியாசமான துணிகள். அருகே மாமாவின் மடிப்புக் கலையாத ஷர்ட், பாண்ட்டுகள்.

“உங்க மாமா நிறைய படிச்சுட்டுப் பட்டணத்துல்பெரிய பதவியில் இருக்காருல்ல... நீயும் அதுமாதிரி வரோணும்” என்று அம்மா அடிக்கடி சொல்வது ஞாபகம் வந்தது.

“டேய்... டேய்! அங்க என்ன பண்றே? போ... போய்க் குளிச்சுட்டு வந்து சாப்பிடு முதல்ல...” மாமா அதட்ட, பாத்ரூமுக்குள் நுழைந்து பக்கெட்டை எடுத்து வைத்துவிட்டு நிமிர்ந்தவனுக்கு ஒரு தடுமாற்றம். மூன்று குழாய்களில் எதைத் திறப்பது? ஒரு முடிவுக்கு வந்து நடுக்குழாயைத்திறக்க, தலைக்கு மேலிருந்து புஸ்ஸென்ற ஷவர் எதிர்பாராதவிதமாகத் தண்ணீர் கொட்டியதில் மூச்சு முட்டி “மாமா... மாமா...” என்று அவன் கத்த... அவர் என்னவோ ஏதோவென்று பதறி அடித்துக் கொண்டு வந்து நின்றார். அவன் உடம்பு வெடவெடவென்று குளிரில் நடுங்குவது போல அதிர்ச்சியில் நடுங்கியது. ஷவரை நிறுத்திவிட்டு ஒரு துண்டை அவனிடம் கொடுத்தார் மாமா.

நிறைய வற்புறுத்தலுக்குப் பின் டைனிங் டேபிளில் அமர்ந்து, கைகளில் வழிய வழியச் சிறுகுழந்தை போல் சாப்பிட்டான்.

பெரும்படை தன் யூனிஃபார்ம் டெரிகாட் சட்டையையும், டிராயரையும் தொட்டுத் தொட்டுப் பார்த்துச் சந்தோஷத்துடன் போட்டுக் கொண்டான். சட்டையை "இன்" செய்து கொள்ளத்தெரியாமல் தடுமாற, "இப்படி உள்ளாற விட்டு, இப்படிச் சுருக்கமில்லாம எடுத்து விடணும்டா..." என்று சொல்லிக்கொடுத்து, கால்களில் சாக்ஸையும் ஷூவையும் மாட்டி ஸ்கூல் பஸ்ஸில் ஏற்றிவிட்டார் மாமா.

பஸ்ஸிலிருந்த சிறுவர்கள் கூட்டம் ஒருமாதிரி பார்த்தது. பணக்காரக் குழந்தைகள் - மைதா மாவு உருண்டைகள் போலிருந்தார்கள். கறுப்பாகக் கிராமவாடை வீசும் இவன் மட்டும் அந்தக் கூட்டத்தில் தனியாகத் தெரிந்ததால், இவனை ஒரு புதிய ஜந்துவைப்போல் அவர்கள் பார்த்தனர். கடைசி ஸீட்டில் ஜன்னலோரம் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக்கொண்டே வந்தவன், யாரோ தொடுவது போலிருக்க... திரும்பிப் பார்த்தான். வந்தவன் இவனை விடப் பெரியவனாக இருக்க வேண்டும்.

"ஆர் யூ நியூ டு த ஸ்கூல்?" ஒன்றும் புரியாமல் விழித்தான். பஸ்ஸிலிருந்த எல்லோரும் இவனையே பார்த்தார்கள், கையில் கர்சீப் குளித்துக் கொண்டிருந்தது. திடீரென்று யாரேனும் புரியாத படபட ஆங்கிலத்தில் கேட்டால் என்ன சொல்ல வேண்டும் என்று மாமா சொல்லிக் கொடுத்தது ஞாபகம் வர சொன்னான்.

"ஐ டோண்ட் நோ இங்கிலீஷ்?" பஸ் பூராவும் சிரிப்புச் சத்தம் ஸ்கூலுக்குப் புதுசா?"

"ஆமா..."

"பேரென்ன?"

"பெரும்படை ஐயனார்..."

"எந்த கிளாஸ்?"

"ஆறாம் வகுப்பு, "ஏ" பிரிவு..."

"இதுக்கு முன்னே எங்க படிச்சே?

"புளியம்பட்டி பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளியில்..."

"ஏன், ஆறாவதுக்கு புளியம்பட்டியில ஸீட்டு கிடைக்கலியா?" அந்த மாணவன் கிண்டலாகக் கேட்டுவிட்டுப் போக, எல்லோரும் பலமாகச் சிரித்தார்கள். அவனுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. அதற்குள் ஸ்கூல் வர, எல்லோரும் பொலபொலவென்று பொரிமூட்டை அவிழ்ந்தது போல உதிர்ந்து மறைந்தார்கள். பிரேயர் ஹாலில் அனைவரும் ஏதோ ஆங்கிலப் பாடலை, நீட்டி நீட்டி மூச்சுவாங்கியபடி பாட, இவன் மற்றவர்கள் வாயையே பார்த்துக் கொண்டிருந்தான். பிரேயர் முடிந்து வரிசையாகத் தத்தம் வகுப்புகளுக்குச் சென்று தங்கள் இருக்கையில் அமர்ந்தார்கள்.

"முன்னாடி உட்காரு! அப்பதான் படிப்பு ஏறும்... மாமா சொல்லியிருந்தது ஞாபகம் வர, வரிசையிலிருந்து கலைந்து ஓடி முன்ஸீட்டில் உட்கார்ந்து கொள்ள... "டேய், எந்திரிடா... நியூ அட்மிஷனா..?" ரஜினி ஸ்டைலில் சொன்னவன் முரடனாகத் தெரிந்தான். "ம்ம்..."

“அப்ப லாஸ்ட் டெஸ்க்குக்குப் போ... இது ஓல்டு ஸ்டூடண்ட்ஸ் உட்கார்ற இடம்...” அவன் தலைமுடியை நீவிய படி சொல்ல, வேறுவழியின்றிக் கடைசி டெஸ்க்குக்குப் போய் அமரும் போது அருகிலிருந்தவன் நன்கு கால்களைப் பரப்பி, முக்கால்வாசி இடத்தை ஆக்கிரமித்தான். தடித்த உருவம். குறைந்தது இரண்டு வருடமாவது “கோட்” அடித்திருக்க வேண்டும்.

புத்தகத்தை விரித்து இரண்டு ஆங்கில வார்த்தைகளை எழுத்துக்கூட்டி மனதுக்குள் கொட்டியிருப்பான் பெரும்படை, அதற்குள் விளக்கெண்ணெய் வாடை வீசும் பழைய பாவாடை சட்டையுடன் பள்ளிக்கு வரும் கிராமத்துச் சிறுமிகளும், அரைஞாண் கயிறு பெல்ட்டாக இருக்க தபால்பெட்டி டிராயரோடு பம்பரம், கோலிக்குண்டு இத்யாதிகளைச் சுமந்து வரும் சிறுவர்களும், அறுவடை நாட்களில் விடுமுறை விடப்பட்டுப் பன்றிகளுக்கும் மாடுகளுக்கும் தொழுவமாக மாறும் பள்ளிக்கூடமும் ஒரு நிமிடம் அவன் கண்முன் வந்து மறைந்தன. தன்னுடைய வாழ்க்கைத்தரம் முன்பிருந்ததைவிட இப்போது ஒருபடி உயர்ந்திருப்பதாக நினைத்தான். இருந்தாலும், சுற்றியிருந்தவர்கள் தன்னைப் புழுவை விடவும் மட்டமாய் நடத்திய விதம் ஒருவேளை தான் இந்த வாழ்க்கைக்கு ஏற்றவனல்லவோ... கிராமத்தில் வாழத்தான் லாயக்கோ?” என்ற நினைப்பே பாரமாக அழுத்தியது.

திடீரென்று எல்லோரும் எழுந்திருக்க, பிரமையிலிருந்து மீண்டவனாய்த் தானும் எழுந்து நின்றபோது, முழங்கால்வரை கவுன் அணிந்த இளம்பெண்மணி ஒருத்தி வந்து சேரில் அமர்ந்தாள். பொட்டுப் பொட்டாய் வியர்த்திருந்த முகத்தை மெல்லிய கர்சீப்பால் ஒத்தி ஒத்தி எடுத்து விட்டு, வரிசைக்கிரமமாக அட்டென்டண்ஸ் ரிஜிஸ்தரில் உள்ள பெயர்களை வாசிக்க ஆரம்பித்தாள்.

ஆண்ட்ரூ...”

“எஸ் மேடம்!”

“ஜேக்கப்...”

“எஸ் மேடம்!”

“மகேஷ்...”

“எஸ் மேடம்!”

“பிரகாஷ்...”

“எஸ் மேடம்!”

“ப்ரும் பாடை அய்னார்...”

எல்லோரும் திரும்பி இவனையே பார்த்தார்கள். டீச்சர் மறுபடியும் பெயரை அழுத்தமாக வாசித்தபோது, எல்லோரும் “ஓ”வென்று கத்தியதில், இவன் மிரண்டு போய் நடுங்கியபடியே சொன்னான்:

“உள்ளேன் அக்கா!”

டீச்சர் உட்பட அனைவரும் வாய்வலிக்கச் சிரிக்க, அவமானத்தால் தலைகுனிந்து கொண்டான். “ஏன்தான் இங்கு வந்தோமோ?” என்றிருந்தது.

டீச்சர் ஒரு மணி நேரம் புரியாத ஆங்கிலத்தில் வளவளவென ஏதேதோ பேசி, ஏதேதோ எழுதிக்கொண்டே இருந்தாள். இவன் பராக்குப் பார்த்தான்.

இன்டர்வெல் விட்டபோது எல்லோரும் வெளியே சென்று ஐஸ்கிரீம், பிஸ்கட் என்று நிறைய வாங்கிச் சாப்பிட, இவன் வெறும் நாக்கைச் சுழற்றி எச்சிலைச் சப்புக்கொட்டிக் கொள்ள விரும்பாமல் திரும்பி வகுப்புக்குள் வந்து அமர்ந்து, டெஸ்க் மேல் குனிந்து கொண்டான். கண்களில் நீர் தேங்கி நின்று வரலாமா வேண்டாமா என்று யோசித்தது.

யாரும் இவனுடன் பேசவில்லை. மாறாகக் கூட்டம் கூட்டமாக அமர்ந்து, அவனைப் பார்த்துத் தங்களுக்குள் ஏதேதோ பேசி நக்கலாகச் சிரித்துக் கொண்டார்கள். கூனிக்குறுகிப் போனான். இதனாலேயே புரியவேண்டிய தமிழ்கூடப் புரிய மறுத்தது.

மதிய இடைவேளை முடிந்தபின் ஒரே ஒரு பீரியட்தான் நடந்தது. அதன்பின் விளையாட்டு நேரம் ஆகிவிட, எல்லோரும் மைதானத்துக்குச் சென்றார்கள். அனைவரும் விதவிதமான விளையாட்டுகளை விளையாட மரத்தடியில் சிறிது நேரம் தனியே அமர்ந்திருந்துவிட்டு கனத்த மனதுடன் பஸ்ஸுக்குத் திரும்பிவிட்டான் பெரும்படை.

வழிபூராவும் அழுதபடியே சென்றவன், வீட்டில் நுழைந்ததும் மாமா வரவேற்க... "நான் நாளைக்கே ஊருக்குப் போயி அம்மாவைப் பாக்கணும்... எனக்கு இங்கே படிக்கப் புடிக்கல... நாளைக்கே போவணும்..." என்று சொல்ல நினைத்த பெரும்படையின் மனக்கண் முன் அவன் அம்மா தோன்றினாள்.

"உங்க மாமா மாதிரி நிறைய படிச்சு நீயும் பெரிய பதவியில் ஒஹோன்னு இருக்கணும்..." என்கிற அம்மாவின் ஏக்கமான வேண்டுகோள் அவன் நினைவில் வந்து மோதியது...

கிராமத்தில் உருகிக் கொண்டிருக்கும் அம்மாவுக்காக மற்ற பையன்கள் செய்யும் எந்தவிதக் கிண்டல், கேலிகளையும் பொறுத்துக் கொள்ளத் தீர்மானித்துவிட்டான். தன்னைப் பெற்றவள் பெயரைக்கற்றவர் சபையில் போற்றிப் புகழும் வகையில் தான் உயரவேண்டும் என்ற லட்சியத்துடன் நாளைய விடியலை நோக்கி நின்றான் பெரும்படை.

ஸ்கூல் விளையாட்டு மைதானத்தில்...

மாணவர் கூட்டம் கேலியும், கூச்சலுமாக...

"ஆர் யூ நியூ டு த ஸ்கூல்...?!" என்று இங்கிலீஷில் கேட்டு அந்தக் கூட்டம் சிரிக்க...

கூட்டத்தின் நடுவே ஆட்டுக்குட்டிபோல மிரள மிரள விழித்தபடி...

"ஐ டோண்ட் நோ இங்கிலீஷ்..." வாய் குழற பதில் வந்தது...

"இதைச் சொல்ல மட்டும் இங்கிலீஷ் தெரியுமா...?!"

"டேய், போங்கடா.. புதுசா வந்த பையனை இப்படியா மிரட்டறது..." என்று அங்கு வந்த ஆங்கில ஆசிரியர் உத்தரவுப் போட...பையன்கள் கலைந்து சென்றார்கள்.

மிரண்டுபோன அவனைப் பார்த்து ஆசிரியர் "தம்பி, நீ எந்தக் கிராமத்துலேர்ந்து வறே... உன் பேரென்ன...?" என்று பரிவோடு கேட்டார்.

"என்பேரு கலியன்... சுண்ணாம்புப் பட்டி கிராமம்..." என்று சொன்னான்.

"அப்படியா... கவலைப்படாம வா என்னோட..." என்று கலியனை அணைத்தபடி அழைத்துச் சென்றார், அந்தப் பள்ளி ஆங்கில ஆசிரியர் பெரும்படை.

**பின்னிணைப்பு - 2**

# செயற்பாட்டுப் பத்திரம்

- முதல் அனுபவம் என்ற சிறு கதையின் மையக் கருத்து யாது?
- பெரும்படை, மாமா, ஏனைய மாணவர்கள் ஆகியோரின் (பாத்திரப்) பண்புகள் யாவை?
- இக்கதையில் உங்களுக்குப் பிடித்த பகுதி எது? காரணங்களுடன் விளக்குக.
- இக்கதை கூறும் படிப்பினைகள் யாவை?
- இக்கதை பற்றிய உங்களது கருத்துக்களைக் கூறுங்கள்.
- இதில் கையாளப்பட்ட வசனநடை பற்றி கூறுவார்.

**தேர்ச்சி 9.0** : அவதானமாகக் கிரகித்து எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி எழுத்துக்கள், சொற்கள் வாக்கியங்களை வழுவின்றி உரிய நிறுத்தக் குறிகளுடன் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி அலகு9.4** : எழுத்தாக்கத்தில் பொருத்தமான நுட்பங்களைப் பயன்படுத்துவார்.

**செயற்பாடு** : எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி எழுதுவோம்.

**நேரம்** : 160 நிமிடங்கள்.

**தர உள்ளீடு** :
- மாதிரிக் கட்டுரை (கல்வியின் சிறப்பு ) பின்னிணைப்பு - 1
- செயற்பாட்டுப்பத்திரம் - பின்னிணைப்பு - 2
- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்**

**படி 9.4.1**

- மாதிரிக் கட்டுரையின் தலைப்பைக் கரும்பலகையில் எழுதி பின்வரும் விடயங்கள் பற்றி மாணவர்களுடன்கலந்துரையாடுங்கள்.
  - முகவுரை
  - தலைப்பிற்கான உள்ளடக்கம்
  - பந்தி அமைக்கும் முறை
  - முடிவுரை

- பின்னர் கட்டுரைக்கான சட்டகத்தை அமைத்துக் காட்டுங்கள்.
- மாதிரிக் கட்டுரையை (பின்னிணைப்பு 1.) எல்லோருக்கும் வழங்குங்கள்.
- அக்கட்டுரைகளை கருத்தூன்றி வாசிக்கச் சொல்லுங்கள்.

பின்வரும் விடயங்களை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.

- கருத்துக்களை ஒழுங்கமைத்தல்.
- அனுபவங்கள், அவதானிப்புக்கள், எண்ணங்கள், அபிப்பிராயங்கள் ஆகியவற்றை மூலங்களாகப் பயன்படுத்துதல்.
- தலைப்பிற்குப் பொருத்தமான எழுத்தாக்கச் சட்டகத்தைப் பயன்படுத்துதல்.
- கருத்துப் புலப்பட எழுதுதல், மீள்நோக்குதல், மேலும் தேவையானவற்றைச் சேர்த்தல், தேவையற்றவற்றை நீக்கல், நிறைவாகத் திருத்தமாக எழுதுதல்.

(40 நிமிடங்கள்)

## படி 9.4.2

- மாணவரை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்கி அதில் கூறப்பட்டுள்ளபடி செயற்பட வழிப்படுத்துங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தை நினைவு செய்ய நேரம் வழங்குங்கள்.
- செற்பாட்டுப் பத்திரத்தை குழு நிலையில் முன்வைக்க தயார் செய்யுங்கள்.

(40 நிமிடங்கள்)

## படி 9.4.2

- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டுப் பத்திரத்தை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- கட்டுரைகள் தொடர்பாக ஏனைய மாணவர்களும் கருத்துக்களை முன்வைக்கத் தூண்டுங்கள்
- பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்தும் வகையில் கலந்துரையாடுங்கள்.

**விளக்கக் கட்டுரை**

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | "சுற்றாடலைத் தூய்மையாக வைத்திருப்போம்." |
| முகவுரை | : | சுற்றாடல் என்பதன் விளக்கம், சுற்றாடலுடன் நாம் கொண்டுள்ள தொடர்பு |
| பந்தி I | : | சுற்றாடலைப் பேணுவதன் அவசியம். |
| பந்தி II | : | சுற்றாடல் மாசுறுவதால் ஏற்படும் தீமைகள், சுற்றாடலைப் பாதுகாக்கும் முறைகள் |
| முடிவுரை | : | தொகுப்பு |

**வர்ணனைக் கட்டுரை**

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | "கடற்கரையில் ஒரு மாலை நேரம் " |
| முகவுரை | : | இயற்கை எழில் பற்றிய பொது விளக்கம். |
| பந்தி I | : | கடல் பற்றிய வர்ணனை |
| பந்தி II | : | கடற்கரையில் இடம்பெறும் செயற்பாடுகள் பற்றிய வர்ணனை. |
| முடிவுரை | : | தொகுப்பு |

**கற்பனைக் கட்டுரை**

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | "எனக்கு இரண்டு சிறகுகள் முளைத்தால்." |
| முகவுரை | : | "பறத்தல்" என்ற சுகமான அனுபவம் பற்றிய பொது விளக்கம். |
| பந்தி I | : | சிறகுகள் முளைத்தவுடன் ஏற்பட்ட மன மகிழ்ச்சி. |
| பந்தி II | : | பறந்த போது ஏற்பட்ட அனுபவம். |
| முடிவுரை | : | தொகுப்பு |

**தற்சார்புக் கட்டுரை**

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | "ஒரு பழைய சப்பாத்து தன் கதையைக் கூறுகிறது." |
| முகவுரை | : | நான் இப்போது ஓர் அறையின் மூலையில் ஒதுங்கிக் கிடக்கும் நிலை யாரும் தேடுவாரின்றிச் கிடக்கும் நிலை. பற்றிய விளக்கம். |
| பந்தி I | : | முதன் முதல் தான் உருவான காலம்/பயணம் செய்து கடையில் விற்பனைக்கு வந்து, ஒருவரால் வாங்கிச் செல்லப்பட்டு, பெருமையோடு பயன்படுத்தப்பட்ட நிலைமை பற்றிய விளக்கம். |
| பந்தி II | : | எதிர்காலம் பற்றிய எதிர்பார்ப்பு ஒரு விளக்கம். |
| முடிவுரை | : | தொகுப்பு. |

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்.**

- கருத்துக்களை ஒழுங்கமைத்து எழுதும் திறனைப் பெறுவார்.
- அனுபவங்கள், அவதானிப்புக்கள், எண்ணங்கள், அபிப்பிராயங்கள் ஆகியவற்றை மூலங்களாகப் பயன்படுத்தி எழுதும் ஆற்றலை வளர்த்துக் கொள்வார்.
- தலைப்பிற்குப் பொருத்தமான எழுத்தாக்கச் சட்டகத்தைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்றை எழுதுவார்.
- திருத்தமான ஓர் ஆக்கம் எழுதும் திறனைப் பெறுவார்.

பின்னிணைப்பு: - 1

# கல்வியின் சிறப்பு

உலகில் இருவகைச் செல்வங்கள் உள்ளன. ஒன்று கல்விச் செல்வம், மற்றையது பொருட்செல்வம். பொருட்செல்வம் பிறருக்குக் கொடுக்குந் தோறும் குறைவுபடும். நீராலும் நெருப்பாலும் அழியக் கூடியது. பிறரால் கவரக் கூடியது. ஆனால் கல்விச் செல்வமோ அழிவற்றது. நீராலோ, நெருப்பாலோ அழியாது. கள்வரால் களவாடமுடியாதது. பிறருக்குக் கொடுக்கும் தோறும் பெருகிக் கொண்டே செல்லும். இதனாற்றான் கல்விச் செல்வத்துக்கு நிகரான செல்வம் வேறில்லை என்று நம்முன்னோர் போற்றினர்.

மனிதரிடத்துள்ள அறியாமையைப் போக்கி அறிவு ஒளி. ஊட்டுவது கல்வி. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு. கற்றறிந்தவனே கண்ணுடையவனெனக் கருதப்படுவான். “எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்” என்று நம் முன்னோர் கூறியுள்ளனர்.

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் கற்க வேண்டியவற்றைக் கற்று கற்ற நெறிப்படி ஒழுகவேண்டும். இதனையே திருவள்ளுவரும்:

“கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக” என்றார்

கற்கவேண்டியவற்றை நாம் கருத்தூன்றிக் கற்க வேண்டும். கற்க வேண்டிய பருவத்திற் கற்கவேண்டும். இளமையிற் கற்பதே சிறந்த செயலாகும். “இளமையிற் கல்வி சிலையில் எழுத்து” என்னும் முதுமொழியை நாம் மறக்கக் கூடாது. எல்லாவித அழகுகளிலும் ஒருவனுக்குக் கல்வி அழகே சிறந்த அழகாகும். இக்கல்வி அழகினைப் பெறுதற்கு நாம் சலியாது முயற்சிக்க வேண்டும்.

கற்பதற்கு வயதுக் கட்டுப்பாடே இல்லை. வாழ்நாள் முழுவதுமே கற்கலாம். “பாடை ஏறினும் ஏடது கைவிடேல்” என்னும் கூற்றை நாம் மறக்கக்கூடாது. அழியாத செல்வமான கல்விச் செல்வத்தைப் பெற்று இவ் வையத்து வாழ்வாங்கு வாழ நாம் முயற்சிப்போமாக.

த. துரைசிங்கம்
மாணவர் கட்டுரைகள்

**பின்னிணைப்பு - 2**

# செயற்பாட்டுப்பத்திரம்

- ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு தலைப்பினை வழங்குங்கள்.

1. சுற்றாடலைத் தூய்மையாக வைத்திருப்போம். (விளக்கக் கட்டுரை)
2. கடற்கரையில் ஒரு மாலைப் பொழுது ( வருணனைக் கட்டுரை)
3. எனக்கு இரண்டு சிறகுகள் முளைத்தால் ( கற்பனைக் கட்டுரை)
4. பழைய சப்பாத்து ஒன்றின் கதை ( தற்சார்புக் கட்டுரை)

# மூன்றாம் தவணை

தேர்ச்சி 1.0 : பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்குமேற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார்.

தேர்ச்சி அலகு1.4 : பாடத்தைக் கேட்டுக் கிரகித்துக் கருத்துக்களைக் கூறுவார்.

செயற்பாடு : 'சிங்கமும் சுண்டெலியும்' என்ற கதைப் பாடலைக் கேட்டுக் கிரகித்துக் கருத்துக்களை முன்வைப்போம்.

நேரம் : 160 நிமிடங்கள்

உள்ளீடு :
- கதைப் பாடல் பிரதி - பின்னிணைப்பு 1
- செயற்பாட்டுப்பத்திரம் - பின்னிணைப்பு 2
- எழுதுகருவிகள்
- எழுதுதாள்கள்

றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

1.2.1

- மாணவர்கள் விரும்பிய சில பாடல்களை அல்லது பாடலடிகளை பாட வையுங்கள்.
- அவற்றுள் கதையோடு தொடர்புடைய பாடல்கள் இருப்பின் முழுமையாகப் பாட விடுங்கள்.

**அல்லது**

- ஆசிரியர் பின்வரும் பாடலைப் பாடலாம்.

பாட்டியின் வீட்டுப் பழம்பானை - அந்தப்
பானை ஒருபுறம் ஓட்டையடா!
ஓட்டை வழியொரு சுண்டெலியும் - அதன்
உள்ளே புகுந்து நெல் தின்றதடா!?

- இப்பாடலுடன் தொடர்பான சில வினாக்களை வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கும் விதத்தில் கலந்துரையாடுங்கள்.

- அவதானமாகச் செவிமடுத்தல்.
- நேர்த்தியாகச் செவிமடுத்தல்.
- உச்சரிப்பு, தொனி, வேறுபாடுகளை உன்னிப்பாகக் கேட்டுக் கிரகித்தல்.
- அதே தொனி உச்சரிப்பு, பாவனைகளுடன் மீண்டும் தாம் பாடக் கூடிய வகையில் நல்லதொரு கேட்போனாகச் செவிமடுத்தல்.
- கேட்டுக் கிரகித்தவற்றை பகுத்து நோக்குதல்.
- பழமொழிகள், உவமைகள், அருஞ்சொற்களை இனங்கண்டு பயன்படுத்தல்
- கேட்டுக் கிரகித்தவற்றைப் பல்வேறு தேவைகளுக்கும் பிரயோகித்தல்.

(10 நிமிடங்கள்)

## படி 1.4.2

- மாணவர்களைச் சோடிகளாக்கி எதிரெதிராக அமரச் செய்யுங்கள்.
- கதைப் பாடல் பிரதிகளை இருவரில் ஒருவருக்கு வழங்குங்கள்.
- அடுத்தவருக்கு செயற்பாட்டுப் பத்திரம் Iஇனை வழங்குங்கள்.
- மற்றவர் கதைப் பாடலை ஓசை நயத்துடன் பாட, வாசிக்கச் செய்யுங்கள்.
- அடுத்தவர் செயற்பாட்டுப் பத்திரத்திற்கு விடை எழுதுமாறு வழிகாட்டுங்கள்.

(15 நிமிடங்கள்)

## படி 1.4.3

- மாணவர்கள் சோடிகளாகவே விடையை ஒப்பிட்டுப் பார்க்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்
- பின்வரும் விடைகளை அமைக்குமாறு தெளிவுபடுத்துங்கள்.

1. சிங்கமும் சுண்டெலியும்.
2. சுண்டெலி சிங்கத்தின் அயலில் மகிழ்ந்து வந்து துள்ளி விளையாடியது.
3. சுண்டெலி - ஏழை அல்லது தாழ்ந்தவன்
4. - நாம் ஒருவரையும் துன்புறுத்தல் கூடாது.
   - ஒருவருக்கு உதவி செய்தால் அவர் எங்களுக்கு வேறொரு சந்தர்ப்பத்தில் உதவுவார்.
5. சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்.

(20 நிமிடங்கள்)

## படி 1.4.4

- மாணவர்களை ஐந்து அல்லது ஆறு பேர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- கதைப் பாடலைப் பாடிக் காட்டுங்கள்.
- மாணவரைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- மாணவரையும் சேர்ந்து பாட வழிப்படுத்துங்கள்,
- செயற்பாட்டுப் பத்திரம் IIஐ வழங்குங்கள்.

(40 நிமிடங்கள்)

## படி 1.4.4

- ஒவ்வொரு குழுவும் தத்தமது அறிக்கைகளை முன்வைப்பதற்கு வாய்ப்பளியுங்கள்
- வேறுபட்ட கருத்துக்கள் இருப்பின் மாணவர்களே அவற்றைக் கூறுவதற்குத் தூண்டுங்கள்
- பின்வரும் விடயங்களை விளக்கிக் கலந்துரையாடுங்கள்.

- ◆ அரும் பதங்களும் பொருள்களும்.
  - சிந்தை நோதல் - மனம் வருந்துதல்
  - அஞ்சி ஒடுங்கி நடுங்கல் - பயந்து ஒதுங்குதல்.
  - அடியேன் எளியேன் - அடியவன் தாழ்ந்தவன்
  - தியங்கி - சோர்வெய்தி

- ◆ ஒத்த கருத்து, எதிர்க் கருத்துச் சொற்கள்

  உதாரணம் : உறக்கம் - நித்திரை ( ஒத்தகருத்து)
  விழிப்பு (எதிர்க்கருத்து)

  சினம் - கோபம் (ஒத்தகருத்து)
  - சாந்தம் (எதிர்க்கருத்து)

- ◆ கதைப் பாடலோடு தொடர்புடைய பழமொழிகள்

  உதாரணம் : சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்
  ஆணைக்கும் அடிசறுக்கும்.

- ◆ உவமைகளை அடையாளங் காணுதல்.

  எளியர் - ஏழை - சுண்டெலி

- ◆ விழுமியக் கருத்துக்கள்
  - நாம் ஒருவரையும் துன்புறுத்தக் கூடாது.
  - நாம் ஒருவருக்கு உதவி செய்தால், அவர் எங்களுக்கு வேறொரு சந்தர்ப்பத்தில் உதவுவார்.
  - ஒருவரையும், நலிந்தோர் என்று புறக்கணிக்கக் கூடாது.

போன்ற கருத்துக்களைக் கலந்துரையாடலாம்.

(25 நிமிடங்கள்)

## படி 1.4.6

- அதே குழுக்களை மைதானத்தில் அல்லது திறந்தவெளியில் ஒன்று கூடச் செய்யுங்கள்
- சிங்கமும் சுண்டெலியும் என்ற கதைப் பாடலை குழு நிலையில் பாடிப் பயிற்சி பெற வையுங்கள்.
- பாடலின் இசைக்கும், பொருளுக்குமேற்ப அசைய வழிப்படுத்துங்கள்.
- நாடகப் பாங்கிலும் செய்யலாம் என்று ஆலோசனை வழங்குங்கள்.

(20 நிமிடங்கள்)

படி 1.4.7

- ஒவ்வொரு குழுவும் தத்தமது செயற்பாட்டை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- ஒரு குழு செயற்பாட்டைச் செய்யும் போது ஏனையோர் பார்வையாளராகச் செயற்படலாம்.
- எல்லாக் குழுக்களும் செயற்பாட்டினை முன்வைத்த பின் மாணவர்கள் அபிப்பிராயங்களை கூறுவதற்கு சந்தர்ப்பம் அளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை கலந்துரையாடலின் போது தெளிவுபடுத்துங்கள்.

| |
|---|
| ◆ பாடலை இசையோடு பாடுதல்.<br>◆ பாடலுக்கேற்ற அசைவு<br>◆ மாணவர் ஒருமைப்பாடு<br>◆ மனனம்<br>◆ சந்தர்ப்பத்திற்கேற்ப சிறந்த வெளிப்பாடு<br>◆ பாத்திரத்திற்கேற்ற நடிபங்கு |

(30 நிமிடங்கள்)

# கணிப்பீடும் மதிப்பீடும்

- பாடலைக் கிரகித்துப் பொருளை முன்வைப்பார்.
- பாடலின் அரும்பதங்களை இனங்கண்டு பொருளைக் கூறுவார்.
- வாழ்க்கைக்குத் தேவையான விழுமியப் பண்புகளை எடுத்துரைப்பார்.
- கதைப் பாடல்களை தேடிப் பெற்று இன்புறுவார்.

பின்னிணைப்பு - 1

## சிங்கமும் சுண்டெலியும்

1. சிங்க மொன்று மரத்து நிழலில்
 தியங்கி உறக்கம் கொண்டது.
சிறிய சுண்டெலி அயலில் மகிழ்ந்து
 திரிந்து விரைந்து வந்தது.

2. சிங்க மீது துள்ளி விழுந்து
 சிந்தை நொந்து வாடிற்று
சிங்க மெழுந்து கொல்ல நினைந்து
 சினந்து நசுக்க வோடிற்று,

3. அஞ்சி ஒடுங்கி நடுங்குஞ் சுண்டெலி
 ஐய ! பொறுக்க வேண்டினேன்
அடியென் எளியென் அருளை மறவேன்
 அதிக மதிகம் வாடினேன்.

4. நெஞ்சில் வருத்தம் மிஞ்ச விரைந்து
 கெஞ்சு மென்னை விடுகுவாய்
 நினது நன்றியை நினைந்து நினக்கும்.
 உதவி செய்குவ னறிகுவாய்.

5. என்று படியில் விழுந்து பணிய
 இரங்கி, ஏழையே ஓடுவாய்
இனிக் குழப்படி ஒருத் தருக்கும் நீ
 இயற்றா திருக்க நாடுவாய்.

6. என்று சிங்க மியம்பச் சுண்டெலி
 எழுந்து வளைக்குட் புகுந்தது.
இரவி லிரையை விரும்பிச் சிங்கமும்
 எழுந்து காட்டுட் புகுந்தது.

7. வேடர் விரித்த வலையிற் சிங்கம்
 விரைந்து சிக்கியே நொந்ததே
மிகுந்த முழக்கம்கேட்டு வெளியில்
 விரைந்து சுண்டெலி வந்ததே.

8. நாடி யென்றன் உயிரைக் காத்த
 நல்ல சிங்கம் ஈதென்றே
நன்னி நன்னி வலையை யறுத்து
 நயந்து விடுத்த தேநன்றே

9. சிறிய ராலும் பெரிய உதவி
 சிந்தை மகிழ மேவுமே
சிறியர் பிழையைப் பெரியர் பொறுத்தல்
 சிறந்த செய்கையாகுமே..

**பின்னிணைப்பு - 2**

## செயற்பாட்டுப் பத்திரம் -I

1. கதைப்பாடலில் தரப்பட்டுள்ள இரு பிராணிகளும் எவை?
2. சுண்டெலி சிங்கத்தின் அயலில் வந்து என்ன செய்தது?
3. பாடலில் வந்துள்ள உவமைகளை எழுதுக.
4. இப்பாடலைப் பாடியதும் உமது மனதில் தோன்றும் எண்ணம் யாது?
   இக்கதைப் பாடலுக்குப் பொருத்தமான பழமொழிகளை எழுதுக.

## செயற்பாட்டுப் பத்திரம் II

1. பாடலிலுள்ள அரும்பதங்களையும் அவற்றின் பொருள்களையும் அட்டவணைப்படுத்துக.
2. பாடலில் வருகின்ற சொற்களுக்குப் பொருத்தமான ஒத்தகருத்து, எதிர்க்கருத்துச் சொற்களை அட்டவணைப்படுத்துக.
3. பாடலோடு தொடர்புடைய பழமொழிகளை எழுதுங்கள்.
4. பாடலில் வந்துள்ள உவமையை விளக்குங்கள்
5. பாடல் கூறும் விழுமியக் கருத்துக்களை எழுதுங்கள்.

**தேர்ச்சி 8.0** : விருப்பத்திற்கேற்ப வாசிப்பார்.

**தேர்ச்சி அலகு 8.1** : இரசனைக்காகப் பல்வேறு ஆக்கங்களை வாசிப்பார்.

**செயற்பாடு** : (அ) நாட்டார் பாடல், கவிதை நாடகம் என்பவற்றை வாசித்து இரசிப்போம்.
(ஆ) நாட்டார் பாடல்களைத் தேடித் தொகுப்போம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்.

**தர உள்ளீடு** :
- நாட்டார் பாடல் - பின்னிணைப்பு - 1
- கதைப் பாடல் - பின்னிணைப்பு - 2
- செயற்பாட்டுப்பத்திரம் - பின்னிணைப்பு - 3
- எழுதுதாள்
- அகராதி

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்**

**படி 8.1.1**

- பாடலொன்றை கரும்பலகையில் அல்லது காட்சிப்பலகையில் காட்சிப்படுத்தி மாணவரொருவரை ஓசையுடன் பாடச் சொல்லுங்கள்.
- பாடலைப் படிக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை? என மாணவருடன் வினவிக் கலந்துரையாடுங்கள்.

பின்வரும் விடயங்களை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.

- பாடலின் மையக் கருத்து
- பாடலில் கூறப்பட்டுள்ள ஏனைய கருத்துக்கள்.
- பாடலின் சிறப்பு (அணிகள், ஓசை)
- படிப்பினைகள்
- பாடலைப் படிக்கும் போது மெய்ப்பாட்டுணர்வு தோன்றப் படித்தல்.
- ஓசையுடன் படித்தல்.
- ஏனைய பாடல்களைத் தேடிப் படித்தல்.
- திருப்திக்காகப் படித்தல்.
- மகிழ்ச்சிக்காகப் படித்தல்.

(20 நிமிடங்கள்)

## படி 8.1.2

- மாணவரை ஐந்து குழுக்களாகப் பிரியுங்கள்.
- நாட்டார் பாடலையும், கதைப் பாடலையும் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- நாட்டார் பாடலையும், கதைப் பாடலையும் மெய்ப்பாட்டுணர்வு தோன்ற ஓசையுடன் பாடிப் பழக வழிகாட்டுங்கள்.
- குழுக்களிடையே சென்று மாணவர்களை உற்சாகப்படுத்துங்கள்.
- இடைக்கிடை மாணவர்களுடன் இணைந்து மெய்ப்பாட்டுணர்வு தோன்றப்பாடுங்கள்.
- செயற்பாட்டுப்பத்திரத்தை குழுக்களுக்கு வழங்கி, அறிக்கையைத் தயார்ப்படுத்த அறிவுறுத்துங்கள்.

(60 நிமிடங்கள்)

## படி 8.1.3

- ஒவ்வொரு குழுவும் தமது அறிக்கையை முன்வைக்க வழிப்படுத்துங்கள்.
- ஏனைய குழுக்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்க உற்சாகப்படுத்துங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

(01) (அ) 1. மாமி, பாட்டி, ஆச்சி, அண்ணா
2. குழந்தையை நித்திரையாக்கும் சந்தர்ப்பத்தில் பாடப்படுகிறது.
3. ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ
4. நுங்கு, மாம்பழம், குஞ்சரம்
5. - மகிழ்ச்சி, குதூகலம், மனத்திருப்தி ஏற்படுகின்றது.
- தாய்ப்பாசத்தை உணர்த்துகின்றது.

(ஆ) 1. சோமசுந்தரப் புலவர் யாழ்ப்பாணத்திலுள்ள நவாலியூரிலே பிறந்தார்.

2.

| | | |
|---|---|---|
| ஈயும் | - | கொடும் (கொடுங்கள்) |
| மோசம் | - | கெடுதி |
| அல்லாதன | - | வேண்டாதன |
| மாது | - | பெண் |
| விண் | - | ஆகாயம் |
| ஆவி | - | உயிர் |
| சேய் | - | குழந்தை |
| கண்டம் | - | தொண்டை |
| கூற்றுவன் | - | இயமன் |
| சல்லாபம் | - | கூடிக்கதைத்தல் |
| நாசம் | - | அழிவு |
| வண்ணம் | - | நிறம் |
| சால | - | மிக |

3. (அ) தாய் எலி, சேய் எலி, பூனை, சேவல்

1.தாய் எலி - சேய் எலிக்குத் தவறைச் சுட்டிக் காட்டித் திருத்தியது.
2.சேய் எலி - தாய் எலியின் கூற்றை மறுத்து வெளியில் சென்றதால் ஆபத்தை எதிர்நோக்கியது.
3.பூனை - சேய் எலியைப் பிடித்துண்ண நினைத்த பூனையின் செயல், சேவல் கூவியதால் நிறைவேறவில்லை.
4.சேவல் - களவு பொல்லாதது என்று உண்மையைப் பூனைக்குக் கூறியது.

4. "பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு"

5. "வெளியிலே சென்று உலாவி வருதலே சேய் எலியின் ஆர்வமாகும்."

6. "ஆபத்து உண்டாகும் என்பதனாலேயே தாய் எலி தடுத்தது."

7. "தாய் சொல்லைத் தட்டக் கூடாது."

8. "பெரியோர் சொல்லை மதிக்க வேண்டும். "

## கணிப்பீடும் மதிப்பீடும்

- பாடல்களின் சிறப்பு பற்றி விளக்குவார்.
- பாடல்களின் மையக் கருத்தை எடுத்துக் காட்டுவார்.
- பாடல்களில் கூறப்பட்ட விடயங்களைக் கூறுவார்.
- நாட்டார் பாடல்களைத் தேடித் தொகுப்பார்.
- மொழியறிவை விருத்தி செய்வார்.
- இரசனையை வளர்த்துக் கொள்வார்.
- பாடல்களை மெய்பாட்டுணர்வு தோன்ற ஓசையுடன் பாடுவார்.

## மேலதிகச் செயற்பாடுகள்.

- குழுக்களாக இயங்கி அவ்வப் பிரதேசங்களில் வழங்கும் நாட்டார் பாடல்களைத் தேடி எழுதச் சொல்லுங்கள் தாம் தேடிக்கொணர்ந்த நாட்டார் பாடல்களை அவற்றின் தன்மைக்கேற்ப ஒழுங்குபடுத்தி புத்தக வடிவில் அமைக்க வழிப்படுத்துங்கள்.

- ஒவ்வொரு குழுவும் அப்பாடல்களை ஓசையுடன் பாட வழிசெய்யுங்கள்.

- பாடல்களின் சிறப்பு பற்றியும், ஓசைச் சிறப்பு பற்றியும் மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

**பின்னிணைப்பு 1**

**நாட்டார் பாடல்கள் - தாலாட்டுப் பாடல்**

## அணில்கோதா மாம்பழம்

1. ஆராரோ ஆரிவரோ ஆரிவரோ
   ஆரடிச்சோ நீயழுதாய் அரிய கண்ணால் நீர் வழிய
   அடிச்சாரைச் சொல்லியழு ஆக்கினைகள் பண்ணிவைப்போம்.

2. மாமி அடிச்சாளோ மல்லிகைப்பூச் செண்டாலே?
   பாட்டி அடிச்சாளோ பால்வார்க்குஞ் சங்காலே?

3. ஆச்சி அடிச்சாளோ அமுதூட்டுங் கையாலே?
   அண்ணா அடிச்சானோ அரைஞாண் கயிற்றாலே

4. ஆண்பனையில் நுங்கே! அணில் கோதா மாம்பழமே!
   கூப்பிட்டு நான் கேட்பேன் குஞ்சரமே கண்வளராய்

**பின்னிணைப்பு 2**

## எலியும் - சேவலும்
## கவிதை நாடகம்

**நடிப்பவை :** **தாய் எலி, சேய் எலி, பூனை, சேவல்**

### முதலாங் காட்சி
### பாட்டு

சேய் எலி :

வெய்யிற் கொடுமையம்மா,
மேனி வியர்க்குதம்மா,
பைய உலாவிவரப்
பரிந்து விடை தாருமம்மா

பொல்லாத வெப்பமம்மா,
புழுங்கியவி யுதம்மா,
மெல்ல உலாவிவர,
விரும்பிவிடை ஈயுமம்மா.

தாய் எலி :

ஆசை மிகுந்தமைந்தா,
அன்பான கண்மணியே,
மோசம் வரும் மகனே,
முற்றத்திலும் போக வேண்டாம்.

பொல்லாத துட்டர் மைந்தா,
புறத்தே பதுங்கி நிற்பர்.,
அல்லாதன புரிவார்,
ஐயாநீ போக வேண்டாம்.

சேய் எலி :

ஆண்பிள்ளை நானலனோ,
அன்னாய், பயமுனக்கேன்?
வீண்பிள்ளை யாக்காதே,
விடையருளிச் செய்யுமம்மா!

கும்பிட்டேன் அன்னையுன்னை,
குறுக்கேநீ மறிக்காதே
வெம்பிப் புழுங்குமிங்கு,
வெளியேபோய் வருவேனம்மா.

## உரை

தாய் எலி : மகனே, "பெற்ற மனம் பித்து, பிள்ளை மனங் கல்லு" என்பது போலபிடிவாதமாய் நிற்கிறாய். சரி நீ நினைத்தபடி,

## பாட்டு

போய்வருவாய் என்மகனே,
புத்தியுடன் பத்திரமாய்,
நீ திரும்பு மவ்வளவும்
நின்றுவழி பார்த்திடுவேன்.
போய்வருவாய்

## இரண்டாம் காட்சி

## பாட்டு

சேய் எலி : தொங்கிச் சுவரிற் குதிப்பேன் - மிகத்
துரிதமாக ஓடித் துள்ளி மிதிப்பேன்.
அங்குமிங்குமாக நடப்பேன் - சுவைத்து
அருந்து முணவை மணந்து பிடிப்பேன்.

ஆனந்தமான வெளிச்சம் - மகிழ்
வாக வுலாவுதற் கணுகுமோ வச்சம்?
தேனுந்து மாமலர் வாசம் - வரும்
சில்லென்று தென்றலும் மிகுந்தவுல்லாசம்.

அடுக்களைப் புறத்திலே ஓடி - அங்கே
அப்பமும் வெண்ணெயு மருந்துவேன் தேடி
எடுத்துக் கடித்துக் கொண்டு - மிக
இன்புறுவே னோடி யன்னையைக் கண்டு.

## மூன்றாங் காட்சி
### பாட்டு

பூனை : மாஅயோ, மாஅயோ...
மாஅயோ, மாஅயோ...

முள்ளெலும்பு நோக
முதுகு மிக வலிக்க
உள்ளம் நடுநடுங்க
ஓங்கி யடித்தாளே
மாஅயோ...

மெத்த வலிப்பெடுக்க
மேனி நடுநடுங்க
மத்தா லடித்தாளே
மனமிரங்கா மாபாவி-
மாஅயோ...

மெய்யொடிய மத்தால்
வெடுக்கென் றடித்தவள்தன்
கையொடிந்து மெத்தக்
கலங்காளோ மாபாவி-
மாஅயோ...

சேவல் : பூனையரே, பூனையரே
புத்திமிகக் கலங்கிப்
பாதிவிழி மூடிப்
பாடுகிறீர் காரணமென்?

காலைநக்கி நக்கியிரு
கண்ணுமுக முந்துடைத்து
வாலைக் குழைத்தனுங்க
வந்த வருத்தமென்ன?

பூனை : சட்டியிற் காய்ச்சிய பாலை - தோய்த்துச்
சமையற்காரி வைத்தாள் உறியதன் மேலே
எட்டிப் பரண் மேலே தாவி - குதித்
தேறினேன் உறியினில் இனிதாக மேவி.

(தோய்த்து - தயிருக்காக உறையிட்டு)

பார்க்கப் பார்க்கப் பசிமீறும் - பசும்
பாலின் மணத்தினால் வாய்மிக வூறும்
ஆர்க்குங் காணாமலங் கிருந்தே - வெகு
ஆனந்த மாயுண்டேன் அமுதொத்த விருந்தே.

காண்பார்க ளென்று நினைத்தே - இரு
கண்களை மூடியென் நாவை நனைத்தே
மாண்பாக யானுண்ணும் போது - அங்கே
வந்தாளே அந்த மடைக்குல மாது

சத்தப் படாமலே வந்து - மேலே
தங்கி யருந்துங் களவினைக் கண்டு
மத்தா லடித்தாளே பாவி - உடல்
வலிக்குதே ஐயையோ! மறுகுதே யாவி.

சேவல் : ஐயோ! களவு பொல்லாதது - அதை
அறியாது செய்ததால் வந்ததே தீது
மெய்யா யடாது செய்தோரே - மிக
வெம்பிப் படாது படுவார்கள் நேரே.

பூனை : பொல்லாது சூதொடு வாதும் - என்று
புத்தி சொல்லவந்தீர் போமினிப் போதும்
நல்லாய்ப் பசிக்குது காணும் - இனி
நானங்குப் போயிரை தேடுதல் வேணும்.

## நாலாங் காட்சி

### உ_ரை

பூனை : ஓகோ, அங்கே ஓர் எலி வருகின்றது. அதை மெல்லப் பதுங்கிப் பிடித்து உண்ணல் வேண்டும்.

### பாடல்

எலியே நீ வருவாய் ...
எனக்கிரையாகவே வருவாய்
நலியா தென் பசி...
நானுனைத் தின்னுவேன்
எலியே நீ வருவாய்.

உ_ரை

பூனை எலியைப் பிடிக்கப் பாயும் போது சேவல் கூவுகின்றது.

சேவல் :

கொக்க றொக்கோஓ
கொக்க றொக்கோஓ கூஉ...
மிக்க வெயில்
இக்கணமே போஓஓ..

விண்ணும் மண்ணும்
மூடியிருள் வாஅஅ....
கொக்கறொக்கோ...
கொக்க றொக்கோஓ கூஉ.....

### உ_ரை

எலி பயந்து தாயைக் கூப்பிட்டுக் கொண்டு ஓடுகிறது.

தாய் எலி :

அன்பு மிகுந்த என் செல்வா - என்ன
ஆபத்து நேர்ந்த தறிந்திடச் சொல்வாய்
என்பு முறிந்திட வோடி - இங்கே
இரங்கியே வந்தனை யேங்கியே வாடி

சேய் எலி : கொண்டையி லிரத்தந் தோய்ந்த
கூரிய வாளொன் றுண்டு
கண்டத்தி லிரண்டு கத்தி
கட்டியே தூங்கு மம்மா
சண்டைசெய் வீரன் போலச்
சடசடவென்ற டித்து
விண்டது பெரிய சத்தம்
மெய்ம்மறந் தறிவு சோர்ந்தேன்.

விடுவிடு என்று கைதட்டி - அம்மா
வினாவிசைச் குறிபோற் கழுத்தை வளைத்துக்
கொடுமைசெய் கூற்றுவன் போல - வந்து
கூவினதே ஒரு பொல்லாப் பிராணி.

அல்லாது போனால் என்னம்மா - நான்
அருமை யானவோர் தோழனைக் கண்டு
நல்லசல் லாபஞ் செய் வேனே - அதை
நாசப் படுத்திய தேயப்பி ராணி

**உரை**

**என்ன ஓர் அருமையான பிராணி. பஞ்சுபோல மெதுமையான மயிர். பளிங்கு போல இரண்டு கண்கள். சத்தப்படாமல் என்னை இருந்து பார்த்துச் சிரித்து. என்னோடு ஏதோ பேச எழும்பியது. அடடா! அந்த நேரத்தில் செவ்வரத்தம் பூப் போலத் தலையையுடைய பொல்லாத பிராணி சத்தஞ் செய்து வெருட்டிவிட்டதம்மா!**

**தாய் எலி : கண்மணி போன்ற மகனே! - நீ
கண்டு பயந்ததை நன்றுரை செய்யின்
வண்ண முடையசேவல் - ஒரு
வஞ்சகமு மில்லாநல்ல செஞ்சொற் சேவல்.**

**மற்றப் பிராணி மகனே! எம்மை
மறைவி லிருந்து பிடித்துண்டு மகிழும்.
குற்ற முடைய பூனை - அதன்
கோலத்தினால் மயங்கல் சாலத் தவறே.**

**- நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர்**

பின்னிணைப்பு - 3

## செயற்பாட்டுப் பத்திரம்

(1) (அ) (1) "அணில் கோதா மாம்பழம்" என்ற தலைப்பில் அமைந்த பாடலில் குறிப்பிடப்படும் குடும்ப அங்கத்தவர்களைக் குறிப்பிடுக.

(2) இப்பாடல் எச்சந்தர்ப்பத்தில் பாடப்படுகின்றது?

(3) தாய் எவ்வாறு ஓசை கூட்டி குழந்தையைத் தாலாட்டுகிறாள்?

(4) குழந்தையை எவ்வாறெல்லாம் தாய் விளித்துப் பாடுகின்றாள்?

(5) இத்தாலாட்டுப் பாடலைப் பாடும் போது எத்தகைய உணர்வு ஏற்படுகிறது.

(ஆ) (1) எலியும் சேவலும் என்ற கவிதை நாடகத்தை எழுதியவர் யார்? அவர் எந்த ஊரில் பிறந்தார்?.

(2) பின்வரும் சொற்களுக்குப் பொருள் தருக.

| | |
|---|---|
| ஈயும் | சேய் |
| மோசம் | கண்டம் |
| அல்லாதல | கூற்றுவன் |
| மாது | சல்லாபம் |
| விண் | நாசம் |
| ஆவி | வண்ணம் |
| சால | |

(2) "எலியும் சேவலும்" எனும் கவிதை நாடகத்தில் இடம் பெறும் பாத்திரங்களைக் குறிப்பிட்டு அவற்றின் பண்புகளை எழுதுங்கள்.

(3) கவிதை நாடகத்தில் இடம்பெறும் பழமொழி எது?

(4) சேய் எலிக்கு விருப்பமான செயல் எது?

(5) சேய் எலியை வெளியே செல்லவிடாது ஏன் தாய் எலி தடுத்தது?

(6) கவிதை நாடகத்தில் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய படிப்பினைகள் யாவை?

**தேர்ச்சி 9.0** : அவதானமாகக் கிரகித்து, எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி எழுத்துக்கள், சொற்கள் வாக்கியங்களை வழுவின்றி உரிய நிறுத்தக் குறிகளுடன் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி அலகு 9.3:** வாசித்து கிரகித்து எழுதுவார்.

**செயற்பாடு** : "எறும்பு" என்ற கவிதையை வாசித்து கிரத்து எழுதுவோம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்.

**தர உள்ளீடு** :
- "எறும்பு" கவிதை பின்னிணைப்பு - 1
- செயற்பாட்டுப் பத்திரம் பின்னிணைப்பு - 2
- எழுதுதாள்கள்.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்**
**படி 9.3.1**

நாய் தொடர்பான பின்வரும் பாடலை கரும்பலகையில் எழுதி, அல்லது காகித அட்டையில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

"வீட்டுவாசல் காப்பவன்
வேட்டையாட வல்லவன்.
ஆட்டுக்கிடைப் பாண்டியன்
அன்புமிக்க தோழன்

உண்டசோற்றை எண்ணி
உயிரும் விடத் துணிபவன்.
மண்டலத்தில் நாய் போல்
வாய்த்த துணை உண்டோ"

- கவிமணி -

- இப்பாடல் எதை / யாரைப் பற்றிக் கூறுகிறது?
- இப்பாடலில் கூறப்பட்டுள்ள விடயங்கள் யாவை?
- நாம் பெறக் கூடிய படிப்பினைகள் எவை?

இவ்வாறான வினாக்களை வினவி, பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- பிரதான கருத்து, துணைக் கருத்து
- கதாபாத்திரத்தின் பண்புகள்
- படிப்பினைகள்
- விழுமியங்கள்
- அபிநயத்துடன் பாடுதல்

(10 நிமிடங்கள்)

## படி 9.3.2

- மாணவரை நான்கு பேர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- பிரதி செய்யப்பட்ட "எறும்பு" கவிதைப் பிரதியை வழங்குங்கள்.
- ஒருவர் வாசிக்க ஏனையோரைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- தொடர்ந்து குழுவிலுள்ள அனைவரையும் மௌனமாக கவிதையை வாசிக்கச் செய்யுங்கள்.
- அதன் பொருளைக் கலந்துரையாடச் செய்யுங்கள்.
- கருத்து, துணைக்கருத்துக்கள் விழுமியங்கள் போன்ற விடயங்களையும் கலந்துரையாட சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தை தனித்தனியாக வழங்கி செயற்பட வழிகாட்டுங்கள்.

(30 நிமிடங்கள்)

## படி 9.3.3

- மாணவரை வகுப்பு நிலையில் அமரச் செய்யுங்கள்.
- சில மாணவர்களை எழுமாற்றாக முன்வரச் செய்து செயற்பாட்டுப் பத்திர விடைகளை வாசிக்கச் செய்யுங்கள்.
- விடைகள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

கலந்துரையாடும் போது பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொள்ளுங்கள்.

- மையக் கருத்து
- வினாக்களுக்குப் பொருத்தமான விடை
- பாடலில் நயந்தவற்றை கூறுதல், எழுதுதல்.
- எறும்பின் குண இயல்புகள்
- அதன் வாழ்க்கை முறை
- அதன் வாழ்வில் இருந்து நாம் பெறக் கூடிய படிப்பினைகள், சுறுசுறுப்பு, செயற்படும் தன்மை, சேமிப்பு, விடாமுயற்சி, மனம் தளராமை, ஒத்து இயங்குதல்.

(30 நிமிடங்கள்)

## படி 9.3.4

- மாணவரை ஐந்து பேர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- குழுவாக்க கலந்துரையாடி ஒரு பிராணியைத் தேர்ந்தெடுக்கச் செய்யுங்கள்.
- தான் தேர்ந்தெடுத்த பிராணி பற்றி கலந்துரையாடச் செய்யுங்கள்.
- அதன் பண்புகள், செயற்பாடுகளைக் குறிக்கச் செய்யுங்கள்.
- அப்பிராணி பற்றி 12 வரிகளுக்குக் குறையாது ஒரு கவிதை எழுதச் செய்யுங்கள்.
- மீண்டும் மீண்டும் வாசித்து, கவிதையை செம்மையாக்க வழிகாட்டுங்கள்.
- குழுவாகச் சேர்ந்து பாடலாகவோ, கவிதை வடிவிலோ முன்வைக்கலாம் என்பதை அறிவுறுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)

## படி 9.3.4

- மாணவர்களை வகுப்பு நிலையில் அமரச் செய்யுங்கள்.
- குழுவாக இணைந்து பாடலை, கவிதையை முன்வைக்க வழிப்படுத்துங்கள்.
- எல்லாக் குழுவினருக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் முன்வைத்த விடயம் பற்றி கலந்துரையாடுங்கள்.
- கலந்துரையாடும் போது பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

> ◆ மையக் கருத்து, துணைக் கருத்து.
> ◆ கவிதை ஓசை, நயம், சந்தம்.
> ◆ விழுமியக் கருத்து.
> ◆ பண்புகள்.
> ◆ வெளிப்படுத்தும் பாங்கு.

(20 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- மையக்கருத்து, துணைக்கருத்துக்களைக் கூறுவார்.
- வினாக்களுக்குப் பொருத்தமான விடைகள் எழுதுவார்.
- பாடலில் நயந்த பகுதிகளை எடுத்துக் காட்டுவார்.
- படிப்பினைகள், விழுமியக் கருத்துக்களை விளக்குவார்.
- தாம் வாழ்வில் பல்வேறு விடயங்களைப் பிராணிகளிடம் இருந்து கற்றுக் கொள்ளலாம் என்ற மனப்பாங்கைப் பெற்றுக் கொள்வார்.
- வாழ்வைச் சிறப்புடையதாக்குவதற்கு பல்வேறு வழிமுறைகள் உண்டு என்பதை ஏற்றுக் கொள்வார்.
- தாமும் அதன்படி நடக்கக் கற்றுக் கொள்வார்.
- சுயமாகச் சிந்தித்து கவிதைகளை ஆக்குவார்.

**பின்னிணைப்பு: - 1**

# எறும்பு

ஒரு நாட் சங்குப் புலவர் என்பார் தனிமையாய் இருத்தற்கு விரும்பி ஒரு சோலைக்குச் சென்றார். அங்கே அவர் ஒரு பெரிய மரத்தின் நிழலில் அமர்ந்து சோலையின் எழிலைப் பார்த்தார். அவர் இருந்த இடத்துக்கு அருகில் எறும்புகள் கூட்டங் கூட்டமாகவும் ஒழுங்காகவும் ஊர்ந்து சென்றன. அவற்றைக் கண்ட புலவருக்கு அவற்றின் தன்மை வியப்பாயிருந்தது. அவர் அவற்றின் இயற்கையை வியந்து இங்ஙனம் பாடினார்.

எறும்பின் இயற்கையை எங்ஙனம் புகல்வேன்
நறுஞ்சுவை உணவின் நாற்றம் அறியும்
மோப்ப வழியே முன்பின்னாகக்
கோப்பது போலக் கூடிச் செல்லும்
அரிசிமுதல் உணவை அறிந்துவாய் கௌவி
வரிசையிற் கொண்டுபோய் வைக்கும் வளைக்குள்

மழைநீர் உட்புகா வண்ணம் பூமியை
அழகாய்த் துளைத்து வளைமனை அமைக்கும்
மழைக்கா லம்வெளி வரமுடி யாதென
உழைப்பால் உணவை உள்ளிடஞ் சேர்க்கும்
திட்டமாய் மழைவரும் என்னத் தெரிந்து
முட்டை கொண்டு திட்டை ஏறும்

வெண்ணெய் தயிர்மோர் வெல்லங் கரும்புதேன்
எண்ணெய் இவைமேல் எங்கிருந் தாலும்
நாற்றம் வந்த வழியை யணுகி
ஏற்றம் அரிதெனா எத்துணை யுயரம்
என்னினுஞ் சென்றங் கிடைவி டாமலே
துன்னிமொய்த் தவற்றைத் துய்ப்பதற் காகவே
மெள்ள நெருங்கி விரைந்துவாய் வைக்கும்

உள்ளே விழுந்துதம் உயிரையும் போக்கும்
புழு முதற் பலவகைப் பூச்சியாம் உணவை
வழுவா திழுத்து வளைக்குட் செலுத்த
ஒரெறும் பான்முடி யாதென வுணர்ந்தாற்
சிலவும் பலவும் ஒன்றகச் சேர்ந்து
குலவி இழுத்துக் கொண்டுபோய்ச் சேர்க்குமே

**பின்னிணைப்பு - 2**

# செயற்பாட்டுப் பத்திரம்

1. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பிராணி எது?

2. அப்பிராணி தனக்குத் தேவையான உணவை எவ்வாறு பெற்றுக் கொள்ளும்?

3. அது எதிர்காலத்திற்காக உணவை எவ்வாறு சேமித்து வைக்கிறது?

4. எறும்பின் பண்புகள் எவை?

5. எறும்பின் வாழ்க்கை முறையில் இருந்து நாம் பெற்றுக் கொள்ளக் கூடிய படிப்பினைகள் எவை?

6. இப்பாடலைப் படிக்கும் போது உமது மனதில் தோன்றும் எண்ணம் யாது?

7. இப்பாடலில் நீர் இரசித்த பகுதி எது? அதற்குக் காரணம் யாது?

**தேர்ச்சி 1.0** : பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்குமேற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார்.

**தேர்ச்சி அலகு1.4** : பாடத்தைக் கேட்டுக் கிரகித்துக் கருத்துக்களைக் கூறுவார்.

**செயற்பாடு** : பழமொழிகளை வாசித்து அதன் கருத்துக்களை விளங்கிக் கொள்வோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- செயற்பாட்டுப்பத்திரம் - பின்னிணைப்பு 1
- காகித அட்டைகள்
- நிறப் பேனாக்கள்
- எழுதுகருவிகள்
- எழுதுதாள்கள்

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

### படி 1.4.1

- "சிங்கமும் சுண்டெலியும்" என்ற கதைப் பாடலில் வந்த பழமொழிகளைக் கூறி அவற்றின் பொருளையும் கலந்துரையாடுங்கள்.
- பல்வேறு கதைகளுடன் தொடர்புடைய பழமொழிகளை மாணவர்கள் வாயிலாக வரவழையுங்கள்.
- அவர்களுக்குத் தெரிந்த பழமொழிகளைக் கேட்டு, பொருளையும் கூற வையுங்கள்.
- பழமொழிகளைப் பயன்படுத்தும் சந்தர்ப்பம் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு கலந்துரையாடுங்கள்.

- கேட்டலில் விருப்பத்துடன் ஈடுபடல்.
- நல்லதொரு கேட்போனாகச் செவிமடுத்தல்.
- பொருத்தமான முறையில் கலந்துரையாடுதல்.
- உச்சரிப்பு, தொனி வேறுபாடுகளை அனுசரித்து உரையாடல், செவிமடுத்தல்.
- மொழிவளத்தை விருத்தி செய்தல்.
- பல்வேறு அனுபவத்தில் பயன்படுத்தப்பட்ட பழமொழிகள்
- பல்வேறு கதைகளில் இருந்து பெறப்பட்ட பழமொழிகள்
- பல்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படல்.
- சுருக்கக் கூறி விளக்கல்.

(10 நிமிடங்கள்)

படி 1.4.2

- மாணவர்களை ஐந்து பேர்க் கொண்ட குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- மாணவர்கள் தம் குழுக்களுக்குள் கலந்துரையாடி செயற்பாட்டுப் பத்திரத்தைப் பூரணப்படுத்த வழிப்படுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 1.4.3

- ஒவ்வொரு குழுவினதும் செயற்பாடுகளை,
  குழு 1
  குழு 2
  குழு 3
  குழு 4
  குழு 5
  குழு 6 என்ற ஒழுங்கில் முன்வைக்கச் செய்யுங்கள்.

- குழு 1 - ஒழுங்குபடுத்தி எழுதிய பழமொழிகளை வாசிப்பார்.
  குழு 2 - பழமொழிக்குப் பொருத்தமாக எழுதியதை வாசிப்பார்.

- குழு 3 - 1- 5 வரையான பழமொழிகளைக் காட்சிப்படுத்துவார்.
  குழு 4 - 1- 5 பழமொழிகளுக்கான கருத்துக்களை பழமொழிகளோடு தொடர்புபடுத்தி அவற்றுக்கு நேரே காட்சிப்படுத்துவார்.

- குழு 5 - 6 -10 வரையான பழமொழிகளைக் காட்சிப்படுத்துவார்.
  குழு 6 - அவற்றின் பொருள்களை அவற்றுக்கு நேரே காட்சிப்படுத்தவும்.

- பின்வரும் விடயங்களை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.

| |
|---|
| ◆ பழமொழிகளைப் பயன்படுத்துவதன் மூலம், <br> - மொழிவளத்தைப் பெருக்கலாம். <br> - கருத்துச் செறிவை ஏற்படுத்தலாம். <br> - காத்திரமிக்க ஆக்கங்களைப் படைக்கலாம். |

(30 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- பழமொழிகளை வாசித்து அவற்றின் கருத்துக்களை விளக்கிக் கூறுவார்.
- கருத்துக்களைக் கேட்டுக் கிரகித்து அவற்றுக்கான பழமொழிகளைக் கூறுவார்.
- கருத்துக்களை முன்வைக்கும் போது பழமொழிகளைப் பொருத்தமாகப் பிரயோகிப்பார்.

பின்னிணைப்பு -1

# செயற்பாட்டுப் பத்திரம்

## குழு - 1

1.. அடம்பன் கொடியும் / திரண்டால் / மிடுக்கு
2. ஆனைக்கும் / அடி / சறுக்கும்
3. வல்லவனுக்குப் / புல்லும் / ஆயுதம்
4. பேராசை / பெருநட்டம்
5. ஆழமறியாமல் /காலை /விடாதே
7. அடிமேல் / அடி அடித்தால் / அம்மியும் /நகரும்
8. காற்றுள்ளபோதே / தூற்றிக் / கொள்
9. இளமையிற் கல்வி / சிலையில் / எழுத்து
10. ஆறிய / கஞ்சி / பழங்கஞ்சி

(இவற்றைச் சொற்துண்டங்களாக்கி ஒரு பெட்டியுள் போட்டு குழுவிடம் வழங்கவும். அவற்றை ஒழுங்குபடுத்தி தாளில் எழுதச் செய்யவும். )

## குழு - 2

பழமொழிகளையும், கருத்துக்களையும் தனித்தனியே தாளில் எழுதி அல்லது கீலங்களில் எழுதி, வழங்கி பொருத்தச் செய்யவும்.

| பழமொழிகள் | | கருத்துக்கள் |
|---|---|---|
| 1. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு | - | ஒற்றுமையே பலம் |
| 2. ஆனைக்கும் அடி சறுக்கும் | - | பெரியோரும் தவறு விடலாம். |
| 3. வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் | - | திறமை இருந்தால் எதையும் சாதிக்கலாம். |
| 4. பேராசை பெருநட்டம் | - | அளவு கடந்த ஆசை ஆபத்தைத் தரும். |
| 5. ஆழமறியாமல் காலைவிடாதே | - | எதையும் ஆராய்ந்து செய்ய வேண்டும். |
| 6. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் | - | விடா முயற்சி பலன்தரும். |
| 7. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை | - | உள்ளதைக் கொண்டு திருப்தியடையாமை. |
| 8. காற்றுள்ள போதே தூற்றிக் கொள் | - | சந்தர்ப்பத்தை தவறவிடக் கூடாது. |
| 9. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து | - | சிறு வயதுப் பழக்கங்கள் நிலைத்திருக்கும். |
| 10.ஆறிய கஞ்சி பழங்கஞ்சி | | எக்காரியத்தையும் பின்போடக் கூடாது. |

## குழு - 3

1-5 பழமொழிகளை வழங்கி அட்டையில் எழுதச் செய்யவும்.
(கருத்துக்களை ஊகித்து எழுத வைக்கவும்.)

## குழு - 4

1- 5 வரையான கருத்துக்களைக் கீலங்களில் எழுதச் செய்யவும்.
(அவற்றுக்கான பழமொழிகளை ஊகித்து எழுத வைக்கலாம்)

## குழு - 5

6 - 10 பழமொழிகளை வழங்கி அட்டையில் எழுத வைக்கவும்.
(அவற்றின் பழமொழிகளை ஊகித்து எழுத வைக்கவும்)

## குழு - 6

6- 10 கருத்துக்களை கீலங்களில் எழுதச் செய்யவும்.
(அவற்றின் பழமொழிகளை ஊகித்து எழுத வைக்கவும். )

**தேர்ச்சி 7.0** : ஆக்கத் திறனை மேம்படுத்துவதற்காக வாசிப்பார்.

**தேர்ச்சி அலகு7.2** : மொழித் திறன்களை விருத்தி செய்வதற்காக வாசிப்பார்.

**செயற்பாடு** : மொழித் திறன்களை விருத்தி செய்வதற்காக வாசிப்போம்.

**நேரம்** : 160 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- பந்திகள் - பின்னிணைப்பு 1
- பழமொழிகள், சொற்கள், சொற்றொடர்கள், உவமைகள் அடங்கிய பந்திகள் -பின்னிணைப்பு 2
- செயற்பாட்டுப்பத்திரம் - பின்னிணைப்பு - 3
- எழுதுதாள்கள்.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்.**

## படி 7.2.1

- பின்னிணைப்பு 1இல் கொடுக்கப்பட்டுள்ள இரண்டு பந்திகளையும் வகுப்பறையில் வாசிக்க வைத்து இரண்டு பந்திகளிலுமுள்ள வேறுபாடுகள் என்ன எனக் கேட்டு மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுக்கு தெளிவுபடுத்துங்கள்.

| |
|---|
| ◆ வாசிப்பதால் அடையும் மொழி விருத்தி |
| ◆ சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களுக்கு இடையிலான வேறுபாடுகள் |
| ◆ பிரதேச வழக்குச் சொற்களின் பிரயோகம் |
| ◆ மரபுச் சொற்கள், இரட்டைக் கிளவி |
| ◆ பழமொழிகள், உவமைகள் |
| ◆ ஒத்தகருத்து, எதிர்க்கருத்துச் சொற்கள். |

(20 நிமிடங்கள்)

## படி 7.2.2

- பின்னிணைப்பு 2இல் கொடுக்கப்பட்டுள்ள பந்திகளை ஒவ்வொரு மாணவனுக்கும் வழங்குங்கள்.
- கொடுக்கப்பட்ட பந்திகளை ஒவ்வொருவரும் தனித்தனியாக வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொருவரும் தனித்தனியாக விடையளிக்க வேண்டுமென்பதை வலியுறுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 7.2.3

- ஒவ்வொருவரும் வாசித்துத் தொகுத்த விடயங்களை எழுமாற்றாக முன்வைக்கச் சொல்லுங்கள்.
- ஏனையோரின் கருத்துக்களை கூற வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

◆ இந்தப் பந்தியில் இடம்பெற்றுள்ள உவமைகள்
◆ கருத்தை அழகுபடுத்த பிரயோகித்த பழமொழிகள்
◆ இரட்டைக் கிளவிகளின் பயன்பாடு
◆ பிரதேச வழக்குச் சொற்களை பயன்படுத்தும் விதம்
◆ மரபுச் சொற்கள் வாக்கியங்களை அழகுபடுத்தும் விதம்
◆ ஒத்தகருத்து, எதிர்க்கருத்துச் சொற்கள்.
◆ அடுக்குத் தொடர் பயன்பாடு
◆ சொற்கள், சொற்றொடர், வாக்கிய வேறுபாடு
◆ இப்பகுதியில் இடம்பெற்றுள்ள பழமொழிகள்

தனி மரம் தோப்பாகாது.
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
ஊரோடு ஒத்து வாழ்

இரட்டைக்கிளவி - பளிச் பளிச்
டும்ம் டும்ம்
கிடு கிடு

உவமை - மஞ்சள் நிற ஆறு ஒன்று ஓடிக் கொண்டிருப்பதைப் போல
- குதிரைக் குட்டியைப் போல

பிரதேச வழக்குச் சொற்கள் - என்ரை, போயிற்றன், இங்கை, அங்கை
மரபுச் சொற்கள் - மந்தை, குஞ்சு, வடலி

| ஒத்தகருத்து | எதிர்க்கருத்து |
|---|---|
| வயல் - கழனி | உத்தமம் - அதமம் |
| குதிரை - மா, அசுவம் | தாழ்வு - உயர்வு |
| சோலை - தோப்பு | ஒற்றுமை - வேற்றுமை |
| வானம் - ஆகாயம் | மலர்தல் - வாடுதல் |
| மந்தை - கூட்டம் | வெளியே - உள்ளே |

(60 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- இரட்டைக் கிளவி, உவமைகள், பழமொழிகளை இனங்கண்டு கையாள்வார்.
- பிரதேச வழக்கு, மரபுச் சொற்களை விளங்கிக் கொள்வார்.
- சொற்களின் ஒத்தகருத்து, எதிர்க்கருத்துச் சொற்களை பொருத்தமுறப் பயன்படுத்துவார்.
- வாசிப்பினூடாக விருத்தி பெற்ற மொழித்திறனை தமது ஆக்கங்களில் வெளிப்படுத்துவார்.

## பின்னிணைப்பு 1

(அ) மலர்கள் நிறைந்த பல இன மரங்களின் மேலாகப் பெரிய ஆல மரமொன்று தன் கிளைகளை விரித்து நின்றது. இந்தச் சோலையில் மலர் இதழ்கள் மழை போலச் சொரிந்தன. சிறுவனொருவன் தன் பெற்றோரை மறந்து மலரிதழ்களை வாரி அள்ளினான். பக்கத்தில் இருந்த கடையின் வாயிலில் பலவண்ண மிட்டாய்களால் அடுக்கப்பட்ட கட்டிட உருவம் ஒன்றைச் சிறுவன் கண்டான். பலவடிவங்களில் "பளபள" என தங்க நிறத்தில் மின்னும் அந்த மிட்டாய்களைக் கண்டதும் சிறுவனின் வாயில் உமிழ்நீர் சுரந்தது. மறுபக்கத்தில் பலூன்காரன் ஒரு தடியில் மஞ்சள், பச்சை, சிவப்பு, ஊதா என பல நிற பலூன்களை வைத்திருந்தான். வான வில்லுப் போலக் காட்சியளித்த அந்த நிறங்களில் தன் மனதைப் பறிகொடுத்தான் சிறுவன்.

(ஆ) கம்பர் இராமாயணத்தை இயற்றினார். கம்பரால் இயற்றப்பட்டதால் இது கம்பராமாயணம் எனப்படுகிறது. இவ்விலக்கியம் ஐந்து காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்விலக்கியத்தின் பாட்டுடைத் தலைவன் இராமன். பாட்டுடைத் தலைவி சீதை.

## பின்னிணைப்பு 2

### பந்திகள்

(அ) "ஊரோடு ஒத்து வாழ்வது தான் உத்தமம்". தனித்தனியாக இருந்து உலகில் எதையும் சாதித்து விட முடியாது. இதனாலேதான் "தனிமரம் தோப்பாகாது" என்று கூட கூறுவார்கள். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வு" என்பார் மகாகவி பாரதியார்.

(ஆ) திருவிழாவைப் பார்க்கப் புறப்பட்ட மக்கள் கூட்டம் தூசி நிறைந்த வீதியை விட்டு வயலூடாகச் செல்லும் ஒற்றையடிப் பாதையை அடைந்தது. அங்கே பூத்துக் குலுங்கிய கடுகு வயல் மஞ்சள் நிற ஆறு ஒன்று ஓடிக் கொண்டிருப்பதைப் போலக் காட்சியளித்தது. பெற்றோருடன் சென்று கொண்டிருந்த சிறுவன் இக்காட்சியைக் கண்டதும் ஒற்றையடிப் பாதையை விட்டு விலகி குதிரைக் குட்டியைப் போலத் துள்ளித் குதித்துக் கொண்டு வயலுக்குள் இறங்கினான்.

(இ) நேற்று கறிவேப்பிலை வாங்கிய கடையில் குடையை விட்டு விட்டார் மணியத்தார். அடுத்த நாள் வந்து முதலாளியிடம் மிகவும் தாழ்மையான குரலில் "நேற்று என்ரை குடையை விட்டிட்டுப் போயிற்றன்" என்று தடுமாறினார் மரணியத்தார். "அப்பிடி இங்கை ஒரு குடையுமிருக்கேல்லை" என்றார் முதலாளி. இதைக் கேட்டுக் கொண்டு நின்ற பக்கத்துக் கடைக்காரர் "என்ன குடையை எடுக்கேல்லையாமோ" எனக் கேட்க அங்கேயில்லையாம் என்றார் மணியத்தார்.

(ஈ) ஆட்டு மந்தையை மேய்த்துக் கொண்டிருந்த சிறுவன் அன்றும் வழமை போல வில்லுண்டையால் அணிற் குஞ்சை அடிப்பதிலேயே குறியாய் இருந்ததால் வடலிக் கருக்குகள் காலில் சிராய்த்ததைக் கூட அவன் பொருட்படுத்தவில்லை. வெட்ட வெளிக்கு வந்த பின்பே தனது காலில் இரத்தம் கசிவதை உணர்ந்தான். அக்கம் பக்கத்தில் யாராவது தன்னை அவதானிக்கிறார்களா? என திரும்பிப் பார்த்தான்.

(உ) மழைக்கான ஆயத்தம். மரக் கிளைகள் காற்றின் வேகத்தால் சடசடவென முறிந்து விழுகின்றன. கண்ணைப் பறிக்கும் மின்னல் பளிச் பளிச் சென வெட்டுகின்றன. டும்ம் டும்ம் என்ற முழக்கம். கிடுகிடு வென்ற நடுக்கம். மரங்கள் முறிவது பளிர் பளிர் என அறைவது போலச் சத்தம் கேட்டது. சிறிது நேரத்தில் பெருமழை பெய்தது. வெள்ளம் குபு குபு எனப் பாயத் தொடங்கியது.

**பின்னிணைப்பு - 3**

# செயற்பாட்டுப் பத்திரம்

- இப்பகுதியில் வரும் பழமொழிகளைக் கூறுங்கள்.

- இரட்டைக் கிளவிக்கு இரண்டு உதாரணங்கள் கூறுங்கள்.

- உவமைக்கு இரண்டு உதாரணங்கள் கூறுங்கள்.

- பிரதேச வழக்குச் சொற்கள் மூன்று தருக.

- மரபுச் சொற்கள் மூன்று தருக.

- பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துக் கூறுங்கள்.
  1. வயல் -
  2. குதிரை -
  3. சோலை -
  4. வானம் -
  5. மந்தை -

- பின்வருவனவற்றுக்கு எதிர்க்கருத்துச் சொற்கள் கூறுங்கள்.
  1. உத்தமம் -
  2. தாழ்வு -
  3. ஒற்றுமை -
  4. மலர்தல்
  5. வெளியே

**தேர்ச்சி 11.0** : படைப்புகளை வாசித்த அனுபவங்களினூடாக சுய ஆக்கங்களை எழுதுவார்.

**தேர்ச்சி அலகு11.2** : சுய அனுபவங்கள், அவதானிப்புக்கள், அபிப்பிராயங்கள்/ கருத்துக்களை வெளிப்படுத்தி எழுதுவார்.

**செயற்பாடு** : கதையொன்றினை ஆக்குவோம்.

**நேரம்** : 160 நிமிடங்கள்

**தர உள்ளீடு** : - "தாய் சொல்லைத் தட்டாதே" என்ற கதை பின்னிணைப்பு - 1
- செயற்பாட்டுப் பத்திரங்கள் பின்னிணைப்பு - 2
- எழுதுதாள்கள்.

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

### படி 11.2.1

- பாடப் புத்தகத்திலுள்ள சிறிய கதையொன்றினை மாணவர்கள் தனித்தனியாக வாசிக்க வழிப்படுத்துங்கள் .
- கதையை வாசித்து முடித்த பின் இக்கதையில் நீங்கள் அவதானித்த அம்சங்கள் யாவை? இக்கதையின் மூலம் நீங்கள் அறிந்து கொண்ட விடயம் என்ன? போன்ற வினாக்களை வினவி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடலை நிகழ்த்துங்கள்.

- கதையின் கரு
- கதையின் ஆரம்பம், வளர்ச்சி, முடிவு
- கதாபாத்திரங்கள்
- கதைக்களம்
- சம்பவங்கள்
- படிப்பினை
- மொழியாட்சி

(20 நிமிடங்கள்)

### படி 11.2.2

- மாணவர்களை ஐந்து பேர் கொண்ட குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவிற்கும் "தாய் சொல்லைத் தட்டாதே" (பின்னிணைப்பு - 1) என்ற கதையினை வழங்குங்கள் .
- கதையை குழு நிலையில் வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரம் 1இனை வழங்கி, குழுவாகச் செயற்பட வழிப்படுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)

படி 11.2.3

* குழு நிலையில் தயாரித்த செயற்பாட்டுப்பத்திரத்தை முன்வைக்க வழிப்படுத்துங்கள்.
* ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாட்டுப்பத்திரத்தை முன்வைத்த பின் ஏனைய மாணவர்கள் அந்த செயற்பாட்டுப்பத்திரம் தொடர்பாக தமது கருத்துக்களைக் கூற சந்தர்ப்பம் வழங்குங்கள்.
* பின்வரும் விடயங்களை உள்ளடக்கும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| **கதையின் கரு** | - பெற்றோர்/பெரியோர் சொல்லை மதித்து அதன் படி நடக்க வேண்டும். |
| **கதாபாத்திரங்களின் குணவியல்புகள்** | |
| இடையன் - | அன்பானவன், சந்தர்ப்பத்திற்கேற்ப புத்திசாதுரியமாக நடந்து கொள்பவன் |
| தாயாடு - | தாயன்பு கொண்டது, முன் யோசனை உடையது. |
| குட்டியாடு - | தாய் மீது அன்பு கொண்டது, கவனமின்றி நடக்கும் தன்மையானது, சந்தர்ப்பம் உணர்ந்து செயல்படக் கூடியது. |
| **பிடித்த சம்பவம்** | உ-ம்: குட்டியாட்டினைத் தேடும் போது தாயாட்டை போல் கனைத்தமையும் தொடர்ந்து தேடியமையும்.<br>காரணம் - குட்டியாட்டினைக் கண்டுபிடிக்க சிறந்த உத்திகளைக் கையாண்டமையும் இடையறாத முயற்சியும். |
| **மொழி நடை** | இலகுவானது, சிறுசிறு வாக்கியங்களைக் கொண்டது. வாசித்து விளங்கிக் கொள்ளக் கூடியது<br>உ-ம் : அங்குமிங்கும் தேடிப் பார்த்தான். குட்டியாட்டைக் காணவில்லை. இடையனுக்கு வேதனை அதிகரித்தது |
| **உணர்வு பலவிதமாய் அமையலாம் எழுதியது பொருத்தமானதா என அவதானியுங்கள்.**<br>**உ-ம் மன மகிழ்ச்சி**<br>**திருப்தி** | |

(30 நிமிடங்கள்)

**படி 11.2.4**

* ஒரு குழுவிற்கு ஒரு தலைப்பு என்ற வகையில் கதையின் தலைப்புக்களை வழங்குங்கள். (செயற்பாட்டுப்பத்திரம் - 2)
* கதை எழுதுவது தொடர்பாக கலந்துரையாட நெறிப்படுத்துங்கள்.
* கதை எழுதுவதற்கு வழிப்படுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 11.2.5

- குழு நிலையில் எழுதிய கதையை குழுவில் ஒருவர் முன்வந்து உணர்வு பூர்வமாக வாசிக்க வழி செய்யுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கதையை வாசித்த பின் ஏனையவர்கள் கருத்துக்களை வழங்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.

பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- கதையின் ஆரம்பம், வளர்ச்சி, முடிவு
- தலைப்புக்குப் பொருத்தமான கதை
- கதையை வளர்த்துச் செல்லும் விதம்
- கதாபாத்திரங்களின் சித்திரிப்பு
- கதைக்கள விளக்கம்
- மொழியாட்சி
- கதையின் தன்மை
- படிப்பினை அறிவுரை

(40 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- கதைகளை ரசித்து வாசிப்பார்.
- கதைக் கருவினை இனங்கண்டு எழுதுவார்.
- கதாபாத்திரங்களின் குணவியல்புகளை விளக்கி எழுதுவார்.
- கதைகளை வாசித்து அவற்றில் கூறப்படும் பாடிப்பினைகளை விளக்கிக் கூறுவார்.

பின்னிணைப்பு: - 1

# தாய் சொல்லைத் தட்டாதே

கிராமமொன்றிலே ஓர் இடையன் ஐம்பது ஆடுகளுடன் தனது வாழ்க்கையை சந்தோசமாக கழித்து வந்தான். இடையன் ஆடுகளோடு மிகுந்த அன்பு கொண்டிருந்தான். ஆடுகளும் இடையனோடு மிகுந்த அன்பாய் இருந்தன. ஒரு நாள், இடையன் தன் ஆடுகளை புதியதோர் பகுதிக்கு மேய்ச்சலுக்காக ஓட்டிச் சென்றான். அப்பகுதி பச்சைப்பசேல் என அழகாகக் காட்சியளித்தது. அந்த இடத்திற்குச் சென்றதும் ஆட்டு மந்தைக் கூட்டத்தில் இருந்த தாயாடொன்று தன் குட்டியை பார்த்து, "நீ என்னை விட்டு தனியே எங்கும் சென்று விடாதே. புதிய இடம் ஆபத்துக்கள் வரலாம்" என்று எச்சரித்தது.

ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. குட்டியாடானது தாய் சொன்னதை மறந்து பசுமையான புல்வெளிப்பக்கம் சென்று தனிப்பட்டு விட்டது. திடிரென மேகம் கறுத்தது, ஆங்காங்கே இடிச்சத்தம். உடனே இடையன் அங்கே இருந்த ஆடுகளையெல்லாம் அவசர அவசரமாக ஓட்டிக் கொண்டு வீடு சென்றான். கூட்டினுள் ஆடுகளை அடைக்கும் போது எண்ணிக்கையில் ஒன்று குறைவதைக் கண்டான். அத்தோடு தாயாடும் குட்டியில்லாமல் கனைப்பதைப் பார்த்தான். குட்டியாட்டைக் காணவில்லை என அவனுக்கு விளங்கியது.

இடையன் மிகுந்த மன வேதனையுடன் தீப்பந்தமொன்றைக் கையில் எடுத்துக் கொண்டு ஆடுகள் மேயச் சென்ற இடத்தை நோக்கிச் செல்லலானான். அங்குமிங்கும் தேடிப் பார்த்தான். குட்டியாட்டைக் காணவில்லை இடையனுக்கு வேதனை அதிகரித்தது. முயற்சியைக் கைவிடாது தாயாட்டைப் போன்று கனைத்தான். இடையனின் சத்தம் குட்டியாட்டின் காதுகளில் மெதுவாகக் கேட்டது. உடனே குட்டியாடு "இது தன் தாயின் குரலல்லவே" என்று எண்ணிக் கொண்டு இருந்து விட்டது. இடையன் மீண்டும் மீண்டும் கனைத்தான். அப்போதுதான் இச்சத்தம் தன் எசமானரது என்பதை உணர்ந்தது.

கனைப்பு வந்த திசையை நோக்கி குட்டியாடும் பதிலுக்குக் கத்தியது. இடையன் உற்சாகமடைந்தான். மீண்டும் கனைத்தான். பதில் வந்தது. குட்டியாட்டின் சத்தம் வந்த திசையை நோக்கி விரைந்தான். அங்கே குட்டியாடு வேர் இடுக்கொன்றில் மாட்டித் துன்பப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டான். குட்டியாட்டை அதிலிருந்து விடுவித்தான். குட்டியாடுதன் எசமானரைக் கண்டு சந்தோசப்பட்டது. இடையன் மனவேதனையை மறந்து குட்டியாட்டை தன் தோளிலே தூக்கிக் கொண்டு போய் தாயுடன் சேர்த்தான். தாயைக் கண்ட குட்டியின் முகமும் குட்டியைக்கண்ட தாயின் முகமும் மலர்ந்தன.

பின்னிணைப்பு 2

# செயற்பாட்டுப் பத்திரம் - I

♦ "தாய் சொல்லைத் தட்டாதே" எனும் கதையை ஒருவர் வாசிக்க அனைவரும் அவதானமாகக் கேளுங்கள்.

♦ பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடி வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

- கதையின் கரு
- கதாபாத்திரங்கள்
- கதைக் களம்
- மொழிநடை

(1) இக்கதையில் இருந்து நீங்கள் பெற்றுக் கொள்ளும் அறிவுரை / படிப்பினை என்ன?

(2) இக்கதையில் உங்களுக்குப் பிடித்த பாத்திரங்களைக் குறிப்பிட்டு, அப்பாத்திரங்களின் குணவியல்புகளை எழுதுங்கள்.

(3) கதையில் உங்களுக்குப் பிடித்த ஒரு சம்பவத்தை (பகுதியை) குறிப்பிட்டு, ஏன் அந்தச் சம்பவம் உங்களைக் கவர்ந்தது என்று எழுதுங்கள்.

(4) கதையின் மொழிநடை இலகுவானதா? கடினமானதா? உதாரணம் தந்து விளக்குங்கள்.

(5) கதையை வாசித்து முடித்ததும் உங்கள் உள்ளத்தில் ஏற்பட்ட உணர்வினை எழுதுங்கள்.

## கதைத் தலைப்புக்கள்

உ-ம் :
- முயற்சி வெற்றியளிக்கும்
- பதறாத காரியம் சிதறாது
- மின்னுவதெல்லாம் பொன்னல்ல
- பெற்ற மனம் பித்து

## செயற்பாட்டுப் பத்திரம் - II

1. கதைத் தலைப்பு தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
2. கதையைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
3. கதைக்களம், கதாபாத்திரங்களைத் தீர்மானியுங்கள்.
4. கதை மூலம் உணர்த்த வேண்டிய படிப்பினை / அறிவுரை தொடர்பாக கலந்துரையாடுங்கள்
5. கதை தொடர்பாக அனைத்து விடயங்களையும் கலந்துரையாடி கதையொன்றை எழுதுங்கள்.

**தேர்ச்சி 2.0** : சந்தர்ப்பத்திற்கும், சூழ்நிலைக்கும், கேட்போருக்கும் ஏற்றவகையில் உரையாடுவார்.

**தேர்ச்சி அலகு** 2.1 : தமது உணர்வுகளும், கருத்துக்களும், அபிப்பிராயங்களும் தெளிவாகப் புலப்படும் வகையில் உரையாடுவார்.

**செயற்பாடு** : "கணனி" பற்றி உரையாடுவோம்

**நேரம்** : 120 நிமிடங்கள்.

**தர உள்ளீடு** :
- கணனி பற்றிய உரையாடல் பிரதிகள் - பின்னிணைப்பு 1
- பல்வேறு காலத்தில் வெளியிடப்பட்ட நூல், சஞ்சிகை
- சில துண்டுப் பிரசுரங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 2
- எழுதுகருவிகள்
- எழுதுதாள்

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 2.1.1.**

- பல்வேறு காலத்தில் எழுதப்பட்ட புத்தகங்கள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், ஆக்கங்கள் போன்றவற்றையும், தற்காலத்தில் வெளிவரும் நிறப் படங்களுடன் கூடிய ஓரிரு புத்தகங்களையும் மாணவர்களுக்குப் பார்வையிட வாய்ப்பளிக்கவும். பார்வையிட்ட பின் பின்வரும் வினாக்களை வினவி உரையாடவும்.
  1. நீங்கள் வாசிக்க விரும்பும் புத்தகம் , சஞ்சிகை, பிரசுரம் எது?
  2. அதை விரும்பி வாசிப்பதற்கான காரணம் என்ன?
  3. இக்காலத்தில் இவ்வாறான ஆக்கங்கள் வெளிவருவதற்கு காரணம் எவை?
- முக்கிய காரணிகளுள் கணனி ஒன்றாகும் எனக்கூறி உரையாடலை மேற்கொள்ளுங்கள்.

கலந்துரையாடலின் போது பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொள்ளுங்கள்.

- விடயத் தெளிவு.
- தகவல் தெரிவித்தல்.
- விபரங்களை விபரித்தல்.
- பிறர் ஏற்றுக் கொள்ளும் வகையில் தமது கருத்துக்களை வலியுறுத்திக் கூறுதல்.
- சுயமாக தமது கருத்துக்களை முன்வைத்தல்.
- எடுத்துக் கொண்ட கருத்துக்களை தமது சொந்த அனுபவத்தின் அடிப்படையில் விபரித்தல்.
- தமது விருப்பு, வெறுப்புக்களைப் பண்பாக வெளிப்படுத்தல்.

(30 நிமிடங்கள்)

## படி 2.1.2

- மாணவரை நான்கு பேர்க் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- பின்னிணைப்பு 1இல் உள்ள பிரதியை வழங்குங்கள். (கணனி பற்றிய உரையாடல்) தாமாகவே பாத்திரமேற்று உரையாடல் பாணியில் வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- பிரதான குறிப்புக்களை எழுத வழிப்படுத்துங்கள்.
- அக்குறிப்புக்களைக் கொண்டு "கணனியின் தோற்றமும், அதன் பயன்பாடும்" என்ற தலைப்பில் தமது பாணியில் உரையாடலொன்றை எழுத வழிப்படுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

## படி 2.1.3

- மாணவர் குழுவை வகுப்பு நிலைக்குக் கொண்டு வரவும்.
- ஒவ்வொரு குழுவினராலும் எழுதப்பட்ட உரையாடலை முன்வைக்க வாய்ப்பளியுங்கள்.
- எல்லாக் குழுவினருக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவரோடு கலந்துரையாடும் போது பின்வரும் விடயங்களையும் கவனத்திற் கொள்ளுங்கள்.

◆ உரையாடலில் முன்வைக்கப்பட்ட பிரதான கருத்து.
◆ கையாண்ட மொழிநடை
  - பேச்சு வழக்கு
  - நியம வழக்கு
◆ தகவல்களை வெளியிடும் பாங்கு
◆ சுயமான கருத்து முன்வைப்பு
◆ சொந்த அனுபவத்தோடு தொடர்புபடுத்தல்.
◆ விருப்பு வெறுப்புக்களை பண்பாக வெளிவிடுதல்.
◆ சரளமான பேச்சு
◆ தமது உணர்வுகளை பாத்திரமேற்று வெளிப்படுத்தல்.

(40 நிமிடங்கள்)

## படி 2.1.4

- பின்னிணைப்பு 2இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்கவும்.
- தனித்தனியாக மாணவர்களை எழுத வாய்ப்பளிக்கவும்.
- குறிப்பிட்ட நேர அவகாசம் மட்டும் வழங்குங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 2.1.5

- மாணவர்கள் எழுதிய செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்குள்ளேயே மாற்றிக் கொள்ளுங்கள்.
- சரியாக எழுதப்பட்ட விடையை காட்சிப்படுத்துங்கள்.
- திருத்துவதற்கு வழிப்படுத்துங்கள்.
- திருத்தியதும் உரியவரிடம் வழங்குங்கள்.
- பூரணமாகச் சரியாகச் செய்தவர்களை மாணவர்கள் கொண்டே கைதட்டிப் பாராட்டச் செய்யுங்கள்.
- தவறுகளுக்கு விளக்கம் கொடுங்கள்.
- மீண்டும் பயிற்சிக் கொப்பிகளில் பூரணமாக எழுத வாய்ப்பளியுங்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும்.

- உரையாடலில் கையாண்டு மொழிநடை பற்றிக் கூறுவார்.
- பல்வேறு தரவுகளைத் திரட்டி கருத்துச் செறிவுள்ள உரையாடலை நடத்துவார்.
- ஏற்றுக் கொண்ட பாத்திரத்திற்கேற்ப பண்பாக உரையாடுவார்.
- நல்லதோர் பண்பான உரையாடலை மேற்கொள்ள துலங்குவார்

பின்னிணைப்பு - 1

## கணனி



மேரி: கணனி எதற்காக உருவாக்கப்பட்டது மாமா?

மாமா: மனிதனது தேவைகளை நிறைவு செய்வதற்காகவே உருவாக்கப்பட்டது.

தீபன்: கணனி மனிதனது உதவியின்றி இயங்குமா மாமா?

மாமா: அது தானாக இயங்காது. மனிதனது கட்டளைகளுக்கு ஏற்பவே செயற்படும். கணனியின் ஒவ்வொரு அசைவையும் மனிதன் தான் நிர்ணயிக்க வேண்டியுள்ளது. இதனால்தான் இதனை இலத்திரனியல் முட்டாள் என அறிஞர்கள் அழைக்கின்றனர்.

கரீம்: கணனி, கல்வி கற்கும் எமக்கு எந்த வகையில் துணை புரிகின்றது மாமா.

மாமா: இன்று கணனி ஆசிரியராக இருந்து கற்பதற்கு துணை புரிகின்றது. அறிவியல் வளர்ச்சிக்கேற்ப புதியவற்றை அறிந்து கொள்ளவேண்டியது அவசியமாகும். தகவல்கள் அனைத்தையும் பதிவு செய்யவும், தேவையான நேரத்தில் அத்தகவல்களை பெற்றுக் கொள்ளவும் கணனி எமக்குத் துணை புரிகின்றது.

தீபன்: கணனியின் தோற்றத்திற்கு வித்திட்டவர் யார் மாமா?

மாமா: கணனியின் தோற்றத்திற்கு வித்திட்டவர் சாள்ஸ் பபேஜ் ஆவார்.




கரீம்: இவரைத்தானே மாமா கணனியின் தந்தை என அழைக்கின்றனர்?

மாமா: ஆம், சாள்ஸ் பபேஜ் அவர்களையே கணனியின் தந்தை என அழைக்கின்றனர்.

மேரி: அவர் எங்கே பணியாற்றினார் மாமா?

மாமா: சாள்ஸ் பபேஜ் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் கணிதத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

கரீம்: எந்த நாட்டைச் சேர்ந்தவர் மாமா?

மாமா: இங்கிலாந்து நாட்டை சேர்ந்தவர்.

மேரி: உலகின் முதலாவது கணனியின் பெயர் என்ன மாமா?

மாமா: உலகின் முதலாவது தானியங்கிக் கணனியின் பெயர் மார்க் - 1 ஆகும்.

தீபன்: இக் கணனி எத்தனையாம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது மாமா?

மாமா: 1944ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

கரீம்: இக்கணனியை உருவாக்கியவர் யார் மாமா?

மாமா: மார்க் - 1 என்ற கணனியை ஹார்வோட் பல்கலைக்கழகப் பேராசிரியர் டொக்டர் ஹாவோட் எச் அய்க்கன் அவர்கள் உருவாக்கினார்.

மேரி: மார்க் - 1 கணனிக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட கணனியைப் பற்றிக் கூறுங்கள் மாமா.

மாமா: "எனியாக்" என்பது அக்கணனியின் பெயராகும். இதுதான் உலகின் முதலாவது இலத்திரனியல் கணனியாகும். இக்கணனி 1946ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் 1949 ஆம் ஆண்டு எட்சாக் என்ற கணனியும் 1952 ஆம் ஆண்டு எட்வோக் என்ற கணனியும் உருவாக்கப்பட்டன.

மாமா: வருடத்துக்கு வருடம் புதிய தொழினுட்பத்துடன் கூடிய நவீன கணனிகள் விற்பனைக்கு வருகின்றன. கணனி யுகத்தின் பாரிய வளர்ச்சியால் உள்ளங்கைக் கணனிகள் விற்பனைக்கு வந்துவிட்டன.

தீபன்: சிறு வயதில் இருந்தே நாம் கணனிக் கல்வியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமா? மாமா.

மாமா: ஆம்! இன்று கணனி நுழையாத துறைகளே இல்லை. எனவே எமது கல்வி அறிவை வளர்த்துக் கொள்வதற்கு

கணனிக் கல்வி அவசியமாகும். கணனி

அறிவைப் பெற்றுக்கொள்ளாவிட்டால்

நவீன யுகத்தின் சவால்களுக்கு முகம்

கொடுக்க முடியாத நிலை ஏற்படும்.



© copyright

வி.என்.எஸ். உதயசந்திரன்
நன்றி - மரத்தடி நிழலில்

மேரி: இன்று கணனியைப் பற்றி அறிந்து கொண்டோம்.

நன்றி மாமா. மீண்டும் அடுத்த ஞாயிற்றுக்கிழமை

மரத்தடி நிழலில் சந்திக்கின்றோம்.

**பின்னிணைப்பு - 2**

# செயற்பாட்டுப் பத்திரம் - I

பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள பந்தியாக எழுதவும்.

1. அதன் ஒவ்வொரு அசைவையும் மனிதனே நிர்ணயிக்க வேண்டும்.
2. இதனால் தான் இதனை "இலத்திரனியல் முட்டாள்" என அறிஞர்கள் அழைக்கின்றனர்.
3. ஆனால் மனிதனது உதவியின்றி கணனி இயங்க மாட்டாது.
4. மனிதர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காகவே கணனி உருவாக்கப்பட்டது.
5. மனிதனது கட்டளைகளுக்கேற்பவே அது செயற்படும்.

**தேர்ச்சி 10.0** : பல்வேறு சந்தர்ப்பங்களுக்கும், நோக்கங்களுக்கும் ஏற்றவாறு எழுதுவார்.

**தேர்ச்சி அலகு 10.2:** பல்வேறு நோக்கங்களுக்காக எழுதுவார்.

**செயற்பாடு** : மேடைப் பேச்சொன்று எழுதுவோம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- மூதுரைச் செய்யுள் பின்னிணைப்பு - 1
- எழுதுதாள்கள், எழுதுகருவிகள்
- செயற்பாட்டுப் பத்திரம் பின்னிணைப்பு - 2
- சட்டகம் - 3

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

### படி 10.2.1

நாம் எந்நாளும் வாசிக்கின்றோம். எழுதுகின்றோம். எல்லோரும் எந்நாளும் வாசிக்கின்றார்கள். எழுதுகிறார்கள். பல்வேறு நோக்கங்களுக்காக எழுதப்பட்ட பல்வேறுபட்ட ஆக்கங்களைப் பார்க்கின்றோம். இவை ஏன் எழுதப்படுகின்றன? எப்படி எழுதப்படுகின்றன? போன்ற பல்வேறுபட்ட வினாக்களை மாணவர்களிடையே தொடுத்து அவர்களின் சிந்தனைக் கிளறலை ஏற்படுத்துங்கள்.

ஆக்கங்கள் எழுதும் போது எழுதுவோரும், அதனை வெளிப்படுத்தும் போது பேச்சாளரும், கேட்போரும் கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்களை மாணவர்களிடம் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.

**நாம் எழுதும் போது**

- பொருத்தமான மொழியைப் பயன்படுத்துதல்.
- வாசிப்போரை, கேட்போரை ஈர்க்கும் வகையில் அமைத்தல்.
- பொருத்தமான குறியீடுகளைப் பயன்படுத்தல்.
- நேர்த்தியாக தகவல்களை உள்ளடக்கி எழுதுதல்.
- தமது எண்ணங்களை வெளிப்படுத்துதல்
- அபிப்பிராயங்களையும், கருத்துக்களையும் முன்வைத்தல்.

(10 நிமிடங்கள்)

## படி 10.2.2

- மாணவர்களை நான்கு அல்லது ஐந்து பேர் கொண்ட குழுக்களாகப் பிரியுங்கள்.
- பின்னிணைப்பு 1இல் தரப்பட்டுள்ள பா ல்களை ஒவ்வொருவரும் வாசிக்கச் செய்யுங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தை (பின்னிணைப்பு 2) பூர்த்தி செய்து குழுவாக அறிக்கைப்படுத்துவதற்கு வழிப்படுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)

## படி 10.2.3

- ஒவ்வொரு குழுவில் இருந்தும் ஒருவரை எழுமாற்றாகத் தெரிந்து அறிக்கையை முன்வைக்கச் செய்யுங்கள்.
- மாணவர்கள் முன்வைத்த விடயங்களின் அடிப்படையில் பின்வருவனவற்றை தெளிவுபடுத்துங்கள்.

> - நல்லவர்களோடு சேர்ந்திருப்பதால் ஏற்படும் நன்மைகள்.
> - கெட்டவர்களோடு சேர்வதால் ஏற்படும் தீமைகள்.
> - கேட்பதும், பேசுவதும் நல்லதாகவே இருக்க வேண்டும்.
> - மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் என்பது ஆன்றோர் வாக்கு. வயதில், ஆழ்ந்த புலமையில், தெளிந்த அனுபவத்தில் முதிர்ந்தவராக மூத்தவராக விளங்கியவர் மூதாட்டி ஔவை.

(20 நிமிடங்கள்)

## படி 10.2.4

- அதே குழுவினருக்கு இரண்டாவது செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- குழு நிலையில் கலந்துரையாடி பேச்சைத் தயாரிப்பதற்கு வழிகாட்டுங்கள்.

(30 நிமிடங்கள்)

## படி 10.2.5

- ஒவ்வொரு குழுவில் இருந்தும் மாணவரகளை எழுமாறாக எழுப்பி அறிக்கையை (பேச்சை) பேச வைக்கவும்.
- ஏனையோர் அவை பற்றிக் கருத்துக்களை வழங்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடி தெளிவுபடுத்துங்கள்.

> - செம்மையான மொழி நடை
> - கருத்துத் தெளிவு - பொருத்தமான உதாரணங்கள், மேற்கோள்கள்
> - சபையோரைக் கவர்தல்.
> - தொனி வேறுபாடு
> - தொகுப்புரை

(30 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்.

(1) மேடைப் பேச்சொன்றை எழுதும் போது கவனிக்க வேண்டிய விடயங்களைக் கூறுவார்.

(2) அவற்றின் அடிப்படையில் பேச்சொன்றை எழுதுவார்.

(3) தேவைக்குப் பொருத்தமாக குறிப்பெடுத்து எழுதுவார்.

(4) எண்ணங்களையும், கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் வெளிப்படுத்தி எழுதுவார்.

## மேலதிகச் செயற்பாடு

- பாடசாலையில் நடைபெறும் பரிசளிப்பு விழா, இலக்கிய விழாக்களுக்கான வரவேற்புரை அல்லது நன்றியுரை ஒன்றை எழுதுங்கள்.

(100 சொற்கள் )

**பின்னிணைப்பு - 1**

## மூதுரை

நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நலம்மிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே- நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே, அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.

தீயாரைக் கண்பதுவும் தீதே திரு அற்ற
தீயார் சொல் கேட்பதுவும் தீது - தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது.

**பின்னிணைப்பு - 2**

## செயற்பாட்டுப்பத்திரம் I

- செய்யுளில் கையாளப்பட்டுள்ள விழுமியக் கருத்துக்கள்.
- செய்யுள் கூறும் படிப்பினைகள்.
- ஔவையாரைப் பற்றிய கருத்துகள்.

## செயற்பாட்டுப்பத்திரம் - II

100 சொற்கள் கொண்ட மேடைப் பேச்சு (நற்சிந்தனை) ஒன்றை பின்வரும் சட்டகத்தின் துணையுடன் தயாரிக்குக.

- விளிப்பு
- உள்ளடக்கம் - நல்லவர்களோடு சேர்வதால் நன்மை, தீயவர்களோடு சேர்வதால் தீமை. சிறிய கதை மூலம் விளக்குக. மேற்படி விழுமியம் தொடர்பான உங்கள் எண்ணங்கள், கருத்துக்கள், அபிப்பிராயங்களை இணைக்குக.
- முடிவுரை
- பேச்சுக்குப் பொருத்தமான தலைப்பிடுக.

**தேர்ச்சி 3.0** : எண்ணக்கருக்களையும் அபிப்பிராயங்களையும் புலப்படுத்திப் பேசுவார்.

**தேர்ச்சி அலகு3.1:** தலைப்புக்கு ஏற்ற வகையில் பேசுவார்.

**செயற்பாடு** : தலைப்புக்கு ஏற்ப பேசுவோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 1
- மாதிரிச் சட்டகம் - பின்னிணைப்பு 2
- தாள்கள்
- எழுது கருவிகள்

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

### படி 3.1.1

- தலைப்புக்கேற்ப பேச்சை அறிமுகப்படுத்தும் வகையில் ஆரம்பிக்கவும்.
- காலை ஆராதனைக் கூட்டத்தில் பேச்சாற்றலுள்ள மாணவனொருவன் மூலம் 'நன்றி மறவாமை' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றச் செய்வதன் மூலம் மாணவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
- பேசப்பட்ட எண்ணக்கரு தொடர்பாக கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் யாவை? என மாணவரிடம் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவருக்குத் தெளிவுபடுத்துங்கள்.

- சொற்பொழிவு தொடர்பான நிறைகுறைகளைக் கூறுதல்.
- கருத்தை முன்வைத்தலுக்குப் பொருத்தமான சட்டகத்தை அமைக்க வேண்டும்.
- இலக்கினை அமைத்துப் பேசுதல் வேண்டும்.
- பொருத்தமான மொழியைப் பயன்படுத்த வேண்டும்.
- உச்சரிப்புத்தெளிவு வேண்டும்.
- தொனி வேறுபாடுகளுடன் பேசுதல் வேண்டும்.

(10 நிமிடங்கள்)

### படி 3.1.2

- மாணவர்களை அறுவர் கொண்ட குழுக்களாகப் பிரியுங்கள். (குழு I, குழு II, குழு III, குழு IV, குழு V, )
- குழுவுக்குரிய செயலட்டைகளைப் பின்னிணைப்பிலுள்ள ஒழுங்கில் வழங்குங்கள்.
- மாணவர் சட்டகம் அமைப்பதற்கு உதவி செய்யுங்கள்.
- மூன்று நிமிடத்திற்கான பேச்சினை தயாரிப்பதற்கு வழிகாட்டுங்கள்.
- பேசிப் பழகுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

## படி 3.1.3

- குழுக்களில் இருந்து மாணவர்களை எழுமாற்றாக எழுப்பிப் பேச சந்தர்ப்பம் அளியுங்கள்.
- எல்லா மாணவர்களையும் பேச்சை செவிமடுக்க வையுங்கள்.
- செவிமடுத்த விடயங்களை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் ஆற்றிய சொற்பொழிவு பற்றி மாணவர் விளங்கிக் கொண்டது பற்றிக் கலந்துரையாடுங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- தலைப்பிற்கேற்ப பொருள் அமைதல்.
- உள்ளடக்கம் கருத்தமைவாக இருத்தல்.
- மொழிச்செம்மை சிறப்பாக அமைதல்.
- பொருளுக்கேற்ப தொனிமாற்றம் இடம்பெறல்.
- சபையினைக் கவரும் தன்மை.

(40 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- பேச்சாற்றலுக்குரிய அடிப்படை உத்திகளை விளங்குவார்.
- கேட்போரைக் கவரும் விதத்தில் சொற்கள், பழமொழிகள், உவமைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தும் திறனைப் பெறுவார்.
- பயிற்சியினூடாக நல்ல பேச்சாளருக்கான திறனைப் பெறலாம் என்பதை வெளிப் படுத்துவார்.
- சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி, பேச்சுத்திறனை வளர்த்துக்கொள்வார்.

**பின்னிணைப்பு - 1**

# செயற்பாட்டுப் பத்திரம்

பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு உங்கள் குழுவிற்குத் தரப்பட்டுள்ள தலைப்பில் மூன்று நிமிடங்களுக்குப் பேச்சொன்றைத் தயாரியுங்கள்.

1. குழுவினராக இணைந்து பேச்சுக்கான சட்டகத்தைத் தயாரியுங்கள்.
   - (அ) விளிப்பு
   - (ஆ) முகவுரை
   - (இ) செய்தி
   - (ஈ) முடிவுரை
2. குழுவாகச் சேர்ந்து பேச்சைத் தயாரிப்பதற்காகக் கலந்துரையாடுங்கள்.
3. குழுக்களிலுள்ள ஒவ்வொரு மாணவனும் இணைந்து பேச்சைத் தயாரியுங்கள்.
4. தனித்தனியே பேசுவதற்கு ஆயத்தம் செய்யவும்.

**<u>குழுக்களுக்கான தலைப்புக்கள்</u>**

குழு I - எமது நாடு
குழு II - நான் விரும்பும் பெரியார்.
குழு III - முத்தமிழின் சிறப்பு
குழு IV - பாடசாலை வளங்களைப் பாதுகாப்போம்.
குழு V - சிறுவர் உரிமை

**பின்னிணைப்பு - 2**

# மாதிரிச் சட்டகம்
## எமது கிராமம்

(அ) விளிப்பு : மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களே! சகோதர சகோதரிகளே!

(ஆ) முகவுரை : அமைவிடம் (மாகாணம்,மாவட்டம்,நகரம்,சுற்று சூழல்)

(இ) செய்தி : நிறுவனங்கள்
- பாடசாலை
- நவீன வசதிகள்
- மக்கள் (தொழில், மதம், மொழி)
- பெரியோர், சான்றோர்
- ஏனைய குறிப்பிடத்தக்க விடயங்கள்.

(ஈ) முடிவுரை :
- கிராமத்தைப் பாதுகாப்போம்.
- கிராம வளர்ச்சிக்கு உதவுவோம்.

**தேர்ச்சி 5.0** : கிரகித்துப் பொருள் உணர்ந்தமை புலப்பட வாசிப்பார்

**தேர்ச்சி அலகு** 5.2 : குறித்த நோக்கத்திற்காக வாசிப்பார்.

**செயற்பாடு** : கருத்தூன்றி வாசிப்போம்

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :- - கவிதை - பின்னிணைப்பு 1.
- செயற்பாட்டுப்பத்திரம் - பின்னிணைப்பு - 2
- எழுதுதாள்கள்

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்.**
**படி 5.2.1**

மாதிரிப் பாடலொன்றை முன்வைத்து ஆரம்பிக்கலாம்.
(ஆசிரியரோ, பாடக் கூடிய மாணவரோ பாடலாம்)

கண்ணனைக் கும்பிடுவோம் - அவன்
காலில் விழுந்திடுவோம்.
வெண்ணெய் தயிர் தருவான் - நல்ல
மேன்மையும் தந்திடுவான்

பச்சை நிறம் உடையான் - கையில்
பாடும் குழல் உடையான்
அச்சம் அழித்திடுவான் - நமது
ஆசைப் பொருள் தருவான்

இப்பாடல் குறித்து சில வினாக்களை வினவி, மாணவர்களை விடைகூற வைத்தல்.
உ-ம் : யாரைப் பற்றி இக்கவிதை கூறுகின்றது.
அவனது தோற்றப் பொலிவு என்ன?

கருத்தூன்றி வாசிப்பதனாலேயே உங்களுக்கு விடை கூறக் கூடியதாக உள்ளது என்பதைக் கூறி பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.

- வாசிக்கும் போது கருத்தூன்றி வாசித்து விளங்கல்.
- பிரதான கருத்து
- துணைக் கருத்துக்கள்
- வாசித்த பகுதியைச் சுருக்கி சொந்த மொழி நடையில் கூறுதல்.
- படைப்புக்கு உந்து சக்தியாக விளங்கும் காரணிகளைக் கூறுதல்.
(படைப்பாளியின் அனுபவம், சமூக, கலாசார பின்னணி )

(20 நிமிடங்கள்)

## படி 5.2.2

- மாணவர்கள் அனைவருக்கும் கவிதைப் பிரதியை வழங்குங்கள்.
- கவிதைப் பிரதியை வாசிக்க வழி செய்யுங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்கள் அனைவருக்கும் வழங்குங்கள்.
- இரண்டும் நான்கும் (Two's and Four's) முறையில் கற்றல் செயற்பாட்டைச் செயல்படுத்துங்கள்.
- மாணவர்களை நட்பின் அடிப்படையில் சோடிகளாகப் பிரித்து, குறித்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடச் செய்யுங்கள்.
- பின்னர் இருவரும் பிரிந்து பிறிதொருவருடன் சோடிகளாக விவாதிப்பர்.
- ஒவ்வொரு சோடியும் தான் விவாதித்த முக்கிய விடயங்களை மீண்டும் புதிய சோடியுடன் கலந்துரையாடுவார்.
- பின் இக்கலந்துரையாடல் நான்கு பேர் கொண்ட குழுக்களுக்கு விரிவாக்கப்படும். (இங்கு கவனிக்க வேண்டிய முக்கிய அம்சம் ஒவ்வொரு சோடியிலுமுள்ள ஒவ்வொருவரும் தனது சோடியின் கருத்தை புதிய சோடிக்கு தெளிவுபடுத்த வேண்டும்.)
- நான்கு பேர் கொண்ட குழுக்களுக்கு விரிவாக்கிய பின் அக்குழு முறையில் தங்களது கருத்துக்களை முன்வைப்பர்.

(40 நிமிடங்கள்).

## படி 5.2.3

- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டுப்பத்திரத்தை முன்வைக்க வகை செய்யுங்கள்.
- ஏனைய மாணவர்கள் கருத்துக்களை வழங்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- ◆ மையக் கருத்து / பிரதான கருத்து
  - இராமனுக்கு முடிசூட்டுதல்.
- ◆ துணைக் கருத்துக்கள்
  - வசிட்டர் முடிசூட்டுவதற்கான நாள் குறித்தல்.
  - பரதன் வெண்குடை ஏந்துதல்.
  - இலக்குமணன், சத்துருக்கன் சாமரை வீசுதல்.
  - அனுமன் திருவடி தாங்குதல்.
  - மக்கள் எல்லோரும் மகிழ்வடைதல்.
- ◆ பாடலில் காணப்படும் பாத்திரங்கள்
  1. இராமன்
  2. வசிட்டன்
  3. பரதன்
  4. சத்துருக்கன்
  5. அனுமன்
  6. அயோத்தி மக்கள்
- ◆ படைப்புக்கு உந்துசக்தியாக விளங்கிய காரணி
  - இராமன் மீது கொண்ட அன்பு
  - சிறுவர்களும் இராமாயணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற அவா

- பாடலின் சுருக்கம்

குல குருவான வசிட்டன் இராமனுக்கு முடிசூட்டும் விழா நடத்துவதற்கான நல்ல நாளைத் தெரிவு செய்தான். அச்செய்தியை உலகெங்கும் தூதுவர்கள் கூறினார்கள்.

மஞ்சன நீராடி, வெற்றி முரசுகள் ஒலிக்க, வீடுகளில் இருக்கும் பெண்கள் ஆராத்தி எடுக்க, கருமுகில்கள் இடிந்து முழங்குவது போல சங்குகள் முழங்க, சிங்காசனத்தில் ஏறினான் இராமன் .

பெருமைக்கே உரித்தான பரதன் வெண்குடை ஏந்த, இலக்குவணன், சத்துருக்கன் சாமரை வீச, பெருந் தோற்றத்தை உடைய அனுமன் தெய்வாம்சம் பொருந்திய பாதங்களைத் தாங்கி நிற்க வசிட்டன் இராமனுக்கு முடி சூட்டினான்.

இராமனது தலையிலே மணிமுடியைக் கண்ட மக்கள், தங்களது தலையில் மணிமுடியைச் போலச் சிறப்புற்றனர். மகிழ்ச்சியோடும் வாழ்ந்தனர்.

**அரும்பதங்கள்.**

| | |
|---|---|
| மஞ்சனம் ஆடி | - மஞ்சள் கரைத்த நீரில் நீராடி |
| அஞ்சன முகில் | - கருமுகில் |
| அரியணை | - சிங்காசனம், சிம்மாசனம் |
| வனப்பு | - பெருந்தோற்றம், அழகு |
| வையகம் | - பூமி |
| சென்னி | - தலை |
| உவகை | - மகிழ்ச்சி |

(60 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்.

1. பிரதான கருத்தையும், துணைக் கருத்துக்களையும் இனங்கண்டு முன்வைப்பார்.
2. படைப்புக்கு உந்து சக்தியாக விளங்கிய காரணிகளை எடுத்துக் கூறுவார்.
3. பாடலில் காணப்படும் பாத்திரங்களை இனங்காண்பார்.
4. பாடலை தமது உரை நடையில் எழுதும் திறமையைப் பெறுவார்.

## பின்னிணைப்பு - 1

காட்டுக்குச் சென்ற இராமன் பதின்நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு முடிசூட்டிக் கொண்டதைக் கூறும் “முடிசூட்டு விழா” பகுதியிலிருந்து சில பாடல்கள்.

கோமகன் மகுடம் புனைய ஓர் நன்னாள்
   குறித்தனன். குலகுரு வசிஷ்டன்
பூமியின் எல்லை தாண்டியும் தூதர்
   போயினார். சேதியைச் சொன்னார்.

மஞ்சனம் ஆடிப் பேரிகை தொடர.
   மனைதொறும் ஆரதி எடுக்க.
அஞ்சன முகில் போல சங்குகள் முழங்க.
   அரியணை ஏறினான் ராமன்

தனிப் பெரும் பரதன் வெண்குடை ஏந்தத்
   தம்பியர் சாமரை வீச
வனப்பொடும் அனுமான் திருவடி தாங்க
   வசிஷ்டனே சூட்டினான், மகுடம்.

மன்னவன் சிரத்தில் மணிமுடி விளங்க,
   வையக மக்களும் தமது
சென்னியில் மகுடம் சேர்ந்ததே போலச்
   சிறந்தனர், உவகையில் வாழ்ந்தார்

(அய்யாசாமியின் பாலராமாயணத்தில் ஒரு காட்சி )

**பின்னிணைப்பு - 2**

# செயற்பாட்டுப் பத்திரம்

(1) இப்பாடலில் கூறப்படும் மையக் கருத்து பிரதான / கருத்து யாது?

(2) பாடலில் காணப்படும் துணைக் கருத்துக்களைப் பட்டியல் படுத்துக.

(3) பாடலில் காணப்படும் பாத்திரங்களைப் பட்டியல் படுத்துக.

(4) பாடலாசிரியர் இப்பாடலைப் பாடுவதற்கான காரணங்கள் யாதாக இருக்கலாம்.

(5) பின்வரும் அரும் பதங்களுக்குப் பொருள் தருக.
1. மஞ்சனம்
2. அஞ்சனமுகில்
3. அரியணை
4. வனப்பு
5. வையகம்
6. சென்னி
7. உவகை

(6) பாடலைச் சுருக்கி உமது சொந்த மொழி நடையில் எழுதுக.

**தேர்ச்சி 10.0** : பல்வேறு சந்தர்ப்பங்களுக்கும், நோக்கங்களுக்கும் ஏற்றவாறு எழுதுவார்.

**தேர்ச்சி அலகு 10.2** : பல்வேறு நோக்கங்களுக்காக எழுதுவார்.

**செயற்பாடு** : தேவைகளுக்காக வெவ்வேறு வடிவில் எழுதுவோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :
- செயற்பாட்டுப் பத்திரம் பின்னிணைப்பு - 1
- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

### படி 10.2.1

- "வகுப்பறையில் போதிய வளங்கள் இல்லை". இக்கூற்றை கரும்பலகையில் எழுதி, பின்வரும் வினாக்களின் அடிப்படையில் மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- எமக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளை பிறரறிய எவ்வாறு நாம் வெளிப்படுத்த முடியும்? எழுத்து வடிவில் எவ்வாறு வெளிப்படுத்தலாம்?
- முறையீடு செய்யும் போது எவ்வாறான விடயங்களை கருத்திற் கொள்ள வேண்டும்?

மாணவர்களுடன் கலந்துரையாடி பின்வரும் விடயங்களை தெளிவுபடுத்துங்கள்.

- முறையீடொன்றை கடித வடிவில் எழுதும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள்.
  1. முகவரி (முறையிடுபவரது, முறையீட்டைப் பெறுபவரது )
  2. விளிப்பு
  3. விடயத் தலைப்பு
  4. விடயம்
  5. முடிவு.

(20 நிமிடங்கள்)

### படி 10.2.2

- மாணவர்களைச் சோடி சோடியாக இணைத்து செயற்பாட்டுப்பத்திரத்தை வழங்கி செயற்பாட்டைச் செய்ய வழிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் கலந்துரையாடி அறிக்கைகளைத் தயார்ப்படுத்த வழிப்படுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

## படி 10.2.3

- எழுமாற்றாக ஐந்து அறிக்கைகளை முன்வைக்க சந்தர்ப்பம் அளியுங்கள்.
- அறிக்கை முன்வைக்கப்படும் போது ஏனையோர் தம் கருத்துக்களை தெரிவிக்க வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

1. i. வருணித்து எழுதும் போது பாடசாலையின் அமைவிடம்
 உ-ம் சின்னக் கிராமத்தில் சின்ன எல்லைகளைக் கொண்டு அமைந்துள்ளது

 ii பௌதீக வளங்கள் (கட்டிடங்கள், மைதானம் )

 iii பாடசாலைப் புறச் சூழல் சுற்றியுள்ள இடங்கள் கிராமச் சூழல், மலைப்பிரதேசம், கடற்கரைப் பகுதி, வயல்வெளி போன்றன.

2. குறைபாடுகள்
 - குடிநீர் வசதியின்மை
 - விளையாட்டு மைதானமின்மை
 - நூல் நிலையத்தில் சிறந்த நூல்கள் இன்மை போன்றன.

3. முறைப்பாடு
 - உங்கள் பாடசாலை முகவரி
 - அதிபரின் முகவரி

| | |
|---|---|
| விளிப்பு | : அதிபரை விளித்தில் |
| விடயத் தலைப்பு | : இனங்கண்ட குறைபாடுகள் |
| விடயம் | : முறைப்பாட்டு விடயம் |
| முடிப்பு | : கீழ்படிவுள்ள மாணவன், மாணவி கடித முடிப்பு |

நிமிடங்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும்.

- விடயங்களை வகுத்து எழுதுவர்
- விபரித்து எழுதுவர்.
- குறைபாடுகளை முறையீடு செய்து எழுதுவர்.
- தேவையான போது கடிதம் எழுதல் நுட்பங்களை அறிந்துள்ளார்.

**பின்னிணைப்பு - 1**

# செயற்பாட்டுப்பத்திரம்

1. குழுவிலுள்ள இருவரும் கலந்துரையாடி உங்கள் பாடசாலையையும், பாடசாலைச் சூழலையும் வருணித்து எழுதுங்கள்.

   பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொள்க.
   1. அமைவிடம்
   2. பௌதீக வளங்கள்
   3. பாடசாலை புறச்சூழல்

2. பாடசாலைகளில் நீங்கள் இனங்கண்ட குறைபாடுகளைப் பட்டியல்படுத்துங்கள்.

3. பட்டியல்படுத்தப்பட்ட குறைபாடுகளில் ஏதாவதொன்றைத் தெரிவு செய்து அதுபற்றி அதிபருக்கு முறைப்பாடு ஒன்று எழுதுங்கள்.

   (பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொள்க)

   1. உங்கள் விலாசம் (பாடசாலை விலாசம்)
   2. மேல் விலாசம் (அதிபரின் விலாசம்)
   3. விளிப்பு
   4. விடயத் தலைப்பு
   5. விடயம்
   6. முடிவு

# பகுதி - III

# கணிப்பீடும் மதிப்பீடும்

# அறிமுகம்

கற்றல் - கற்பித்தற் செய்கையின் மூலம் எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகளைத் தெளிவாகப் பெற்றுக் கொள்வதற்கும், மாணவர்கள் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்குமாக, வகுப்பறையில் இலகுவாகச் செயற்படுத்த முடியுமான, ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட இரண்டு வேலைத்திட்டங்களாகக் கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் கருதலாம். கணிப்பீடு சரியான முறையில் நடைபெறுமெனின், வகுப்பில் கற்கும் ஒவ்வொரு பிள்ளையும் உரிய தேர்ச்சியின் (நிபுணத்துவத்தின்) அண்மிய மட்டத்தையாவது பெற்றுக் கொள்வது கடினமல்ல. மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுவது பிள்ளைகள் பெற்றுக் கொண்ட தேர்ச்சி எம்மட்டத்தில் காணப்படுகிறது என்பதைக் கண்டுகொள்வதாகும்.

கணிப்பீட்டைச் செயற்படுத்தும்போது ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இரண்டு விதமாக வழிகாட்டல்களை வழங்கலாம். இவ்வழிகாட்டல்கள் இரண்டும் பொதுவாகப் பின்னூட்டல் (Feed Back), முன்னோக்கிய ஊட்டல் (Feed Forward) என அழைக்கப்படுகின்றன. மாணவர் களின் பலவீனம், இயலாமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின், அவர்களிடம் காணப்படும் கற்றல் தொடர்பான பிரச்சினைகளை நீக்கிக் கொள்வதற்கு பின்னூட்டலையும், மாணவர்களின் பலம், இயலுமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின் அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கு முன்னோக்கிய ஊட்டலையும் வழங்குவது ஆசிரியரின் கடமையோடு சார்ந்த பொறுப்பாகும்.

கற்றல் - கற்பித்தல் செய்கையின் வெற்றி பாடத்திட்டத்திலுள்ள தேர்ச்சிகளில் எத்தேர்ச்சி களை மாணவர்கள் எந்த மட்டத்தில் அடைந்துள்ளனர் என்பதை அறிவதன் மூலம் இனங் காணப்படுகின்றது. கற்றல் - கற்பித்தல் செய்கையின் போது மாணவர்கள் அடைந்த தேர்ச்சி மட்டங்களை அளவிடுவது எதிர்பார்க்கப்படுவதோடு, அடைந்த தேர்ச்சி மட்டங்கள் பற்றிய விபரங்களை பெற்றோர் உள்ளிட்ட மற்றும் உரிய நபர்களுக்கும் தொடர்பாடல் செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

உங்களிடம் முன்வைக்கப்பட்டுள்ள இப்பாடத்திட்டம் மாணவர் மையமான (Student-Centered), தேர்ச்சி மட்ட (Competency-Based), செயற்பாடு சார்ந்த (Activity-Oriented) பிரவேசத்தைக் கொண்டது. வாழ்வைக் கருத்துள்ளதாக்கிக் கொள்வதற்கு, செயற் பாட்டினூடாகக் கற்றல் என்பது ஆசிரியரின் உருமாற்றப் பங்களிப்பில் காணப்படும் பிரதான அம்சமாகும்.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் ஊடாகச் செயற்படுத்தப்படும் இப்பாடத்திட்டமானது, கற்றல்-கற்பித்தலை கணிப்பீடு-மதிப்பீடு என்பவற்றோடு ஒன்றிணைப்ப தற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாட்டிலும் அதன் இரண்டாம் படியில் மாணவர்கள், குழுவாக ஆய்வில் ஈடுபடும்போது அவர்களை கணிப்பீடு செய்வதற்கும் செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் தமது கண்டுபிடிப்புக்கள், பேறுகள் என்பவற்றைச் சமர்ப்பிக்கும்போது மாணவர்களை மதிப்பீடு செய்வதற்கும் ஆசிரியருக்கு முடியுமாகின்றது. மாணவர்கள் குழுவாக ஆய்வில் ஈடுபட்டிருக்கும்போது அவர்களினூடே சென்று அவர்களது வேலைகளை அவதானிப்பதன் மூலம், மாணவர்கள் முகங் கொடுக்கும் பிரசினங்களை வகுப்பறையில் தீர்ப்பதற்குரிய வசதிகளையும், வழிகாட்டல்களையும் வழங்குவது ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றை இலகுவாகச் செய்து கொள்வதற்கு ஐந்து பொது நியதிகள் முன்வைக்கப்படுகின்றன. இந்நியதிகளில் முதன் மூன்று நியதிகளும் உரிய தேர்ச்சி மட்டத்தோடு தொடர்பான அறிவு, மனப்பாங்கு, திறன்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாகவும், அடுத்த இரண்டு நியதிகளும் வாழ்க்கைக்குத் தேவைப்படும் முக்கியமான இரண்டு திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கானதாகவும் இருத்தல் வேண்டும். இந்த ஐந்து நியதிகளுடன் இணைந்ததான நடத்தை மாற்றங்கள் வகுப்பறையில் மாணவர்களிடம் காணப்படுகின்றதா என்பதைக் கண்டு கொள்வதற்கு ஆசிரியர் முயற்சி எடுக்க வேண்டியதோடு கணிப்பீட்டின் மூலம் கண்டு கொள்ளப்படும் மாணவர்கள் பெற்றுள்ள இத்திறன்களின் அளவை மதிப்பீட்டின் மூலம் ஆசிரியர் அளந்து கொள்ள வேண்டும்.

கணிப்பீடு தொடர்பான வேலைத் திட்டங்களை அபிவிருத்தி செய்து கொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தற் செய்கையை விரிவுபடுத்திக் கொள்ளலாம். இதற்காக பகுதி IIஇல் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளை கணிப்பீட்டு வகைகளை அடிப்படையாகக் கொண்டதான தொகுதிகளாக வேறாக்கிக் கொள்ளவும்.

மாணவர்களின் கற்றலை மலரச் செய்யக்கூடியதாக, உரிய பாடவிடயத்துடன் தொடர்பான செயற்பாட்டைத் தெரிவு செய்க. இனி, உரிய கற்றல் - கற்பித்தல் செய்கைக்கான சாதனங்களைத் தயாரித்துக் கொள்க. ஒவ்வொரு செயற்பாட்டின் ஆரம்பத்தில் உரிய உபகரணங்களைக் குழுக்களுக்கு வழங்க வேண்டும். கற்றல் - கற்பித்தல் செய்கையை விரிவாக்கும் போது அவை அமையக்கூடிய வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- எண்ணக்கருப்படம் (Concept Maps)
- சுவர்ப்பத்திரிகை (Wall News Papers)
- புதிர்ப்போட்டி (Quizzes)
- வினாவிடைப் புத்தகம் (Question and Answer Books)
- மாணவர் செயற்பாட்டுக் கோவை (Portfolios)
- கண்காட்சி (Exhibitions)
- விவாதம் (Debates)
- குழுக் கலந்துரையாடல் (Panel Discussions)
- கருத்தரங்கு (Seminars)
- உடனடிச் சொற்பொழிவு (Impromptu Speeches)
- பாத்திரம் ஏற்று நடித்தல் (Role Plays)
- இலக்கியக் கருத்துக்களையும், விமர்சனங்களையும் முன்வைத்தல் (Presentation of Literature Reviews)
- வெளிக்களப் புத்தகம் / தினக் குறிப்புப் புத்தகம் / வேலைப்புத்தகம் (Field Books / Nature Diaries)
- செய்முறைச் சோதனை (Practical Tests)

பாட வழிகாட்டியின் மூன்றாம் பகுதி, உத்தேச கற்றல் - கற்பித்தற் செய்கைகளை விரிவாக்கும் வகைகளைக் கொண்ட செயற்பாடுகளையும் அதற்கான கற்றல் - கற்பித்தல் சாதனங்களையும் அறிமுகஞ் செய்கின்றது. இவ்வாறான செயற் பாடுகளினுள் கணிப்பீடும், அதனோடு தொடர்பான மதிப்பீடும் இணைக்கப்பட்டுள்ளதால் கற்றல் - கற்பித்தற் செய்கை மேலும் விரிவாக்கப்பட்டுள்ளதோடு மாணவர்கள் ஆர்வத் தோடும் மகிழ்ச்சியோடும் கற்றலில் ஈடுபாடு கொள்வதற்கும் வழியமைத்துள்ளது.

# பகுதி - III

# கணிப்பீடும் மதிப்பீடும்

# கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான மாதிரிக் கருவிகள்

# கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான மாதிரிக் கருவிகள்
# தரம் -6

## கருவி - 01

**01 கணிப்பீட்டுச் சந்தர்ப்பம்** : முதலாம் தவணை.

**02. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள்** : 1.5, 2.2, 3.1, 6.1, 9.5, 10.2

**03. கருவிக்குரிய பாடப் பகுதிகள்** : வானொலி, தொலைக்காட்சி, சஞ்சிகை, பத்திரிகைகளில் இடம்பெற்ற விளம்பரங்கள்.

**04. கருவியின் தன்மை** : விளம்பரம் எழுதுதல், நடித்துக் காட்டுதல்.

**05. கருவியின் நோக்கங்கள்** :
- கட்புல, செவிப்புல சாதனங்கள் ஊடாக வெளியிடப்படும் விளம்பரங்களை அவதானித்துக் கூறுவார்.
- அவ்விளம்பரங்களைப் போல செய்து காட்டுவார்.
- மாதிரி விளம்பரங்களைச் சேகரித்துத் தொகுப்பார்.

**06. கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள்**

**ஆசிரியருக்கு** :
- முதலாம் தவணையின் நடுப்பகுதியில் இக்கருவி பற்றியும் நிறைவு செய்ய வேண்டிய தினம் பற்றியும் மாணவருக்கு அறிவியுங்கள்.
- ஒரு வாரத்திற்கு வானொலி / தொலைக்காட்சி விளம்பரங்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- பத்திரிகை சஞ்சிகைகளில் வரும் விளம்பரங்களைச் சேகரிக்கச் செய்யுங்கள்.
- குறிப்பிட்ட தினத்தில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்
- அவர்கள் பார்த்த, கேட்ட விளம்பரங்களின் தன்மை பற்றிக் கலந்துரையாடச் செய்யுங்கள்.
- விளம்பரங்களின் அமைப்பு, விடயம், விளிப்பு மொழியாட்சி, கவர்ச்சிகரமான தன்மை, போன்றவற்றைக் கவனித்து கலந்துரையாடுங்கள்.
- மாணவர்கள், குழுவாகத் தாம் விரும்பிய விடயம் ஒன்றுக்கு விளம்பரம் எழுத வழி செய்யுங்கள்.
- எழுதப்பட்ட விளம்பரம் வானொலியில் / தொலைக்காட்சியில் விளம்பரப்படுத்தக் கூடியதாக செய்து காட்டுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

மாணவருக்கு : 
- தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை, சஞ்சிகைகளில் வரும் விளம்பரங்களை நன்றாக அவதானியுங்கள்.
- மொழியாட்சி, தன்மை, கவர்ச்சி, அமைப்பு என்பவற்றைக் கவனத்திற் கொள்ளுங்கள்.
- விளம்பரங்களைச் சேகரியுங்கள்.
- குழுவாக இணைந்து, செய்து காட்டக் கூடிய விளம்பரம் ஒன்றை எழுதி முன்வையுங்கள்.

**07. மதிப்பீட்டு நியதிகள்** :
- விளம்பரங்களின் பயன்களை அறிந்து வெளிப்படுத்துவார்.
- விளம்பரங்களின் அமைப்பு, மொழியாட்சி என்பவற்றை அறிந்து எழுதுவார்.
- விளம்பரங்களைச் செய்து காட்டும் ஆற்றலைப் பெறுவார்.
- விளம்பரங்களை எழுதும் ஆற்றலைப் பெறுவார்.

## புள்ளித் திட்டம்

| | | |
|---|---|---|
| செயலில் ஈடுபடல் | - | 04 புள்ளிகள் |
| குழு ஒருமைப்பாடு | - | 04 புள்ளிகள் |
| மொழியாட்சி | - | 04 புள்ளிகள் |
| அமைப்பு | - | 04 புள்ளிகள் |
| வெளிப்படுத்தும் திறன் | - | 04 புள்ளிகள் |
| | | 20 புள்ளிகள் |

## கருவி - 02

**01 கணிப்பீட்டுச் சந்தர்ப்பம்** : முதலாம் தவணை இறுதி

**02. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள்** : 3.1, 5.2, 7.1, 9.4, 10.2

**03. கருவிக்குரிய பாடப் பகுதிகள்** : பெரியார் /அறிஞர் தொடர்பான குறிப்புக்கள், புத்தகங்கள், கட்டுரைகள், பத்திரிகைகள், நேர்காணல்.

**04. கருவியின் தன்மை** : பேச்சுக்கான பிரதியாக்கமும், பேச்சும்.

**05. கருவியின் நோக்கங்கள்** :
- நேர் காணல் மூலம் தகவல்களைப் பெறுவார்.
- பத்திரிகைகள், நூல்கள் வாசித்துக் குறிப்பெடுப்பார்.
- குறிப்புக்களைத் தொகுத்து பேச்சாக எழுதுவார்.
- மனனஞ் செய்து பேசுவார்

**06. கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள்**

**ஆசிரியருக்கு** :
- இக்கருவி பற்றியும், நடைபெறும் தினம் பற்றியும் ஒரு மாத காலத்திற்கு முன்பே அறிவியுங்கள்.
- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒரு மாதத்திற்கு முன்னரே ஒவ்வொரு குழுவிற்கும் வெவ்வேறு தலைப்புக்கள் ஐவைந்தினைக் கொடுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தமக்கு வழங்கப்பட்ட ஐந்து தலைப்புக்களுக்குமான தகவல்களை சேகரிக்கும்படி கூறுங்கள்.
- குறிப்பிட்ட தினமொன்றில் தகவல்களை தொகுத்து பேச்சாக எழுதுவதற்கு வழிகாட்டுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் தமக்கு வழங்கப்பட்ட ஐந்து தலைப்புக்களிலான பேச்சுக்களை மனனஞ் செய்ய வேண்டுமென்பதை வலியுறுத்துங்கள்.
- குறிப்பிட்ட தினத்தில் திருவுளச் சீட்டின் மூலம் தெரிவு செய்யப்படும் தலைப்பில் பேச வேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.
- மேடைப் பேச்சினை நிகழ்த்தும் போது அவதானிக்க வேண்டிய அம்சங்களை விளக்கிக் கூறி, வழிப்படுத்துங்கள்.(உச்சரிப்புத் தெளிவு, குரல் வளம், நிலை, கருத்தின் பொருத்தப்பாடு, சபை விளிப்பு, முடிப்பு போன்ற விடயங்கள்பற்றி மாணவர்க்கு கூறவும்)

**மாணவருக்கு** :

- தலைப்புக்குப் பொருத்தமான தகவல்களை பத்திரிகைகள், நூல்கள், நேர்காணல் மூலம் பெற்றுக் குறிப்பெடுங்கள்.
- தகவல்களைத் தொகுத்து மேடைப் பேச்சாக எழுதுங்கள்.
- ஐந்து தலைப்புக்களின் கீழும் எழுதிய பேச்சுக்களை மனனஞ் செய்யுங்கள்.
- மனனஞ் செய்ததை ஒருவருக்கொருவர் கூறி, சரி, பிழை பார்த்துக் கொள்ளுங்கள்.
- திருவுளச் சீட்டின் மூலம் தெரிவு செய்யும் தலைப்பில் பேசுங்கள்.
- மேடைப் பேச்சினை நிகழ்த்தும் போது கவனிக்க வேண்டிய அம்சங்களை மனதில் நிறுத்திப் பேசுங்கள்.

**07. மதிப்பீட்டு நியதிகள்** :

- தகவல்களைச் சேகரிப்பார்.
- தகவல்களைத் தொகுத்து பேச்சாக எழுதுவார்.
- மனனஞ் செய்வார்.
- பேச்சினை நிகழ்த்துவார்.
- குழு ஒருமைப்பாட்டைப் பேணுவார்.

## கருவி : 03

**01 கணிப்பீட்டுச் சந்தர்ப்பம்** : முதலாம் தவணை இறுதி

**02. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள்** : 2.1, 5.1, 9.1, 9.3, 10.2, 11.2

**03. கருவிக்குரிய பாடப் பகுதிகள்** :
- பெரியார் /முக்கியஸ்தர் தொடர்பான குறிப்புக்கள், புத்தகங்கள், கட்டுரைகள் பத்திரிகைகள்.
- நிறுவனங்களில், வணக்கஸ்தலங்களில், பாடசாலைகளில் பேணப்படும் ஆவணங்கள்.

**04. கருவியின் தன்மை** : ஆய்வுக் கட்டுரை எழுதுதல்.

**05. கருவியின் நோக்கங்கள்** :
- பண்பாக உரையாடி கருத்துக்களை அறிந்து கொள்வார்.
- கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வார்.
- தேவைக்கேற்ப பல்வேறு ஆக்கங்களை வாசிப்பார்.
- கிரகித்துக் குறிப்பெடுப்பார்.
- குறிப்பெடுத்த விடயங்களை சொந்த நடையில் விரித்தெழுதுவார்.

**06. கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள்**

**ஆசிரியருக்கு** :
- முதலாம் தவணை ஆரம்பித்தல் இக்கருவி தொடர்பாகவும் கருவியின் நோக்கம் பற்றியும் மாணவர்களுக்கு அறிவியுங்கள்.
- மாணவர்களை ஆறு கொண்ட குழுக்களாகப் பிரித்து, ஆய்வு செய்ய வேண்டிய விடயத் தலைப்புகளை வழங்குங்கள். (உங்கள் பிரதேசத்தில் காணப்படும் விடயங்களை ஆய்வுத் தலைப்புகளாக அமைய வேண்டும்)

  உ-ம் :-
  - உங்கள் பாடசாலை
  - பிரதேசத்திலுள்ள பிரசித்திப் பெற்ற பாடசாலை
  - பிரதேசத்தில் வாழும் முக்கியஸ்தர் / பெரியார்.
  - நிறுவனம் / தொழிற்சாலை
  - பிரதேசத்தில் வழங்கும் கலைகள்/ இலக்கியங்கள்.
  - வணக்கஸ்தலம்

- ஆய்வினை மேற்கொள்வதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு வழி செய்யுங்கள்.
- ஆய்வு தொடர்பான செயற்பாடுகளைக் குழுவாக மேற்கொண்டாலும் தனிநிலையிலேயே ஆய்வுக் கட்டுரை எழுதப்பட வேண்டுமென்று அறிவுறுத்துங்கள்.
- ஒவ்வொரு திங்கட் கிழமையும் ஆய்வு தொடர்பாக அவதானித்து ஆலோசனைகள் வழங்குங்கள்.
- ஆய்வுக் கட்டுரைக்கான சட்டகம் அமைப்பதற்கு வழிகாட்டுங்கள்.

**மாணவர்களுக்கு** :

- குழுவாக இணைந்து ஆய்வுக் கட்டுரைத் தலைப்புதொடர்பாக ஆசிரியருடன் கலந்துரையாடுங்கள்.
- ஆய்வு தொடர்பாகக் கலந்துரையாடி செயற்பாடுகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

  உ-ம் : பாடசாலை தொடர்பான ஆய்வெனின்,

  இருவர் - பாடசாலை பற்றி நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகளில் வெளிவந்துள்ள விடயங்களைத் தேடிப் பெறல்.

  இருவர் - பாடசாலைக்கு வெளியே பலருடன் கலந்துரையாடி பாடசாலை தொடர்பான விடயங்களைப் பெறல்.

  இருவர் - பாடசாலையில் உள்ளவர்களுடன் கலந்துரையாடி பாடசாலையிலுள்ள ஆவணங்களை வாசித்துத் தகவல்களைப் பெறல்.

- இவ்வாறு தேடிப் பெற்ற விடயங்களை கலந்துரையாடி சட்டகம் தயாரித்து தனி நிலையில் ஆய்வுக் கட்டுரையொன்றினை எழுதுங்கள்.
- ஆசிரியர் குறிப்பிட்ட தினத்தில் கட்டுரைகளை முன்வையுங்கள்.

**07. மதிப்பீட்டு நியதிகள்** :

- குறித்த நோக்கத்திற்காக பல்வேறு வழிகளில் விடயங்களைத் தேடிப் பெறுவார்.
- ஏனையவர்களுடன் கலந்துரையாடி ஆய்வுக் கட்டுரைக்கான சட்டகம் அமைப்பார்.
- தரமான ஆய்வுக் கட்டுரை ஒன்றை எழுதுவார்.

# கருவி - 04

**01 கணிப்பீட்டுச் சந்தர்ப்பம்** : இரண்டாம் தவணை

**02. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள்** : 2.2, 11.2, 7.1

**03. கருவிக்குரிய பாடப் பகுதிகள்** : நாடகப் பிரதியாக்கம், மேடையேற்றம்.

**04. கருவியின் தன்மை** : கதையொன்றை நாடகப் பிரதியாக்கம் செய்து மேடையேற்றுதல்.

**05. கருவியின் நோக்கங்கள்** :
- கதைக் கருவொன்றை நாடகப் பிரதியாக்கம் செய்வார்.
- பாத்திர உணர்வு புலப்படும் வகையில் பொருத்தமான தொனி, முகபாவம், மெய்ப்பாடு, அங்க அசைவுகளுடன் நடிப்பார்.
- நாடகத்தை மேடையேற்றுவார்.

**06. கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள்**

**ஆசிரியருக்கு** :
- மாணவர்களைக் குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு கதையை வழங்குங்கள்.
- நாடகப் பிரதியாக்கம் செய்வதற்கான அடிப்படைகளை விளங்க கூறுங்கள்.
  உ-ம் - களம், பாத்திரம், காட்சி, உரையாடல், மொழிநடை
- எழுதிய நாடகத்தை நடித்துப் பழகுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேடையேற்றுவதற்கு நெறிப்படுத்துங்கள்.

**மாணவர்களுக்கு** :
- ஆசிரியரால் வழங்கப்பட்ட கதையை நன்கு வாசித்துக் கிரகித்துக் கொள்ளுங்கள்.
- ஆசிரியருடனும், குழுவினருடனும் கலந்துரையாடி நாடகத்தை எழுதுங்கள்.
- நடித்துப் பழகுங்கள். (குழுவிலுள்ள ஒவ்வொருவரும் பங்கு கொள்வதை உறுதிப்படுத்துங்கள். )
- நாடகத்தை மேடையேற்றுங்கள்.

**07. மதிப்பீட்டு நியதிகள்** :

- கதையொன்றினை நாடகம் ஆக்குவார்.
- பாத்திரத்தின் உணர்வு வெளிப்படும் வகையில் உச்சரிப்புத் தெளிவுடனும், பொருத்தமான தொனி, முகபாவம், மெய்ப்பாடு, அங்க அசைவுகளுடன் நடிப்பார்.
- நாடகத்தை மேடையேற்றுவார்.

## கருவி - 05

| | | |
|---|---|---|
| 01 | **கணிப்பீட்டுச் சந்தர்ப்பம்** | : இரண்டாம் தவணை இறுதி |
| 02. | **உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள்** | : 1.2, 1.3, 1.4 |
| 03. | **கருவிக்குரிய பாடப் பகுதிகள்** | : திருக்குறள் (விரும்பிய குறட்பாக்கள் இருபது, நீதிப்பாடல்கள்) |
| 04. | **கருவியின் தன்மை** | : மனனஞ் செய்து கூறல். |
| 05. | **கருவியின் நோக்கங்கள்** | : • திருக்குறள், நீதிப்பாடல்கள் பற்றி அறிந்து கூறுவார்.<br>• பாக்களை மனனஞ் செய்து கூறுவார்.<br>• செம்மையாக அவற்றின் ஒலியமைப்புக்கேற்ப உச்சரிப்பார்.<br>• பாக்களின் பிரதான கருத்துக்களைத் தெளிவாகக் கூறுவார். |

**06. கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள்**

**ஆசிரியருக்கு** :

- இரண்டாம் தவணையின் ஆரம்பத்தில் இதன் நோக்கங்கள் பற்றியும்,கருவியினை நிறைவு செய்ய வேண்டிய தினம் பற்றியும் மாணவர்களுக்கு அறிவியுங்கள்.
- மாணவர்களைப் பத்து பேர் கொண்ட குழுக்களாகப் பிரியுங்கள்.
- மனனஞ் செய்ய வேண்டிய பகுதியினை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- கொடுக்கப்பட்ட பாடல்களின் பிரதான கருத்துக்களை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- பாடல்களைப் பொருளுக்கேற்ப சந்திபிரித்து வாசிப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- போட்டித் தினத்தன்று போட்டி விதிகளையும் புள்ளித் திட்டத்தையும் மாணவர்க்கு தெளிவுபடுத்துங்கள்.
- வெற்றி பெற்ற குழுவினருக்கு பரிசுகளும், பாராட்டுக்களும் வழங்குங்கள்.

**போட்டி விதிகள்** :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள். முதலில் இரு குழுவினருக்கு இடையே போட்டி நடைபெறும். ஏனைய குழுவினர் பார்வையாளராக இருப்பர். போட்டிகள் இரு சுற்றுகளாக நடத்தப்படும். முதல் சுற்றில் பாடலும், இரண்டாவது சுற்றில் திருவுளச் சீட்டின் மூலம் தெரிவு செய்யப்பட்ட குழுவினர் போட்டி ஆரம்பிப்பார்.

- அக்குழுவின் தலைவர் பாடலின் முதல் இரு சொற்களையும் கூற, எதிர் குழுவைச் சேர்ந்த தலைவர் பாடலைத் தொடர்ந்து கூறுவார்.

- குறிப்பிட்ட மாணவர் கூறத் தவறினால் அக்குழுவைச் சேர்ந்த யாராவது ஒருவர் பதில் கூறலாம். அக்குழுவைச் சேர்ந்த எவருமே பதில் கூறாவிடின் எதிரணியைச் சேர்ந்த ஒருவர் கூற வேண்டும்.

- இரண்டாவது சுற்றில் முதலாவது சுற்றைப் போலவே தலைவர் பாடலைக் கூற எதிர்க் குழுத் தலைவர் பிரதான கருத்தைக் கூறுவார். முதற் சுற்றுப் போலவே தொடர்ந்து போட்டி நடைபெறும்.

- இரண்டு குழுக்களின் இறுதிப் புள்ளிகள் கணிக்கப்பட்டு, வெற்றி பெற்ற குழுவும் கூடிய புள்ளியைப் பெற்ற மாணவரும் தெரிவு செய்யப்படுவர்.

**மாணவருக்கு** :

- கொடுக்கப்பட்ட பாடல்களை பொருள் விளங்கி சந்தி பிரித்து வாசியுங்கள்.
- பாடல்களை மனனஞ் செய்யுங்கள்.
- பாடல்களின் பிரதான கருத்துக்களைத் தெளிவாக அறிந்து கொள்ளுங்கள்.
- போட்டியின் போது போட்டி விதிகளையும், புள்ளித் திட்டத்தையும் கவனத்திற் கொண்டு விடையளியுங்கள்.
- பாடல்களை உச்சரிப்புத் தெளிவுடன் கூறுங்கள்.
- குழுக்களுக்கிடையே ஒருமைப்பாட்டினைப் பேணுங்கள்.

**புள்ளித் திட்டம்** :

❖ குறிப்பிட்ட மாணவர் முழுமையாக விடையளித்தால் 10 புள்ளிகள். அவர் விடையளிக்காத பட்சத்தில் அதே அணியைச்சேர்ந்த வேறொருவர் பதிலளித்தால் 5 புள்ளிகள். அவ்வணியினர் விடை கூறாதவிடத்து எதிரணியினர் விடையளித்தால் 5 புள்ளிகள் வழங்கப்படும். இவ்வாறு குழுவின் வெற்றியும்,அதிகூடிய புள்ளியைப் பெற்ற மாணவரது வெற்றியும் தீர்மானிக்கப்படும்.

**மதிப்பீட்டு நியதிகள்** :

- கொடுக்கப்படும் பாடல்களை மனனஞ் செய்வார்
- உச்சரிப்புத் தெளிவுடன் கூறுவார்.
- பிரதான கருத்தினை பொருத்தமுறக் கூறுவார்.
- குழு ஒருமைப்பாட்டினைப் பேணுவார்.

# கருவி - 06

**01 கணிப்பீட்டுச் சந்தர்ப்பம்** : மூன்றாம் தவணை

**02. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள்** : 7.2, 7.3, 9.2

**03. கருவிக்குரிய பாடப் பகுதிகள்** : பத்திரிகை, சஞ்சிகை, பாடநூல்

**04. கருவியின் தன்மை** : வினாக்களுக்கு விடையளித்தல்

**05. கருவியின் நோக்கங்கள்** :
- கொடுக்கப்பட்ட பகுதியை வாசித்துக் கிரகிப்பார்.
- பயன்பாட்டு இலக்கணத்தை இனங்கண்டு எழுதுவார்.
- பொருத்தமான சொற்கள், தொடர்களை இனங்கண்டு எழுதுவார்.

**06. கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள்**

**ஆசிரியருக்கு** :
- மூன்றாம் தவணை ஆரம்பத்தில் இக்கருவி பற்றியும், அதன் நோக்கங்கள் பற்றியும் இக்கருவியை நிறைவு செய்ய வேண்டிய தினம் பற்றியும் மாணவருக்கு அறிவியுங்கள்.
- இங்கு தரப்பட்ட வினாக் கொத்துக்குரிய விடைகள் உள்ளடங்கிய பந்தியொன்றை / பகுதியொன்றினை தெரிவு செய்து மாணவருக்கு முதல் நாளே வழங்குங்கள்.
- மாணவர்களிடம் கொடுக்கப்பட்ட பகுதியை வாசித்து வரும்படி அறிவுறுத்துங்கள்.
- செயற்பாட்டுத் தினத்தன்று மாணவர்களை சோடிச் சோடியாகச் சேர்த்து வினாக்கொத்தை வழங்கி விடையளிப்பதற்கு வழிகாட்டவும்.

**மாணவருக்கு** :
- ஆசிரியரால் வழங்கப்பட்ட பகுதியை / பந்தியை வாசியுங்கள்.
- வினாக்கொத்தில் கேட்கப்பட்ட வினாக்களை வாசியுங்கள்.
- வினாக்களுக்குரிய விடைகளை இருவர் இருவராகச் சேர்ந்து இனங்கண்டு எழுதுங்கள்.

**06. மதிப்பீட்டு நியதிகள்** :
- வழங்கப்பட்ட பகுதியை / பந்தியை வாசித்துக் கிரகிப்பார்.
- பயன்பாட்டு இலக்கணத்தை இனங்கண்டு எழுதுவார்.
- மரபுத் தொடர்களை இனங்கண்டு எழுதுவார்.
- எழுத்துப் பிழையின்றி உறுப்பமைய எழுதுவார்.

# வினாக் கொத்து

தரப்பட்டுள்ள பகுதியில் இருந்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

1. எழுவாய், பயனிலை இவ்விரண்டு எழுதுக.

2. எழுவாய் அடைமொழி, பயனிலை அடைமொழி இவ்விரண்டு எழுதுக.

3. செயப்படுபொருள் கொண்ட வாக்கியமொன்று எழுதுக.

4. பின்வரும் இலக்கணக் கூறுகளுக்குரிய சொல் ஒன்று எழுதுக.

    (அ) உயர்திணை ஆண்பால், ஒருமை ....................................

    (ஆ) உயர்திணை பெண்பால், பன்மை ........................................

    (இ) முன்னிலை பலர்பால், பன்மை ------------------------------------

    (ஈ) தன்மை, ஒருமை, ..................................................

    (உ) முன்னிலை மரியாதை ஒருமை ............................................

5. வினைமுற்றுகள் இரண்டு எழுதுக.

6. பெயரெச்சங்கள் இரண்டு தருக.

7. வினையெச்சங்கள் இரண்டு எழுதுக.

8. இணைப்பிடைச் சொற்கள் இரண்டு எழுதுக.

9. பின்வருவனவற்றுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

    - பிரதேச வழக்குச் சொல்
    - இரட்டைக் கிளவி
    - உவமைத் தொடர்
    - பழமொழி
    - இளமைப் பெயர்
    - வேற்றுமொழிச் சொல்

10. கலைச்சொற்கள் ஐந்து எழுதுக.

புள்ளிகள் 5 x 20 = 100

# கருவி - 07

**01 கணிப்பீட்டுச் சந்தர்ப்பம்** : மூன்றாம் தவணை

**02. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள்** : 2.2, 3.1, 1.2, 6.7, 7.1, 8.1, 11.2, 11.2

**03. கருவிக்குரிய பாடப் பகுதிகள்** : சிறுவர் சஞ்சிகைகள், சிறுவர் பத்திரிகைகள், பத்திரிகைகள், சிறுவர்களுக்கான கதை, கவிதை, நாடகங்கள், சிறுவர் நூல்கள்

**04. கருவியின் தன்மை** : சஞ்சிகை தயாரித்தலும், முன்வைத்தலும்

**05. கருவியின் நோக்கங்கள்** :

- அன்னையரின் சிறப்பைக் கூறும் பல்வேறு கதைகள், கவிதைகள், நாடகங்களை வாசிப்பார்.
- சிறந்தவற்றைத் தெரிவு செய்து மற்றவருடன் பகிர்ந்து இரசிப்பார்.
- சுயமாக கதை, கவிதை, நாடகம் என்பன எழுதுவார்.
- குறுக்கெழுத்துச் சட்டகம் தயாரிப்பார்.
- சஞ்சிகையினைத் தயாரிப்பார்.
- சஞ்சிகையில் இடம்பெற்ற கவிதையை இசையுடன் பாடுவார்.
- நாடகம் நடிப்பார்.
- மேடைப் பேச்சு நிகழ்த்துவார்.
- தாம் எழுதியவற்றை மற்றவருடன் பகிர்ந்து மகிழ்வார்.

**06. கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள்**

**ஆசிரியருக்கு** :

- மூன்றாம் தவணை ஆரம்பத்தில் இக்கருவி பற்றியும், அதன் நோக்கங்கள் பற்றியும் மாணவருக்கு அறிவியுங்கள்.
- மாதிரிக்காக சஞ்சிகைகள் சிலவற்றை மாணவருக்குக் காட்சிப்படுத்துங்கள்.
- சஞ்சிகையின் உருவம், உள்ளடக்கம் பற்றி மாணவர்க்கு விளக்கம் கொடுங்கள்.
- தாம் வாசித்தவற்றை ஆதாரமாகக் கொண்டு சுயமாக ஆக்கங்கள் எழுத வேண்டுமென்பதை வலியுறுத்தி எழுதுவதற்கு வழிகாட்டுங்கள்.
- எழுதிய ஆக்கங்களில் ரசித்தவற்றை நாடகமாக, பாடலாக, பேச்சாக நிகழ்த்திக் காட்ட வேண்டுமென்பதைத் தெரியப்படுத்துங்கள்.

- நாடகம், பேச்சு, பாடல் போன்றவற்றை நிகழ்த்துவதற்கு வேண்டிய உதவிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்து அவர்களது விருப்பத்திற்கிணங்க குழுத் தலைவரையும் தெரிவு செய்யுங்கள்.
- சஞ்சிகை தயாரித்தல், முன்வைத்தல் பற்றி மாணவர்களுடன் அடிக்கடி கலந்துரையாடி, அவற்றில் காணப்படும் குறைகளை நிவர்த்தி செய்யுங்கள்.

**மாணவருக்கு** :
- சஞ்சிகைகள் ,சிறுவர் நூல்கள், சிறுவர் பத்திரிகைகள் என்பவற்றைச் சேகரித்து வாசியுங்கள்.
- வாசித்துப் பெற்ற அனுபவத்தைக் கொண்டு குழுக்களாகச் சேர்த்து கவிதை, கட்டுரை,சிறுகதை, நாடகம், விளம்பரம் போன்றவற்றை எழுதுங்கள்.
- எழுதியஆக்கங்களை ஒன்று சேர்த்து சஞ்சிகையாக வடிவமைப்புச் செய்யுங்கள்.
- எழுதியவற்றுள் மனதைக் கவர்ந்தவற்றை நாடகமாக, பாடலாக, பேச்சாக நிகழ்த்துவதற்குப் பயிற்சி எடுங்கள்.
- சஞ்சிகையை ஆக்குவதற்கும் நாடகம் போன்றவற்றை மேடையேற்றுவதற்கும் வேண்டிய பொருத்தமான உடைகள், கடதாசிகள், படங்கள், நிறப் பேனாக்கள் போன்றவற்றைக் கொண்டு வாருங்கள்.
- குறிப்பிட்ட தினத்தில் சஞ்சிகையை முன்வைத்து அதிலுள்ள ஆக்கங்களை நிகழ்த்திக்காட்டுங்கள்.

**மதிப்பீட்டு நியதிகள்** :
- சஞ்சிகையினைத் தயாரித்தல்.
- கவிதை, பாடல், நாடகம் , விளம்பரம் போன்றன அடங்கிய நிகழ்ச்சியொன்றை நடத்துவார்.
- குழு ஒருமைப்பாட்டைப் பேணுவார்.



දෙමළ භාෂාව හා සාහිත්‍යය 6 - (දෙ)
ගුරු මාර්ගෝපදේශ සංග්‍රහය

2010 / T / 06 / TIM / 7000